வெளியீடு 20-3-2007 Issued 20-3-2007

762
03.07.07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஆகஸ்ட் 21, 2006—தொகுதி 12—எண் 2

Monday, the 21st August, 2006—Volume 12—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

227428

53-237

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 2) — 247-265

**2. தகவல் கோரல்—**

(அ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவோர் நூறு நாள் ஆட்சிக்குப் பாராட்டுரைகள் / அறுவை சிகிச்சைக்குப் பின் நலமுடன் வந்துள்ள மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சருக்கு வாழ்த்துரைகள். — 265-294

(ஆ) உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோரல். — 297-298

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு — 325

**3. கவன ஈர்ப்பு—**

திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் மின் கம்பி அறுந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்து. — 294-297

**4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி. — 298-324, 325-355, 373-427

**கோரிக்கை எண் 21 — நெடுஞ்சாலைகள் துறை**

* மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் — 298, 323-324, 329, 331, 367-369, 397-415.

* திரு. ஓ. பன்னீர்செல்வம் — 325-337, 340-343

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 5, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சலத்தால் பொருள்செய்துஏமார்த்தல் பசுமண்*
*கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று"*

தவறான வழிகளில் பொருளைச் சேர்த்து அதைக் காப்பாற்ற நினைப்பது, பச்சை மண்ணால் செய்யப்பட்ட பாத்திரத்தில் நீரை ஊற்றி, அதைப் பாதுகாக்க நினைப்பதைப் போன்றதுதான். (குறுக்கீடுகள்)

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்
### பட்டியல்–2©

1—

### நியாயவிலைக் கடை

**வினா எண் 445—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, அரண்மனைப்புதூர் ஊராட்சி, முல்லை நகர் பகுதியில் பகுதி நேர நியாயவிலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

**© இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.**

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், அரண்மனைப் புதூர், முல்லை நகர் பகுதியில் பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க, முன்மொழிவு அனுப்பிய, முல்லை நகர் வீட்டு வசதி வாரிய உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பு நலச் சங்கம், கடை தொடங்குவதற்காக தெரிவித்திருந்த வீடு தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதால், சம்பந்தப்பட்டவர்களே மாற்று ஏற்பாடு செய்து தரும் வரை பகுதி நேர அங்காடி திறப்பதற்கான நடவடிக்கையினைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கக் கோரியுள்ளதால் அங்காடி திறப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இலவசமாக கட்டடம் தர முன்வந்தவுடன் நியாயவிலைக் கடை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

## நியாயவிலைக் கடை

**வினா எண் 647—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள வீரக்குப்பம் கடையிலிருந்து எடையூர் கிராமத்திற்கு பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம் வட்டம், வீரக்குப்பம் கிராமத்தில் இயங்கி வரும் நியாயவிலைக் கடை, காஞ்சிபுரம் மகளிர் திட்டம், திட்ட அலுவலர் கட்டுப்பாட்டிலுள்ள குறிஞ்சி மலர் மகளிர் மன்றம்மூலம் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடையில் 402 குடும்ப அட்டைகள் உள்ளன. புதிய பகுதி நேரக் கடை அமைக்கக் கோரும் கிராமமான எடையூர் என்ற குக்கிராமம் வீரக்குப்பம் கிராமத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தில் 147 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தக் கிராம மக்கள் வீரக்குப்பம் கிராமத்திற்குச் சென்று அத்தியாவசியப் பொருட்கள் பெறுவதில் சிரமம் அடைவதால், பொதுமக்கள் [illegible] மேற்குறித்த பகுதியில் பகுதி நேரக் கடை தொடங்க [illegible] எடுக்கப்படும்.

227428



3—

## நிலுவைத் தொகை

**வினா எண் 971—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கூட்டுறவு வங்கியில் பணிபுரிந்து கூட்டுறவுத் துறையின்மூலம் சம்பளம் கிடைக்காதவர்களுக்கு அரசு உடனடியாக சம்பள நிலுவைத் தொகையை வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை கூட்டுறவு நகர வங்கியில், பத்து நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். வங்கியின் தவணை தவறிய கடன்கள் வசூலாகாமல், அதிக அளவு நிலுவையாக இருந்த காரணத்தால், வங்கியின் அன்றாட சேமிப்புக் கணக்கில் பணம் கோரும் உறுப்பினர்களுக்கு தொகை வழங்க இயலாத நிலை ஏற்பட்டு, வங்கிப் பணியாளர்களுக்கு மார்ச் 2006 முதல் ஜூன் 2006 முடிய சம்பளம் வழங்கப்படாமல் இருந்தது. எனினும், மார்ச் 2006 முதல் மே 2006 வரைக்கான பணியாளர்களின் சம்பளம் 28–6–2006 ஆம் தேதியன்றும், ஜூன் 2006–க்கான சம்பளம் 3–7–2006 ஆம் தேதியன்றும் வழங்கப்பட்டு விட்டது. தற்போது வங்கிப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

4—

## கட்டட வசதி

**வினா எண் 1095—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கருங்குளம் கூட்டுறவுப் பண்டகசாலை நிர்வாகத்தின்கீழ் உள்ள 50 கிராமங்களில் இயங்கி வரும் நியாயவிலைக் கடைகளுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கருங்குளம் கூட்டுறவுப் பண்டகசாலையின் நிர்வாகத்தின்கீழ் 20 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 8 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இதில் 19 நியாயவிலைக் கடைகள் அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, கருங்குளம் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டடங்களிலும், 5 நியாயவிலைக் கடைகள் இலவசக் கட்டடங்களிலும், 4 நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 4 நியாயவிலைக் கடைகளுக்கு அரசு திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**5—**

**கட்டட வசதி**

**வினா எண் 1599—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி கிராமத்தில் நியாயவிலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி கிராமத்தில் நாரணம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால், புளியம்பட்டி நியாயவிலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலருடன் கலந்தாலோசித்து தனியே நடவடிக்கை எடுக்கப்படும்.





**6—**

**கட்டட வசதி**

**வினா எண் 2869—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டில் இயங்கி வரும் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டில் இயங்கி வரும் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**7—**

**வீட்டுமனைத் திட்டம்**

**வினா எண் 1492—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட வீட்டு வசதி வாரியத்தின் வீட்டுமனைத் திட்டப் பிரிவுகள் எத்தனை உள்ளன?

(ஆ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் சட்ட விதிகளுக்கு உட்பட்டு பொதுப் பணிக்காக ஒதுக்கப்பட்ட இடம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தன்னிறைவு வீட்டு மனைப்பிரிவு திட்டத்தில் 3 வீட்டுமனைத் திட்டங்கள் அடங்கியுள்ளன. இதில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சட்ட

விதிகளுக்குட்பட்டு பகுதி ஒன்றில் 5617.47 சதுர மீட்டரும், பகுதி இரண்டில் 230.03 சதுர மீட்டரும் மற்றும் பகுதி மூன்றில் 392.01 சதுர மீட்டரும் பொதுப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

8—

## குடியிருப்பு வசதி

**வினா எண் 3409—திரு ம. குணசேகரன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் அரசு அலுவலர்களுக்கு குடியிருப்பு வீடுகளை கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் வீட்டு வசதி வாரியம் சார்பாக அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை. இருப்பினும் அரசு ஊழியர்களிடமிருந்து தேவையான கேட்பும், அரசு நிலமும் கிடைக்கப்பெற்றால் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

9—

## கம்பளி வழங்குதல்

**வினா எண் 1055—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை என்.இ.பி.சி. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கம்பளி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1951 ஆம் வருட தோட்டத் தொழிலாளர் சட்டம் பிரிவு 17 மற்றும் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதி 68-ன்கீழ் அரசாணை எண் 1107, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 30-04-1980-ல் வழங்கப்பட்ட அறிவிக்கையின்படி தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 12 மாதங்களுக்கு ஒருமுறை ஒரு கம்பளியும், 24 மாதங்களுக்கு ஒருமுறை ஒரு கம்பளிப் போர்வையும் வழங்கப்படுகிறது. வால்பாறையில் உள்ள என்.இ.பி.சி. தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமாக உள்ள இரண்டு எஸ்டேட்டுகளில் சுமார் 464 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி தோட்ட நிறுவனத்தில் 2004ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய கம்பளிப் போர்வை நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 2004-ஆம் ஆண்டிலிருந்து காட்டுக் கம்பளி வழங்கப்படவில்லை, இந்த முரண்பாட்டிற்காக வால்பாறை, தோட்ட நிறுவன ஆய்வரால் வழக்குத் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10—

## தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 1986—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வணிக வரி நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வணிக தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வணிக வரி நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வணிக தொழிலாளர் நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2006 ஆகஸ்ட் 21

11—

## வேலைவாய்ப்பு வசதி

**வினா எண் 2029—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது அரசின் நேரடி நியமனத் தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை எண் 98, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 17-7-2006 மூலம் அரசுப் பணிகளில் சேர 5 வருடங்கள் வயது வரம்பு தளர்த்த செய்யப்பட்டுள்ள நிலையில், படித்து விட்டு வேலை இல்லாமல் இருப்போருக்கு அரசுப் பணிகளில் பணி நியமனம் செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12—

## உதவித் தொகை

**வினா எண் 2031—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு நபர் ஒருவருக்கு 500 ரூபாய் உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு மட்டும் நபர் ஒருவருக்கு 500 ரூபாய் உதவித் தொகை வழங்க அரசிடம் எவ்வித செயற்குறிப்பும்



2006 ஆகஸ்ட் 21]

இல்லை. இருப்பினும் படித்து விட்டு தமிழ்நாட்டில் வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் வேலை வேண்டி தங்கள் பெயரினை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் பத்தாம் வகுப்பு முடித்தவர்கள், மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்கள், மற்றும் பட்டதாரிகள் (பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்கல்விகள் நீங்கலாக) ஆகியோர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம் 2006-2007ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

(ஆ) எழவில்லை.

13—

## சம்பள ஒப்பந்தம்

**வினா எண் 2269—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் இந்த ஆண்டு போட வேண்டிய புதிய சம்பள ஒப்பந்தத்தினை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறையில் தோட்டத் தொழிலாளர்கள் தின ஊதியமாக ரூ.76.85-ஐ 31-12-2001 வரை பெற்று வந்தனர். தேயிலைத் தோட்டத் தொழில் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவித்து இத்தின ஊதியம் ரூ.76.85-ஐ ரூ.60/- ஆகக் குறைத்து வழங்கிட தேயிலை தோட்ட நிறுவனங்கள் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 9(ஏ)-ன்கீழ் அறிவிப்பு வழங்கின. இத்தாவா தொடர்பாக சுமுக முடிவு ஏற்படாத நிலையில் இத்தாவா அரசாணை எண் 799, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-9-2002 மூலம் நடுவர் தீர்ப்பிற்கு விட உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தாவா தற்போது சிறப்பு தொழிற் தீர்ப்பாயத்தின் முன்பு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் ஆனைமலை பிளாண்டர்ஸ் அசோசியேஷனில் உறுப்பினராக உள்ள தோட்ட நிறுவனங்களுக்கும், அதன் தொழிற்சங்கங்களுக்குமிடையே 23-9-2005

அன்று ஊதியம் குறித்து தொழிற் தகராறு சட்டப் பிரிவு 18 (1)ன்கீழ் இரு தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவ்வொப்பந்தம் 1-10-2005 முதல் 31-12-2007 வரை நடைமுறையில் இருக்கும். எனவே, இந்த வருடம் ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டிய நிலை எழவில்லை. மேலும் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்துவது குறித்து தொழிற் தாவா ஏதும் எழுப்பப்படவில்லை.

**14—**

## காலதாமதம்

**வினா எண் 2270—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் பழைய சம்பளம் கொடுக்காமல் காலம் கடத்தி வருவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் தின ஊதியமாக ரூ.76.85-ஐ 31-12-2001 வரை பெற்று வந்தனர். தேயிலைத் தோட்டத் தொழில் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவித்து, இத்தின ஊதியத்தினை ரூ.76.85-ஐ ரூ.60 ஆகக் குறைத்து வழங்கிட தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 9 (ஏ)-ன்கீழ் அறிவிப்பு வழங்கின. இத்தாவா தொடர்பாக சுமுக முடிவு ஏற்படாத நிலையில் இத்தாவா நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டு தற்போது சிறப்பு தொழிற் தீர்ப்பாயத்தின் முன்பு நிலுவையில் உள்ளது. தோட்ட நிறுவன தொழிலாளர்களின் ஊதியம் தொடர்பாக 12-1-2000 மற்றும் 2-5-2000 ஆகிய தேதியிட்ட ஒப்பந்தங்கள் 31-12-2001 வரை அமலில் இருந்தது. ஏற்கெனவே அமலில் இருந்த ஒப்பந்தம் 31-12-2001 உடன் முடிவடைந்து இரத்து செய்யப்பட்ட நிலையிலும் 1-1-2002 முதல் 31-12-2004 வரை உள்ள காலத்திற்கு தின ஊதியத்தினை ரூ.76.85-லிருந்து ரூ.60 ஆகக் குறைத்து வழங்க நிர்வாகம் வழங்கிய பிரிவு 9(ஏ)-ன் கீழான அறிவிப்பு தொடர்பான தாவா சிறப்பு தொழில் தீர்ப்பாயம் முன்பு நிலுவையில் உள்ளதாலும், வால்பாறை தோட்டத் தொழிலாளர்களின் தின ஊதியம் குறித்து 23-9-2005 அன்று பிரிவு 18 (1)-ன்கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையிலும், பழைய சம்பளம் கொடுக்காமல் நிர்வாகம் காலம் தாழ்த்தி வருகிறது என்ற பிரச்சினை எழவில்லை.



**15—**

## வழக்குகளை விரைவில் முடித்தல்

**வினா எண் 2495—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலன் கருதி நிலுவையில் உள்ள தொழிற்சாலைகளில் உள்ள வழக்குகளை விரைவில் முடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் ஏற்படும் தொழிற்தகராறுகள் இத்துறையின் சமரச அலுவலர்கள்மூலம் தீர்த்து வைக்கப்படும். அவ்வாறு இல்லையெனில், அரசு ஆணைமூலம் தீர்ப்பிற்கு விடப்படுகிறது. நீதிமன்றத் தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்படுகிறது. நீதிமன்றத் தீர்வத்தின் மூலம் வழக்குகள் முடிவிற்குக் கொண்டு வரப்படுகின்றன. மேலும், இத்துறையில் சமரச பேச்சுவார்த்தைகள் விரைவாக நடத்தப்படுகின்றன. தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்பாய நடவடிக்கைகளில் அரசு தலையிட இயலாது.

**16—**

## தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 2565—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் எந்தெந்த வகையான தொழிலாளர்கள் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்களில் பணி செய்பவர்கள், ஐந்தும், ஐந்து பேர்களுக்கு மேல் பணி செய்யும் உணவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணி செய்யும்

[2006 ஆகஸ்ட் 21

பணியாளர்கள் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர்.

17—

### விபத்துப் பாதுகாப்பு

**வினா எண் 2777—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்கள் நலன் கருதி தொழிற்சாலைகளில் விபத்துப் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து கண்காணிக்க ஏதேனும் குழுக்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பெருமளவில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வரும் சூழலிலும், தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துகளின் எண்ணிக்கை குறைந்த வண்ணம் இருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, தொழிற்சாலைகள் சட்ட விதிகளை சீரிய முறையில் அமல்படுத்துவதாலும், நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாலும், இத்தகைய சூழல் நிலவி வருகிறது. இதனால் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் செயல்பாடுகள் பாராட்டுக்கு உரியதாக உள்ளது. மேலும், தொழிற்சாலைகளில் விபத்துப் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து கண்காணிக்க குழு அமைப்பது குறித்து அரசு விரைவில் பரிசீலிக்கும்.

(ஆ) எழாது.

18—

### வாடகை நிர்ணயம்

**வினா எண் 1174—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ட் 21]

வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி அருள்மிகு சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண். 460, 476 அண்ணா நகர் கோயில்விளை பகுதியில் குடியிருந்து ர் 300 குடும்பத்தினருக்கு தரை வாடகை நிர்ணயம் செய்ய டிக்கை எடுக்குமா?

**கு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் துறை அமைச்சர்:**

வேலி மாவட்டம்; ராதாபுரம் வட்டம், அருள்மிகு சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 460-ல் , சர்வே எண் 461–ல் 14.00 ஏக்கர் மற்றும் சர்வே எண் ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற மேற்படி ஆலய செயல் ல் இந்து சமய அறநிலையச் சட்டம் 78–ன்படி மனுதாக்கல் டு, மேற்படி மனுவின்மீது பலவகை மனு எண் 1/2001 நாள் ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்ற சட்டப் பிரிவு டி திருநெல்வேலி, இணை ஆணையரால் உத்தரவு பட்டுள்ளது. மேலும், திரு. சுப்பையா பிள்ளை என்பவரால் அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், துணை ஆணையர், வலி மற்றும் இத்திருக்கோயிலின் செயல் அலுவலர் எதிர் மனுதாரராக சேர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 43/2001 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரிட் மனுவில் து எதிர் மனுதாரர்கள் உரிய சட்ட விதிகளைப் பின்பற்றி த்திற்குள் ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்ற வேண்டும் நீதிமன்றம் 26–4–2001–ல் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், தாரர்கள் தாங்கள் இருக்கும் மனையை திருக்கோயில் வசம் தாகவும், சட்ட விதிகளின்படி இலாகா நிர்ணயிக்கும் னை செலுத்தவும் சம்மதம் தெரிவித்து, உதவி ஆணையர் கொடுத்து உள்ளார்கள். இருபபினும், இவர்களின் ய தற்போதுள்ள விதிமுறைகளின்படி ஏற்க இயலாத நிலை

### வரி செலுத்தும் வசதி

**ண் 2787—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் மச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிகர்கள் வரியை சுலபமாகக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது, உற்பத்தியாளர்கள், தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்கும் போதும், வணிகர்கள் பொருட்களை விற்கும் போதும் வங்கி வரைவோலை, காசோலையாக அல்லது பணமாக வசூலிக்கப்படும் வரியினை மாதா மாதம் அரசுக்குச் செலுத்தலாம். இவ்வாறு செலுத்துவதில் வணிகர்களுக்கு சிரமம் இருப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. எனினும், வணிகர்கள் வங்கிகளில், அரசுக் கணக்கில் நேரடியாக வரி செலுத்த சென்னையிலுள்ள 700 (எழுநூறு) வணிகர்களை அனுமதிக்கும் முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்த நடைமுறை வெற்றிகரமாக செயல்பட்டு வணிகர்களுக்கு ஏற்புடையதாக இருந்தால் அனைத்து வணிகர்களுக்கும் விரைவில் செயல்படுத்தப்படும்.

**20—**

## சலுகைகள்

**வினா எண் 2792—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் செய்யும் சிறிய உரிமையாளர்களுக்கு வணிக வரி மூலம் சலுகைகள் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் ரூ.3 இலட்சத்திற்குக் கீழ் வணிகம் செய்யும் உரிமையாளர்கள், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பதிவு செய்வதிலிருந்தும் விற்பனை



வரி செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், 01-01-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி அறிமுகத்தால் சிறு வணிகர்கள் எந்தவித இடர்பாட்டுக்கும் உள்ளாகாமல் இருக்க ஏற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தின் அடிப்படையில், ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல், இம்மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரியின்கீழ் பதிவு பெறுவதிலிருந்தும், வரி செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 45,000 வணிகர்கள் பயன்பெறுவார்கள்.

**21—**

## சிட்டா நூலுக்கு வரியை இரத்து செய்தல்

**வினா எண் 2793—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிட்டா நூலுக்கு வரியை இரத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் சிட்டா நூலுக்கு விற்பனை வரியை இரத்து செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் நிலை எண் 71 வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை, நாள் 22-07-2006-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டு, 22-07-2006 அன்று முதல் செயல்முறைக்கு வந்துள்ளது.

**22—**

## நிதியுதவி

**வினா எண் 1152—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 21

கம்பத்தில் அரசு அனுமதி பெற்று இயங்குகின்ற BGS காது கேளாதோர், வாய் பேசாதோர் பள்ளிக்கு நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

மேற்படி பள்ளிக்கு 2005–2006 ஆம் ஆண்டில் உணவூட்டு மானியமாக 24 மாணவர்களுக்கு தலா ரூ.2,000/– வீதம் மொத்தம் ரூ.48,000/– வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2004–2005 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் 8 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் (2006–2007) மத்திய அரசு மானியத்திற்கு விண்ணப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**23—**

**மறுவாழ்வு**

**வினா எண் 1153—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதி, மேகமலையிலுள்ள ஊனமுற்றோர்களின் மறுவாழ்விற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

1. மேகமலை எஸ்டேட் உட்பட 7 எஸ்டேட் பகுதிகள் அடங்கிய பகுதி ஹைவேவிஸ் பேரூராட்சிக்கு கட்டுப்பட்டதாகும்.

2. மேற்படி 7 எஸ்டேட்களும் தற்போது மதுரா டீ எஸ்டேட் இந்தியா என்ற நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும்.

3. மேற்படி தனியார் நிறுவன டீ எஸ்டேட் குடியிருப்பில் 39 ஊனமுற்றவர்கள் உள்ளனர். (கை, கால் ஊனமுற்றோர் 29, காது கேளாத மற்றும் பேசும் திறனற்றவர்கள் 6, மனவளர்ச்சி குன்றியவர் 4) மேற்படி 39 ஊனமுற்றோர்களில் 18 ஊனமுற்றோர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 7 நபர்களுக்கு கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன :



2006 ஆகஸ்ட் 21]

| உதவிகள் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| காதொலிக் கருவி | – | 3 |
| செயற்கைக் கால் | – | 1 |
| கடன் உதவி | – | 1 |
| ஊனமுற்றோர் உதவித் தொகை | – | 2 |

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்மூலம் இலவச தையல் இயந்திரம் 4 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மனவளர்ச்சி குன்றிய 4 நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வருவாய்த் துறைமூலம் ஊனமுற்றோர் உதவித் தொகைக்கு 2 நபர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தாட்கோ திட்டத்தின்கீழ் திரு. சூ. சார்லஸ் என்பவருக்கு விருப்புரிமை மானியம் ரூ.10,000/– வழங்கப்படவுள்ளது. ஆக மொத்தம் 11 நபர்களுக்கு அரசு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**24—**

**மதிய உணவு**

**வினா எண் 364—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், மாணவ, மாணவியர் தங்கும் விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு மதிய உணவுடன் பொரியல், கூட்டு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி. ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் நலம்/பழங்குடியினர் நலப் பள்ளி, கல்லூரி, முதுகலைப் பட்டதாரி, தொழிற்பயிற்சிக் கல்வி விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில்

[2006 ஆகஸ்ட் 21

தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு, அரசு ஆணை (நிலை) எண். 191, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-8-2003-ல் உத்தரவிட்டுள்ளபடி ஒருங்கிணைக்கப்பட்ட அளவு மற்றும் உணவு பங்கீடு அளவுகளின்படி கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது :-

**மதிய உணவு**

| வாரநாள் | வழங்கப்படும் உணவு வகை |
|---|---|
| ஞாயிறு | சோறு, சாம்பார், மோர் |
| திங்கள் | சோறு, காய்கறி குருமா |
| செவ்வாய் | சோறு, சாம்பார், பொரியல், மோர் |
| புதன் | சோறு, மட்டன் குருமா, கூட்டு, மோர் |
| வியாழன் | சோறு, சாம்பார், பொரியல், மோர் |
| வெள்ளி | சோறு, குழம்பு, பொரியல், மோர் |
| சனி | சோறு, சாம்பார், கூட்டு, மோர் |

**25—**

**மீன் வளர்ப்பு**

**வினா எண் 2641—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நன்னீர் மீன்வளர்ப்பு எத்தனை ஹெக்டேரில் நடைபெற்று வருகிறது?

(ஆ) மீன் வளர்ப்பினை அதிகரிக்க சிறப்பு செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள புரசை ஏரி, தூசி மாமண்டூர் ஏரி, பரந்தூர் ஏரி, வளத்தூர் ஏரி, கோவிந்தவாடி அகரம் ஏரி



2006 ஆகஸ்ட் 21]

மற்றும் எடமச்சி ஏரிகளில் மீன் துறை மூலம் இந்திய பெரு ரக கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, 2274.13 ஹெக்டேரில் மீன் வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) மீன் வளர்ப்பு மேற்கொள்ளத் தகுதி வாய்ந்த நீர்நிலைகளை அவ்வப்போது ஆய்வு செய்து, துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து, மீன் வளர்ப்பு செய்து, மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவோர்/ நூறு நாள் ஆட்சிக்குப் பாராட்டுரைகள்/ அறுவை சிகிச்சைக்குப் பின் நலமுடன் வந்துள்ள மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சருக்கு வாழ்த்துரைகள்

**திருமதி பதர் சயீத்:** Speaker Sir, I have moved a motion. I have moved a motion.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Speaker Sir, Speaker Sir,...

*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள். *(குறுக்கீடு)* Let him say.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முந்தின தினம், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இராஜீவ் காந்தி படுகொலையைக் குறித்து, அதேபோல, விடுதலைப் புலிகளுடைய செயல்பாடுகளைக் குறித்து, ஒரு விளக்கமான பதிலை இந்த அவையிலே தந்தார்கள். அவர்கள் சொல்கிறபோது, எங்களுடைய மறைந்த தலைவர் இராஜீவ் காந்தி அவர்கள், இவரோடு பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அதேபோல, வை.கோ. அவர்களையும், முரசொலி மாறன் அவர்களையும், வவுனியா காட்டிற்கு நேரடியாகச் சென்று, பிரபாகரனைச் சந்தித்து அந்தப்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஆகஸ்ட் 21

பிரச்சினைக்கு நீங்கள் ஒரு முடிவு காணுங்கள் என்று அறிவுறுத்திய நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் சொல்லி, அதிலே சொல்கிறபோது, இராஜீவ் காந்தி படுகொலைக்குமுன், இராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின் என்று, விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கப்படுகிற ஆதரவினை இரண்டு வகையாக வகைப்படுத்தி, தமிழ்நாட்டு மக்கள் அதைப் பார்க்க வேண்டும், இந்திய மக்களும் அப்படிப் பார்க்க வேண்டும் என்ற உணர்வினை அவர்கள் மிக உருக்கமாகச் சொன்னார்கள். சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்ற முறையில் சொல்வதைவிட, ஒரு நடுநிலையான தலைவராக இருந்து, உருக்கமான ஒரு பதிலை அளித்தது எங்களுக்கெல்லாம் உண்மையிலேயே திருப்திகரமாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

நான்கூட சென்ற வாரம் இதே அவையிலே சொன்னேன். எங்களுடைய மாவட்டத்தில் திருப்பத்தூர் நகரிலே, விடுதலைப் புலிகளை ஆதரித்து ஒரு பேரணி எடுக்கப்பட்டது. அதிலே விடுதலைப் புலிகள்மீது இருக்கக்கூடிய தடையை நீக்காவிட்டால், நாங்கள் நிச்சயமாக இந்த இந்தியத் திருநாட்டை துண்டாடச் செய்வோம் என்றெல்லாம் அவர்கள் பொதுக் கூட்டத்திலே பேசினார்கள் என்றுகூட நான் சொன்னேன். ஆனால், இப்பொழுது அது படிப்படியாக, பரிணாம வளர்ச்சியைக் கண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் நம்முடைய தலைநகராக விளங்குகிற இதே சென்னையிலே நடந்த ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை, இங்கே இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் என்கிற பெயரில் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள், நடத்தினார்கள். இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலே காங்கிரஸ் கட்சிக்கோ அல்லது இங்கே ஆண்டு கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ யாருக்கும் இதிலே மாறுபட்ட கருத்து கிடையாது. இன்னும் சொல்லப்போனால், இன்று மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து, அதிகாரப் பகிர்வு மூலமாக, சர்க்காரியா கமிஷன் சொன்ன அந்த guidelines, அப்படிப்பட்ட அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலேகூட, இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றெல்லாம் இன்று மத்திய அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடுநிலையோடு இப்படி தமிழ் மக்கள், இலங்கையிலே வாழ்கிற அந்த ஈழத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே நீங்கள் அன்று கொஞ்சம் வேகமாகக்கூட முடிக்கிறபோது பேசினீர்கள். ஆனால், இங்கே விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சார்ந்திருக்கிற மாவட்டச் செயலாளர் மணிமாறன்



2006 ஆகஸ்ட் 21] [திரு. சி. ஞானசேகரன்]

அவர்கள் பேசுகிறபோது (குறுக்கீடுகள்) இலங்கைப் பிரச்சினைக்கு, மத்திய மாநில அரசுகள் ஒரு தீர்வு காணாவிட்டால், அங்கே நிச்சயமாக A.K.47 எடுத்து நாங்கள் எல்லாம் போராடுவோம் என்று ம.தி.மு.க.–வினுடைய மாவட்டச் செயலாளர் மணிமாறன் என்பவர் பேசியிருக்கிறார்.

*முற்பகல் 9–35*

அதோடு மட்டுமல்லாமல், இந்திய வரைபடத்திலிருந்து நிச்சயமாக தமிழ்நாட்டை தனியாகப் பிரித்து எடுப்பதற்கு திரு. திருமாவளவன் தலைமையிலே ஒரு போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கும் என்று விடுதலைச் சிறுத்தைகள் சொல்கிறார்கள். ம.தி.மு.க.–வைச் சேர்ந்திருக்கிற திரு. மணிமாறன் சொல்லுகிறபோது அவர்கள் A.K.47 கொண்டு தனித் தமிழ்நாடு பெறுவதற்காக நாங்கள் போராட்டத்தை நடத்துவோம் என்று பேசியிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சில அரசியல் கட்சி இயக்கங்கள், இப்படி அவர்கள் சில கூட்டங்களிலே பேசுவார்கள் என்று சொன்னால், இது நாட்டைத் துண்டாடுவதற்கு அவர்கள் எடுக்கிற ஒரு முயற்சி என்கிற முறையில் அவர்களுடைய பணி அமைந்திருக்கிறது.

இதை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், யார் எல்லாம் இப்படிப் பேசுகிறார்கள் என்றால், சேலத்திலே நடந்த மாநாட்டிலேகூட பார்த்தால், அங்கே உயர் நீதிமன்றம் அனுமதி கொடுக்கலாம், ஆனால், ஒரு undertaking வாங்கிக் கொண்டு, அவர்கள் இனி விடுதலைப் புலிகளை ஆதரித்து, அந்தக் கூட்டத்திலே பேசுவதில்லை என்று ஒரு undertaking வாங்கிக் கொண்டு, அவர்கள் பேச அனுமதிக்க வேண்டும்; அப்படி வாங்கிய பிறகும்கூட, சேலம் மாநாட்டிலேகூட அவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசி இருக்கிறார்கள்; பல தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். இப்படி அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் எல்லாம் தமிழகத்திலே விடுதலைப் புலிகளுக்கு இன்று அவர்கள் ஆதரவாக சில பேச்சுக்களை தொடர்வது என்று சொல்லுவது, இது, சட்டம்–ஒழுங்கை, தமிழகத்திலே எப்படியாவது, நன்றாக இருக்கிற சட்டம்–ஒழுங்கைக் கெடுத்து, இங்கே ஒரு குழப்பத்தை விளைவித்து, அமைதிப் பூங்காவாக இருக்கிற தமிழகத்தை இவர்கள் எப்படியோ சட்டம்–ஒழுங்கைக் கெடுப்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்களோ என்று நாங்கள் எல்லாம் அஞ்சுகிறோம். நிச்சயமாக கடுமையாக ஓர் எச்சரிக்கை விடுக்கிறோம். ** *(கூச்சல்–குழப்பம்)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(கூச்சல்—குழப்பம்)* சொல்லட்டும், சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* ** *(குறுக்கீடுகள்)* ** என்பதை நாட்டு மக்களுக்கு அவர்கள் விளக்க வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கருத்தைச் சொல்லுகிறார். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த ஆட்சி, உண்மையிலே சேலத்தில் நடந்த மாநாட்டிற்கு தமிழக அரசு அனுமதி கொடுத்ததையும் மீறி, இன்று பாசிச ஆட்சி நடைபெறுவதாக ம.தி.மு.க.—வினுடைய தலைவர் அங்கே ஒரு பத்திரிகையிலே சொல்லுகிறார். அதேபோல தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசிய விஷயத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** ஜமுக்காளத்தில் வடிகட்டிய ஒரு பொய் என்றுகூட சொல்லியிருக்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** உண்மை நிலை என்ன? உண்மையிலேயே நம்முடைய ம.தி.மு.க.—வினுடைய தலைவர் திரு. வை.கோ. அவர்கள் வேறு வழியிலே போனதாக நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். வேறு வழி எந்த வழியிலே அவர்கள் இலங்கைக்குப் போனார்கள்? எப்பொழுது, எப்படிப் போனார்கள் என்பதை விளக்கி, இன்று விடுதலைச் சிறுத்தைகளுக்கு... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** பொடாவில் கைது செய்யப்பட்டு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* நான் சொல்கிறேனே...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகிறார்கள். எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* Including Thiru Gnanasekaran, உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இருங்கள், நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* சார், என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு தாங்கள் அளித்த அனுமதி, அவர் எந்தப் பிரச்சினையை இங்கே கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமோ அதைப்பற்றிப் பேசுவதற்காக அனுமதி கொடுத்தீர்கள். ஆனால், அவர் ** நான் உணர்கின்றேன். எனவே, அந்த வரிகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எடுத்தாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். திரு. சின்னசாமி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. சி. ஞானசேகரன், சொல்ல வேண்டிய கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே மிகத் தெளிவாக— இராஜீவ் காந்தி, இவரோடு என்ன கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார் என்பது குறித்தும், அவர்கள் இலங்கைப் பிரச்சினைக்கு அங்கே எப்படி ஒரு தீர்வு காண வேண்டும் என்பது குறித்தும்—மிகத் தெளிவாக இதே அவையிலே குறிப்பிட்டார்கள். இப்படி அவர்கள் குறிப்பிடுகிறபோது, ம.தி.மு.க.—வினுடைய தலைவர் திரு. வை.கோ. அவர்கள் வேறு வழியிலே வவுனியா காட்டிற்குச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். எந்த வழியிலே போனார்கள்? அதில் என்ன நடந்தது? ஏனென்று சொன்னால், இப்பொழுது பத்திரிகையிலே வரக்கூடிய செய்திகளைப் பார்த்தால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன அந்த வவுனியா காட்டில் அவர் பயணம் செய்த நிகழ்வுகளை எல்லாம் சொல்கிறபொழுது, இது ஜமுக்காளத்தில் வடிகட்டிய ஒரு பொய் என்று அவர்கள் இன்று பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், விடுதலைப் புலிகளை ஆதரித்துப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசக் கூடாது என்று சொல்லி சேலம் மாநாட்டிற்கு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அங்கே விடுதலைப் புலிகளையெல்லாம் ஆதரித்துப் பேசியதன் காரணமாக, இன்று மாவட்டச் செயலாளர் மணிமாறன் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏனென்றால் 'இந்திய வரைபடத்திலிருந்து தனியாக நாட்டைப் பிரித்துவிடுவோம்; தனித் தமிழ்நாடு வேண்டும்' என்றெல்லாம் அவர் சொல்லி, அதற்காகப் போராட்டம் நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறார். அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆகவே, இந்த அரசை நாங்கள் பாராட்டுகிறோம். நிச்சயமாக அதை வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சில பேர், இப்படி விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிக் கொண்டிருப்பவர்கள் வெளியேயிருக்கிறார்கள். அவர்கள்மீதும் இந்த அரசு கடுமையாக நடவடிக்கை எடுத்து விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசி, சட்டம்-ஒழுங்கைக் கெடுக்க நினைப்பவர்களுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்து, சட்டம்-ஒழுங்கை இந்த அரசு காக்க வேண்டும்; விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களையெல்லாம் கைது செய்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள், நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். திரு. மு. கண்ணப்பன் அவர்கள் பேசட்டும்.

**திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்தும் அதுசம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியது குறித்தும், அவர்கள் சொல்லிய சில செய்திகள் பத்திரிகைகளிலே வந்ததற்குப் பிறகு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வைகோ. அவர்கள், 'குறிப்பிட்ட தேதியிலே அந்தச் சம்பவங்கள் நடைபெறவில்லை' என்று தன்னுடைய கருத்தை பத்திரிகைகள்மூலம் தெரிவித்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம் அதைப்பற்றிப் பேசவே கூடாது என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஏற்கெனவே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திலே ஒரு writ மனு தாக்கல் செய்யப்பட்டு, உச்ச





நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலேயே, ஈழத்திலே போராடிக் கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகளைப்பற்றி, தார்மீக ஆதரவு கொடுத்துப் பேசுவதில் எந்தத் தவறும் கிடையாது என்று சொல்லியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. எங்களுடைய நிலையும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலையும், இந்திய நாட்டில் அல்லது தமிழ்நாட்டினுடைய எந்த மூலையிலும் தீவிரவாதத்தைத் தூண்டிவிடவோ அல்லது சட்டம்-ஒழுங்கைச் சீர்குலைப்பதற்கோ— அவர்களுடைய நடவடிக்கைகள் அமையுமானால், அதற்கு துளியும், அணுவளவும் அனுமதி கொடுக்கக்கூடாது என்பதுதான் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையாகும். அதேநேரத்தில், ஈழத்திலே தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு, அவர்கள் அங்கே போராடுவதற்கு நாங்கள் தார்மீக ஆதரவு கொடுக்கிறோம். எங்களுடைய ஆதரவு என்பது ஓர் ஆயுதமாகவோ, நிதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலும் இல்லை என்பதை பல காலகட்டங்களிலே நீதிமன்றத்திலும் பத்திரிகையிலும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதேபோல, இந்தச் சட்டமன்றத்திலேயும் நான் தெளிவுபடுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, தார்மீக ஆதரவு கொடுத்துப் பேசுவது என்பது எந்த வகையிலும் குற்றமல்ல என்பதை உச்ச நீதிமன்றமே சொன்னதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே தார்மீக ஆதரவு கொடுத்துப் பேசுவது எந்த வகையிலேயும் தவறல்ல.

அதேநேரத்திலே, ஆயுதம் தாங்கிப் போராடுவதாகவும் அல்லது தனித் தமிழ்நாட்டைப் பிரிப்பதாகவும் யார் பேசியிருந்தாலும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் அதை ஒத்துக்கொள்ள மாட்டோம். அதற்கான நடவடிக்கைகள், எதுவாக இருந்தாலும், அரசாங்கத்திலே எடுக்கலாம். அதே நேரத்திலே, ஓர் உணர்ச்சிகரமான உண்ணாவிரதப் போராட்டத்திலே கலந்துகொண்டு பேசும்போது, உணர்ச்சிவசப்பட்டு அவர்கள் வார்த்தைகளைப் பேசியிருக்கலாம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்கூட,

*பொங்கும் தமிழர்க் கின்னல் விளைத்தால்*
*சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!*

என்று அந்தக் காலத்திலே சொன்னார். தமிழர்களுக்கு இன்னல் விளைவிக்கும்போது, சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு என்றுகூடச் சொன்னார். அந்த வகையில், அவர் ஓர் இளைஞர் என்ற முறையிலேகூட அந்தக் கருத்துகளைப் பேசியிருக்கலாம். அதற்காக

நாங்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை. அதை நாங்கள் கண்டிக்கிறோம். அதற்காக ஒட்டுமொத்தமாக எல்லோரையும் இங்கே பேசுவது என்பது சரியல்ல. வை.கோ. எந்த வழியிலே இலங்கைக்குச் சென்றார் என்று அவர்கள் கேட்டார்கள். கடல் மார்க்கமாகத்தான் சென்றார் என்பதை அவரே சொல்லியிருக்கிறார். ஆகவே, நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள் சார். *(குறுக்கீடு)* திரு. ஞானசேகரன், நீங்கள் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஜனநாயக முற்போக்குக் கூட்டணி நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்று... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

*முற்பகல் 9–45*

**திரு. ஜி.கே. மணி:** முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஒரு நல்லாட்சி அமைக்கப்பட்டு 100 நாட்கள் நிறைவு பெற்றிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த 100 நாட்களைத் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கிறார்கள்; இந்தியத் திருநாட்டு மக்கள் பார்க்கிறார்கள். இவர்கள் பார்த்துவிட்டுச் சொல்கிறார்கள்; ஐந்தாண்டுகளில் செய்யாத செயற்கரிய சாதனைகளை 100 நாட்களில் செய்து முடித்த மகத்தான அரசுதான் *(மேசையைத் தட்டும் ஒலி)* தலைவர் கலைஞர் அரசு என்பதைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பட்டியலிட்டுச் சொல்வோம் என்று சொன்னால், சுருக்கமாக நான் ஒன்றிரண்டைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளே, *(குறுக்கீடு)* கையொப்பமிட்ட முதல் நாளே, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, விவசாயிகள் கடன் ரூ. 7,000 கோடி தள்ளுபடி செய்தது மட்டுமல்ல, உடனடியாக மீண்டும் விவசாயிகள், விவசாயத் தொழில் தொடங்குவதற்கு கடன்



வழங்குவது... *(குறுக்கீடு)* சத்துணவில் வாரத்திற்கு இரண்டு முட்டை.... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். உட்காருங்கள். *(குறுக்கீடு)* அவர் கருத்தைச் சொல்வதற்கு உரிமை இல்லையா? *(குறுக்கீடு)* உட்காருங்கள் முதலிலே. *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்கிறேன். என் விருப்பம் அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், It is not proper. *(குறுக்கீடு)* No, no.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. ஒரு கட்சியின் சார்பில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* ஏங்க, அவர் என்ன சொல்ல வருகிறாரோ, அதை முதலில் சொல்லிவிடட்டும். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போல, ஏழைகள்மீது, அதிலும் குறிப்பாக, ஏழைப் பெண்கள்மீது இரக்கமில்லாமல், வழங்கப்பட்ட திருமண உதவித் தொகை பறிக்கப்பட்டதை, மீண்டும் வழங்கக்கூடியவகையில், *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை ரூ. 15 ஆயிரம்; அதைப்போல, கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிரசவக் காலத்திற்குமுன் மூன்று மாதங்களுக்கு ஆயிரம் ரூபாயும், பிரசவ காலத்திற்குப் பிறகு ஆயிரம் ரூபாய் வீதமும், ஆறு மாதங்களுக்கு ரூ. 6,000 உதவித் தொகை; அதைப்போல, மிகப் பெரிய சரித்திர சாதனை, ஏழை விவசாயிகளுக்கு, ஏழைக் கூலி விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் மகத்தான திட்டம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தொகுப்பூதிய அடிப்படையிலே பணியாற்றுவதை இரத்து செய்து, மீண்டும் கால முறை ஊதியம் வழங்குகிற திட்டம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுவரையிலே இல்லாத அளவிற்கு நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கிய திட்டம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* நுழைவுத் தேர்வு இரத்து; மதமாற்றத் தடைச் சட்டம் இரத்து; படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கிடைக்க, வேலை நியமனத் தடைச் சட்டத்தை இரத்து செய்தது மட்டுமல்ல;... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

[2006 ஆகஸ்ட் 21

**திரு. ஜி.கே. மணி:** இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான உறுதியளிப்புத் திட்டம்; அதைப்போல... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள் முதலிலே. அவர் சொல்லட்டும். திரு. மணி, சொல்லுங்கள். சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதுவரை இல்லாத அளவிற்கு அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டம்; அதைப்போல, திருக்கோயில்களில், தமிழ்நாட்டில் இருக்கிற, தமிழர்கள் வழிபடுகின்ற திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை; பத்தாம் வகுப்பு வரையிலும் தமிழ் கட்டாயப் பாடம்; 120 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், 120 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள்; (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாயிரம் புதிய பேருந்துகள், அதைப்போல இதுவரையிலே தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டுக்கு, எடுத்துக்காட்டாக இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் ஒட்டுமொத்த சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கு முன்வந்திருக்கிற நிலை, (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சலுகை பறிக்கப்பட்டது மட்டுமல்ல, பெண் அரசு ஊழியர்கள் என்றுகூட பாராமல், இரவு நேரத்திலே அடித்து உதைத்து கைது செய்த நிலை, வழக்குப் போட்ட நிலையையெல்லாம் மாற்றக்கூடிய வகையில், இப்போது எஸ்மா, டெஸ்மா சட்டம் இரத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல பறிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் அறிவிப்பு, (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, அரசியல் கட்சித் தலைவர்கள்மீது, அ.தி.மு.க.வோடு கூட்டணியில் இருக்கிற கட்சித் தலைவர்கள்மீது போட்ட வழக்குகள் எல்லாம் திரும்பப்பெற்ற நிலை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பொடா சட்டம் இரத்து. இப்படி... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவருக்கு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விலே நன்றி தெரிவிப்பது முக்கியமானதாகத் தெரிந்திருக்கிறது; அவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஒன்றும் தப்பு இல்லை. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், மணி, சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.



2006 ஆகஸ்ட் 21]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூறு நாட்களில் செய்த சாதனைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் வயிற்றெரிச்சல் காரணமாக கூச்சல் போடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டிற்கே ஓர் எடுத்துக்காட்டான அரசு, இதை ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள். அமைச்சர் பேசுகிறார். எல்லோரும் அமைதியாக இருங்கள்.

முற்பகல் 9–50

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்று, 100-வது நாளை தமிழகம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. சில மாநிலங்களிலே, ஐந்து ஆண்டுகளிலே சாதிக்காத சாதனைகளை, 100 நாட்களிலே முதல்வர் சாதித்திருக்கிறார் என்பதை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அன்னை சோனியா காந்தி அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அதைத்தான் சுருக்கமாகச் சொல்வதற்குப் பதிலாக, திரு. மணி அவர்கள் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுகிறார். எனவே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள், அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தியாவே பாராட்டிக் கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கத்தைப் பற்றி அவர் பேசுவதற்குக் கொஞ்சம் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார், பேசட்டும். உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

[2006 ஆகஸ்ட் 21

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Clarification கேட்கிறேன். Please.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசியதற்குப் பிறகு பேசட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. என் பேச்சிலே ஏன் குறுக்கிட வேண்டும்? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள், No.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இப்படி இன்னும் நிறைய சாதனைகளைச் சொல்லுவேன். நேரம் இல்லாத காரணத்தால்—இங்கே குறிப்பிட்டுச் சொல்வது, இன்று *(குறுக்கீடுகள்)* மற்ற மாநிலங்களிலேயிருக்கிற முதலமைச்சர்கள், தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்க்கிறார்கள்; "மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களே, நீங்கள் அறிவித்த திட்டத்தை, நிறைவேற்றிய திட்டத்தை, எங்கள் மாநிலத்திற்குத் தாருங்கள், நாங்கள் நிறைவேற்றுகிறோம்" என்று *(மேசையைத் தட்டும் ஒலி)* மற்ற மாநிலத்து முதலமைச்சர்கள் எல்லாம் கேட்கக்கூடிய வகையில், தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சி நடந்துகொண்டிருக்கிறது. இந்தியத் திருநாட்டின் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டான திட்டங்கள் தமிழகத்திலே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவேதான், நம்முடைய இந்திய நாட்டிற்கு மிகப் பெரிய தலைவியாக, பதவி ஆசையைத் தூக்கியெறிந்த, துச்சமெனத் தூக்கியெறிந்த, தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாட்டு ஆட்சியைப் பாராட்டுகிறார்கள். "100 நாட்களில் இப்படி சாதனையா! இது இந்திய நாடு முழுவதும் பரவ வேண்டும்" என்று அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்கள் பாராட்டுகிறார்கள். இப்படித் தமிழ்நாட்டு மக்கள், இந்தியத் திருநாட்டு மக்கள், ஒட்டுமொத்த மக்கள் பாராட்டுகிற இந்த நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் கலைஞர் அவர்களையும், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசையும், இந்தச் சந்தர்ப்பத்திலே மனதாரப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். இந்த ஆட்சி ஐந்து ஆண்டு காலம் தொடர்ந்து



2006 ஆகஸ்ட் 21] [திரு. ஜி.கே. மணி]

நிலைக்கும், நல்லாட்சித் தர வேண்டும். பா.ம.க. முழு ஆதரவு நல்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேநேரத்தில் இன்னொன்று *(குறுக்கீடுகள்)* பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கையில், இடையிலே எழுந்து நிற்கக் கூடாது, முதலில் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மிக முக்கியமான பாராட்டுக்குரிய செய்தி, இதோடு சேர்த்து. கடந்த ஐந்து ஆண்டு காலத்தில், தொட்டால் தீட்டு என்பதைப்போல, ஈழத் தமிழர் பிரச்சினையை, இலங்கைத் தமிழர்களைப்பற்றிப் பேசினாலே பாவம் என்ற நிலை, இந்தச் சட்டமன்றத்திலே நாங்கள் அனுபவித்தோம். பேசுவதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு கொடுத்தாலும் அல்லது பேசுகின்ற நேரத்தில் கலந்துபேசினாலும்கூட, தடை; அந்த நிலையெல்லாம் இருந்தது. இந்த மாமன்றத்திலே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில், தேவையில்லாத, கொடூரமான ஒரு தீர்மானத்தைக்கூடக் கொண்டு வந்தார்கள். அப்போது நாங்களெல்லாம் ஆட்சேபித்தோம்; எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை; தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத ஓர் அரசு கடந்த ஐந்து ஆண்டு காலம் தமிழ்நாட்டிலே ஆட்சி செய்த வரலாறு. ஆனால், இப்போது... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இப்போது எதிர்க்கட்சி வரிசையிலே,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலிலே உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நாங்கள் எல்லோரும் பேசுகிறோம். *(குறுக்கீடுகள்)* எல்லாப் பிரச்சினைகளையும் பேசுவதற்கு உரிமைக் கொடுக்கப்படுகிறது... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கடந்த முறை, தான் கஷ்டப்பட்டதையெல்லாம் சொல்கிறார், அதிலே என்ன இருக்கிறது? உட்காருங்கள். அவருடைய கருத்தைச் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே இல்லாத அளவிற்கு, இலங்கைத் தமிழர் பிரச்சினை.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் உறுப்பினர்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மிக முக்கியமான பிரச்சினை என்பதைக் கருத்தில் கொண்ட முதலமைச்சர் அவர்கள், யார் பேசினாலும், அ.தி.மு.க. பேசினாலும், எதிர்க்கட்சி பேசினாலும் சரி, பதில் அளித்தார்கள். தமிழர்கள் உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், (குறுக்கீடுகள்) தமிழர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு கோரிக்கை வைத்தார்கள். "இலங்கையிலே தினம் தினம் செத்து மடிந்து கொண்டிருக்கிற தமிழர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்; அங்கே ஒரு நல்ல சுமுகமான நிலை உருவாக வேண்டும்" என்று பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார்கள்; தொலைபேசியிலே பேசுகிறார்கள். அந்த நிலையின் தொடர்ச்சியாகத்தான், மத்தியிலேயிருந்து உயர் அதிகாரி, மதிப்பிற்குரிய திரு. நாராயணன் அவர்களை அனுப்பி வைத்து, இங்கே பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் செய்தியைச் சொன்னார்கள்; இதன் வடிவாகத் தமிழர்களுக்கு, தமிழ்நாட்டிற்கு, தமிழக அரசுக்குக் கிடைத்த வெற்றியாக, இப்போது நம்முடைய இந்திய அரசு, சர்க்காரியா குழு அறிக்கையை இலங்கைக்கு அனுப்பியிருக்கிறது; இது வரவேற்கக்கூடியது; பாராட்டுக்குரியது. வரலாற்றில் இதுவரையில் இல்லாத ஒரு நிகழ்வு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதை தமிழ்நாட்டு மக்கள், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் பாராட்டுகிறார்கள். ஆகவே, நான் முதலமைச்சர் அவர்களை மீண்டும் பணிவோடு வேண்டிக் கொள்வதெல்லாம், அந்த சர்க்காரியா குழு அறிக்கையை முழுமையாக அங்கே நிறைவேற்ற வேண்டும். அதற்கு இலங்கை அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அந்த வகையில், இந்திய அரசு தன்னுடைய நிலையை ஸ்திரப்படுத்திக்கொண்டு, முழுமையாக இதிலே நாட்டம் செலுத்தி நிறைவேற்றுவதற்கு, எல்லா வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே முன்நின்று



செயல்படவேண்டும். இந்தளவில், தமிழ்நாட்டிற்கு, தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த, சர்க்காரியா குழு அறிக்கையை அனுப்புவதற்குக் காரணமாக இருந்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசை, பா.ம.க. சார்பில் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *9–55*

இப்போது தினந்தோறும் அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—இங்கே வருபவர்கள், படகிலே வந்தவர்கள், கைது செய்யப்பட்டு அங்கே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இங்கே தமிழ்நாட்டைச் சேர்ந்த படகோட்டிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கொரு நல்ல தீர்வினை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று வேண்டிக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்).

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..., (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) Rule 120–ஐப் படித்துப் பாருங்கள்; இடையூறு செய்தீர்களேயானால், அந்த நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்; முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள், திரு. டி. சுதர்சனம், பேசுங்கள்.

*** திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தமிழக அரசு (குறுக்கீடுகள்) ஆட்சிப் பொறுப்பினை ஏற்று *100* நாட்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** ஆட்சிப் பொறுப்பை ஏற்று இந்த 100 நாட்களிலே, (குறுக்கீடுகள்) இமாலயச் சாதனைகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை, இந்த நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 100 நாட்கள் ஆகின்றன. இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அருமை நண்பர்கள், சாதனைகளைப்பற்றிப் பேசுவதற்கு இது நேரமில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆனால், 2001–2006 ஆம் ஆண்டு வரை நடந்த சட்டமன்றத்தில், (குறுக்கீடுகள்) இப்படி 100 நாட்கள் சாதனையைப்பற்றி, ஒரு விவாதமே நடந்திருக்கிறது; அதற்கு முன்னாலும் நடந்திருக்கிறது. (குறுக்கீடு) 2001–லேயிருந்து 2006 வரை, அதற்கு முன்பு 1991 லேயிருந்து 1996 வரை இந்த மன்றத்திலே நான் உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்பொதெல்லாம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், உங்களுக்கு ஏன் இந்த வயிற்றெரிச்சல் வருகிறது? அவர்கள் சொல்கிறார்கள்; இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. சுதர்சனத்தைத்தான் பேசச் சொல்லியிருக்கிறேன்; உட்காருங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இந்த 100 நாட்கள் சாதனை என்பது... (குறுக்கீடுகள்) இந்த நாட்டிலேயிருக்கின்ற அத்தனை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே நடைபெற்ற சாதனைகளைச் சொன்னால், செங்கோட்டைக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. கே.ஏ. செங்கோட்டையன்



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாதனைகளைப் பற்றிப் பேசுகிறார். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. Zero hour என்பது, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைக் குறித்துப் பேசுவதற்கு நீங்கள் ஒதுக்குகிற நேரம். நேற்று முன்தினம், நீங்கள், சனிக்கிழமை அன்று, எங்களிடத்திலே கேட்டது, 'வினாக்கள்–விடைகளுக்கான நேரத்தை ஒத்திவைத்து, மானியக் கோரிக்கையின்மீதும், Zero hour–ன்மீதும், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள்மீதும் பேச வேண்டியிருக்கிறது' என்று நீங்கள் எங்களிடத்திலே அனுமதி கேட்டீர்கள். அதற்காக நாங்களும் ஒப்புதல் அளித்தோம். ஆனால், இதுபோன்ற Zero hour–லே பேசுவதற்கு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை இதுவா? எதை வேண்டுமானாலும், உங்களுடைய சாதனைகளைப் பற்றி பேசட்டும், உங்களுடைய தோழமைக் கட்சிகள்; நாங்கள் அதற்குள்ளே நுழையவில்லை. அதற்குள்ளே நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுகிற நிலையிலே இருக்கிறீர்கள்; பேசட்டும். நான் அதற்குள்ளே வர விரும்பவில்லை. இது விதிக்கு உட்பட்டிருக்கிறதா என்பதை மட்டும் பேரவைத் தலைவரிடத்திலேயிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. டி. சுதர்சனம், சொல்வதைச் சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

*முற்பகல் 10–00*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே நடைபெற்று இருக்கின்ற இந்த நல்ல காரியங்களை, டெல்லியிலே, செங்கோட்டையிலே ஆண்டுகொண்டிருக்கின்றவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே இருக்கின்ற பல்வேறு முதலமைச்சர்கள் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அருமை அண்ணன் செங்கோட்டையன் அவர்கள், எதற்கோ மனம் வருந்தி (குறுக்கீடுகள்) இங்கே அவருக்கும் பாராட்டுவதற்கு எண்ணமிருந்தாலும்கூட...(குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** ஏனென்று சொன்னால், உங்களுக்குப் பாராட்டுவதற்கு எண்ணமில்லை என்று சொன்னால், ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்குக் கொடுப்பதை நீங்கள் மறுக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது இந்த நாட்டிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தார்களே, அதை நீங்கள் மறுக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது வாரத்திற்கு இரண்டு முட்டைகள் கொடுக்கின்ற திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அதிகாரிகள்மீது எஸ்மா, டெஸ்மா சட்டங்களின்கீழ் போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் பெற்றிருப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் பல்வேறுபட்ட திட்டங்கள்கொண்ட வரியில்லாத பட்ஜெட்டைப் போட்டிருக்கிறார்களே, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்களே, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) திருவள்ளூரிலே, செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி, நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடுப்பதாக அறிவித்திருக்கின்றார்களே, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இன்னும் பல்வேறுபட்ட நலத் திட்டங்களையெல்லாம் இங்கே அறிவித்திருக்கிறார்களே, அந்த அறிவிப்புகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். கன்னியாகுமரியிலேயிருந்து, ஆந்திர மாநில எல்லை வரை இருக்கின்ற தமிழ் மக்கள், இன்றைக்குத் தமிழகத்தினுடைய 100 நாட்கள் சாதனைகளை வெகுவாகப் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கும் திட்டத்தை இந்தியா முழுவதும் கொண்டுவருவதற்கு, மத்திய அரசுகூட யோசித்துக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, பகல் உணவுத் திட்டம் இந்தியா முழுவதும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. அதை காங்கிரஸ் கட்சியின் சார்பாக, அன்னை சோனியா காந்தி அவர்கள், மனமாரப் பாராட்டியிருக்கின்றார்கள். இந்த நாட்டினுடைய பிரதமர்



மன்மோகன் சிங் அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். அதையே காங்கிரஸ் கட்சி சார்பாக என்னுடைய பாராட்டுகளாகத் தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம். பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இன்றைய அவைக்கூட்டம், காலையில் தொடங்கியதிலிருந்தே நல்ல விஷயங்களை, மகிழ்ச்சியான விஷயங்களைத்தான் பேசிக்கொண்டிருக்கிறது. அண்டை நாட்டிலே நடைபெறக்கூடிய ஒரு வருத்தமான நிகழ்வினைப் பற்றியும் இங்கே பேசவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கே பேசுகிறபொழுது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதிலே தவறு ஒன்றுமில்லை என்று சொன்னாலும், சில உண்மைகளைச் சொல்லாமல் இருக்க முடியாது என்பதுதான் இதிலேயிருக்கிற எதார்த்தமான உண்மை. ஆகவே, 100 நாட்கள் ஆட்சி, அது சிறப்புக்குரிய ஆட்சியாக இருக்கிறது. ஆகவேதான், இது செஞ்சுரி அடித்திருக்கிற ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ரன் அவுட் ஆனவர்களுக்குக் கொஞ்சம் சிரமம் இருக்கத்தான் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதை ஏற்றுக்கொள்ளும் மனம் இல்லையென்றால், அது அவரவர்களுடைய விருப்பம், பரவாயில்லை. இருந்தாலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் எங்களுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்கே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைபற்றி கருத்துகள் சொல்லப்பட்டன. குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொடர் முயற்சியின் விளைவாக, அதிலே அமைதியை நிலைநாட்டுவதற்கும், ஈழத்தமிழர்கள் பாதுகாக்கப்படுவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக, மத்திய அரசாங்கம் சர்க்காரியா கமிஷனுடைய ஆலோசனையின் அடிப்படையிலே, இலங்கை அரசுக்கு ஆலோசனைகளைச் சொல்லி,

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 21

தீர்வு காண்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பது, பாராட்டுக்குரியது. மத்திய அரசுக்கு எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேநேரத்தில், மத்திய அரசாங்கம் இதிலே விரைவான தலையீடும், நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து. குறிப்பாக, ஈழத்திலே...

*(மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அவையில் வந்து அமர்ந்தார்கள்.) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*முற்பகல் 10–05*

நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய அவைக்கு நலமோடு திரும்பி வந்திருப்பது குறித்து, நம் அனைவருடைய மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இல்லாத சபை, கலகலப்பாக இல்லை என்பது எங்களுடைய ஏக்கமும், ஆதங்கமும். அதை நிறைவு செய்வதற்கான வகையிலே வருகை தந்துவிட்ட அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துகளையும், நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். அவர் நலமோடு வாழவேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈழத் தமிழர் பிரச்சினையில், குறிப்பாக அங்கே நடைபெறுகிற சம்பவங்கள், ஒவ்வொருநாளும் விரும்பத்தகாததாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இங்கே வேறு சில விஷயங்கள் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையிலும், எங்கே வன்முறை, அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டாலும் சரி, தீவிரவாதம் தலைதூக்கினாலும் சரி, வேறுவிதமான காரியங்களிலே நாட்டிற்கோ, மக்களுக்கோ அச்சுறுத்தலும், பாதிப்புகளும் வந்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அதே நேரத்திலே அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவது என்பது, ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று. அது இலங்கையிலே மிக மோசமாக நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. அது தடுத்து நிறுத்தப்படவேண்டும். குறிப்பாக, இலங்கை அரசாங்கம், அதற்குத் தீர்வு காண்பதற்கு விரைவான முயற்சி எடுப்பதிலே தயக்கம் காட்டுகிறது.



2006 ஆகஸ்ட் 21] [திரு. வை. சிவபுண்ணியம்]

வருகிற செய்தியைப் பார்த்தால், இலங்கையிலே இராணுவ ரீதியான ஒரு நடவடிக்கையின்மூலமாக ஒரு தீர்வைக் கண்டுவிட்டு, பிறகு ஏதாவது சமாதானத்தின்மூலமாக ஒரு தீர்வு காணலாமா என்று இலங்கை அரசு முயற்சிப்பதாக ஒரு செய்தி வருகிறது. அப்படி முயற்சிக்கின்ற அந்த காரியம், சரியாக இருக்காது என்பது எங்களுடைய கருத்து. ஆகவே, எங்களுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர், தோழர் தா. பாண்டியன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர், தோழர் வரதராஜன் அவர்களும் இதைப்பற்றி தங்களுடைய கண்டனத்தையும், தங்களுடைய ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். உடனடியாக அங்கே போர் நிறுத்தத்திற்கும், சமாதானத்தைக் கொண்டுவருவதற்கும், இடையிலே நல்லதொரு தீர்வைக் காண்பதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் எடுக்கிற முயற்சிகளுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திற்கு அப்பாவித் தமிழ் மக்கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். அவர்களுக்கான பாதுகாப்பு, உணவு, உடை, இருக்கும் இடங்களை எல்லாம் ஏற்பாடு செய்து, உதவுவதற்கான முயற்சியை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு, நலமோடு நம்முடைய அவைக்குத் திரும்பி, பணியாற்ற வருகை தந்திருக்கிற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மகிழ்ச்சியான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

100 நாட்கள் ஆட்சி சம்பந்தமாக, இங்கே பல்வேறு செய்திகள் பரிமாறப்பட்டிருக்கின்றன. நேரத்தின் அருமை கருதி, அவை அனைத்திற்குள்ளும் நான் செல்லவில்லை. பொதுவாக, தேர்தல் நேரத்தில் தமிழக மக்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்டிருக்கின்ற வாக்குறுதிகளையெல்லாம், இந்தக் குறுகிய காலத்திலேயே நடைமுறைப்படுத்துவதற்கான முடிவுகளை மேற்கொண்டு, தமிழ்நாட்டு மக்களிடத்தில் பெரும் ஆதரவையும், எதிர்பார்ப்பையும்

உருவாக்கியிருக்கக்கூடிய இந்த நிகழ்வுகளை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது, பாராட்டுகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அகில இந்தியத் தலைமை, அதனுடைய பொதுச் செயலாளர், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் தமிழகத்திற்கு வருகைதந்த நேரத்தில், ஏழை மக்களுக்கு இரண்டு ரூபாய்க்கு ரேஷன் அரிசி வழங்கப்படுகிற இந்த நல்ல திட்டம், இந்திய நாடு முழுவதும் அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, மத்திய அரசை வற்புறுத்துவோம் என்று சொல்லிச் சென்றார்கள். அந்த அளவிற்கு ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டம்.

அதேபோல தமிழக வரலாற்றில் இதுவரையில், ஏழை எளிய மக்களுக்கு நிலம் வழங்குகிற ஓர் அற்புதமான திட்டத்தில், பல்வேறு சிரமங்கள் இருப்பதையும் நாங்கள் உணர்கிறோம். இருந்தாலும், அவற்றையெல்லாம் கடந்து, மேற்கு வங்க அனுபவத்தையும் பெற்று, தமிழகத்தில் அதை எப்படி இங்கே அமலாக்குவது என்கிற ஒரு சிறந்த முயற்சியை மேற்கொண்டு, வருகிற 17 ஆம் தேதி, அந்த ஏழை மக்களுக்கு நிலம் வழங்குகிற பணியையும் துவங்க இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் எங்களின் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–10*

அடுத்ததாக, கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கை பிரச்சினை சம்பந்தமாக இந்த அவையிலே ஒரு விரிவான விளக்கவுரையை ஆற்றியிருக்கிறார்கள். ஆனாலும்கூட, திரும்பத் திரும்ப அந்த இலங்கை சம்பந்தமான பிரச்சினைகள் இந்த அவையில் இடம் பெற்று வருகின்ற காரணத்தினாலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலையையும் தெளிவுபடுத்துவது, இந்த அவையில் பதிவு செய்வது கடமை என்று நான் கருதுகிறேன்.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு, குறிப்பாக, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிக்கு தனி மாநில அந்தஸ்து வழங்கி ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுடைய நலன் பாதுகாக்கக்கூடிய வகையில், கூடுதலான சுயாட்சி அதிகாரத்தோடு, தமிழ் மக்களுக்கு தனி மாநிலம் உருவாக்கப்பட்டு, தமிழ் மக்களின் நலன் பாதுகாக்கப்படுவதுதான், ஒட்டுமொத்த இலங்கைக்கும், அதேபோல, இலங்கையின் பல்வேறு



பகுதிகளில் பரவிக்கிடக்கின்ற தமிழ் மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கும் உகந்ததாக இருக்கும் என்று இராஜீவ் காந்தி கொலைக்கு முன்பும் சரி, பின்பும் சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த உறுதியான நிலையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு கட்டத்தில் நார்வே நாட்டின் உதவியோடு நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையில், இன்றைக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள்கூட, ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர்களே முன்வந்து, அந்தப் பேச்சு வார்த்தை தொடராத நிலையிலே அது நின்றுவிட்டது. அந்தவகையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுடைய நலனை முழுமையாகப் பாதுகாக்கக்கூடியவகையில், ஒரு தீர்வு ஏற்பட வேண்டும். இன்று நடைபெறுகிற யுத்த நடவடிக்கையை இருதரப்பாரும் கைவிட்டு, சுமுகமானமுறையில் பேச்சுவார்த்தையின்மூலமாக, இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான் இலங்கைக்கும் சரி, இலங்கைவாழ் தமிழ் மக்களின் நலனுக்கும் உகந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தவகையில், நேற்றையதினம் நமது இந்திய அரசு, கூடுதலான அதிகாரங்களோடு தனி மாநிலம், இந்தியாவில் தமிழகம் இன்றைக்கு செயலாற்றுவதைப்போல, இலங்கையில் உருவாவதற்கு இந்தியா செய்யும் என்பதையும், இலங்கை அரசுக்கு அனைத்து உதவிகளையும் தெரிவித்திருக்கிறது.

அந்தவகையில், இந்திய அரசின் உதவியோடு இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகத் தீர்வு காண்பதுதான், இலங்கைக்கும், இலங்கைவாழ் தமிழ் மக்களின் நலனுக்கும் உகந்தது என்பதைச் சொல்லி, இந்தப் பிரச்சினையைத் தமிழகத்தில் வேறுவகையிலே அணுகுவது தமிழகத்தினுடைய நலனுக்கும், இந்தியாவின் நலனுக்கும் உகந்ததாக இருக்காது என்பதைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் வாழ்த்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். பேரவையின் சார்பாக நானும், பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி ) பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நலமுடன் நீடூழி வாழ என் சார்பிலும், பேரவையின் சார்பிலும், வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 21

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பொறுப்பேற்று 100 நாட்களில் பல சாதனைகளைச் செய்து, இந்த அரசு சிறப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுகுறித்து அன்னை சோனியா காந்தி அவர்கள் தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர் என்ற முறையில், என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் வாழ்த்துகளைத் தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,...

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே,...

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே,...

**திருமதி பதர் சயீத்:** Speaker Sir, ...

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, not allowed. (குறுக்கீடுகள்) அடுத்த அலுவல். (குறுக்கீடுகள்) அடுத்த அலுவலை எடுக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். Not permitted. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எழுந்து நின்று பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே உரையாட எண்ணுகின்றவர்கள், நான் உரை நிகழ்த்தி முடிந்தபிறகு, தங்களுடைய பணியை ஆற்றலாம் என்று கேட்டுக்கொண்டு, வாழ்த்துரைத்த கட்சித் தலைவர்களுக்கும், வேறுசில பிரச்சினைகளை எழுப்பிய உறுப்பினர்களுக்கும் சில விளக்கங்களை, நன்றியினைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–15*

முதலில் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் தம்பி துரைமுருகனை, இன்று மீண்டும் இந்த அவையில் நலமுடன் காண்கின்ற அந்தக் காட்சி (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கெல்லாம் பெரும் விருந்தாக அமைந்துள்ளது. நம் அத்தனை பேர்களுடைய அன்பும், அவருக்கு மருந்தாக அமைந்து, நம்மிடையே இன்று மீண்டும் தன்னுடைய பணியினை ஆற்ற வந்திருக்கின்றார். எனக்குள்ள



2006 ஆகஸ்ட் 21] [கலைஞர் மு. கருணாநிதி]

ஒரேயொரு குறை, இந்த மாபெரும் அவையில் 100 நாட்கள் ஆட்சிக்காக எங்களை வாழ்த்த வேண்டாம்; என் தம்பி பிழைத்து வந்திருக்கிறானே, அதற்காகவாவது (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற கட்சி நண்பர்களோடு இணைந்து, ஒரு வார்த்தை, 'வாழ்த்து' என்று சொல்லியிருக்கக் கூடாதா என்பதுதான் எனக்குள்ள அங்கலாய்ப்பு. (குறுக்கீடுகள்) உட்கார்ந்து சொல்லி என்ன பயன்? ஒலிபெருக்கியில் அல்லவா சொல்ல வேண்டும்? எதற்கெடுத்தாலும் பதிவு செய்கிறோம், பதிவு செய்கிறோம் என்கிறீர்களே, இதை மாத்திரம் பதிவு செய்யத் தவறிவிட்டீர்களே என்பதுதான் எனக்குள்ள அங்கலாய்ப்பு. இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் மனதார வாழ்த்தியிருப்பீர்கள், நான் நம்புகிறேன். சிலபேர் மனதால்தான் வாழ்த்த முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் எனக்கு நன்றாகத் தெரியும். அப்படி வாழ்த்தியவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

100 நாள் ஆட்சி பற்றி பாராட்டி, வாழ்த்திய இந்த மாமன்றத்தினுடைய கட்சிகளின் தலைவர்களுக்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும், இந்திய நாட்டினுடைய தியாகத் திருவிளக்கு, திருமதி சோனியாகாந்தி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கும், அவர்களுடைய வாழ்த்துக்கு நன்றியினைத் தெரிவிக்கின்ற வகையில், என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

100 நாள் முயற்சிகள், அதிலே ஏற்பட்ட முன்னேற்றங்கள், இவற்றிற்கெல்லாம் நானோ அல்லது அமைச்சரவையிலே இருக்கின்ற நண்பர்களோ மாத்திரம் காரணம் அல்ல. ஆதரித்தும், எதிர்த்தும், எப்படியும் எங்களுக்குத் தூண்டுகோலாக இருந்த, இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்களாகிய நீங்களெல்லாம்கூட அதற்குக் காரணம்தான் என்ற முறையிலே, உங்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளை, (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்ப்பும், அரவணைப்பும், இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்திருக்கும்பொழுதுதான் எதுவும் அசைய முடியும். அதுதான் இயல்பு; உலக நியதியும்கூட. அந்த வகையிலே எதிர்த்தாலும்கூட,

*'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு'*

என்ற வள்ளுவனுடைய வாய்மொழியை மனதிலே பதிய வைத்துக்கொண்டு, அவற்றையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு, இந்த

ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றோம், உங்களுடைய அன்பால், கருணையால், ஆதரவால், அரவணைப்பால்.

நேற்றைக்கு முன்தினம் இங்கே நடைபெற்ற ஒரு விவாதம் குறித்து ம.தி.மு.க.—வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், என்னுடைய அருமை நண்பர்—அருமை நண்பர் என்றால் சமீப காலத்து நண்பர் அல்ல, நீண்டகால நண்பர், என்னை முழுமையாக உணர்ந்தவர்–அவர் இங்கே பேசும்பொழுது, அவருடைய கட்சித் தலைவரைப் பற்றி தவறான செய்திகளைச் சொன்னதாக அவருடைய தலைவர் குறிப்பிட்டதை இங்கே சொன்னார். ஒருவேளை, வயதான காரணத்தால் தேதிகள் தவறியிருக்கலாம், ஆனால் சேதிகள் தவறவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் திரு. கண்ணப்பன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். தேதியும் தவறவில்லை. அது எப்படியென்றால், திரு கோபால்சாமி அவர்கள் திடீரென்று இலங்கைக்குக் கடல் வழியாக 'மர்மப் பயணம்' ஒன்றை மேற்கொண்டார். அதனை 'மர்மப் பயணம்' என்று சொல்வதிலே எந்தவிதமான தவறும் இல்லை. ஏனென்றால், யாருக்கும் சொல்லாமல், யாருக்கும் தெரிவிக்காமல் மேற்கொண்ட பயணம் அது. ஆனால், ஒரு நல்ல எண்ணத்தோடுதான் அந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டார் என்பதில்—நான் அன்றொரு பாஷை, இன்றொரு பாஷை பேச மாட்டேன். அன்றைக்கு என்ன சொன்னேனோ, அதைத்தான் இப்பொழுதும் சொல்கிறேன்—அந்தப் பயணம் அவரைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல குறிக்கோளோடு மேற்கொண்ட பயணம். ஆனால், அந்தப் பயணம் பற்றி நான் இங்கே இந்த அவையில் குறிப்பிட்ட பிறகு, அதைப்பற்றி அவர் செய்துள்ள விமர்சனம்தான் என்னை மிகவும் புண்படுத்துகிறது.

*முற்பகல் 10–20*

அவர் என்ன சொல்கிறார் என்றால், நேற்று மாலை ஏட்டிலே வந்திருக்கின்ற அவருடைய அறிவிப்பின்படி, "1989 சட்டமன்றத் தேர்தல் நடப்பதற்கு முன்பு, தி.மு.க. இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்றும், போர் நிறுத்தத்தை இந்தியா அறிவிக்க வேண்டுமென்றும் மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டை, தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சர் ஆனவுடன் கருணாநிதி அடியோடு மாற்றிக்கொண்டுவிட்டு, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, போர் நிறுத்தம் கேட்கவேண்டுமென அப்பொழுது தமிழகத்திலே இருந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் கலைஞர் கருணாநிதி வற்புறுத்திய சூழலில்,



அதிர்ச்சி அடைந்த நான், இலங்கையிலே உள்ள யதார்த்த நிலையை, தமிழர்கள் படும் துயரத்தை நேரில் கண்டறிய உயிருக்கு ஆபத்தான, பயங்கரம் சூழ்ந்த பயணத்தை மேற்கொண்டு வன்னிக் காடுகளுக்குச் சென்றேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். நேற்றைய தினம், மாலை ஏட்டிலே வந்திருக்கின்ற அவருடைய அறிக்கை இவ்வாறு சொல்கின்றது. ஆனால், அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டபொழுது, அவர் வன்னிக் காடுகளுக்குச் சென்றதற்காக என்ன காரணம் சொல்கிறார் என்றால், எனக்கு எழுதிய கடிதம், அந்தக் கடிதம் பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி எனக்கு எழுதி, 24 ஆம் தேதி எனக்குக் கிடைத்த கடிதம் அது. இப்பொழுது சொல்லவில்லை நான், அப்பொழுதே சொல்லி—முரசொலி நாளிதழைக்கூட நம்பமாட்டார்கள் சில பேர்— தினத் தந்தியிலே வெளிவந்த பேட்டி. பிப்ரவரி 5 ஆம் தேதி அவர் எழுதி, 24 ஆம் தேதி எனக்குக் கிடைத்த அந்தக் கடிதம். அதை அவருக்கு நெருக்கமான ஒருவரிடம் கொடுத்து, எனக்கு அனுப்பினார். அதைப்பற்றி அவரேகூட ஒரு காலத்திலே சொல்கிறார். திரும்பி வந்த பிறகு, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற ஒரு நிருபர்கள் கூட்டத்திலே சொல்கிறார், 'நான் கலைஞருக்கு எழுதிய கடிதம், அவருக்கு சில நாள் கழித்து, அவரிடத்திலே கொடுங்கள் என்றுதான் சொன்னேன்' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதுவும் முரசொலி பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது, தினத் தந்தி பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது.

இதை நான் சொல்வதற்குக் காரணம், அவர் போகும்பொழுது சொன்ன காரணம் என்ன, இப்பொழுது சொல்கின்ற காரணம் என்ன என்றால்,— அப்பொழுது சொல்கிறார், எனக்கு எழுதிய கடிதத்திலே குறிப்பிடுகிறார், "ஈழம் செல்கிறேன்" என்கின்ற தலைப்பில் பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி இரவு 10 மணிக்கு கோபால்சாமி எழுதியுள்ள கடிதத்திலே கூறியிருப்பதாவது: "எனது உயிரினும் மேலான சக்தியாய், இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காமல் என்னை இயக்கி வரும், தலைவர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதங்களில் இந்த மடலை சமர்ப்பிக்கின்றேன்.

தமிழகத்தில் வரலாறு இதுகாறும் கண்டிராத மகத்தான அத்தியாயத்தைப் படைத்துவிட்டீர்கள். தரணியெங்கும் வாழும் தமிழர்கள் களிப்போடும், பெருமிதத்தோடும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இந்த மாபெரும் வெற்றிக்குப் பின்னர், ஈழத் தமிழர்களுக்குத் தங்களால் விடிவும், விமோசனமும் பிறக்கும் என்ற பூரண நம்பிக்கையோடு உலகமெங்கும் வாழும் தன்மான

உணர்வுள்ள தமிழர்கள் ஏக்கத்தோடும், தவிப்போடும், ஆவலோடும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். ஈழப் போர்க்களத்தில் பிரபாகரன் உறுதியான நிலை ஒன்றை எடுத்துக்கொண்டு, அதிலேயே அவர் வலுவாக ஊன்றி நிற்கிறார். அந்தகாரத்திற்கிடையே மின்னும் ஒரே ஒளி ரேகையாக உங்களை நம்பி இருப்பதாக மரண பயங்கரத்தின் விளிம்பிலிருந்து எழுதினார். காலம் அறிந்து, இடம் அறிந்து, மாற்றான் வலியறிந்து, தன் வலிவையும் கணித்து, வியூகம் அமைப்பதே சாலவும் சிறந்தது என்ற தங்களுடைய உணர்வுகளை அவருக்குத் தெளிவுப்படுத்த வேண்டிய சூழல் என் ஈழப் பயணத்திற்கு காரணமாகிறது. எப்படி நடந்துகொள்ள வேண்டும் இந்த நேரத்திலே என்று நான் சொன்னதை, அவருக்கு நேரடியாகச் சொல்வதற்காகத்தான், அவருக்கு விளக்குவதற்காகத்தான் நான் பிரபாகரனைக் காணச் செல்கிறேன்" என்று அன்றைய கடிதத்திலே குறிப்பிட்ட வை.கோ. அவர்கள், இன்றைக்கு என்ன சொல்கிறார் என்றால், முதலிலே படித்தேனே, நேற்று மாலையிலே பத்திரிகையிலே வந்ததே, அந்த அறிக்கையைக் காரணமாகக் காட்டுகின்றார். இதிலிருந்தே ஜமுக்காளத்திலே வடிகட்டப்பட்டது எது என்பது நீங்கள் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும்.

*முற்பகல் 10–25*

நான், சகோதர யுத்தமே கூடாது என்று சொல்லிக் கொண்டிருப்பவன். இப்பொழுது அல்ல, இலங்கையிலே பல குழுக்கள், எல்.டி.டி.ஈ. என்றும், டெலோ என்றும், ஈ.பி.ஆர்.எல்.எப்., என்றும், டெசோ என்றும் இப்படி பல குழுக்கள் உருவாகி, ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டபோதே, சகோதர யுத்தம் கூடாது என்ற முழக்கத்தை இங்கே நானும், பேராசிரியரும் மற்றும் பல தமிழ் இயக்கத்தினுடைய ஆர்வலர்களும் சொல்லிக் கொண்டிருந்திருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துவதற்காக மாநாடுகளும் நடத்தியிருக்கின்றோம். "டெசோ" மாநாடு மதுரையிலே நடத்தியதை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். எனவே, சகோதர யுத்தம் கூடாது, அதனால்தான் இந்த நிலை இலங்கையிலே தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்தியிருக்கின்றோம். நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடுவதில் ஒன்றும் குறைந்துபோனவர்கள் அல்ல, உங்களுக்குத் தெரியும்.

இதே அவையிலேயிருந்து, எங்கள் எம்.எல்.ஏ. பதவிகளை வீசி எறிந்துவிட்டுச் சென்றவர்கள்தான், நானும், பேராசிரியரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை யாரும் மறந்துவிட முடியாது. எனவே, இலங்கைப் பிரச்சினையில் எங்களுக்கு உணர்வுமயமான, இன



உணர்வுமயமான எண்ணம் என்றைக்கும் உண்டு. அந்த நிலையிலே நாங்கள், 'வை.கோ. அவர்கள் அப்பொழுது சென்றது சரியல்ல' என்று கருத்து வெளியிட்டது உண்டு. தினத் தந்தியிலே செய்தி வந்திருக்கிறது, தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் வை. கோபால்சாமி, எம்.பி., இலங்கை சென்றிருப்பதற்கும், தலைமைக் கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் கலைஞரிடமோ, என்னிடமோ கலந்துபேசி அனுமதி பெறவில்லை என்று அதில் குறிப்பிட்டிருந்தார்' என்று தினத் தந்தியே வெளியிடுகின்றது. இதற்கெல்லாம் பிறகு, அவர் வந்தவுடன், அவர் என்ன சொல்லுகிறார்? வை.கோ. திரும்பி வந்தவுடன், "கழகத் தலைவர் கலைஞரிடம் தெரிவிக்காமலும், அனுமதி பெறாமலும், ஈழத்திற்குப் பிரபாகரனைச் சந்திக்கச் சென்றேன். என் நோக்கத்தில் தவறு இல்லை என்றாலும் கழகத்தின் செயல்முறைக்கு அது ஏற்றதல்ல என்ற வகையில், அது தவறுதான். தினத் தந்தி. சனிக்கிழமை இரவு சென்னை திரும்பினேன்; இன்று காலை தலைவர் கலைஞரைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டேன். தி.மு.க. தொண்டர்களில் ஒருவனான என்னை, என்றுமே தாய்ப் பாசத்தோடு அரவணைத்து வருகிற தலைவர், என் பிழையைப் பொறுத்து, மன்னித்து ஏற்றுக்கொண்டார். அவர் என்னிடம், ஏன் இப்படி ஆபத்தோடு விளையாடுகிறாய், ஆர்வம் வெறியாக மாறக்கூடாது, கட்சிக் கட்டுப்பாட்டை மறந்துவிடக்கூடாது என்று கூறினார். தலைவர் கலைஞர் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் உள்ளார். இவ்வாறு கோபால்சாமி கூறினார்" என்று தினத் தந்தியிலே வந்திருக்கிறது. கண்ணப்பன் நம்புவார் என்று கருதுகின்றேன். இந்த ஏட்டினைத் தரத் தேவையில்லை. தராமலே வாங்கிப் படித்துப் பார்த்துக்கொள்வார் என்று தெரியும்.

இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இப்போது சண்டை போடுவதற்கு நாம்தானா மைதானத்தில் நிற்க வேண்டும்? சண்டை யாரோடு போட்டுக்கொண்டிருக்கின்றோம்? சிங்கள வெறியர்களோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றோம். சிங்கள இன ஆதிக்கத்தோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழர்களைக் காப்பாற்ற சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழ்ச் சகோதரர்க்ளைக் காப்பாற்றும்போது, யார் காப்பாற்றுவது என்பதிலே வேண்டுமானால் போட்டி இருக்கலாம், அதை விடுத்து, 'நீ காப்பாற்றாதே, நான்தான் காப்பாற்றுவேன்' என்று காப்பாற்ற வருகின்றவனை கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது நல்லதல்ல. நமக்குள்ளே சண்டை போட்டுக்கொண்டால், சகோதர யுத்தத்தை நடத்தாதே என்று

அவர்களுக்குச் சொல்ல நமக்கு எந்தத் தகுதியும் இல்லாமல் போய்விடும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நான் என்னுடைய உரைக்குப் பிறகு, இங்கே நான் ஆற்றிய உரைக்குப் பிறகு, அதன் அடிப்படையிலே வெளியிடப்பட்டுள்ள கருத்துகள், பேசப்படுகின்ற விஷயங்கள் எதுவானாலும், அது வை.கோ. பேசினாலும், யார் பேசினாலும்—அவர்தான் பேசுவார், யார் பேசினாலும் என்று நான் யாரையும் குறிப்பிட மாட்டேன். எனக்குத் தெரியும், யாரும் பேசமாட்டார்கள் என்று. பேசினாலும், நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. ஏனென்றால், அத்தனை அடியும், உதையும், அத்தனை வலியும் எனக்கே உரியதாகட்டும். அது ஈழத்திலே இருக்கிற தமிழர்களுக்கு வேதனை தரவேண்டாம் என்பதற்காக, அதை நான் பொறுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்ற அளவோடு என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–30*

## 3. கவன ஈர்ப்பு

### திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் மின் கம்பி அறுந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி பி. பத்மாவதி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி பி. பத்மாவதி. (குறுக்கீடுகள்) அவர் பேசிவிடட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திருமதி பத்மாவதி, சொல்லுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி, திட்டச்சேரி சேந்தகுடி என்ற கிராமத்தில் *16–08–2006* அன்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள், திருமதி பத்மாவதி, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அதைத்தான் படிக்கிறேன். (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பத்மாவதி, நிகழ்ச்சி நிரலில் உள்ளதுபோலச் சொல்லுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "நன்னிலம் தொகுதி திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் *16–8–2006* அன்று மின் கம்பி அறுந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்து" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

நன்னிலம் தொகுதி திட்டச்சேரி சேந்தகுடி கிராமத்தில் *16–8–2006* அன்று காலை சுமார் *11–30* மணியளவில் பலத்த சூறாவளிக் காற்று வீசியதால், சேந்தமங்கலம் கிராமத்தில் சடையமூலை மின்மாற்றிக் கம்பம் எண் 2–க்கும் 4–க்கும் இடையே உள்ள தாழ்வழுத்த மின்பாதையின் 7/2.11 ACSR மி.மீ. 4 கம்பிகளுள் ஒரு மின்னோட்டமுள்ள கம்பி அறுந்து விழுந்துவிட்டது. அப்போது அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த திரு. மாசிலாமணி, (வயது 45) என்பவரின் பசுமாடு, அறுபட்டுக் கிடந்த கம்பியை மிதித்ததால் இறந்தது. அப்போது அந்த வயலை ஒட்டியபடி உள்ள பாசன வாய்க்காலில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த திரு. மாசிலாமணி வாய்க்காலைக் கடக்கும்போது, தொங்கிக் கொண்டிருந்த அதே தாழ்வழுத்த மின்கம்பி அவர் தலையிலும், அவர் ஓட்டி வந்த காளை மாட்டின்மீதும் பட, அதே இடத்தில் அவர் மின் அதிர்ச்சியால் இறந்துவிட்டார். அவரது மாடும் இறந்து விட்டது. இந்த விபத்து குறித்து திட்டச்சேரி காவல் நிலையத்தில் *16–8–2006* அன்று F.I.R. எண் *350/2006*–ன்கீழ் புகார் பதிவு செய்யப்பட்டது. மேலும், அந்த அறுந்த மின் கம்பி அன்றே சரிசெய்யப்பட்டு அப்பகுதிக்கு சீரான மின்னூட்டமும் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரிய விதிப்படி, (Per) B.P.(FB) No.4 (Adm.Br.). dated 29-01-1998)–ன்படி மனிதர்கள் மின் விபத்து ஏற்பட்டு இறந்தால்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 ஆகஸ்ட் 21

அவருடைய குடும்பத்திற்கு ரூ.25,000/–ம், மிருகங்கள் இறந்தால் ரூ.2,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குறிப்பிட்ட மின்பகிர்மான வட்டத்திலிருந்து அதற்கு உரிய சான்றிதழ்களும், கருத்துருவும் கிடைக்கப்பெற்ற பின்னர், இதற்கான தக்க உத்தரவு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்திலுள்ள திருக்கண்ணபுரம் ஊராட்சியைச் சார்ந்த சேந்தமங்கலம் என்ற கிராமத்தில் 16–8–2006 அன்று மாடு மேய்த்துக் கொண்டிருந்த தலித் இளைஞர். கோபால் என்பவரின் மகன் மாசிலாமணி, வயது 45, மின் கம்பி அறுந்து விழுந்து இருந்ததால், இரண்டு மாடுகளும், அவரும் மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளார்கள். எனவே, சாதாரண, ஏழை எளிய இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இவருக்கும், அந்தக் கால்நடைகளுக்கும், இழப்பீடாக நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து குறித்து திட்டச்சேரி காவல் நிலையத்தில் 16–8–2006 அன்று F.I.R. எண் 350/2006–ன்கீழ் புகார் பதிவு செய்யப்பட்டது. மேலும், அந்த அறுந்த மின் கம்பி அன்றே சரிசெய்யப்பட்டு அப்பகுதிக்கு சீரான மின்னூட்டமும் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரிய விதிப்படி, (Per) B.P.(FB) No. 4 (Adm.Br.). dated 29-01-1998)—ன்படி மனிதர்கள் மின் விபத்து ஏற்பட்டு இறந்தால் ரூ.25,000/–ம், மிருகங்கள் இறந்தால் ரூ.2,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, உயிர் இழந்த மாசிலாமணி அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரமும், இறந்துவிட்ட அந்த மாடுகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.2 ஆயிரமும் மின்சார வாரியத்தின்மூலமாக அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.



2006 ஆகஸ்ட் 21]

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்பதோடு, மின்சாரம் தாக்கி இறந்தவருக்கு ரூ.25 ஆயிரம் என்றும், கால்நடைகளுக்கு ரூ.2 ஆயிரம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கால்நடைகளுடைய மதிப்பே கிட்டத்தட்ட குறைந்தபட்சமாக எடுத்துக்கொண்டால்கூட, ஒவ்வொன்றும் ரூ.10 ஆயிரத்திற்கு மேற்பட்டதாக இருக்கிறது. எனவே, அந்த வகையில் கூடுதலான தொகையை வழங்கவேண்டும் என்றும், இறந்தவருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 1 இலட்சம் கருணையோடு வழங்க வேண்டுமென்றும் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏற்கெனவே ஒரு அரசாங்கம் முடிவெடுத்து மின் கம்பி அறுந்து விழுந்தால் அதனாலே பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று மின் வாரியம் முடிவெடுத்து இருக்கிறதோ அந்த அடிப்படையிலேதான் மின் வாரியம் வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளைப் பரிசீலிக்க வேண்டும் என்று அரசு முயற்சித்தாலும், ஆங்காங்கே நடைபெறுகின்ற இப்படிப்பட்ட விபத்துகள் மூலம் மின் வாரியத்திற்கு மேலும் இழப்பீடு ஏற்படாமல் இருக்க, ஏற்கெனவே அறிவித்திருக்கிற 25 ஆயிரம் ரூபாய் பணத்தை மின் வாரியம் அளிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோரல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் (குறுக்கீடு) என்னம்மா? என்ன விஷயம் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இருக்கட்டும். விதி 121–லே என்ன இருக்கிறது என்று தெரியும். சொல்லுங்கள்.

***Tmt. BADER SAYEED:** Under Section 121, I want to raise a motion "that this House resolves to terminate and revoke the suspension of Thiru. Agri S.S. Krishnamoorthy forthwith."

**HON. SPEAKER:** Whether the requisition has already been given?

**Tmt. BADER SAYEED:** May I say this?

**HON. SPEAKER:** Whether this requisition has already been given?

**Tmt. BADER SAYEED:** May I explain this?

**HON. SPEAKER:** No, no. It has not been presented to me.

**Tmt. BADER SAYEED:** You are not permitting me to explain.

**HON. SPEAKER:** You please sit down. (Interruption) No, no, it has not been presented to me. It has not been presented to me, you please sit down. (Interruption) No, no, no. I won't allow. You please sit down. (Interruption) What do you mean? நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எழுத்து மூலமாக எதுவுமே கொடுக்கவில்லை. கொடுக்காமல் அவர்கள் எப்படி இப்படி வந்து கேட்கலாம்? (குறுக்கீடு) No, that has not been presented to me. I am not permitting you. You please sit down. உட்காருங்கள். (Interruption) No, it has not been presented to me. (Interruption) No, without my knowledge you cannot raise these things. (Interruption) No, sit down. (Interruption) You give notice and then I will consider.

## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைத் துறை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,445,52,63,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1790, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதியில் ஆழியாறு முதல் வால்பாறை வரை இரண்டு பக்கமும் சாலையை அகலப்படுத்தி வால்பாறை மெயின் ரோட்டை பழுதுபார்த்துச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5993, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர்–சித்தூர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3600, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதியில் பொதட்டூர்ப்பேட்டை–பி.ஆர். பள்ளி–திருத்தணி சாலையை பிரதான மாவட்ட சாலையாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6328, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைகளை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7229, திரு. ராம. சுப்புராம் .

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை-காரையூர் சாலை கடந்த கால வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாலங்கள் இடிந்து கிடக்கின்றன. இந்தப் பாலங்களைக் கட்டவும், சாலைகளைச் சீர்செய்யவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9403, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைத் துறையில் காலியாக உள்ள பொறியாளர்கள் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1915, திரு. மு.க. பெரியசாமி.



**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சாலைகளின் மேம்பாட்டிற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2341, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4589, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் இருந்து பெரிய ஏரி வழியாக மாட்டப்பள்ளி செல்லும் சாலையைச் செப்பனிட்டு புதிய தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4991, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்ற தொகுதி திமிரி ஒன்றியம், வாடிப்பந்தல் கிராமத்தில் பெருமாள் கோவில் சாலை, அம்மன் கோவில் சாலை, பஜார் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. உடனடியாக இச்சாலைகளைச் சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6728, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம்-உத்திரமேரூர் சாலையில் உள்ள பேரமநல்லூர் பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7166, திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7330, திரு. பா. செந்தமிழ்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7841, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில், மேட்டூர் அணை முதல் பாலாறு வரையிலான நெடுஞ்சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8933, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து நெடுஞ்சாலைகளில்



Reflector அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9056, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6055, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட பாலக்காடு மெயின் ரோட்டில் பராமரிப்புப் பணி மேற்கொள்வது மற்றும் நான்கு வழித்தடமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6527, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4894, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் வட்டச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4839, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, தும்பைப்பட்டி முதல் அட்டப்பட்டி, கொடுக்கம்பட்டி வழியாக சிங்கம்புணரி செல்லும் ஒரு வழிச் சாலையை இரு வழிச் சாலையாக மாற்றிட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2844, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2804, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2909, திரு. எஸ். ஜாண் ஜேக்கப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5061, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், கடம்பத்தூர் ஒன்றியம், குப்பம் தண்டிகை கிராமத்திற்கும், மடத்துக்குப்பம் கிராமத்திற்கும் இடையே குசத்தலை ஆற்றில் தரைப்பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3089, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாமல்லபுரம், கல்பாக்கம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி, திருப்பதி சாலையை தேசிய



நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3166, திரு. இரா. இராம்பிரபு.

***திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, போகலூர் ஒன்றியம், என்.எச். 47 ரோட்டிலிருந்து அனுமநேரி கிராமத்திற்கு ரோடு போட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2932, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, பள்ளிப்பாளையம் முதல் ஈரோடு செல்லும் வழியில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2965, திரு. ஞா. ஜாண் ஜோசப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6276, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

முற்பகல் 10-40

வெட்டுத் தீர்மானம் எண் 6042, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலைத் தொகுதியில் சோழகிராமணியில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வரும் தடுப்பணையில் போக்குவரத்துக்கு ஏதுவாக பாதை 14 அடி அகலம் உள்ளதை அதிகப்படுத்தி 21 அடி அகலப்பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8698, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய பாலங்கள் அமைத்தல் மற்றும் சாலை வசதிகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8446, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதி, மடுவங்கரை சக்கரபாணி சாலையில் நடைபெறும் பாலம் கட்டும் பணியை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் — கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2479, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, சங்ககோனாம்பட்டி-அம்மச்சியாபுரம், அய்யனார்புரம், அம்மச்சியாபுரம் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே இரண்டு பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2382, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைத் துறை போடும் சாலைகள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு குறைந்தபட்சம் 15 கி.மீ. தூரம் முழுவதுமாக போடப்படாமல், 2 கி.மீ., 3 கி.மீ. எனப் பிரித்து பிரித்துப் போடுவதால், முன்னால் போட்ட சாலைகள் பழுதடைந்து விபத்துகள் ஏற்படுவதால், அதைத் தவிர்க்க ஒரே தடவையில் 15 கி.மீ. தூரத்திற்குச் சாலைகள் போட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8490, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில், திருவாச்சி ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலை 47-ல் இருந்து பூவாம்பாளையம் வழியாக எல்.பி.பி. பாலம் அமைத்து சூலக்காத்தான்வலசு வரை பாரதப் பிரதமர்

சாலைகள் இணைப்புத் திட்டத்தின் மூலமாக ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு பணி துவங்கி நிறைவுபெறாத நிலையில் உள்ளது. உடனடியாக இப்பணியை முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சாலை அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8179, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரில் நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள காலியிடங்களில் கோவை, திருச்சி மாநகரத்தில் உள்ளது போல் சாலையோரப் பூங்காக்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8101, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8146, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியில் டி. அய்யம்பாளையம், உலகம்பட்டி, ஆத்துப்பட்டி, ஆத்துமரத்துப்பட்டி, கல்லாத்துப்பட்டி, கோம்பையன்பட்டி கிராம மக்களுக்கு ஆற்றைக் கடந்து செல்ல 6 மேம்பாலங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8040, திருமதி செல்வி ராமஜெயம். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8066, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைகளில் இரவு நேரங்களில் அதிக வெளிச்சத்துடன் வாகனங்கள் சென்று விபத்துகளை உண்டாக்குவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2714, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை–பெட்டமுகிலாளம் சாலை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2756, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர்–வெங்கமேடு இரயில்வே மேம்பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5205,* திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியில் உள்ள வெள்ளலூர்– சிங்காநல்லூர் சாலையை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4441,* திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதி, மீனாட்சிபுரம் முதல் கிறிஸ்துராஜபுரம் தெற்கு மீனாட்சிபுரம் வரையில் பழுதான சாலையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2791,* திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "**NH–5–**ல் உள்ள பேசின் பாலத்தைப் பலப்படுத்தி, அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000/–*



மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5499,* திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட பூத்துறை முதல் காமராஜர் நகர் *4* கிலோ மீட்டர் வரையிலான சாலையினை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4438,* திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், திருவள்ளுவர் நகர் முதல் செல்வபுரம் வரை நந்தினி காலனி வழியாக ரூ.*75* இலட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000/–*ல் ரூ.*100/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5373,* திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதியில் வெள்ள பாதிப்பால் சாலைகள் பழுதடைந்துள்ள நிலையில் அவற்றை சரி செய்ய கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5448, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி–தாராபுரம் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதைச் சரி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5341, திரு. பெ.சு. விஜயகுமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5416, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முசிறி–நாமக்கல் சாலையில் மணமேடு முதல் தொட்டியம் வரை மாநில தேசிய நெடுஞ்சாலையில் 6 சிறு பாலங்கள் பழுதடைந்துள்ளன. அந்தப் பாலங்களுக்குப் பதில் புதிய பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5419, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில் உடனடியாக நெடுஞ்சாலைகள் அமைக்க



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1659, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள கொழுமம் வழி பழனி சாலையில் ஓ.டி.ஆர். மற்றும் எம்.டி.ஆர். பிரச்சினை உள்ளது. இந்தச் சாலையை அகலப்படுத்தி, தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1519, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் மீனவ சமுதாயத்தினர் அதிகமாக வசிக்கும் பழவேற்காட்டில் இருந்து லைட்ஹவுஸ் குப்பம் வரை பக்கிங்ஹாம் கால்வாய்க்கு மேல் மேம்பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3928, திரு. தி. இராமசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3200, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார்கோயில் தொகுதியிலுள்ள அக்கரை ஜெயங்கொண்டபட்டினத்திற்கு பாலம் அமைத்து சுற்றுலாவை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6926, திரு. நா. இராமகிருஷ்ணன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7540, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜி.என்.டி. சாலையில் (என்.எச்.5) பிரியும் கவரப்பேட்டை–சத்தியவேடு சாலையை, ஒருவழிச் சாலையைத் தரம் உயர்த்தி, இருவழிச் சாலையாக மாற்றித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3637, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தேசிய நெடுஞ்சாலை பஸ் நிலையத்தில் இருந்து காமாண்டபட்டியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளி வரை செல்லும் யூனியன் பாதையை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2032, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைகளில் வேகத்தடை அமைக்கும்பொழுது விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7564, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதியில் அனைத்துக் கிராமங்களுக்கும் தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1668, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஆற்றுச்சாலையிலுள்ள பழுதுபட்ட Submersible Causeway–ஐ மேம்பாலமாக திரும்பக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6258, திரு. ரா. வரதராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3616, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளத்தூர் தொகுதியில் பல சாலைகளில் சிறிய பாலங்கள் கட்டப்படாமல் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. அதனைப் போக்கிட, பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9028, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை–அரூர் வழி சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டணம் வரையிலான மிக முக்கியமான போக்குவரத்து சாலையை மேம்படுத்தி போக்குவரத்து நலனுக்குட்படுத்திட மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9151, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டைத் தொகுதி, செம்பட்டி சாமுபிள்ளை



சத்திரம் பிரிவிலிருந்து பேரணை வரை ஒருவழிப் பாதையாக உள்ளதை இருவழிப் பாதையாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9347, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியிலுள்ள கிராம நெடுஞ்சாலைக்குச் சொந்தமான மிகவும் பழுதடைந்து மோசமான நிலையிலுள்ள சாலைகளை மாற்றி புதிய தார்ச் சாலைகளாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9194, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், சாத்தான்குடி செல்லும் குறுகிய பாலத்தை புதிய பாலமாக கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9183, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் தொகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள் பழுதுபார்க்கப்படாமல் உள்ளன. இவற்றை உடனடியாக பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5695, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட ஆலங்குடி–வெட்டன்விடுதி–கறம்பக்குடி சாலையை முழுமையாக அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6886, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தா. பழூர் ஒன்றிய பகுதிகளில் பல கிராமங்கள் ஒன்றியச் சாலைகளால் அமைக்கப்பட்டுள்ளன. அந்தச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7273, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 2118, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், ஊட்டியிலிருந்து கூடலூர் செல்லும் சாலையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7208, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதியில் பழுதடைந்த சாலைகளைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5753, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிழக்குக் கடற்கரைச் சாலையில் (ECR) வாகனம் ஓட்டுபவர்களின் நலன் கருதியும், விபத்துகள் அதிகமாக நடப்பதைத் தடுப்பதற்கும் சாலையின் நடுவே தடுப்பு (Centre Median) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8633, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *8252*, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதிக்குட்பட்ட முத்தனேந்தலிலிருந்து இடைக்காட்டூர், பாப்பான்குளம், தெக்கூர் வழியாக பெரியகோட்டை விலக்கு வரை செல்லும் சாலையை மராமத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8304*, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வரலாற்று சிறப்புமிக்க கைலாசநாதர் கோவில் அமைந்துள்ள தாரமங்கலம் பகுதியில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் பயணியர் மாளிகை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3933*, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி–நடுப்பணி சாலையில், பொள்ளாச்சியிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மிகக் குறுகலான பாலத்தை புதிதாகக் கட்டி சாலையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3842*, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் நெடுஞ்சாலைகளிலுள்ள பேருந்துகள் நிறுத்தத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பாக நிழற்கூடங்கள் அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3637*, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரத்தில் மன்னார்குடி சாலையிலிருந்து தீவம்மாபுரம் வழியாக செல்லும் திருவாரூர் சாலையை இணைக்க இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய *21* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,138,02,09,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,445,52,63,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5523*, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5521*, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட வாணியங்குப்பம்–பிள்ளையார் குப்பத்திற்கு புதிய தார்ச் சாலை அமைத்து, கெடிலம் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3423, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை தொகுதியில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் பழுதடைந்த சாலைகளைச் சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3344, திருமதி ரா. லீமா றோஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1559, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், இ. புதுப்பட்டி அம்பாசமுத்திரம், சடையாண்டிப்பட்டி செல்லும் சாலையை செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7637, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திங்கள்நகர்–நெய்யூர்–



திருவிதாங்கோடு சாலையை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5879, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் தொகுதியில் பந்தநல்லூர்–கதிராமங்கலம் சாலை சுமார் 8 கிலோ மீட்டர் மோசமாக இருக்கிறது. இச்சாலையை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,445,52,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை❁ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள், இந்த விவாதத்திலே கலந்துகொண்டு, அரிய கருத்துகளை வழங்க

❁ 445 முதல் 491 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இருக்கின்றார்கள். அந்தக் கருத்துகளுக்கு என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளிக்க விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானம்

### திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி அளித்தல்

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களும், மற்றவர்களும் இந்த அவையிலிருந்து திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை நீக்கி வைத்திருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டு, அவரை நாளையிலிருந்து இந்த அவைக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் மறுபரிசீலனை செய்து, நாளையிலிருந்து அவர் வருவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களும், மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் வைத்துள்ள வேண்டுகோளை ஏற்று

"நாளை முதல் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவைக்கு வருவதற்கு அனுமதிக்க வேண்டும்"

என்னும் மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி நாளை முதல் அவைக்கு வரலாம்.



## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. நேற்றே சொல்லிவிட்டேன் உங்களிடம். உட்காருங்கள் (குறுக்கீடு) பதில் வரட்டும் (குறுக்கீடு) பதில் வரட்டும், எடுப்போம். (குறுக்கீடுகள்) சும்மா கத்தக்கூடாது, உட்காருங்கள். உட்காருங்கள். பின்னால் இரண்டு பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு ரொம்ப கத்திக்கொண்டு இருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கங்கை பிறந்தது இமயத்தில், கருணை பிறந்தது மாண்புமிகு அம்மாவின் இதயத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) எளிய தொண்டனான என்னை பெரியகுளம் நகரக் கழகத்தினுடைய செயலாளராகவும், பெரியகுளம் நகர மன்றத்தினுடைய தலைவராகவும், மாவட்ட கழகச் செயலாளராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், இன்னும் சொன்னால், ஒரு கட்டத்தில் இம்மாநிலத்தின் முதல்நிலைப் பொறுப்பிலும், நாலு பேருக்கு மட்டுமே தெரிந்த என்னை, இந்த நாட்டுக்குத் தெரிய வைத்தவர் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். அவருக்குக் கிடைத்த பெருமையை அவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் அதை ஏன் எதிர்க்கிறீர்கள்? அமைதியாக இருங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நாலு பேருக்கு மட்டுமே தெரிந்த என்னை, இந்த நாட்டுக்குத் தெரிய வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) மறுபடியும் இரண்டாவது முறையாக, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அண்ணாவின் காலத்தில் அண்ணனாகவும், தம்பிகளாகவும் தொடங்கிய திராவிட இயக்கப் பாச அரசியல், இன்று அம்மாவின் காலத்தில் தாயாகவும், பிள்ளையாகவும் புதிய பரிணாமம் பெற்று ஒளிர்கிறது.

முற்பகல் 10–50

அந்த அன்புத் தாய்க்கு, இதய தெய்வத்திற்கு, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்றும் மாறாத, மறையாத என் முதல் வணக்கத்தினையும், நெடுஞ்சாலைத் துறையின் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என் தாய் இட்ட விதையைப் பயிராக்கிய பெரியகுளம் தொகுதி அனைத்து பெருமக்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறந்த குழந்தை முதலில் பேசும் வார்த்தை அம்மா. வெறும் வார்த்தைகளில் மட்டுமல்ல, எங்கள் உயிரிலும், உணர்விலும் முதலில் இருப்பவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளியவர்களின் இதயங்களில் முதலில் இருப்பவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் உள்ளங்களில் குடிகொண்டு இருப்பவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களின் நெஞ்சங்களில் முதலில் இருப்பவரும் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களின் துயரத்தை முதலில் துடைத்தவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தைரியத்தில் முதலிடம் அம்மா, தன்னம்பிக்கையில் முதலிடம் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தர்ம சிந்தனையில் முதலிடம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றிலும் முதலில் இருந்த காரணத்தால்தான், தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்கினார் மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் திடமான மதிநுட்பம்தான் திட்டங்களை உருவாக்கியது. அம்மா அவர்களின் சிந்தனைதான் நிர்வாகத்தைச் சீரமைத்தது. அம்மா அவர்களின் அறிவாற்றல்தான் அதை வேகப்படுத்தியது. அம்மா அவர்களின் தன்னலமில்லாத உழைப்புதான் தமிழ்நாட்டை வளப்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) பொற்கொல்லர் பார்த்து, பார்த்து நகை செய்வதுபோல,



மக்களுக்கு நன்மைகள் பல செய்தவர் தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் நிர்வாகத்தில் அதன் வசதிக்காக பல துறைகள் இருந்தாலும், அவற்றில் நிதித் துறை, நீதித் துறை, தொழில் துறை, கல்வித் துறை, காவல் துறை, சட்டத் துறை, போக்குவரத்துத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற சில துறைகளின்மேல்தான் மக்களின் கவனம் இருக்கும், அரசுக்கும் அக்கறை இருக்கும் என்ற நிலையை மாற்றியமைத்து, மொத்தம் இருந்த 34 துறைகளும், முழு வீச்சில் இயங்கியது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களும், சாதனைகளும் அரசியல் சரித்திரத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு மாநிலத்தின் பொருளாதாரம் உயர, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர, தொழில் வளம் பெருகி வளர, மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற, கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய, ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கு உறுதியான உள் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். நேர்த்தியான சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற சிறப்பை, தத்துவத்தை, அம்மா அவர்கள் உணர்ந்திருந்த காரணத்தினால்தான் சாலை வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். எவ்வளவுதான் நிதிப் பற்றாக்குறை இருந்தாலும் 5 ஆண்டு கால அம்மாவின் ஆட்சியில் அவற்றையெல்லாம் சரிசெய்து, சிறந்த சாலைகள் தந்தார். நாடு விடுதலை பெற்ற பிறகு, எத்தனையோ அரசுகள் வந்திருந்தபோதிலும், நெடுஞ்சாலைத் துறையில் மகத்தான சாதனைகளை உருவாக்கிக் காட்டியவர், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு நான் அதற்கு ஓர் உதாரணத்தை மட்டும் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1996–லிருந்து 2001 வரை 5 வருட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் போடப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 23,125 கி.மீ. அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட பாலங்கள் 435. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனை மிகுந்த 2001–2006 வரை, 5 வருட அம்மா அவர்களின் ஆட்சியில் 2006 மார்ச் மாதம் வரையில் போடப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 48,247 கி.மீ. (மேசையைத் தட்டும் ஒலி) கட்டப்பட்ட பாலங்கள் 890. (மேசையைத் தட்டும் ஒலி) 5 வருட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு

அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2 மடங்குக்கு மேல் சாலைப் பணிகள் நடந்திருக்கின்றன. இதை யாரும் திரைபோட்டு மறைத்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகத்தான சாதனையை இதுவரை எந்த அரசும் செய்யவில்லை என்பதை மிக அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-55

நாட்டின் வளர்ச்சிக்காக, தமிழர்களின் நலனுக்காக, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், உலக வங்கியின் நிதியினைப் பெற்று, 2,160 கோடி ரூபாயில் ஆற்காட்டிலிருந்து தூத்துக்குடி வரை 742 கிலோ மீட்டர் தூரத்திற்கு உலகத் தரம் வாய்ந்த சாலைகள் போடுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை யாரும் உண்மை இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதே திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் முக்கிய பகுதிகளில் 2,000 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்தப்பட்ட சாலைகளாக மாற்றி அமைக்கின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்னை பெருநகரின் உள் கட்டமைப்பை வலுப்படுத்த 18,000 கோடி ரூபாய் அறிவித்தும், அதன் தொடர்ச்சியாக பணி நடந்து கொண்டிருப்பதும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்கள் நாட்டின் இதயங்கள். சிலருக்கு கிராமங்களைப் பற்றி கவலையில்லை. சிலருக்கு நாட்டைப் பற்றி அக்கறையில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமங்களைப் பற்றி கவலைப்பட்டவர். நாட்டைப் பற்றி அக்கறைபட்டவர். வாரி, வாரி வழங்கிய வள்ளல் புரட்சித் தலைவர் அவர்களிடமிருந்து இதயத்தைப் பெற்றவர். அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமங்களுக்குச் சாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்துக் கொடுத்து அவர்களின் இதயங்களில் இடம்பிடித்தார். கரும்பு ஆலைகளுக்குச் சாலைகள் அமைத்துக் கொடுத்து, அவர்களின் உள்ளங்களைக் கரும்பாக இனிக்க வைத்தார். அலுவலகம் செல்வோரை அகமகிழ வைத்தார். பள்ளி செல்லும் மழலைச் செல்வங்களின் பாராட்டைப் பெற்றார். போக்குவரத்து சீராக செயல்பட வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பணிகள் நடைபெற்று வருகின்ற இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள்



36 என்பதனை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு பேரவையில் அளித்த கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 7-ல், 'சாலைகளை மேல்நிலைப்படுத்துதல்' என்ற தலைப்பில், 'நெடுஞ்சாலைகளில் பெருகிவரும் போக்குவரத்தைக் கருத்தில்கொண்டு, சாலைகள் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்தது. அதைச் செயல்படுத்தும் வகையில் 1,902 கிலோ மீட்டர் முக்கிய சாலைகள் மற்றும் 761 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகளை மாநில சாலைகளாகவும், மற்றும் 3,812 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகளை மாவட்ட முக்கிய சாலைகளாகவும் மேல்நிலைப்படுத்த அரசு 4-8-2006 அன்று ஆணையிட்டுள்ளது. இவற்றை படிப்படியாக அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் அறிவித்துள்ளார்கள். அரசாணை மூலம் தரம் உயர்த்தப்படும் என்று சொல்லி, தரம் உயர்த்துவதற்குரிய நிதியை இந்த ஆண்டு ஒதுக்கவில்லை என்பதனை நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே நடப்பாண்டு பட்ஜெட்டில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 7-ல் குறிப்பிட்டுள்ளதைப் பற்றி, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சாலை மேம்பாட்டுக்காக அதற்குரிய நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள், அதையெல்லாம் என்னுடைய பதிலுரையில் விளக்கமாகத் தெரிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. ஏனென்று சொன்னால், நடப்பாண்டு பட்ஜெட்டில் திட்டப் பணிகளுக்காக சென்ற ஆண்டைக் காட்டிலும் 205 கோடி ரூபாய் குறைவாக நீங்கள் ஒதுக்கியுள்ளீர்கள். எந்த வழிவகைகளில், எந்த நிதியைக் கொண்டு தரம் உயர்த்தப்பட்ட சாலைகளை வலுப்படுத்தவும், அகலப்படுத்தவும் போகின்றீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொன்னால் போதும்.

*முற்பகல் 11–00*

நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, படிப்படியாக அகலப்படுத்தப்படும், வலுப்படுத்தப்படும் என்று இருப்பதை மாற்றி, இந்த ஆண்டு தரம் உயர்த்த எடுத்துக்கொண்ட 6,475 கிலோ மீட்டர் சாலைகளை நடப்பாண்டிலேயே அகலப்படுத்தி, வலுப்படுத்துகின்ற பணியினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அப்போதுதான் நாம் எந்த நோக்கத்திற்காக அந்தச் சாலைகளைத் தரம் உயர்த்த ஆணையிட்டிருக்கிறோமோ, அந்த நோக்கம், நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களுக்கும் பயனளிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாட்டில் மொத்தம் 61,420 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறை பராமரித்து வருகிறது. இதில், மத்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற 4,254 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை நீங்கலாக, மாநில அரசின் கட்டுப்பாட்டில் 57,166 கிலோ மீட்டர் சாலை உள்ளது. இந்தச் சாலை நீளத்தில் 45,811 கிலோ மீட்டர் சாலைகள் ஒருவழித் தடமாகவும், 3,929 கிலோ மீட்டர் சாலைகள் இடைவழித் தடமாகவும் இருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001–2006, கடந்த ஆட்சிக் காலத்தில், ஒருவழித் தடமாகவும் இடைவழித் தடமாகவும் இருக்கின்ற சாலைகளை, இருவழித் தடமாக மாற்றி சாலையினை உறுதிப்படுத்துவதில் முன்னுரிமை கொடுத்தார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நடப்பாண்டில் நீங்கள் சாலைப் பணிகளை மேற்கொள்ளும்போது ஒருவழித் தடமாகவும், இடைவழித் தடமாகவும் இருக்கின்ற சாலைகளை இருவழித் தடமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 8–ல், 'சாலைப் பராமரிப்பு' என்ற தலைப்பில், "மாநிலத்திலுள்ள சாலைத் தொடரமைப்பின் பராமரிப்பில் பெருமளவு தேக்கநிலை உள்ளது. இத்தேக்க நிலையை மாற்றி சாலைப் பராமரிப்புப் பணிகளை அதிக அளவில் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மாநிலத்திலுள்ள சாலைகளின் பராமரிப்புப் பணிக்கென ரூபாய் 2,000 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2006–07 ஆம் ஆண்டில் சாலை மற்றும் பிற பராமரிப்புப் பணிகளுக்கென மொத்தம் ரூபாய் 801.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று



சொல்லியுள்ளீர்கள். ஆண்டு பராமரிப்புக்கு 2,000 கோடி ரூபாய் தேவை என்று சொல்லிவிட்டு, 2006–07 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 801.37 கோடி என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஏன் இந்த முரண்பாடு என்று தெரியவில்லை. நீங்களே, இலக்கு 2,000 கோடி ரூபாய் என்று சொல்லிவிட்டு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையினுடைய பராமரிப்புக்கு மொத்தம் தேவைப்படுகின்ற தொகை 2,000 கோடி எனவும், இந்த ஆண்டு அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையினுடைய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு, பராமரிப்புத் தொகையாக ரூபாய் 801 கோடியே 37 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், படிப்படியாக விரைவில் அந்தச் சாலைகள் புதுப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள்தான் பராமரிப்புக்கு 2,000 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், ஒதுக்கியிருப்பது 801 கோடி ரூபாய்தான் என்று உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கின்றது. அதுவும், இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு, நீங்கள் 801 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அந்த 801 கோடி ரூபாயில் Twelfth Finance Commission அவர்களால் கொடுக்கப்படுகின்ற மானியமாக, grant ஆக கிட்டத்தட்ட ஒரு 303 கோடி ரூபாய் வருகின்றது. அந்த ரூபாயை, நீங்கள் இந்த 801 கோடி ரூபாய் செலவழித்தால்தான் இந்த நடப்பாண்டில், இந்த நிதியாண்டில் 801 கோடி ரூபாயைச் சாலைப் பராமரிப்புக்குச் செலவழித்தால்தான், அவர்கள் அந்த 303 கோடி ரூபாயைத் தருவார்கள். இதில் நீங்கள் 700 கோடி, 600 கோடி, 500 கோடி என்ற அளவிற்கு உங்களுடைய செலவு இந்த நடப்பு நிதியாண்டிலே இருக்குமேயானால், அதற்குத் தகுந்தாற்போல் அங்கேயிருந்து வரக்கூடிய மானியமும் குறைவாக்கப்படும் என்பதனை

நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த 801 கோடி ரூபாய் என்ற அளவுக்கு சாலைப் பராமரிப்புப் பணிகளை—ஏன் என்று சொன்னால், இந்த நடப்பு நிதியாண்டிலே 6 மாதங்கள் சென்றுவிட்டன. அதில் கடந்த 3 மாதங்களில் தேர்தல் நன்னடத்தை விதி என்று சொல்லி 3 மாதத்தில் எந்தப் பணியையும் செய்யக் கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவு போட்டது. இப்போது, தேர்தல் முடிந்ததற்குப் பின்னால், 100 நாட்கள் சென்றுவிட்டன. எந்தப் பணியும் நெடுஞ்சாலைத் துறை உட்பட அரசுத் துறைகளில் வளர்ச்சிப் பணிகள் முடுக்கிவிடப்படவில்லை, செலவழிக்கப்படவில்லை. இன்னும் 6 மாதங்கள்தான் இருக்கின்றன. வருகின்ற அந்த 6 மாதங்களிலும் 3 மாதங்கள் மழைக்காலமாக இருக்கின்றது.

முற்பகல் 11–05

'தாருக்குத் தண்ணீர் விரோதி' என்று சொல்கிறார்கள். மழைக் காலங்களில் நீங்கள் தார்ச் சாலைகளைப் போட நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவே, உங்களிடம் இருப்பதே 3 மாதங்கள்தான். அந்த 3 மாதங்களில் இந்தத் தொகையை நீங்கள் செலவழிக்கக்கூடிய ஒரு காலகட்டத்தில் இருக்கின்றீர்கள். அதற்காகத்தான் நான் உங்களுடைய பணியைத் துரிதமாக மேற்கொள்ளுங்கள் என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், அதாவது 1991–1996 வரை, கிராமப்புறங்களிலே புதிய சாலை வசதிகளை உருவாக்கவும், அதன்மூலம் மாவட்டச் சாலைகளோடும் மாநிலச் சாலைகளோடும் கிராமச் சாலைகளை இணைக்கும் விதமாகவும், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தி, அந்தச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் மாவட்ட இதரச் சாலைகளின் வகைப்பாட்டில் சேர்த்துக்கொண்டு, கிராம நெடுஞ்சாலைத் துறை அந்தப் பணியினைச் செய்துவந்தது. ஆனால், 1996–ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், தரம் உயர்த்தப்பட்ட கிராமச் சாலைகளான ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, நெடுஞ்சாலைத் துறையில் சேர்க்கக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டது. அந்தச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாமலும், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக இல்லாமலும், தொங்கு சாலைகளாக, கேட்பார் இல்லாமல், அனாதை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டன.



மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த வகையிலான சாலைகள் பராமரிப்பிற்கு, தனியாக நிதி ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில், 1996–2001 வரை இதர மாவட்ட சாலைகளின் தரத்திற்கு மேம்பாடு செய்யப்பட்ட 5,521 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் படிப்படியாக மாவட்ட இதரச் சாலைகளாக நிலை உயர்த்தப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். அந்தச் சாலைகள் போடப்பட்டு, கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேலாக அப்படியே இருக்கின்றன. ஆகவே, அந்தச் சாலைகளை முழுவதும் படிப்படியாக என்று இல்லாமல், நடப்பாண்டிலேயே மாவட்ட இதரச் சாலைகள் வகைப்பாட்டில் கொண்டுவந்து, நெடுஞ்சாலைத் துறையினுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, அந்தச் சாலைப் பணிகளை முழுவதுமாக மேற்கொண்டு உறுதிபடுத்துகின்ற பணியினையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், சாலைகள்...(குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of Clarification.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்தபிறகு பேசட்டும். (குறுக்கீடு) பேசி முடித்தபிறகு பேசட்டும். (குறுக்கீடு) பேசி முடித்தபிறகு பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) சரி, உங்கள் உறுப்பினர் பேசும்போது சொல்லலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள் சிவபுண்ணியம். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். அடுத்தமுறை அழைக்கிறேன், நான் உங்களை. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம், நான் பேசி முடித்தபிறகு கருத்து இருந்தால் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு 19 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதல் 10 நிமிடங்கள் subject–க்குள்ளேயே வரவில்லை. முதல் 10 நிமிடங்கள் subject–க்குள்ளேயே வரவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** புள்ளிவிவரத்தில் இருப்பதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் என்னென்ன இருக்கின்றன. அதில் உள்ள குறைகளை எவ்வாறு சரி செய்யலாம் என்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் சொல்கிறேன் கேளுங்கள், 19 நிமிடங்கள் ஆகிவிட்டன. முதல் 10 நிமிடங்கள் subject-க்குள்ளேயே வராமல் வேறு எங்கேயோ போய்க்கொண்டிருந்தீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், சாலைகள் மேம்பாடு என்பது ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை உருவாக்கும் அதே நேரத்தில், சாலைகள் பாதுகாப்பானதாகவும், விபத்துகள் ஏற்படாத வகையிலும் அதை உருவாக்க வேண்டும் என்பது அனைவருடைய கருத்து. பக்கம் 8-ல், 'சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகள்' என்ற தலைப்பில், நமது கொள்கை விளக்கக் குறிப்பில், 'மாநிலத்தின் சாலைத் தொடர் அமைப்பிலுள்ள படு மோசமான 300 விபத்துப் பகுதிகளில் முக்கியமான 50 பகுதிகளை மேம்படுத்த 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என்று சொல்லியிருக்கின்றீர்கள்; மிக்க மகிழ்ச்சி. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, படுமோசமான நொடியுள்ள சாலைகள் என்று நாம் தெரிந்துகொண்டு, இதனைத் தவணை முறையில் சரிசெய்வது என்பது, நல்ல செயல்பாட்டிற்குரிய தீர்வாக அமையாது. ஏனென்று சொன்னால், நடப்பு ஆண்டில் நீங்கள் எடுத்துக்கொண்ட 50 இடங்கள்போக, மீதமுள்ள 250 இடங்களில், விபத்துகள்மூலம், மதிப்புமிக்க மனித உயிர் இழப்பும், மிகப் பெரிய அளவில் பொருள் இழப்பும் ஏற்படும் நிலை உள்ளது. வரும்முன் மக்களைக் காப்பதுதான் ஒரு நல்ல அரசிற்கு எடுத்துக்காட்டு. ஆகவே, இந்த அரசு அந்த 300 விபத்து பகுதிகளிலேயும், நடப்பு ஆண்டிலேயே பணிகளை மேற்கொள்ள எடுத்துக்கொண்டு, மனித உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசினுடைய பொறுப்பு என்பதனை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, சென்னை நகர மற்றும் மாநகரப் பகுதிகளின் சாலை வசதிகளை மேம்படுத்தி உறுதிப்படுத்துவதற்காக, 2004-ல் 290 கோடி ரூபாயும், 2005-ல் 525 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், உலக வங்கிகளிடமிருந்து 524 கோடி ரூபாய் சென்னை மாநகர உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த அரசு சென்னை நகரத்திற்கும் அதன் சுற்றுப்புறத்திற்கும் உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்க, எந்தப் புதிய திட்டமும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை என்பது சென்னை மாநகர மக்களுக்குக் கவலை அளிப்பதாக உள்ளது. மேலும், சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் திட்டமிட்டு ஆய்வு முடிக்கப்பட்டிருந்த ஸ்ரீபெரும்புதூர் முதல் சிங்கபெருமாள்கோயில் வரை உள்ள சாலை, வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரை உள்ள சாலைகளைச் சர்வதேசத் தரத்திற்கு 4 வழிப் பாதைகளாகவும், 6 வழிப் பாதைகளாகவும் ஆய்வு செய்து முடித்திருந்தோம். அதைப் பற்றியும் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை. ஏற்கெனவே, நாங்கள் திட்டமிட்டு ஆய்வு முடித்திருந்த கோவை தகவல் தொழில்நுட்பச் சாலை திருப்பூர் நகர அபிவிருத்தி சுற்றுச் சாலை ஆகியவற்றிற்கு இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்காதது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக போக்குவரத்து நிறைந்த தேசிய நெடுஞ்சாலைகள் மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அந்தச் சாலைகளை தரமான மற்றும் உறுதியான சாலைகளாக மேம்பாடு செய்வதற்கு, அந்தச் சாலைகளில் மொத்தமாக ஒரு முன்னோடித் திட்டத்தை 2004-2005-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் தயாரித்திருந்தார்கள். அந்தத் திட்டம் மத்திய அரசினுடைய கவனத்திற்கும் கடிதம் மூலமாக அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்த வரை பதில் வரவில்லை. ஒருவேளை நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு பதில் ஏதும் வந்திருக்கிறதா என்று தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொன்னால் போதும். ஏனென்று சொன்னால், கடந்த 5 ஆண்டு காலத்தில் இங்கே ஆளுங்கட்சியில் இருக்கின்ற கட்சியைச் சார்ந்தவர்கள்தான், அங்கே மத்திய

நெடுஞ்சாலைத் துறையின் அமைச்சராக இருக்கின்றார். நாங்கள் அனுப்பி, 2 வருட காலமாகியும், அதற்கு, தமிழ்நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு, அதன் அமைச்சர் உதவி செய்யவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் தகவல் தொழில்நுட்பத்தில் (குறுக்கீடு) தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பன்னாட்டு முன்னோடி நிறுவனங்கள் சென்னையில் தமது கிளையைத் தொடங்குவதற்கு ஏதுவாக, உலகத் தரம் வாய்ந்த மத்திய கைலாசத்திலிருந்து பழைய மகாபலிபுரம் சாலையிலுள்ள சிறுசேரி வரை 20 கிலோ மீட்டர் நீளச் சாலையினை 200 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக சர்வதேச தரத்தில் 6 வழித் தடங்கள் கொண்ட சாலைகளாக மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் செய்தது சாதனையாகும் என்பதனை நான் இங்கு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகளைத் தரம் உயர்த்தி வலுப்படுத்துகின்ற அதே நேரத்தில், சாலைகளில் உள்ள பாலங்களை அகலப்படுத்தும் பணிகளையும், சாலைகளை உறுதிப்படுத்தும் பணிகளையும் இணையாக மேற்கொள்ள வேண்டும். பாலங்கள் குறுகலாக இருப்பதால், அதிக அளவில் சாலை விபத்துகள் நடக்க வாய்ப்பு உள்ளன. மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் ஆயிரத்திற்கும் அதிகமான பாலங்களைக் கட்டினார்கள். அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, நாட்டிலே இருக்கின்ற 1,207 பெரிய பாலங்களையும், 7,658 சிறிய பாலங்களையும், 99,423 தாம்போகிகளையும் தனி ஆய்வு செய்து, அதிக போக்குவரத்துள்ள பாலங்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து, பாலங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–15

கொள்கை விளக்கக் குறிப்புப் பக்கம் 2–ல், 'துறையின் இலக்குகள்' என்ற தலைப்பில், 'சாலைப் பயன்பாட்டாளர்களின் இனிய பயணத்திற்கு சாலையோரங்களில் தேவையான வசதிகளை உருவாக்குதல் என்றும், சாலையோரங்களில் மரங்களை நட்டும், பசுமைப் பகுதிகளை உருவாக்கியும், சுற்றுச்சூழலை மேம்படுத்தல்'



என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த இலக்கை அடைய எந்தவிதமான திட்டமோ, கொள்கையோ இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சாலைப் பயன்பாட்டாளர்களின் இனிய பயணத்திற்கு சாலையோரப் பூங்காக்கள், சிறுவர் விளையாட்டுப் பூங்காக்கள், சரக்குப் போக்குவரத்து வாகனத் தொழிலாளர்கள் ஓய்வு எடுப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுப்பது பற்றியும், இந்த அரசு சிந்திக்க வேண்டும்.

சாலையோர மரங்கள் வளர்ப்பது எவ்வளவு முக்கியத்தும் வாய்ந்தது என்று அனைவரும் அறிவோம். மரங்கள் இல்லாத சாலையோரங்களில் மரங்கள் நட்டு வளர்க்க இந்த அரசு ஒரு சிறப்புத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த மரங்கள் நடுகின்ற பணியினை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் எந்த அளவுக்குக் கிராமப்புறங்களில் அவர்களுடைய ஆர்வம், செயல்பாடு, கடமையுணர்வுடன் அவர்கள் ஆற்றுகின்ற செயல் இன்றைக்கு நாட்டுக்கு நன்றாகவே தெரிந்திருக்கின்றது. அந்த மரங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பையும் அந்தந்த சாலையோரங்களில் இருக்கின்ற, கிராமங்களில் இருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழு மூலமாகச் செய்தால் ஒரு நல்ல பலன் கிடைக்கும் என்ற யோசனையையும் நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒட்டுமொத்தமாக, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாலையினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார்கள். ஏனென்று சொன்னால், ரோடு நன்றாக இருந்தால்தான் நாடு நன்றாக இருக்கமுடியும் என்ற தத்துவத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்த காரணத்தினால் இதுவரை யாரும் செய்யமுடியாத சாதனையாக நெடுஞ்சாலைத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை புரிந்தார்கள் என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியை சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30 நிமிடம் எடுத்திருக்கிறீர்கள். ஆனால், பேச விடவில்லை, பேச விடவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

•**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையிலே ஏற்பட்ட சாதனைகளை இங்கே பட்டியலிட்டுக் காட்டினார்கள். ஏனென்றால், நாங்கள் ஆளுங்கட்சியிலே இருக்கின்ற காரணத்தால். அந்த ஆட்சியிலே நெடுஞ்சாலைத் துறை எப்படியெல்லாம் செயல்பட்டிருக்கிறது என்ற வேதனையான செய்திகளையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

சில சாலைகளுக்கு ஒரே நேரத்தில் திட்டப் பணி என்ற தலைப்பில் டெண்டரும், அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் டெண்டரும் விடப்பட்டு, ஒரே காலகட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதனினும் விந்தை, ஒரே சாலையில் குறிப்பிட்ட கிலோ மீட்டர் சாலைகளுக்கு ஒரே நிதியாண்டில் ஓரிரு மாதங்களுக்குள் இரு வேறு தலைப்புகளில் டெண்டர்கள் விடப்பட்டு, ஒரே நேரத்திலேயே பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. பணமும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, திருவள்ளூர் கோட்டத்தில் நடைபெற்ற சில பணிகளையும், செங்கல்பட்டு கோட்டத்தில் நடைபெற்ற சில பணிகளையும் இங்கே எடுத்துக் கூறவிரும்புகிறேன்.

திருவள்ளூர் கோட்டத்தில், மதுரவாயல்–வளசரவாக்கம் சாலை, இந்தச் சாலையில் 1.0 கிலோ மீட்டரில் இருந்து 2.9 கிலோ மீட்டர் வரை, அதாவது 1,900 மீட்டர் சாலை அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் 24–12–2004 அன்று டெண்டர் விடப்பட்டு, அன்றே பணி ஆணை வழங்கப்பட்டு, அன்றே பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி முடிவடைந்த நாள் 19–07–2005; இதற்காக வழங்கப்பட்ட தொகை 2 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய். இதே சாலையில் 0.0 கிலோ மீட்டரிலிருந்து 1.8 கிலோ மீட்டர் வரை அதாவது 1,800 மீட்டர் சாலையை. இதையும் அவசரப் பழுதுபார்ப்பு urgent repairs என்ற தலைப்பில் அதே 24–12–2004 அன்று டெண்டர் விடப்பட்டு, அன்றே பணியாணை வழங்கப்பட்டு, பணியும் தொடங்கப்பட்டு, இந்தப் பணி முடிவடைந்த நாள் 13–7–2005 இதற்காக வழங்கப்பட்ட தொகை 4 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ஆகும். அதாவது, அதே சாலையில் 1.0 கிலோ மீட்டரிலிருந்து 1.8 கிலோ மீட்டர் வரையிலான 800 மீட்டர் சாலை, இரண்டு பணிகளிலுமே, ஒரே நேரத்திலே சேர்க்கப்பட்டு, ஒரே பணிக்கு இரண்டு தடவை பணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பணிக்ளின் contractor–ம் ஒரே நபர்தான். இந்த மதுரவாயல்–வளசரவாக்கம் சாலை, 2004–2005 திட்டப் பணியில் சேர்க்கப்பட்டு,



0.0 கிலோ மீட்டர் முதல் 2.9 கிலோ மீட்டர் வரை, அதாவது, முன்னே கூறப்பட்ட பணிகளில் குறிப்பிட்ட அதே கிலோ மீட்டர் சாலை, மீண்டும் 31–12–2004 அன்று, அதாவது 7 நாட்களில் மீண்டும் டெண்டர் விடப்பட்டு, வேறு ஒரு contractor–க்கு வழங்கப்பட்டு, அது முன்னர் ஆரம்பித்த அவசரப் பழுதுபார்க்கும் பணிகள் என்ற தலைப்பில் 6,58,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதே காலக்கட்டத்தில், திட்டப் பணிகள் என்ற தலைப்பில், Package VI–ல் 57,06,000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முற்பகல் 11–20

இதேபோல் இன்னொன்று, கொரட்டூர்–தின்னனூர்–பெரியபாளையம் சாலை. இதில் 19.0 கிலோ மீட்டரிலேயிருந்து 21.2 கிலோ மீட்டர் வரைக்கான சாலை, அவசரப் பழுதுபார்ப்பு, Urgent Repairs என்ற தலைப்பில் 6–6–2005 அன்று டெண்டர் விடப்பட்டு, 9–6–2005 அன்று பணி தொடங்கப்பட்டு, இப்பணி 3–8–2005 அன்று முடிவடைந்ததாகக் கூறப்பட்டு, 4,96,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே சாலையில் 21.2 கிலோ மீட்டரிலிருந்து 28.2 கிலோ மீட்டர் வரை, அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பின்கீழ், 7–6–2005 அன்று டெண்டர் விடப்பட்டு, 9–6–2005 அன்று பணி தொடங்கப்பட்டு, 1–8–2005 அன்று பணி முடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டு, 4,22,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே சாலையில் 20.5 கிலோ மீட்டரிலிருந்து 28.2 கிலோ மீட்டர் வரைக்கான சாலை, அதாவது ஏற்கெனவே முடிக்கப்பட்ட அதே தூரத்திற்கு ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளின்கீழ், 8–7–2005 அன்று, ஒரு மாத காலத்திற்குள்ளாகவே, மீண்டும் அதே சாலைக்கு டெண்டர் விடப்பட்டு, 1,37,36,000 ரூபாய்க்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று செங்கல்பட்டு கோட்டத்திலே ஓர் எடுத்துக்காட்டு. மதுராந்தகம்–வெண்ணாங்குபட்டு சாலை. இது 0.0 கிலோ மீட்டரிலேயிருந்து 8.0 கிலோ மீட்டர் வரை அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் ஒரு டெண்டர் 25–1–2005 அன்று விடப்பட்டுள்ளது. பணி முடிக்கப்பட்ட நாள் 27–2–2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை 3,99,996 ரூபாய். இதே சாலையில் அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் 8.0 கிலோ மீட்டரிலேயிருந்து 12 கிலோ மீட்டர் வரைக்கான டெண்டர் விடப்பட்ட நாள் 21–2–2005. பணி முடிக்கப்பட்ட நாள் 22–3–2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை 4,95,880 ரூபாய். இதே சாலையில் அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பிலே 12.0 கிலோ மீட்டரிலேயிருந்து 36 கிலோ மீட்டர் வரைக்கான டெண்டர்

விடப்பட்ட நாள் 23–2–2005. பணி முடிக்கப்பட்ட நாள் 23–3–2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை 4,45,852 ரூபாய். அதாவது மேற்கண்ட சாலையில் 0.0 கிலோ மீட்டரிலேயிருந்து 36 கிலோ மீட்டர் வரையிலான சாலைப் பணி முடிக்கப்பட்ட நாள் 23–3–2005 ஆகும். ஆனால், அதே பணியை மீண்டும் 0.0 கிலோ மீட்டரிலேயிருந்து 36 கிலோ மீட்டர் வரை போட்ட சாலையை, 36.6 கிலோ மீட்டர் வரை புதுப்பணி என்ற திட்டத்தின்கீழ், சாலையை மேம்படுத்த, 18–3–2005 அன்று மீண்டும் ஒரு டெண்டர் விடப்பட்டு, அப்பணி 28–4–2006 அன்று முடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டு, இதற்காக வழங்கப்பட்ட தொகை 1,14,55,501 ரூபாய் ஆகும். ஆக, போட்ட சாலையையே மீண்டும் போடப்பட்டுள்ளதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஒரே நிதியாண்டில் ஒரே வேலைக்காக, இரண்டு தலைப்புகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்கள் அனைத்தும் இந்த அரசிடம் இருக்கின்றன. இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் ஏராளமாகக் கூறலாம். இருந்தாலும், இதற்கெல்லாம் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது இந்த அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு மிக நீண்ட பட்டியலை, ஒரே சாலையில் பராமரிப்பு என்ற தலைப்பிலேயும், திட்டப் பணிகளிலும் எவ்வாறு எடுத்து பணி செய்தார்கள் என்பதனை இங்கே குற்றச்சாட்டாகப் பதிவு செய்திருக்கின்றார்கள். நம்முடைய ஆண்டு பட்ஜட்டில் எஸ்.ஆர். என்ற தலைப்பின்கீழ் அவ்வப்போது ஏற்படுகின்ற பழுதுகளை, பள்ளங்களை, சரி செய்வதற்காக நாம் ஒட்டுமொத்தமாக மாநிலத்திற்குத் தேவைப்படுகின்ற 100 அல்லது 120 கோடி ரூபாய் என்ற அளவிற்கு நாம் நிதி ஒதுக்கம் செய்கின்றோம். அந்த நிதி ஒதுக்கத்தைக்கொண்டு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற 61,420 கிலோ மீட்டர் சாலைகளை, அந்தச் சாலைகளில் எங்கெல்லாம் பள்ளங்கள் ஏற்படுகின்றனவோ, பழுதுகள் ஏற்படுகின்றனவோ, நொடிகள் ஏற்படுகின்றனவோ, சாலைப் போக்குவரத்துக்கு இடையூறு இருக்கின்றது என்ற ஒரு நிலை வருகின்றபோது, அவற்றைச் சரி



செய்வதற்காகத்தான் நாம் அந்த நிதியை எஸ்.ஆர். என்ற தலைப்பில் அனைத்துக் கோட்டங்களுக்கும் கொடுக்கின்றோம். அந்த வகையில் சரி செய்யப்பட்ட சாலை, அது 4 வருடம், 5 வருடம், 7 வருடம் என்று போடப்பட்டு, புதிய சாலைகளாகப் போடப்பட்டு, 4 வருடம், 5 வருடம், 6 வருடம், என்று வருடக் கணக்கில் ஆகின்ற நிலையில், அதில் பழுது ஏற்படுவது இயற்கை. அந்தச் சாலைகளை மீண்டும் திட்டப் பணிகளில் நாம் எடுக்கின்றபோது, அந்தச் சாலையை மீண்டும் எடுத்து பழுதாகி இருக்கின்ற, அந்தச் சாலையை முழுமையாகச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பை அந்தச் சாலை பெறுகின்றது. அதை ஒரு மிகப் பெரிய குற்றமாக இங்கே மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பதிவு செய்துகொண்டிருக்கிறார். இது காலங்காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு நிகழ்வுதான். இதற்கு முன்னால் இந்தச் சட்டமன்றத்தில், செங்கல்பட்டு கோட்டத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்கூட சொன்னார்கள். உங்கள் சாலைகள் போடுகிற இலட்சணங்களை நீங்கள் பாருங்கள் என்று சொன்னார்கள். அந்த செங்கல்பட்டு கோட்டத்தில் தவறு நடப்பது என்னுடைய கவனத்திற்குத் தெரிய வந்தவுடன், இன்றைக்குத் தலைமைப் பொறியாளராக இருக்கின்ற பழனிவேல் அவர்களை—அப்பொழுது அவர் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையத்திலே தலைமைப் பொறியாளராக இருந்தார்—அழைத்து, செங்கல்பட்டு கோட்டத்திலே இருக்கிற அத்தனை சாலைகளையும் நீங்கள் மறுபடியும் மறு ஆய்வு செய்து, அதில் தவறு நடந்திருந்தால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையிலே, அவர் ஆய்வு செய்து, அந்த அறிக்கையை அப்போதிருந்த தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடம் கொடுத்திருந்தார். அப்போது கோட்டப் பொறியாளராக இருந்தவரை ஓய்வு பெற விடாமல், அந்தக் கோட்டப் பொறியாளர்மீது நான் நடவடிக்கை எடுத்து, தற்காலிகப் பணி நீக்கத்தில் வைத்திருந்தேன் என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தவறுகள் எங்கு நடந்தாலும் அதைக் கண்டிக்கிற அரசாகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருந்ததேயொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் நெடுஞ்சாலைத் துறை மானியம் வருகின்றதே, சாதனைகள் மாண்புமிகு அம்மா

அவர்களுடைய சாதனைகள் இரட்டிப்பாக இருக்கின்றதே, ஏதாவது தவறுகளை, குற்றச்சாட்டுகளைக் கண்டுபிடித்தே ஆக வேண்டுமென்று அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு, அவர்களும் எந்தத் தவறுகளும் நடக்கவில்லை என்று சொல்லியும், விஞ்ஞான ரீதியான தவறுகள் ஏதாவது இருந்தால் பாருங்கள். நான் அன்றைக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில், இன்றைக்கு மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்கு விளக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் யார் தவறு செய்தாலும் அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். யார் தவறு செய்தாலும், இந்த அரசு, அதிகாரம் அவர்கள் கையில் இருக்கிறது, சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள யாரும் தடையாக இருக்க மாட்டார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார். அவரே சொல்கின்ற நேரத்தில், ஒரு சாலை போடப்பட்டு, சில காலம் ஆனதற்குப் பிறகு, மீண்டும் அந்தச் சாலை புதுப்பிக்கப்படக்கூடிய ஒரு நிலை ஏற்படும் என்ற விளக்கத்தைச் சொன்னார்கள். வேடிக்கை என்னவென்றால், மதுராந்தகம்–வெண்ணாங்குபட்டு என்ற சாலை *36* கிலோ மீட்டர் தூரம் எப்போது பணி முடிக்கப்படுகிறது என்றால் *23–3–2005*. மறுபடியும், அதே சாலையை *36.6* கிலோ மீட்டர் என்று நீட்டித்து, *18–3–2005* அன்று மீண்டும் ஒரு Tender விடப்படுகிறது. அதை யார் செய்தார்கள், என்ன செய்தார்கள் அதற்குப் பிறகு. ஆனால், ஒரே சாலையை, ஒரு வருடத்திற்குள்ளாக, ஒரு மாத இடைவெளிக்குள்ளாக, இரண்டுமுறை Tender விடப்பட்டு, ஏறக்குறைய, *1* கோடியே *11* இலட்சத்து *55* ஆயிரத்து *501* ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்காது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டார்கள் இல்லையா? தவறு நடந்திருந்தால் நடவடிக்கை எடுப்பார்கள். (குறுக்கீடு) இதில் என்ன திரும்ப clarification இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தவறு நடந்திருந்தால் நடவடிக்கை எடுப்போம், தவறு இல்லையென்றால் விடப் போகிறார்கள்; இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சொல்லுங்கள், சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரே சாலையில், ஒரே வருடத்தில் திரும்பப் போடுகின்ற பணியை மேற்கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். ஒரே சாலை, ஒரே வருடத்தில் திரும்ப எடுக்கக்கூடிய காலக்கட்டம். அதாவது, இயற்கைச் சீற்றங்கள் எல்லாம் (குறுக்கீடுகள்) ஏன் பேசுகிறீர்கள்? வெள்ளங்கள் ஏற்பட்டு, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏதாவது, அந்தச் சாலை சீர்கெட்டு இருந்தால், சீர்கெட்டிருந்த நிலை, அப்போதைக்கிருந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் குறிப்புகள் இருக்கும். அந்தமாதிரி அந்தச் சாலைகள் அந்த நேரத்தில் ஏதாவது சீர்கெட்டிருந்தால், போடவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருந்தால் போட்டிருக்கலாம். ஆனால், தவறு நடந்திருக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் சட்டப்படி நீங்கள் தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் யாரும் குறுக்கே இருக்கமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட தேதி *23–3–2005* (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, என்ன? உட்காருங்கள், அமைச்சர் பேசிக்கொண்டு இருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர் சொன்ன விளக்கத்திற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், திரு. விசுவநாதன், உட்காருங்கள். நீங்கள் முதலில் உட்காருங்கள். கடும் நடவடிக்கை எடுக்கப் போகிறேன் இப்போது. உட்காருங்கள், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள், பொறுங்கள். அமைதியாக இருங்கள், ரோடு போடாமல், போட்டதாக எடுத்திருந்தால் அது குற்றம்தானே? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, மழைக் காலமாக இருந்தால், அந்தச் சாலை பழுதுபட்டிருந்தால், மீண்டும் போடுவது வழக்கம்தான் ஒரே ஆண்டிலே என்று சொன்னார். நான் அதைத்தான் சொல்கிறேன். அது ஒரு கோடைக்காலம். இன்னும் சொல்லப்போனால், 23-3-2005 மழையே பெய்யாத காலம். பணி அப்போதுதான் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே பணிக்காக, அந்தப் பணியைச் செய்து முடிப்பதற்குள்ளேயே (குறுக்கீடுகள்)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், இப்போது சொல்கிறேன் கேளுங்கள். ஒரே வார்த்தை. தவறு நடந்து இருந்தால் நடவடிக்கை, தவறு இல்லையென்றால் விடப்போகிறார்கள், அவ்வளவுதானே. உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் அமைச்சர் பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலத்தில், 23-3-2005 அன்று செய்து முடிக்கப்பட்ட பணிக்கு, அந்தப் பணி (குறுக்கீடு) முடிவடைவதற்குள்ளாகவே, 18-3-2005 அன்று மீண்டும் Tender கோரப்பட்டு ...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 1 கோடியே 14 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கு விடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலிலே.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மழையும் பெய்யவில்லை, ஓராண்டு கால இடைவெளியும் இல்லை. ஒரே மாத இடைவெளியில்



அந்தப் பணி செய்யப்பட்டு இருக்கிறது என்றால், இந்தக் குற்றம் செய்தவர்கள் யார்? எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத்தான் நான் இங்கே சொன்னேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ? நீங்கள் தப்பு செய்திருந்தால் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் ஏன் குதிக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையிலே ஒரு சாலையை எடுத்திருந்தால், அடுத்த தடவை அந்தச் சாலையைப் போடவேண்டுமென்று சொன்னால், மூன்று வருடம் time கொடுக்கவேண்டும். அந்த விதியே இருக்கிறது. அதுமட்டுமல்ல, சாலை போட்டிருப்பது முழுவதும், அதுவும் இதுபோல நெருக்கடிக் காலத்திலே போட்டது என்று சொன்னால், அதற்கு Tender விடவேண்டிய அவசியம் இல்லை. Tender வேறு விட்டிருக்கிறீர்கள். Nomination work-கே கொடுக்கலாம். அதற்கும் விதி இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் மாணவன், "English புத்தகம் வாங்கவேண்டும், அப்பா, பத்து ரூபாய் கொடு" என்று அப்பாவிடம் கேட்பான். அடுத்து, உடனே "ஆங்கிலப் புத்தகம் வாங்கவேண்டுமென்று ஒரு பத்து ரூபாய் கேட்பான்". அந்தமாதிரி பழுதுபார்க்கவேண்டுமென்று சொல்லி ஒரு amount; அதையே செப்பனிடப் போகிறோம் என்று சொல்லி ஒரு amount; அதுவும் ஒரே காலத்திலே போடப்பட்டிருக்கிறது. இதுதான் செய்திருக்கிற தவறு. இந்தத் தவறை மறைப்பதற்காக சேர்ந்து எல்லோரும் கத்துவதிலே பிரயோஜனம் இல்லை; நடந்திருக்கிற தவறு அதுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர் பேசியிருக்கிறார். பேசியது உங்கள் உறுப்பினர், அவர் பேசியிருக்கிறார் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ்.

*முற்பகல் 11-35*

**• திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியதே உங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான். (குறுக்கீடுகள்) அவர் சொல்லிவிட்டார்; பின்னர் ஏன் அதைத் திரும்பப் பேசுகிறீர்கள், விடுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இப்போது நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள், இந்த அவைக்குத் தந்திருக்கின்ற தகவல், தமிழகத்தினுடைய மனசாட்சியையே உலுக்குகின்ற அளவிற்கு, (கூச்சல்–குழப்பம்) எவ்வளவு பெரிய கொடுமையான, தரம் தாழ்ந்த நிர்வாகம் நடந்திருக்கிறது என்பதற்கு, இது ஒரு மிகப் பெரிய சான்று. (குறுக்கீடுகள்) சாலைகளைப் போடுவதற்காக... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் அனுமதி வாங்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்தம் போடக் கூடாது. அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்தக் கொடுமையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள்...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நாட்டு மக்கள் முழுவதும் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், நீங்கள் பேசுங்கள், பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு, (குறுக்கீடுகள்) போடாத சாலைகளைப் போட்டதாக, பழுதுபார்க்காத சாலைகளைப் பழுதுபார்த்ததாக, பழுதுபார்த்த சாலைகளையே புதிதாகப் போடப்பட்ட சாலைகளாக, புதிதாகப் போடப்பட்ட சாலைகளையே பழுதுபார்த்த சாலைகளாக, (குறுக்கீடுகள்) இந்த அலங்கோலத்தை, இந்த அவமானத்தைச் செய்தவர்கள்தான், (கூச்சல்–குழப்பம்) இன்று பெரிய சாதனை செய்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காட்சி



எனக்கு ஞாபகத்திலே வருகிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பதில் சொல்கிறபோது, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது யாராவது தலையிட்டார்களா?

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேசுவதற்கே அனுமதிக்கவில்லை என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது யாராவது தலையிட்டார்களா? (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேசுவதற்கு (குறுக்கீடுகள்) முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே சில தகவல்களைக் கொடுத்தார்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள். நான் இந்த அவையிலே பேச வேண்டுமா, வேண்டாமா? நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடைமறித்து, இடைஞ்சல் செய்வது நல்லதல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் ஏன் பேசக்கூடாது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என்னை பேச அனுமதித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிவிடட்டும்; அதற்குப் பிறகு பதில் சொல்லலாம்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அவர் பேசலாம்; நான் பேசக்கூடாதா? (குறுக்கீடுகள்) அவர் சொல்லலாம், நான் சொல்லக்கூடாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என்ன point? நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) I am not yielding. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு பேருமா? (குறுக்கீடுகள்) அவ்வளவு பேருமா?

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Not allowed.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசி முடித்ததற்குப் பிறகு, (குறுக்கீடுகள்) I am not yielding. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்களுடைய கட்சி உறுப்பினர்களை எல்லாம் உட்காரச் சொல்லுங்கள். இல்லையென்றால், நான் அவையிலே நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) முதலில் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காரச் சொல்லுங்கள், அதற்குப்பிறகு மற்றவற்றைப் பார்ப்போம். (குறுக்கீடுகள்) முதலில் உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பெரிய கொடுமை நடந்திருக்கிறது? எவ்வளவு பெரிய கொள்ளை நடந்திருக்கிறது. (கூச்சல்–குழப்பம்) பொது மக்களுடைய வரிப் பணத்திலே எத்தனை கோடி கொள்ளையடித்திருக்கிறார்கள் என்பதை இங்கே நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், ஆதாரபூர்வமாக இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்,... (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதற்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர், பொறுப்பாக பதில் சொல்வதற்குப் பதிலாக, அவர் சொல்லுகின்ற பதில், ஜனநாயகத்தையே கேலிக்குரியதாக்கக்கூடிய அளவிற்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த அவையிலே பதிலளிக்கிறார். இந்த நாட்டிலே வரி கொடுத்தவர்கள்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** வெளிநாடுகளிலிருந்து, உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். உங்களுக்குப் பதில் சொல்வதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அந்தக் கடனுக்கு வட்டி கட்டி, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு பேரும் நின்றீர்கள் என்றால், ஒருத்தருக்கும் அனுமதி கிடையாது; நான் அனுமதி கொடுக்கமாட்டேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** போடக்கூடிய சாலைக்குள்ள பணத்தை, போடாத சாலைகளுக்குப் போட்டதாகக் கணக்கெழுதியிருக்கின்ற, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இவர்களை இந்தத் தமிழகம் ஒரு நாளும் மன்னிக்காது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, அப்புறம் இப்படி நின்றீர்கள் என்றால்,, எப்படி (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசிமுடித்த பிறகு (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அனைவரும் அவையிலே ஒழுக்கமாக இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் முதலிலே. *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேசுவதற்கு அனுமதி வேண்டாமா? *(குறுக்கீடுகள்)* நீங்கள் ஒரு மணி நேரம் பேசியிருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* ஒரு மணி நேரம் பேசியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே அவை மரபை மறந்து விடாதீர்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஒரு மணி நேரம்; நாங்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என் பெயரைச் சொல்லியே சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்ல வேண்டியதைச் சொல்லி முடியுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் அவ்வளவு பேரும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அப்போதுகூட நான் அமைதியாகத்தான் உட்கார்ந்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஆனால், நான் பதில் சொல்வதற்கான வாய்ப்பினைப் பெற வேண்டாமா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், இப்போது நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். *(குறுக்கீடுகள்)* திரும்பவும் இந்தச் சபைக்கே வரமுடியாத அளவிற்கு ஆக்கிவிடுவேன். *(கூச்சல்—குழப்பம்)* போங்கள். *(கூச்சல்—குழப்பம்)* உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேசுவோம். *(குறுக்கீடுகள்)* அவர் பேசும்போது நாங்கள் கேட்கவேண்டும். நாங்கள் பேசுவதை அவர்கள் கேட்கமாட்டார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் பேசலாம்,



உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் வாருங்கள், அதில் எது தேவையோ, அதை நான் பார்க்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசியதற்குப் பிறகு உங்களுக்கு அனுமதி தருவேன். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-40*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர் பேசி முடிக்கட்டும். பீட்டர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த அவையிலே, *(குறுக்கீடுகள்)* நான் பேசி முடித்துவிடுகிறேன். அவர் ஒரு மணிநேரம் பேசினாரா, இல்லையா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன், கேளுங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஒருமணி நேரம் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோமா, இல்லையா? *(குறுக்கீடுகள்)* ஒருமணி நேரம் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோமா, இல்லையா? *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசியதை, ஒருமணி நேரம் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோமா, இல்லையா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள். பீட்டர் அல்போன்ஸ் அவர்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* கொஞ்சம் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதை முதலிலே கேட்டுக்கொள்ளுங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதை முதலில் கேளுங்கள். திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** உங்களைப் பேச அனுமதித்தார்களா, இல்லையா? நான் பேசும்போது ஏன் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, அனுமதி பெற்று ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, இடைமறித்து இடைஞ்சல் பண்ணினால், சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்; ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) இந்த மாதிரி, ஓர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இப்படி, நடந்து கொள்ளக்கூடாது. (குறுக்கீடுகள்) அதை அப்புறம் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதை அப்புறம் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) அவர் பொறுப்பேற்றுக்கொள்வார். (குறுக்கீடுகள்) அவர் பொறுப்பேற்றுக்கொள்வார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசுவதற்கு அனுமதி வாங்கியிருக்கிறேன். அனுமதி வாங்கி எழுந்து நின்று பேசிக்கொண்டிருக்கிறேன். என்னைப் பேசவிடாமல் தடுப்பது, என்னுடைய உரிமையை மீறுகின்ற செயல். இந்த அவையிலே, இந்த அவையினுடைய உறுப்பினர் என்கின்ற முறையிலே, என்னுடைய உரிமையை மீறுகின்ற செயலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற பயங்கரவாதத்தை... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் அதற்கெல்லாம் பயப்படமாட்டேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சி சார்பிலே சொல்லப்படுகிற கருத்துகள் அவைக் குறிப்பிலே ஏறாது. எல்லோரும் உட்காருங்கள். பீட்டர் அலேபோன்ஸ், நீங்கள் சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என்னை மிரட்டி உட்கார வைக்க முடியாது. உண்மையினுடைய வாயை அடைக்க முடியாது. உண்மை ஒருநாள் விழித்துக்கொள்ளும். அது எந்த நீதிமன்றத்திற்கும் வந்து சாட்சியம் சொல்லும். என்னைப் பேசுவதற்கு... (குறுக்கீடுகள்) ஒரு மணி நேரம் அவர் பேசியதை நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். நான் பேசுவதையும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் ஒரு மணி நேரம் கேட்டுக்கொண்டிருந்தோமா, இல்லையா? (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்கு அவர் பொறுப்பு எடுத்துக்கொள்வார். முதலிலே எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசுவது, இந்த அவையிலே என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நீங்கள் ஏன் என்னை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள், என்னைப் பேசுவதற்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அதற்குப் பொறுப்பு எடுக்காமல் அவையிலே பேசவில்லை. அவர் பொறுப்பு எடுத்துக்கொள்வார். உட்காருங்கள், உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) அவர் பொறுப்பு எடுத்துக்கொளவார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அவர் மட்டும்தான் பேசுவாரா? (குறுக்கீடுகள்) இது என்ன, உங்களுக்கு மட்டும் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறதா சட்டமன்றத்திலே? நாங்கள் கருத்துகளைப் பதிவு செய்வதற்கு, எங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு எங்களுக்கு அனுமதி வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவையிலே, அவை மரபுகளைக் காப்பாற்றுங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதியில்லை. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் அதற்குப் பொறுப்பெடுத்துக்கொள்கிறார். (குறுக்கீடுகள்) அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார். அவையிலே தவறான தகவலைக் கொடுத்தால், அதற்கு அவர் பொறுப்பு. நீங்கள் அதற்குப் பின்னர் பேசலாம். நீங்கள் உட்காருங்கள், முதலிலே. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், முதலிலே. (குறுக்கீடுகள) முதலிலே, உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்,

அவர்கள் ஆட்சியிலே செய்த பல சாதனைகளைச் சொல்லும்போது, நாங்கள் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். சில வேதனைகளைச் சொன்னபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், ஒரு விளக்கத்தைத் தருகிறார். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அவர் விளக்கம் தந்தது தவறு என்று சொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவருக்குப் பதில் சொல்லலாம். அந்த வாய்ப்பை நீங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும் நேரம் தருகிறேன். அவர் பேசியதற்குப் பின்னர் நீங்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், முதலிலே. பீட்டர், உங்கள் கருத்தைச் சொல்லி முடித்துவிட்டீர்களா? சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லி முடியுங்கள். ஒரே வார்த்தையிலே சொல்லி முடியுங்கள். நேரமாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடைமறித்துப் பேச அனுமதியில்லை. பீட்டர், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் சில ஆணித்தரமான புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த... (குறுக்கீடுகள்) என்ன, இது என்ன? நீங்கள் பேசும்போது நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். நான் சொல்வதைக் கேட்க மாட்டீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். அமைதியாகக் கேளுங்கள். நான் ஜனநாயக முறைப்படி இந்த அவையை நடத்த வேண்டும் என்று நினைக்கிறேன். நீங்கள் அதற்கு எவ்வளவு இடைஞ்சல் செய்யமுடியுமோ, அவ்வளவு இடைஞ்சல் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதுதான் உண்மை. தெரிகிறதா? உட்காருங்கள், எல்லோரும். பீட்டர், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எல்லா உறுப்பினர்களும், தங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு, கருத்துச் சுதந்திரத்தை இந்த நாட்டின் அரசியல் சாசனச் சட்டம் உறுதி செய்து தந்திருக்கிறது. அவர்கள் ஒரு



மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள், நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். இப்போது நான் பேசும்போது, பின்னால் இருந்து சத்தம் போட்டு, அந்தப் பேச்சையே பேசவிடாமல் தடுக்கின்ற ஒரு முயற்சியை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பீட்டர், முடித்துவிட்டீர்களா? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** எதற்காக எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்று எழுந்து நிற்கிறார்களா? யாருடைய அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள்? நீங்கள் எனக்குப் பேச அனுமதி தந்திருக்கிறீர்களா? அவர்கள் பேசுவதற்கு அனுமதி தந்திருக்கிறீர்களா? இப்போது யார் பேச வேண்டும்? அதை நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசுகின்ற உறுப்பினரைத் தவிர, மற்றவர்களை அமரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

## 6. உரிமை மீறல் பிரச்சினை

### உறுப்பினர் அவையில் சிங்கி / ஜால்ராவைக் கொண்டுவந்து தட்டியது மற்றும் அவைக் காவலர்களால் சட்டை கிழிக்கப்பட்டதாக தவறாகச் செய்தி பரப்பியது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெயர் என்ன? என்ன பெயர்? அவர் பெயர் என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இரண்டாவது உட்கார்ந்து இருக்கிறாரே, மேலேயிருந்து.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) பேசுவதற்கு... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**(உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன், சிங்கியைக் கையில் வைத்துக்கொண்டு, தட்டிக் கொண்டிருந்தார்.)**

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ரவிச்சந்திரனை நான் வெளியேற்றுகிறேன், வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் ரவிச்சந்திரனை வெளியேற்றுகிறேன்.

*(கூச்சல்–குழப்பம்) பேசுங்கள், பேசுங்கள், (கூச்சல்–குழப்பம்) அவர் கையிலே சிங்கி கொண்டுவந்து அடித்துக்கொண்டிருக்கிறார். அதனால் வெளியேற்றுகிறேன். (கூச்சல்–குழப்பம்) சட்டமன்றத்திற்குள், சிங்கி, ஜால்ரா இருக்கிறதல்லவா, அதைக் கொண்டுவந்து அடித்துக்கொண்டிருக்கிறார். முதலில் அவரை அவையிலிருந்து வெளியேற்றுகிறேன். (கூச்சல்–குழப்பம்) உங்கள் உறுப்பினர் எவ்வளவு அசிங்கமாக நடந்துகொண்டிருக்கிறார் பார்த்தீர்களா? அவரை வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) பேசுங்கள், பேசுங்கள்.*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களைப் பேரவைக் காவலர்கள் அவையிலிருந்து வெளியேற்றினர்.)*

*(உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரனை வெளியேற்றும்போது அ.இ.அ.தி.மு.க உறுப்பினர்களில் ஒருவர், பேரவைக் காவலர் ஒருவரின் தொப்பியைத் தூக்கி வீசி எறிந்தார். மேலும், சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் தங்கள் கையிலுள்ள தாள்களை வீசியெறிந்து பறக்க விட்டனர்.)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், பீட்டர் அல்போன்ஸ், சொல்லியாயிற்றா?*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இதோ முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போட்ட சாலைகள் எது, போடாத சாலைகள் (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா, திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *எது என்பதை விசாரிப்பதற்காக ஒரு விசாரணை கமிஷனை அமைக்கவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசி முடிக்கட்டும், பேசி முடித்தபிறகு பேசச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*



**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *இதிலே நம்முடைய மாண்புமிகு சட்டமன்றத்தினுடைய (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்.. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் கையில் சிங்கி வைத்திருக்கிறார், பாருங்கள், போய்ப் பாருங்கள், (கூச்சல்–குழப்பம்) யாரைக் கேட்டு இதை எல்லாம் உள்ளே கொண்டுவந்தார்? (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. அவரை முதலில் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள், (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள், போகட்டும், போகட்டும், வெளியே போகட்டும் (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) என்ன இது? யாரிடம் கேட்டு சிங்கி எல்லாம் கொண்டு வந்தார்? உட்காருங்கள், எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதோ பாருங்கள், முதலில் அவை மரபைக் காப்பாற்ற வேண்டுமென்று நீங்களும் நினைக்கவேண்டும் (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டிருக்கிறார், இடைமறித்து இடைஞ்சல் செய்தீர்கள் என்றால் நன்றாக இருக்காது. உட்காருங்கள் அவ்வளவு பேரும். (கூச்சல்–குழப்பம்) நீங்கள் பேசுங்கள், திரு. பீட்டர், முடித்துவிட்டீர்களா, இல்லையா?*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *அவர் பேசும்போது நான் எப்படி பேசுவது? அவர் உட்கார வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் முதலில் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்தால்தான் அவர் பேசமுடியும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அதைச் சொல்கிறேன் கேளுங்கள், அவர் பொறுப்பு எடுத்துக்கொள்வார். முதலில் உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள், முடித்தீர்களா இல்லையா பீட்டர்? நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதை யாரும் அவசரப்படாமல் கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அனைவரையும் வெளியேற்றுங்கள். அனைவரையும் வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள் (குறுக்கீடுகள்)*

*(கூச்சல்–குழப்பம்)* திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அனைவரையும் வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* ஒழுங்காக இருக்கிறீர்களா? *(குறுக்கீடுகள்)* ஒழுங்காக இருப்பதானால் இருங்கள், இல்லையென்றால், வெளியேற்றிவிடுவேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக் கொண்டே அவையைவிட்டு வெளியேறினர்.)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற இந்தப் புள்ளிவிவரங்கள் தமிழகத்து மக்களுடைய இரத்தத்தையே உறைய வைக்கக்கூடிய அளவிற்கு அதிர்ச்சியான தகவல்கள். பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள், இந்தச் சாலைகளைப் போடுவதற்காக, உலக வங்கியிலிருந்து, சர்வதேச நிதி நிறுவனத்திலிருந்து வட்டிக்குக் கடன் வாங்கி, இன்னும் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் அந்தக் கடனைக் கட்டுவதற்காக தமிழகத்து மக்கள் வட்டியைச் சுமக்கவேண்டும். அப்படி வட்டிக்கு வாங்கிய பணத்தை தமிழக மக்களுடைய இரத்தத்தை, வரியாகக் கொடுத்த பணத்தை, இப்படி போடாத சாலைகளைப் போட்டதாகக் கணக்கு எழுதி, அவர்கள் சொல்லுகின்ற தகவல், இன்று தமிழ்நாட்டு மக்கள் அத்தனைபேரும் தெரிந்துகொள்ளக்கூடிய மிக அதிர்ச்சிகரமான தகவல்.

*முற்பகல் 11–50*

அதைத்தான், நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலின்படி, இந்த மிகப்பெரிய சதியை, மிகப்பெரிய திருட்டைச் செய்தவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம்? இதன்மேல் ஒரு தனி விசாரணை கமிஷன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியில் சத்தம் வரக் கூடாது. முதலில் அவர்களை, வெளியேறியவர்களை, அவைக் காவலர்கள், வெளியே அனுப்புங்கள். லாபிக்கு வெளியே அனுப்புங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இது திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டுமல்ல, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற அத்தனை சாலைப் பணிகளையும் எடுத்து ஆராய்ந்துப் பார்த்து, போடாத சாலைகள் – அவர் சொல்லுகின்ற பதிலைப் பார்த்தால், எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஒரு நெடுஞ்சாலைத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர், ஒரு முன்னாள் முதலமைச்சராக இருந்தவர். பழுதுபார்க்கப்படுகின்ற அதே சாலை அதே நேரத்திலே புதியதாகப் போடப்படுகிறது என்று சொன்னால், அப்படி நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதாம், நினைத்தால், நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று அவர் சொல்கின்றதைப் பார்க்கின்றபோது, வேடிக்கையாக இருக்கிறது. அது என்ன சாலை என்று கேட்டால் – நாம்கூட ஒரு தமிழ் படத்திலே பார்த்தோம். ஒரு சினிமா படத்திலே. செந்திலும், கவுண்டமணியும் வாழைப் பழத்தை சாப்பிடுகின்றபோது, ஒரு வாழைப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டு, இது எந்த வாழைப் பழம் என்று கேட்டால், அது அந்த வாழைப் பழம் என்று சொல்வார். அதைப்போல, போடாத சாலையைப் பார்த்து, எந்தச் சாலை என்று கேட்டால், அதுதான் பழுதுபார்த்த சாலை என்று சொல்கிறார். பழுதுபார்த்த சாலை எது என்று கேட்டால், அதுதான் புதியதாகப் போட்ட சாலை என்று சொல்லுகிறார்.





அந்த சினிமா படத்திலே வருகின்ற காட்சியைத்தான், இவர்கள் நினைவுப்படுத்துகிறார்களேயொழிய, தமிழக மக்களுடைய வரிப்பணத்தை, இப்படி கொள்ளையடிப்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அவர்கள்மீது மிகச் சரியானதொரு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சாலைகளைப் பொறுத்தவரையிலே, ஊராட்சித் துறையின்மூலமாகத்தான் போடப்பட்டுக் கொண்டிருந்தன. ஏன் கடந்த கால ஆட்சியிலே அதை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றியிருக்கிறார்கள் என்பது, இப்போதுதான் உண்மை வெளிப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**• திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைக் கூறுவதற்கு எழுகின்றபோது அவர்களுடைய கருத்துகளைக் கேட்டுக்கொண்டு, அதற்கு மற்றவர்கள் பதில் கொடுத்தால் அதை நாங்கள் சந்திப்பதற்கு எந்த நேரத்திலும் தயாராக இருக்கின்றோம். அதுமட்டுமல்ல, இது ஒன்றும் இந்த அவைக்குப் புதிதானது அல்ல. சென்றமுறை சாலைப் பணியாளர்களை நிரந்தரமாக்குவது குறித்து இந்த மாமன்றத்திலே வினா எழுப்பப்பட்ட நேரத்திலே அன்றைக்கிருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், பெயரைச் சொல்லியே, இன்னார், இன்னின்னார் இலஞ்சம் கொடுத்திருக்கின்றார்கள். அதனால்தான் அவர்களை நிரந்தரம் செய்ய முடியவில்லை என்றெல்லாம் ஒரு கட்சியின்மீது, அங்கேயிருக்கின்ற உறுப்பினர்கள்மீது, இறந்துபோனவர்கள்மீதுகூட, குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதை இந்த மாமன்றம் தாங்கிக் கொண்டுதான் இருந்தது. அதுபோல இருக்கின்றபோது இங்கு யாரையும் பெயரைச் சொல்லி சொல்லவில்லை.

சென்ற அரசாங்கத்திலே நடந்திருக்கின்ற குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள்மீது அவர்கள் பதில் கொடுக்கலாம். அந்த பதில் திருப்தியளிக்கவில்லை என்று சொன்னால், நிச்சயமாக, அதிலே சம்பந்தப்பட்டிருக்கின்றவர்கள் யார் என்பது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு, அரசுக்கு அதற்குரிய அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிந்தும்கூட, இதுபோன்று ஒரு கலவரத்தை, எப்போது பார்த்தாலும் ஏற்படுத்துவது என்பது, இந்தச் சபைக்கு நல்லதொரு மரபாக இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**• திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினம், தினம், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் பேசிவிட்டு கடைசியிலே ஏதாவது ஒரு வம்பை இழுத்து வெளிநடப்புச் செய்வதை தினம்தினம் வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றார்கள். நீண்ட நேரம், ஒரு மணிநேரத்திற்கு மேலாக அந்த உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். இந்த அவையிலே, கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக 10 ஆண்டு கால ஆட்சியில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன.





ஒரு சட்டமன்ற உறுப்பினர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் தண்டபாணி அவர்கள், ஏதோ கடிதம் கொடுத்தார், கடிதம் கொடுத்தார் என்று அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இல்லாத ஒருவரைப் பற்றி, சில பேரை அழைத்து வந்து அறையிலே அமரவைத்து, அவர்களிடத்திலே கடிதங்களைப்பெற்று உங்களுக்கு பணி கொடுக்கிறோம் என்று அவர்களை ஏமாற்றி, இந்த அவையிலே இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. எப்படி அந்தச் சாலைப் பணியாளர்களுக்கு வேலை கொடுக்க முடியும்? அதற்கு 50 ஆயிரம் ரூபாய் வாங்கினார், 20 ஆயிரம் ரூபாய் வாங்கினார் 10 ஆயிரம் ரூபாய் வாங்கினார், என்றெல்லாம் இந்த அவையிலே முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அந்த உறுப்பினர் தண்டபாணி அவர்கள் இறந்துபோய்விட்டார்கள். அவரைப் பற்றி பேச வேண்டாம் என்று சொன்னோம். ஆனால், அதையெல்லாம் அவைக் குறிப்பிலே, ஏற்ற வேண்டும் என்றுதான் அன்றைக்குச் சொன்னார்களேதவிர, இப்படி போடாத சாலைகளைப் போட்டதாகச் சொல்லி, மக்கள் வரிப் பணத்தை கொள்ளையடித்ததைப் பற்றி பேசுகின்றபோது அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. அவர்களுக்கு ஆத்திரம் வருவதோடு மட்டுமல்ல, தங்களுடைய பிரச்சினைகளெல்லாம் எங்கே வெளியே வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள்; கூச்சல் போடுகிறார்கள்; குழப்பம் விளைவிக்கிறார்கள் இந்த அவையிலே.

*முற்பகல் 11–55*

அதுமட்டுமல்லாமல், காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுகின்றபோது அவர்கள் இடைமறிக்கின்றார்கள். எழுந்துநின்று கூச்சல் போடுகின்றார்கள். நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, அவர், என்ன பேசுகிறார் என்று அவர்கள் தெரிந்துகொள்ளாமலேயே, எழுந்து நிற்கின்றபோதே அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள். ஆத்திரப்பட்டு, என்ன பேசிவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக அவர்மீது சேற்றை இறைக்கப் பார்க்கிறார்கள். இதற்கெல்லாம் நீங்கள் அனுமதி வழங்கக்கூடாது. காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நீங்கள் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதை இந்த அவையிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே அவர் ஏறக்குறைய அரை மணி நேரத்திலே, கால் மணி நேரம் பஜனைப் பாடினார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பஜனையிலே நாம் யாரும் குறுக்கிடவில்லை. அவர் விருப்பப்படி பாடிக்கொண்டிருந்தார். அதற்குப் பிறகு அவர் சொல்லிய சாதனைகளில் சில தவறுகள் நடந்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால், உள்ளபடியே அவர்களிடத்திலே உண்மை இருக்கிறது, நியாயம் இருக்கிறது, நிரபராதிகள் என்று சொன்னால் இங்கே வாதாட வேண்டும். அதுதான் ஒரு நிரபராதிக்கு அழகு. அதையெல்லாம் விடுத்துவிட்டு, அவரைப் பேசவிடாமல் தடுக்கின்ற முயற்சியிலே ஈடுபடுவது, வெளியிலேயிருந்து கொண்டு வந்த ஓர் இசைக் கருவியை, ஜால்ராவை இந்த மன்றத்திலே அடிப்பது, இது எவ்வளவு அநாகரிகமான செயல் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இங்கே முதலமைச்சர் உட்பட அமைச்சர் பெருமக்கள், உறுப்பினர்கள் நாட்டை வழிநடத்தக் கூடியவர்கள் மாமன்றத்திலே அமர்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கெல்லாம் பாதுகாப்பாக இருப்பவர்கள் அவைக் காவலர்கள். அவர்கள் தலையிலே இருக்கக்கூடிய தொப்பியை எடுத்து இந்த மாமன்றத்திலே வீசுகிறார்கள் என்று சொன்னால், இங்கே நமக்குப் பாதுகாப்பு, காவலர்கள். காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லாத நிலை. மாமன்றத்திலே காவலர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொன்னால், வெளியிலே அ.தி.மு.க.–வினரால் காவல் துறையினருக்கு என்ன நிலைமை ஏற்படும் என்பதை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இவர்களுக்குப் பயந்துகொண்டு 5 ஆண்டு காலம் காவல் துறை, கைகட்டி, வாய்பொத்தி நின்றது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றை இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதிலே, மதுராந்தகத்திலே இருந்து வெண்ணாங்குபட்டு 36 கிலோ மீட்டர். மதுராந்தகம்–சித்தாமூர்–சூணாம்பேடு–வெண்ணாங்குபட்டு, இந்த இடைப்பட்ட சாலைதான் 36 கிலோ மீட்டர். 23–3–2005 இல் வேலை முடிக்கப்பட்டது. அதனுடைய மதிப்பீடு 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறார். ஆனால், இதற்கிடையில் வேலை முடிக்கப்படுவதற்கு முன்பே, மீண்டும் ஓர் ஒப்பந்தம். எவ்வளவு என்று



23–3–2005 இல் வேலை முடிக்கப்படுகிறது.
சொன்னால், அதாவது, 23–3–2005 இல் வேலை முடிக்கப்படுகிறது என்று
இடையில் 18–3–2005–லே ஓர் ஒப்பந்தம் இடப்படுகிறது என்று
சொன்னால் இது எவ்வளவு பெரிய மோசடி என்பதை, ஒன்றை
உதாரணத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார். பல பணிகளிலே,
நூற்றுக்கணக்கான பணிகளிலே, நடைபெற்ற முறைகேடுகளுக்கு இது
ஒன்று. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதை இங்கே
குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்போல ஏராளமான
முறைகேடுகள், ஊழல்கள் நடந்திருக்கின்றன. ஆகவே, நான்
கேட்டுக்கொள்வதெல்லாம், கடந்த 5 ஆண்டு காலத்திலே,
நெடுஞ்சாலைத் துறையிலே, பொதுப் பணித் துறையிலே, என்னென்ன
பணிகள் நடந்தன; எந்தத் தேதியிலே ஒப்பந்தமிடப்பட்டது; எப்போது
பணி முடிக்கப்பட்டது என்ற விவரத்தை இந்த அரசு ஆய்வு செய்து
கண்டறிய வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே நான்
முன்வைக்கிறேன். இப்போது ஒரு சோறு பதம் பார்த்திருக்கிறோம்.
இதிலேயே முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கப்
பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உண்மை.
உண்மை வெளிவந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே,
இந்த முழுப் பூசணிக்காயை மறைப்பதற்காகத்தான் கூச்சல்–குழப்பம்;
வெளிநடப்பு. ஆகவே, இதை ஏற்றுக்கொள்வதற்கு அ.தி.மு.க. தயாராக
இருந்தால், நடவடிக்கைக்கு உட்பட வேண்டும். அவர்கள் நிலையை
வெளிப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை.
சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது நல்ல
கருத்துகளைச் சொல்ல வேண்டிய அ.தி.மு.க., அதனுடைய துணைத்
தலைவர் அவர்கள், அவர்களது ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாக
சில சாதனைகளைச் சொன்னார். வேதனைகளைப் பற்றி நமது மின்
துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்.
சாலைகள் போடுவதிலே, சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்ன
நடைபெற்றது என்பதை நாடே அறியும். இங்கே மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியை இங்கே
பதிவு செய்தார்கள். உள்ளாட்சித் துறையின் மூலமாகப் போடப்பட
வேண்டிய சாலைகள் எல்லாம் package system என்ற பெயராலே
நெடுஞ்சாலைத் துறையே எடுத்துச் செய்தது. அப்படிச் செய்ததற்கு
என்ன காரணம் என்பதைத்தான் அவர் இன்றைக்கு இங்கே

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 21

கேள்வியாகவும் எழுப்பினார். அதைப் மறைப்பதற்குரிய முயற்சியாகத்தான் அவர்கள் இப்படிப்பட்ட கலவரத்திலே ஈடுபடுகிறார்கள்.

*நண்பகல் 12–00*

ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய இதயத்தை, அவர்களுடைய தலைவராக இருக்கிற அம்மா அவர்கள் பெற்றார் என்று இங்கே சொன்னார். சரி, எம்.ஜி.ஆர். அவர்களுடைய இதயத்தைப் பெற்றவர்கள் திரும்ப அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, இந்த நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக பெற்ற commission–களை இதயபூர்வமாகவே இந்த சட்டமன்றத்திலே ஒப்புக்கொள்வார்களா? எல்லாமே percentage. இதைச் சொன்னால், அவர் ஆதாரம் இருக்கிறதா என்றுகூட, அடுத்து வருகிறபொழுது, இங்கே உள்ளே வருகிறபொழுது கேட்பார்கள். இது நாடறிந்த உண்மை, 10 சதவிகிதம் commission பெற்றார்கள் அவர்கள் என்பதை மறுக்கவே முடியாது. மறுத்தால், அவர்களுக்கு இதயம் இல்லை, எம்.ஜி.ஆர். அவர்களின் இதயத்தையும் அவர்கள் பெறவில்லை என்றுதான் அர்த்தம். ஆகவே, இதுதான் நாட்டில் நடந்தது. தெரியாத விஷயத்தை யாரும் மறுத்துப் பேச முடியாது. இங்கே நாடறிந்த உண்மையைத்தான் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

அவர்கள் விவாதிக்கவேண்டுமென்றால், அதை விலாவாரியாக விவாதிப்பதற்கு எல்லா எதிர்க்கட்சிகளுமே தயாராக இருக்கின்றன. ஆனால், அவர்கள் அதை மறுப்பதற்கு, அவர்களுக்கு திராணி இல்லாத காரணத்தினாலே, தங்கள்மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்திவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணத்தினாலேயே, chorus–ஆக 60 பேர்களும் எழுந்து மறுப்பு தெரிவித்து, அனைவரையும் பேசவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது நம்முடைய சட்டமன்றத்தினுடைய ஜனநாயக மரபுகளை மீறிய செயலாக இருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் பேசுகிறபொழுது, எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுகிறபொழுது, மாற்றுக் கருத்தைச் சொல்கிறபொழுது, அதை ஏற்றுக்கொண்டு, அதற்கு மறுப்பு தெரிவிப்பதற்கு அவர்களுக்கு திராணி இல்லை, தைரியம் இல்லை, தெம்பு இல்லை. அவர்களிடத்திலே உண்மை இல்லை. ஆகவேதான், இப்படிப்பட்ட காரியத்திலே தினசரி ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையினுடைய இறையாண்மையை, மரபைக் பாதுகாப்பதற்கான முயற்சி எடுத்து,



2006 ஆகஸ்ட் 21] [திரு. வை. சிவபுண்ணியம்]

எங்களுக்கு நீங்கள் பாதுகாப்பு அளிப்பதற்கான உத்தரவாதத்தை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அ.தி.மு.க. ஆட்சியின்பொழுது, அன்றைக்கு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் இன்றைக்கு என்ன உரை நிகழ்த்தினாரோ, அதே உரையைத்தான் அன்றைக்கும் நிகழ்த்தினார்கள். அப்பொழுதும் 40 ஆயிரம் கிலோமீட்டர், 50 ஆயிரம் கிலோமீட்டர் சாதனை என்றுதான் சொன்னார். ஆனால், மழைநீர் சேகரிப்புத் தொட்டியை வீட்டுக்கு முன்னால் வைக்கவேண்டுமென்று அன்றைக்கு அரசாங்கம் சொன்னதை, அவர்களே சாலைகளில் மழைநீர்த் தொட்டிகளைப் போன்று பயங்கரமான பள்ளத்தாக்குகள் இருக்கக்கூடிய அளவிற்குதான் தமிழகத்தினுடைய நெடுஞ்சாலைகள் முழுவதும் இருந்தன என்பதுதான் கடந்த கால அ.தி.மு.க. அரசினுடைய சாதனை. அப்பொழுது நாங்கள் இதுபோன்ற கருத்துகளைச் சொல்வதற்கு எழுந்தால்கூட, அனுமதி மறுக்கப்பட்டது என்பதை இந்த சபை அறியும். இப்பொழுதும் நம்முடைய காங்கிரஸ் கட்சியிலிருந்து நமது உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்ன இந்தக் கருத்தை அன்றைக்கும் சொல்வதற்கு எங்களுக்கு அனுமதி இல்லை, இன்றைக்கும் சொல்வதற்கு அனுமதிக்கப்படாத ஒரு சூழல்தான் இருந்துகொண்டிருக்கிறது.

மேலும், நமது சபையில் ஜால்ரா போன்ற பொருட்களைக் கொண்டுவந்து, இந்த சபையை தொடர்ந்து அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆட்சியின்பொழுது, நாங்கள் சின்ன கோரிக்கை அட்டைகளைக் கொண்டுவந்தபொழுது, சி.பி.எம். உறுப்பினர்கள் அந்த வாயிலிலேயே மடக்கப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால், இன்றைக்கு ஜால்ரா போன்ற பொருட்களைக் கொண்டுவருகிறார்கள். அ.தி.மு.க. கடந்த காலத்தில் உலகமயத்திற்கு போட்ட ஜால்ரா, உலகத்தில் இருக்கக்கூடிய உலக வங்கி முழுவதும் கேட்டது, தனியார்மயத்திற்கு போட்ட அவர்களுடைய ஜால்ரா உலகம் முழுவதும் எல்லோராலும் கேட்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஜால்ராக்களை வைத்துக்கொண்டிருந்த அ.தி.மு.க. இன்றைக்கு

அவைக்குள்ளேயே அந்தப் பொருட்களைக் கொண்டுவருவது சபையில் அனுமதிக்கப்படுகிறதா என்பதை தயவுசெய்து உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அதுபோன்று, பேப்பர்களையெல்லாம் கிழித்துப் பறக்க விடுகிறார்கள். தொப்பியைப் பறக்க விடுகிறார்கள். கடந்த காலத்தில், இதுபோன்று பேசுவதற்கே உரிமை இல்லாத இந்த சபையில், இப்பொழுது பேசுவதற்கு உரிமை கொடுக்கப்பட்ட இந்த நேரத்தில், இதுபோன்ற அத்துமீறல்கள் தொடர்ந்து நடப்பது, எதிர்காலத்தில் சட்டமன்ற ஜனநாயகத்தை எதிர்விதமாகப் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்தப்படும். ஆகவே, இதுகுறித்த விளக்கம் அறிவதற்கு விரும்புகின்றோம். இதுகுறித்த விளக்கத்தைத் தாங்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு.

*பிற்பகல் 12–05*

***திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியினுடைய கொறடா மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த அவையிலே அநாகரீகமான வார்த்தைகளையும் சொல்லி, அதில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அந்த ஜால்ரா என்று சொல்லக்கூடிய—அதெல்லாம் எங்கள் பகுதியிலே ஜிங்–சாங் என்று சொல்வார்கள்; அந்தப் பொருள் பெயர். அதை அடித்தோம் என்றால், ஜிங்–சாங் என்கிற சத்தம் வரும். அந்தக் கருவியையும் இங்கே கொண்டுவந்து எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் மிகப் பெரிய ஓர் அவமானத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயலிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவற்றை நீங்கள் கண்டிப்பாக கடுமையாகக் கண்டிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு, கடந்த கால ஆட்சியிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களை வைத்து இந்த அவையிலே, அ.தி.மு.க.வினுடைய ஆட்சியாளர்கள் எந்த அளவிற்கு ஜால்ரா அடித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வம், அவர்கள், அவர்களுடைய ஆட்சியின் சாதனை என்று சொல்லி ஒரு தவறான செய்தியை இங்கே பதிவு செய்திருக்கிறார். ஆற்காடு–நாகப்பட்டினம் சாலை 394 கிலோ மீட்டர், எங்களுடைய ஆட்சியில்தான் போடப்பட்டது என்று ஒரு தவறான செய்தியைச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே 5 ஆண்டுக்காலம் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், ஆற்காடு–நாகப்பட்டினம் சாலை கிட்டத்தட்ட 612 கோடி ரூபாய்க்கு அது சாங்ஷன் செய்யப்பட்டு, அப்போதே டெண்டர் கோரப்பட்டது. தேர்தல் வந்த காரணத்தால் அந்த டெண்டர் கோரப்பட்ட நிலையோடு நின்றது. அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்தவுடன், உடனே அந்த வேலையை எடுத்து செய்திருக்கலாம், செய்யவே இல்லை. கிட்டத்தட்ட 3 ஆண்டுகாலம் அந்த வேலையையே தொடவில்லை. கடைசியாக, இறுதியாக ஆட்சியைவிட்டுப் போகிற அந்த ஆண்டில்தான்—ஏனென்று அதில் இருக்கிற மர்மம் இன்றையவரைக்கும் புரியவில்லை. 4 ஆண்டுகாலம் எந்த வேலையுமே செய்யவில்லை. கொடுக்கப்பட்ட டெண்டர் வாங்கப்பட்டது, ஆனால் உறுதி செய்யப்படவில்லை. நான்காண்டு காலம் சும்மா இருந்துவிட்டு, 5–வது ஆண்டு காலத்தில் வேலையை எடுத்து–இப்போதுதான் ஆங்காங்கு சிறுசிறு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் எந்த வேலையும், 75 சதவிகித வேலைகூட நடைபெறவில்லை. ஆனால், ஆட்சியினுடைய சாதனை என்று இங்கே படித்துக்கொண்டிருக்கிறார். எனவே, தவறான செய்தி வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற, சாலையிலே நடைபெற்ற முறைகேடுகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டபோது, கடந்த காலத்திலே அந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர், இன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கின்ற மரியாதைக்குரிய ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், ஒரு தவறான தகவலை இங்கே தந்தார். நாங்களே நடவடிக்கை எடுத்தோம் அந்த அதிகாரிமீது என்கின்றார். அதற்குப்பிறகு, அதுபோன்ற முறைகேடுகள் நடக்கவில்லை என்று சொல்லி, ஆதங்கப்பட்டு, இன்றைக்குத் தங்களுடைய எதிர்ப்பைத்

தெரிவித்து அதற்கு வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள். ஓர் உண்மை புரிகிறது; ஓர் அரசு நடக்கின்றது என்று சொன்னால், அதிகாரி மட்டத்திலும் தவறு நடக்கலாம், அரசும் நேரடியாக அந்தத் தவறிலே ஈடுபடலாம், இல்லை என்று சொல்லவில்லை. அது அரசுக்குக்கூடத் தெரியாமல் நடந்திருந்தால், அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது; இன்னும் நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி தைரியமாக இந்த அவையிலே அமர்ந்து இந்த விவாதத்திலே கலந்துகொண்டிருக்க வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், கிராமத்திலே சொல்வார்கள், 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்பார்களே, அதுபோல, அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சி எடுக்கின்ற நேரத்தில், இவர்களுக்கு ஏன் இந்தக் கோபம் வருகிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

அதேபோல, அந்தச் செங்கல்பட்டு கோட்டத்திலே பணிபுரிந்த கோட்டப் பொறியாளருக்குக் கடந்த கால ஆட்சியிலே பணி இரத்து செய்யப்பட்டது, பணி நீக்கம் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அதற்கு நேர்மாறாக பதவி உயர்வு தந்து, அவரைப் பணியிலே அமர்த்தி இருந்தார்கள். அதற்குப்பிறகு வந்த தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஏற்பட்ட அரசுதான், ஓய்வு பெறுகின்ற நேரத்திலே பணி நீக்கம் செய்து வைத்திருக்கிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நானும், என்னுடைய தகவலாக, பழைய மகாபலிபுரம் ரோட்டிலே நடந்த முறைகேடுகளைப் பற்றிய குறிப்புகளை இங்கே வைத்திருக்கிறேன்.

சுமார் *42*–வது கிலோ மீட்டரிலிருந்து *53*–வது கிலோ மீட்டர் வரையிலே நடந்திருக்கிற முறைகேடு, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஏறத்தாழ *2* கோடி ரூபாய்க்கு மேலே அதிலே தவறு நடந்திருக்கிறது. C.R.I.D.P. என்கிற திட்டத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒரு வார காலத்திற்குள்ளே, அதேபோல நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் சொன்னதுபோல, அதற்கு பழுதுபார்ப்பு, சிறப்புப் பழுதுபார்ப்பு என்று என்னென்ன வகையான சலுகை அவர்களுக்கு இருக்கிறதோ, அதைப் பயன்படுத்தி, சட்டத்திலே இருக்கிற ஓட்டையைப் பயன்படுத்தி, அதிலேயும் முறைகேடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் நியமித்த இரண்டு அதிகாரிகளில் ஒருவர் அதை மறுத்து இருக்கிறார். இன்னொரு அதிகாரி முறைகேடு நடந்திருக்கிறது என்பதையும்



அறிக்கை தந்திருக்கிறார். அதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு எதிர்காலத்தில் நிச்சயமாக ஆராய்ந்து அதன்மீது நடவடிக்கை எடுத்து, நடந்த சம்பவங்களை நாட்டு மக்களுக்கும், இந்த அவைக்கும் தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் இவ்வளவு பெரிய கலவரத்தை செய்துவிட்டு, காவலர்களைத் தாக்கி, அவர்களுடைய தொப்பியை பறக்கவிட்டுவிட்டு, ஜால்ராவையும் போட்டுவிட்டு, வெளிநடப்பு செய்தவர்கள், வெளியில் சென்றவுடன் அவர்களாகவே சட்டையை கிழித்துக்கொண்டு, ரவிச்சந்திரன் என்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே சட்டை, அவைக் காவலர்களால் கிழிக்கப்பட்டதாக ஒரு பேட்டி வெளியில் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அப்படியானால் இந்தச் சட்டசபையில் என்ன பாதுகாப்பு இருக்கிறது ? என்ன ஜனநாயகம் இருக்கிறது? அ.தி.மு.க.–விற்கு, அந்த அரசியல் கட்சிக்கு இதயமே இல்லையா? அல்லது இப்படி ஒரு தவறான நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுவிட்டு, இந்த அவையை அவமானப்படுத்துவது போல, களங்கத்தை ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நீங்கள் உரிய முறையிலே விசாரித்து, தக்க நடவடிக்கையை எடுக்கவேண்டும். நாட்டுக்கு நடந்த சம்பவங்களைத் தெளிவுபடுத்தி, அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**• மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன அந்தச் செய்தி, அவை உரிமையை மீறிய ஒரு பிரச்சினையாகும். அவையை அவமதித்த, உரிமை மீறிய, முறைகேடான செய்தியைப் பரப்பிய அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். எனவே, அதைத் தாங்கள் உரிமைக் குழுவிற்கு விட்டு, அந்த உறுப்பினர்மீது உரிய நடவடிக்கையை எடுக்க, விசாரணை நடத்த

தாங்கள் அனுமதிக்க வேண்டும் அல்லது ஆணையிடவேண்டும் என்று தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க.வினர் தினமும் திட்டமிட்டு குழப்பம் விளைவிக்கிறார்கள். இரகளையில் ஈடுபடுகிறார்கள். வெளியிலே போய் பத்திரிகைக்கு மாற்றுச் செய்தி, அதாவது நிரபராதிகள் என்ற விதத்திலே ஒரு செய்தியை கொடுத்துக்கொண்டு, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதில் நாட்டு மக்களுக்கு உண்மை தெரிந்தாகவேண்டுமென்ற வகையில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இங்கே அமர்ந்திருக்கிற முன்னணித் தலைவர்களெல்லாம் அதற்கு மாற்றுச் செய்தியை அவ்வப்போது கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்கின்ற அதேவேளையில், இவர்கள் இரகளை செய்வதை நாட்டு மக்களுக்குப் படம் பிடித்து, அன்றாடம் காட்டக்கூடிய வகையில் சபை நடவடிக்கைகளை, தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யலாம் என்பதை நான் இங்கே என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுது தொப்பியை தூக்கி வீசுகிறார்கள், ஜால்ரா போடுகிறார்கள், சட்டையைக் கிழித்துக் கொண்டு வெளியிலே போய் பத்திரிகைக்கு செய்தி கொடுக்கிறார்கள். இதெல்லாம் நாட்டு மக்களுக்கு தெரிந்தாக வேண்டும்தானே? ஆகவே, நேரடி ஒளிபரப்பு செய்யவேண்டுமென்பது என்னுடைய கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னார்; அவர் சொன்னதுகூட, 5, 6 ஆண்டுகள் கழித்து சாலை புதுப்பிக்கப்படலாம் என்று சொன்னார். ஒரு மாதம்கூட ஆகவில்லை, வேலை நடந்துகொண்டு இருக்கும்போதே, மீண்டும் ஓர் ஒப்பந்தம் என்று சொன்னால், இது எவ்வளவு பெரிய மோசடி? இந்தச் செய்தி பத்திரிகையிலும் வராது, தொலைக்காட்சியிலும் வராது. இந்தச் செய்தியை நாம் பெரிய செய்தியாக வெளிக்காட்ட வேண்டும். இவ்வளவு மோசடி, திட்டமிட்ட ஏமாற்று, ஊழல், என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.



* **திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இப்படி அநாகரிகமான முறையிலே சட்டமன்றத்திற்குள்ளேயும், சட்டமன்றத்திற்கு வெளியிலேயும்—சட்டையை யார் கிழித்துக்கொள்வார்கள் என்று சொன்னால், அவர்களாகவே யார் கிழித்துக்கொள்வார்கள் என்று சொன்னால், (சிரிப்பு) ஒன்று, அவர்கள் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே சேர்க்கப்பட வேண்டியவர்களாக இருக்கவேண்டும் அல்லது ஏதாவது குழப்பத்திலே இருப்பவர்களாக இருக்கவேண்டும். ஏர்வாடி பகுதியிலே அவர்கள் இருக்கவேண்டியவர்கள். தெரியாமல் மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்த மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதனாலே, நான் இந்த மன்றத்திலே ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று, இந்தச் சபை நிகழ்ச்சிகளை தினமும் பொதுமக்களுக்கு தெரிவிக்கின்ற வகையில் நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டியது அவசியம். அதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் செய்யவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

• **திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க.வைப் பொறுத்தவரையில், இதுபோன்று சட்டமன்றத்திற்குள்ளே நடக்காத செய்தியை, வெளியிலே போய், நடந்ததாக அவதூறாகச் சொல்வது என்பது இன்று புதிதல்ல. 1989 ஆம் ஆண்டே இதே அவையில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இந்த சபைக்குள்ளே தாக்கப்பட்டதாகவும், புடவைகள் கிழிக்கப்பட்டதாகவும், வெளியிலே சென்று தலைமுடிகளையெல்லாம் அலங்கோலமாக காட்சியளித்து, செயற்கையாக உருவாக்கி, பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தவர். அவருடைய வழி வந்தவர்கள்தான், இன்றைக்கு அதைவிட மோசமான முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) இதே கூட்டத்தொடரில் கடந்த சில தினங்களுக்கு முன்னால் அ.தி.மு.க.வின் ஒரு பெண் சட்டமன்ற உறுப்பினர் இந்தச் சபையில் தாக்கப்பட்டதாக ஒரு செய்தியை வெளியே போய் பரப்பினார்கள். இன்றைக்குச் சட்டையைக் கிழித்ததாகச் சொல்கிறார்கள். ஒருவேளை, இப்படியே போனால், அவர்களே வெளியிலே இரத்தக் காயம் ஏற்படுத்திக் கொண்டு, இங்கிருக்கிற மற்ற, தோழமைக் கட்சியைச் சார்ந்த, ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கத்தியால் குத்திவிட்டார்கள் என்றுகூட

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 ஆகஸ்ட் 21

சொல்வதற்குத் தயங்கமாட்டார்கள்போல் தெரிகிறது. ஆகவே, இந்தச் சட்டமன்ற ஜனநாயகத்தை பாதுகாக்கவும், இங்கிருக்கிற மற்ற கட்சி உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கவும், பேரவைத் தலைவர் அவர்கள் விதிகளுக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–15*

அதேபோல, இந்தச் சட்டமன்ற நிகழ்வுகளை ஏற்கெனவே காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும், பா.ம.க. தலைவர் அவர்களும் சொன்னதைப்போல இதனுடைய முழு நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பக்கூடிய வகையிலே, பாராளுமன்றத்தில் தனி channel இன்றைக்கு ஒளிபரப்புவதைப்போல, நம்முடைய சட்டமன்றத்திலும்கூட ஏற்பாடு செய்தால் மக்கள் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் என்பதை நானும் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவையின் மதிப்பையும், மாண்பையும் காக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும். உறுப்பினர்கள் தேவையின்றி சில பொருட்களை அவையினுள் கொண்டு வருவதை அனுமதிக்க முடியாது. உறுப்பினர்களைப் பரிசோதித்துத்தான் அவைக்குள் அனுமதிக்கும் சூழ்நிலையை உருவாக்கக் கூடாது என்பதை உறுப்பினர்களுக்கு எச்சரிக்கையாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே எந்த அளவிற்கு அவை மீறல்களை அ.தி.மு.க. உறுப்பினர்கள் செய்தார்கள் என்பதை இங்கே இருக்கக்கூடிய பத்திரிகை நிருபர்கள், பார்வையாளர்களாக வந்திருக்கிறவர்கள் எல்லாம் பார்த்தீர்கள். இங்கே ஜால்ராவைக் கொண்டு வந்து, ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, பின்னாலே இருந்து ஜால்ராவைப் போட்டு, அடித்து இந்த அவையினுடைய நடவடிக்கையை எந்த அளவிற்கு அவர்கள் அசிங்கமாக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த மாதிரியான நடவடிக்கைகள்—உறுப்பினர்கள் பேசி முடித்தவுடனே, அவர்கள் குழப்பம் செய்வது, குழப்பம் செய்துவிட்டு வெளியேறுவது—இந்த மாதிரியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் எல். ரவிச்சந்திரன் அனுமதியில்லாமல் இந்த



2006 ஆகஸ்ட் 21] [பேரவைத் தலைவர்]

ஜால்ராவைக் கொண்டு வந்து, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, இந்த ஜால்ராவை வைத்து அடித்து, குழப்பத்தை உண்டுபண்ணியதை இங்கே இருக்கக்கூடிய நீங்கள் அத்துணை பேரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தீர்கள்.

*(உறுப்பினர் பயன்படுத்திய ஜால்ராவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவைக்குக் காண்பித்தார்.)*

அவைக் காவலர்மூலம் அவரை வெளியேற்றச் சொன்னபோது, அவைக் காவலரையே தாக்கி, அவர் தொப்பியைத் தூக்கி வீசியதை எல்லாம் எல்லோருமே பார்த்துக் கொண்டுதான் இருந்தீர்கள். பேரவைத் தலைவர் என்ற முறையில் நானும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அந்த அளவிற்கு ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மாதிரியான அவை மரபைமீறிய செயலைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே உறுப்பினர் ரவிச்சந்திரன், இந்த அவையில் அவை விதிகளுக்கு மாறாக, நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டதால் அவரது செயல் குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226–ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அதை அனுப்பி வைக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

*** திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் பண்பாட்டின் வேர்களாகவும், விழுதுகளாகவும் திகழும் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து அவையை அலங்கரித்துக் கொண்டிருக்கிற இந்த பதின்மூன்றாவது சட்டப் பேரவையில் தமிழகத்தின் விழி, தொண்டர்களின் நாடித் துடிப்பு, இந்தியாவின் எதிர்பார்ப்பு, கன்னித்

தமிழ்க் காவலர், முதுகெலும்பு முறியும்போதெல்லாம் தமிழர்களுக்கு முதலுதவி செய்து அவர்களை வாழ வைக்கும் முதல்வர், அரசியல் துறையின் ஆசான், மனிதாபிமானத்தின் முன்னோடி என பன்முகங்கள் கொண்ட பாசமிகு தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்தின் விழுதுகளாய் எங்களை எல்லாம் இறக்கி, எங்களுக்கு உரமாய் நின்று அதன்மூலம் கழகத்தைக் காத்து வரும் உதயசூரியனின் ஒளிக்கற்றை, நாளைய தமிழகத்தின் இன்றைய அரண், எங்கள் இளம் தலைவர் ஆல்போல் தழைத்து, அருகு போல் வேரிட்டு, பாரீர் போற்ற பவனி வரும் பண்பாளர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி அவர்களுக்கும், என் வெற்றிக்காக மிகவும் உழைத்த எங்களது மாவட்டக் கழகச் செயலாளர் மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், என் வெற்றிக்குத் தோள் கொடுத்த எங்கள் அனைத்துத் தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், கடலூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நான் இந்த மாமன்றம் வரக் காரணமாகயிருந்த எனது கடலூர் தொகுதி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் என அனைவருக்கும் நன்றிப் பெருக்கோடு எனது வணக்கத்தைத் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய நெடுஞ்சாலைத் துறை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் என் பேச்சைத் தொடங்குவதற்குமுன் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நேற்றோடு 100 நாட்கள் என்பதைச் சொல்லி, இந்த 100 நாட்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் நலத் திட்டங்களை அளித்து சாதனைகளைக் கண்ட சரித்திர நாயகர் முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

*பிற்பகல் 12–20*

தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வராக இருந்தபோது 5–8–1997–ல் நெடுஞ்சாலைத் துறையின் பொன் விழா நடைபெற்றது. இந்தப் பொன் விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு ரூபாய் 900 கோடி செலவில் உலக வங்கி உதவியுடன் 1500 கிலோ மீட்டர் நீளமுள்ள முக்கிய அரசு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

ஹட்கோ நிதியுதவியுடன் நெடுஞ்சாலைத் துறையின் பொன் விழா ஆண்டையொட்டி தமிழகத்தில் 150 கோடி ரூபாய் செலவில் புதிய 50 மேம்பாலங்கள் கட்டும் திட்டத்தை அறிவித்தார்கள். ஹட்கோ



நிதியுதவியுடன் சென்னை நோக்கி வரும் பல்வேறு சாலைகளை 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு 150 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தி சீரமைக்கும் திட்டத்தை அறிவித்தார்கள்.

தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரை 75 கோடி ரூபாய் செலவில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். செங்கல்பட்டு முதல் மதுரை வரை நான்கு வழிச் சாலை அமைக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். தேசிய விவசாய மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி உதவியுடன் ரூபாய் 293 கோடியில் 2,822 கிலோ மீட்டர் நீளமுள்ள அரசு சாலைகளையும் மற்றும் 2,543 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமப்புறச் சாலைகளையும் மேம்பாடு செய்யும் திட்டத்தையும் தொடங்கி வைத்து சாதனை படைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

சென்னை மாநகரத்தின் அழகின் சிகரமாக விளங்கும் அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டதும் தலைவர் கலைஞர் ஆட்சியில்தான். திருச்சியிலிருந்து முசிறிக்குச் செல்ல 40 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டியிருந்ததை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், 1957–ல் குளித்தலை சட்டமன்ற உறுப்பினராக முதன் முதலில் நின்றபோது பாலம் கட்டித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார்கள். அதன்படி 1969–ல் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றவுடன் அந்தப் பாலத்தைக் கட்டி வாக்குறுதியை நிறைவேற்றியவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

சொன்னதைச் செய்கின்ற, செய்வதைச் சொல்கின்ற தலைவர் கலைஞர், அவர்கள் தலைமையில் அவர்களால் அடிக்கல் நாட்டி தொடங்கப்பட்டு இன்று பிரசித்தி பெற்ற, திருமதி இந்திரா காந்தி அம்மையார் பெயரால் விளங்குகின்ற பாம்பன் பாலம் கலைஞர் ஆட்சியில் கட்டப்பட்டது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

சென்னை மாநகர முன்னாள் மேயர் முனுசாமி அவர்கள் கோரிக்கையின்பேரில் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது கட்டப்பட்டதுதான் திரு.வி.க. மேம்பாலம் என்பதை பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதைப் போல, நெல்லையிலே ஈரடுக்குப் பாலம் திருவள்ளுவர் பெயரில் அமைத்துக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். கோவையிலுள்ள மேம்பாலமும் கலைஞர் அவர்கள்

ஆட்சியில்தான் கட்டப்பட்டது. மதுரையில் உள்ள மேம்பாலங்களும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் கட்டப்பட்டவை. 14-1-1998 அன்று கிழக்குக் கடற்கரைச் சாலையை போக்குவரத்திற்காக திறந்துவிட்டதும் தலைவர் கலைஞர் ஆட்சியில்தான்.

கடலூரில் சிங்காரத்தோப்பு கோரி இடையே உப்பனாற்றின் குறுக்கே தலைவர் கலைஞர் ஆட்சியில் ஒரு மேம்பாலம் கட்டியதன் விளைவாக அண்மையில் சுனாமி பேரலை ஏற்பட்டபோது மீனவ கிராம மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர் என்பதை நன்றியோடு பதிவு செய்ய விரும்புகின்றேன். சுனாமி பாதிப்பின்போது மாண்புமிகு தளபதியார் அவர்கள் கடலூர் வந்து மீனவ மக்களுக்கு ஆறுதல் கூறி அந்த நலத் திட்ட உதவிகளை வழங்குகின்றபோது அந்த மக்கள் எல்லாம் அந்தப் பாலத்தை நினைவுகூர்ந்து, 'தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டது. இந்தப் பாலம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் ஆயிரக்கணக்கான பேர் உயிரிழந்திருக்கக்கூடிய அந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்' என்று கண்ணீர்மல்க நன்றி கூறியதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

சென்னையில் போக்குவரத்து நெரிசல் குறைந்ததற்கு முக்கிய காரணம் நமது மாண்புமிகு தளபதியார் மேயராக இருந்தபோது கட்டப்பட்ட மேம்பாலங்கள்தான் என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக பதவி ஏற்ற 1996-2001-ல் மட்டும் தமிழகத்தில் மொத்தம் 350 பாலங்கள் கட்டப்பட்டன. ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகள் சீர் செய்யப்பட்டன. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் நெடுஞ்சாலைகளின் சாதனைகளை இன்றைக்கெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்குச் சாதனைகள்.

அதுமட்டுமல்லாமல், மக்களின் நீண்ட கால கனவுத் திட்டமான சேதுசமுத்திரத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவியுடன் செயல்வடிவம் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், கலைஞரின் ஆலோசனை பெற்று பல்வேறு முக்கிய கொள்கை முடிவுகளை அறிவித்திருக்கின்றார்கள். இதன்மூலம் தமிழகம் நெடுஞ்சாலைத் துறையில் முன்னேற்றமடையும்.



தேசிய நெடுஞ்சாலைகள் என்று 4,254 கிலோ மீட்டர், மாநில நெடுஞ்சாலைகள் என்று 6,849 கிலோ மீட்டர், கரும்புச் சாலைகள் உள்ளிட்ட மாவட்ட இதர சாலைகள் என்று 42,748 கிலோ மீட்டர் என மொத்தம் 61,420 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் உள்ளன. இந்தச் சாலைகளில் 1,207 பெரிய பாலங்கள், 7,658 சிறிய பாலங்கள். மொத்தம் 99,423 தாம்போகிகள் உள்ளன. இவற்றையும் இந்த நெடுஞ்சாலைத் துறையே பராமரித்து வருகின்றது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-25

தொழில், எரிசக்தி, சாலைப் போக்குவரத்து, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரம் என்ற நான்கு வகை மேம்பாடுகளுக்கும் வர்ண பேதம் இல்லாமல், வளம் படைக்கும் இந்தத் துறை உண்மையில் இன்று ஒரு வளர்ந்த துறையாக உள்ளது. இந்தப் பூவுலகில் மாறுதல் ஒன்றுதான் நிச்சயமானது என்பது தத்துவம். எங்கெல்லாம், பூவாகி, காயாகி, பின் கனியாகின்றதோ இல்லையோ, இந்த நெடுஞ்சாலைத் துறை என்பது தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், பூக்கிறது, காய்க்கிறது, கனிகிறது. ஆம். ஆண்டுக்காண்டு இந்தத் துறையில் மாற்றங்கள் தலைவர் கலைஞர் ஆட்சியில் மட்டுமே நிகழ்ந்துகொண்டிருக்கின்றது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். இந்தத் துறையில்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் நசிந்து வசதி குறையும். எனவே, இந்தத் துறைக்கு மட்டும் தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வரும்போது எல்லாம் கணக்கு இல்லாமல் நிதி ஒதுக்கீடுகள் செய்து சாதனை படைத்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

மதுரை ஆரச் சாலையின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கு ரூ.70.60 கோடி மதிப்பீட்டிலே ஒரு செயல் திட்டம். பின்னலாடை நகரம் திருப்பூர் சாலையிலே ரூ.70 கோடி மதிப்பீட்டில் வட்ட மற்றும் அணுகு சாலைகள் மேம்படுத்தும் பணி. தேசிய நெடுஞ்சாலை 45-ல், திண்டிவனத்திலிருந்து திருச்சி வரையிலான தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழிச் சாலைகள் அமைக்க ரூ.1,260 கோடியில் நிதி ஒதுக்கீடு. இந்த நெடுஞ்சாலைத் துறையிலே 1972-ல் 1,500 க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருந்த கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டத்தைக் கொண்டு வந்தது தலைவர் கலைஞர் அரசுதான் என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். 1990-ல், 1,000க்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்ததும் நம் தலைவர் கலைஞர் அரசுதான். அதற்குப்

பின்னால் 1996–லே இணைப்புச் சாலைகள் இல்லாத, 1,000 பேருக்குமேல் மக்கள் தொகைக் கொண்ட கிராமங்களே இல்லை என்று சாதனை படைத்தவரும் தலைவர் கலைஞர் அரசுதான்.

நெடுஞ்சாலை நீளவேண்டும். அதன்மூலம் நமது நாட்டின் வளர்ச்சியும் நீளவேண்டும் என்ற நேரத்தில், அந்தச் சாலைகளைப் பராமரிக்க சாலைப் பணியாளர்கள் 10,000 பேரை நியமித்ததும் தலைவர் கலைஞர் அரசுதான் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்படி வாக்களித்த மக்களுக்கு வளம் தரும் திட்டங்களைத் தந்து நலம் தரும் நாயகனாக தலைவர் கலைஞர் அவர்கள் என்றுமே விளங்கி வருகிறார்கள். இப்படிப் பெருகி வரும் சாலைகளில், பெருகி வரும் போக்குவரத்தைக் கருத்தில்கொண்டு 1,902 கி.மீ. மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் 761 கி.மீ. மாவட்டச் சாலைகள் மாநிலச் சாலைகளாகவும், மற்றும் 3,812 கி.மீ. மாவட்ட இதரச் சாலைகள் மாவட்ட முக்கியச் சாலைகளாகவும் மேல்நிலைப்படுத்த நமது கழக அரசு, தலைவர் கலைஞர் அரசு 4–8–2006 அன்று ஒரு அரசாணை வெளியிட்டுள்ளது என்பது வரவேற்கத்தக்க ஒன்று.

நம் மாநிலத்தில், சில நெடுஞ்சாலைகள் இந்த நிதியாண்டில் தேசிய நெடுஞ்சாலையாக மைய அரசால் அறிவிப்பு செய்யப்பட்டு உள்ளன என்றால் அதனுடைய ஊன்றுகோல், அதனுடைய அச்சாரம் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதிலே கருத்து மாறுபாடுகள் இல்லை. தேசிய நெடுஞ்சாலை 226–ல் தஞ்சாவூரில் தொடங்கி மானாமதுரையில் முடியும் 126 கி.மீ.–க்கான சாலை. தேசிய நெடுஞ்சாலை 227–ல் திருச்சிராப்பள்ளியில் தொடங்கி சிதம்பரத்தில் முடியும் 144 கி.மீ.–க்கான சாலை இந்தப் புதிய அறிவிப்பில் இன்று அடக்கம்.

ஹட்கோ நிதி உதவியுடன் தற்போது நடைபெறும் 17 பாலப் பணிகளுக்கு ரூ.10.04 கோடியும், மதுரை எல்லீஸ் நகர் சாலை மேம்பாலப் பணிக்கு ரூ.9.84 கோடியும் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் ஒரு தொங்கு பணிகளாக இல்லாமல், தொடர் பணிகளாக ஆக்கிக் கொண்டிருப்பவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள். சென்னை அடையாறில் உள்ள மத்திய கைலாசிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள சிறுசேரி வரை 20.10 கி.மீ. நீள சாலையில் சர்வதேச தரத்தில் ஆறு வழித்தடங்களுக்கான பணிகளும், எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளும் துரிதமாக நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையால்,



சென்னை கோட்டைக்கு துரிதமாக வர நினைப்பவர்கூட, சென்னைக்காவது இனி துரிதமாக வரலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.
(மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, கப்பல் போக்குவரத்துத் துறை, தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியில் 1,000 கி.மீ. நீள கடற்கரைப் பகுதியில், மைய அரசின் கட்டுப்பாட்டில், சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று துறைமுகங்களும், தமிழ்நாடு கடல் சார் வாரியக் கட்டுப்பாட்டில் கடலூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேசுவரம், வாலிநோக்கம், கன்னியாகுரி, குளச்சல் ஆகிய 7 இடங்களில் சிறு துறைமுகங்களும், தனியார் முதலீட்டில் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம் பி.ஒய். 03 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மணப்பாடு, கூடங்குளம், ஆகிய 8 இடங்களில் சிறு துறைமுகங்களும் உள்ளன. கடலூர் துறைமுகத்தை பொது மற்றும் தனியார் பங்கேற்பின் மூலம் மேம்படுத்துவது பற்றி அரசு தற்போது பரிசீலித்து வருகிறது என்று அறிவித்துள்ளதற்கு எனது நன்றியும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். சுனாமியின்போது இங்குள்ள சரக்குக் கொட்டகைகள், நீர்த்தடுப்பிகள் கடுமையாக சேதம் அடைந்தன. இவற்றை புனரமைப்பதற்காக ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.14.41 கோடி அளவிற்கு நிதியுதவி தர கடலூருக்கு இப்போது முன் வந்துள்ளது. இத்திட்டத்தால் துறைமுகத்தின் ஆழம் 4 மீட்டர் அளவுக்கு அதிகரிக்கும். இதனால் 500 மெட்ரிக் டன்கள் எடையுள்ள கலன்கள் இத்துறைமுகத்தில் இயக்க வசதி ஏற்படும்.

பிற்பகல் 12–30

கழகத்தைக் கண்ட அண்ணா, அந்த அண்ணாவைக் காட்டிய பெரியார், இந்த இருவரையும் போற்றிய காமராஜர் என அந்த மூன்று தலைவர்களின் பெயராலே குறைந்த ஆழத்திலே செல்லத்தக்கதான எம்.வி. தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ் பெரியார், எம்.வி. தமிழ் காமராஜ் என்று மூன்று கப்பல்கள் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திலே தற்பொழுது இயங்கி வருகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தால் தோற்றுவிக்கப்பட்ட இந்த பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், குமரி முனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை வரையிலும் அதாவது அய்யன் திருவள்ளுவர் சிலை வரையிலும், படகுப் போக்குவரத்து நடத்தி வந்து கொண்டிருக்கிறது.

தலைவர் அவர்களே, கடலூரில் ஒரு தொழில்நுட்பப் பூங்கா வேண்டுமென்று தங்களிடம் கோரிக்கை வைத்துள்ளேன். கடலூர் மாவட்டத்திலே 4 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. பல கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கடலூர் மாவட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று 5 கி.மீ. இடைவெளியிலே புதுவை மாநிலத்திலே 5 பொறியியல் கல்லூரிகள் இயங்குகின்றன. ஆதலால், கடலூருக்கு வருடந்தோறும் ஏராளமான பொறியியல் வல்லுநர்கள் வந்து கொண்டிருப்பதால் தயவு கூர்ந்து கடலூருக்குத் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத் தருமாறு தலைவர் கலைஞர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், கடலூர் தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகள் அனைத்தையும் கோரிக்கை மனுவாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடத்திலேயும் அளித்துள்ளேன் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன். தாயுள்ளம் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் அவற்றை நிறைவேற்ற வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பேசினாலே போதும் உறுப்பினர்கள். பதிவு செய்ய விரும்புகிறேன் என்று சொல்லத் தேவையில்லை. பேசினாலே பதிவாகிவிடும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐயப்பன், கொஞ்சம் சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** 'நான் எவ்வாறு ஓர் அடிமையாக இருக்கமாட்டேனோ, அவ்வாறே ஓர் எஜமானனாகவும் இருக்க மாட்டேன்' என்று ஆப்ரகாம் லிங்கன் சொன்ன தத்துவத்திற்கு ஏற்ப வாழ்ந்து கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்களே, தமிழின் இனிமையே, நீங்கள் எதிரிக்கு எரிமலை, இயக்கத்தினருக்கு ஈர அருவி, முதுகு சவாரிக்குப் பரண் அமைக்காமல் சுய மரியாதைக்கு சொந்தம் கொண்டாட உங்களை நாங்கள் என்றும் எங்கள் அகமாகவே காண்கின்றோம். நீங்கள் உடன் பிறப்பு என்ற பொழுதெல்லாம் நாங்கள் நம்பிக்கையோடு உம்மை ஏற்றோம். அந்தச் சொந்தமே எங்களுக்கு எப்பொழுதும் பந்தம். அதனால்தான், புதைப்பொருளாய் இருந்த அரசின் நிர்வாகத்தை கொஞ்சம் அகழ்வாராய்ச்சி செய்து, அறுதின்



முயன்று அதை வெளிக்கொணர்ந்து தமிழகத்தின் ஈபிள் கோபுரமாய் அதை நிறுத்தி வைத்திருக்கின்றீர்கள். அந்தக் கோபுரத்தின் மாடங்களில் இனி தமிழக மக்கள் மாடப் புறாக்களாக வலம் வருவார்கள். அந்தப் புறாக்களின் சுதந்திரக் குரலோசை வானத்திலே வலம் வரும்பொழுது உங்கள் பெருமையும் கூடவே வரும். திண்ணிய கருத்தை திறம்படச் செலுத்தும் உங்கள் திறமையைக் கண்டு, கரம் கூப்பி வணங்கி, எனது உரையை முடித்து, இதற்கு அச்சாரமாக இருந்த அனைவருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையில் இரண்டாம் முறையாக அமர்ந்து, மக்களின் குறைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதையெல்லாம் செம்மையாகத் தீர்ப்பதற்கு வழிவகை செய்து கொடுத்த எங்களது அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களுடைய அருந்தவப் புதல்வன் மத்திய திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் ஐயா மாண்புமிகு ஜி.கே. வாசன் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் தலைவர் தமிழகத்தின் முதல்வர் ஐயா டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் அருமைச் சகோதரர் இராஜா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மாவீரன் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், இந்த அவையின் வாயிலாக எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல இரண்டாம் முறையாக எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த அரியலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்த மாமன்றத்தில் நான் என்ன எதிர்பார்த்து உறுப்பினராக வந்தேனோ, அந்த எதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்து அரியலூர் மாவட்டத்தை மீண்டும் வழங்கிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது சார்பாகவும், எனது மாவட்டத்து மக்களின் சார்பாகவும், நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, நீங்கள் மாவட்டத்தை அறிவித்தது மட்டும் போதாது. ஏனென்றால், கடந்த காலத்திலே நீங்கள் அறிவித்த மாவட்டத்தை மமதையால் கலைத்தார்கள். மீண்டும் அந்த மாவட்டம் வலிவோடும், பொலிவோடும் திகழ உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரை நியமித்து, அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளையும் உடனடியாக செய்து தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இங்கே பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர்கள் ஆட்சியிலே இந்த நெடுஞ்சாலைத் துறையை மேம்படுத்தியதாகச் சொன்னார்கள். ஒரே ஓர் உதாரணம்தான் அவர்களுக்கு. தொகுப்பு, அதாவது இந்தியாவிலேயே முதல் முறையாக package tender என்று அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். அந்த package tender கொண்டுவந்ததோடு, quoted tender என்ற முறையையும் அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். அதற்கு முன்னால் நடந்த அரசில் என்ன செய்தார்கள் என்றால், ஒரு கிலோ மீட்டர் ரோடு போடவேண்டுமென்றால் அரசாங்கம் விலை நிர்ணயம் செய்யும். ஒரு கிலோ மீட்டருக்கு 5 இலட்சம், 6 இலட்சம் என்று அரசாங்கம் விலை நிர்ணயம் செய்யும். ஆனால், கடந்த கால ஆட்சியில் ஒரு கிலோ மீட்டருக்கு இவ்வளவுதான் என்று ஒப்பந்தக்காரர்கள் நிர்ணயம் செய்தார்கள். அதுதான் quoted tender. இது எந்த ஆட்சியிலும் இதுவரையிலும் நடக்கவில்லை. அப்படி நடத்தப்பட்ட டெண்டர்தான்—ஒன்றே ஒன்று—தொகுப்பு எண் 1 ஆற்காடு முதல் திருவாரூர் வரை மற்றும் 9 புறவழிச் சாலைகள். அதிலே எங்கள் ஊரும் வருகிறது, அரியலூரும் வருகிறது. அதற்கான டெண்டர் 2001–2002-லே கோரினார்கள். அப்போது அரசாங்கம் அதற்கு 400 கோடி ரூபாய் நிர்ணயம் என்று செய்தது. ஆனால், ஒப்பந்தக்காரர்கள் அதற்கு 510 கோடி கேட்டார்கள். L & T நிறுவனம் உட்பட 7 நிறுவனங்கள் அந்த டெண்டரிலே பங்குபெற்றன. அந்த 7 நிறுவனங்களுக்கும் டெண்டர் call for செய்து 2004 வரை அந்த ஒப்பந்தம் யாருக்கு என்று முடிவு செய்யவில்லை. ஆனால், 2004 வரைக்கும் அந்த டெண்டர் அப்படியே தூங்கிக் கொண்டிருந்தது. 2004-க்குப் பிறகு இந்த டெண்டரை invalid செய்துவிட்டு, செல்லுபடியாகாது என்று சொல்லிவிட்டு, புதிதாக ஒரு டெண்டர் call for செய்கின்றார்கள். புதிதாக call for செய்து, கிட்டத்தட்ட 611.70 கோடி ரூபாய்க்கு அந்த



டெண்டர் PSCBL என்கிற நிறுவனத்துக்கு வழங்கப்படுகிறது. 2001-2002-லே கோரப்பட்ட டெண்டர், 2004-க்குப் பிறகு அந்த டெண்டரில் பங்கு பெற்ற நிறுவனங்களை, L & T உட்பட தள்ளிவிட்டு, கிட்டத்தட்ட PSCBL-க்கு 611.70 கோடி ரூபாய்க்கு வழங்குகிறார்கள். முதலில் L & T நிறுவனம் பங்குபெற்று போய் பேசினார்களாம். டெண்டரில் பங்குபெற்ற, நாங்கள் டெண்டர் போட்டிருக்கிறோம் என்று கேட்டார்களாம். அன்றைக்கு இருந்த முதல்வரும், மற்றவர்களும் ஏதோ பல கோடி கேட்டதாகவும், அதில் சில கோடி இவர்கள் கொடுப்பதாகச் சொன்னதாகவும், அதனால் அந்த டெண்டரை கேன்சல் செய்துவிட்டு கிட்டத்தட்ட இருநூற்று சொச்சம் கோடி ரூபாய் கூடுதலாகக் கொடுத்து அந்த PSCBL என்ற நிறுவனத்துக்கு இப்போது டெண்டர் வழங்கப்பட்டிருக்கிறது. உணவு அமைச்சர்கூட சொன்னார்கள், சின்ன சின்ன வேலைகள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள், முழுவதுமாக வேலை செய்யவில்லை என்று. அது உண்மைதான்.

அதேபோல, அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள் என்றால், கருங்கல் சுரங்கம் அவர்களே எடுத்துக்கொள்ளலாம், அரசாங்கத்திற்குப் போகவேண்டியதில்லை. அவர்களே சொந்தமாக வெட்டி எடுத்துக்கொள்ளலாம் கருங்கல் சுரங்கம். அதேமாதிரி செம்மண் சுரங்கத்திற்கும் அவர்களே வெட்டிக்கொள்ள வேண்டும், அவர்களே எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு எந்த வரியும் கிடையாது. அதேபோல தாரையும் அவர்களே இறக்குமதி செய்துகொள்ளலாம், வெளி நாட்டிலிருந்து. அதற்கு சுங்க வரி கிடையாது. இப்படிப் பல்வேறு சலுகைகள் அந்த நிறுவனத்துக்கு. PSCBL என்ற நிறுவனத்துக்கு வழங்கியிருக்கிறார்கள். இதுகுறித்து உடனடியாக இந்த அரசாங்கம் ஓய்வுபெற்ற நீதிபதியை வைத்து. விசாரணை செய்து, இதிலே அரசு அதிகாரிகள் தவறு செய்தார்களா. ஆளுங்கட்சிக்காரர்கள், அன்றைய ஆளுங்கட்சிக்காரர்கள் தவறு செய்தார்களா என்பதை இந்த அரசு விசாரணை கமிஷன் வைத்து விசாரிக்க வேண்டும். இது ஒன்றுதான். அதற்குமேல் வேண்டியதில்லை.

அடுத்து கிராமப்புறச் சாலைகளை எல்லாம் நாங்கள் மேம்படுத்தினோம் என்று சொன்னார். எங்கள் ஊரிலே எம்.எல்.ஏ. இருந்தார். 5 கிலோ மீட்டர் ரோடு. எம்.எல்.ஏ. இருந்த ஊரிலேயே அவர்கள் ரோடே போடவில்லை. நான் வந்ததற்கப்புறம்தான் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைப் போய் பார்த்துவிட்டு, எம்.எல்.ஏ. 5 வருடம் இருந்தார். அந்த ரோடே

போடவில்லை. நான் போனால் ஜனங்கள் எல்லாம் திட்டுகிறார்கள்; ரோட்டைப் போடுங்கள் என்று கேட்டதற்கு, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ரோட்டைப் போட நடவடிக்கை எடுத்து, இப்போதுதான் வேலை ஆரம்பித்திருக்கிறார்கள். அதுதான் அவர்கள் போட்ட இலட்சணம். அவர்கள் கட்சி எம்.எல்.ஏ. இருந்த ரோட்டையே அவர்களால் போட முடியவில்லை. ஆக, இன்றைக்கு இந்த அரசாங்கம் எவ்வளவு துரிதமாக இரண்டு மாதத்திலே அந்த ரோட்டைப் போட்டிருக்கிறது. 5 வருடங்களாக அவர்கள் போடாத ரோட்டை இந்த இரண்டு மாதத்திலே நாங்கள் போடுகிறோம். அப்படியென்றால், இந்த அரசாங்கம் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறது; இந்த அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கின்ற நாங்கள் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கின்றோம் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு உணரவேண்டும் என்பதற்காக இந்தத் தகவலைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

நாங்கள் வந்ததற்கப்புறம் இப்போது தஞ்சாவூரிலிருந்து மானாமதுரை செல்லும் சாலையை N.H.–லே எடுத்திருக்கிறார்கள். அதன் ஆரம்பமே, பெரம்பலூர்–மானாமதுரை சாலைதான். ஆகவே, அதை, பெரம்பலூரிலிருந்து தஞ்சாவூர் வரைக்கும் உள்ள அந்தச் சாலைகளை உடனடியாக தேசிய நெடுஞ்சாலைகளில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லால்குடி, புள்ளம்பாடியிலிருந்து, தஞ்சைக்குச் செல்வதற்கு திருமானூர் வழியாகத்தான் செல்ல வேண்டும். அந்தச் சாலையை வட்டச் சாலையாக – அது இப்போது Other district roads–ல் இருக்கிறது. அதை மாவட்டச் சாலையாக அறிவிக்க வேண்டும். அதேபோல, அதிலே ஒரு 5 கிலோ மீட்டர் கரும்பு அபிவிருத்திச் சாலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், கரும்பு அபிவிருத்திச் சாலை என்பது நீண்டகாலமாக அதிலேயே இருக்கிறது. அதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படுவதில்லை. அதனால் அந்தச் சாலைகள் எப்போது பார்த்தாலும் குண்டும் குழியுமாகத்தான் இருக்கின்றன. அவற்றை உடனடியாக, இருக்கின்ற கரும்பு அபிவிருத்திச் சாலைகளை உடனடியாக M.D.R.–ல் சேர்க்க வேண்டும் – மாவட்ட முக்கியச் சாலைகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



அதேபோல, R.R.–கிராமப்புறச் சாலைகள் திட்டம் இருக்கின்றது அல்லவா? அதை யூனியனிலேயிருந்து எடுக்கிறார்கள். எடுத்து ரோட்டைப் போடுகிறார்கள். ரோட்டைப் போட்டு திரும்ப யூனியனிலே கொடுப்பதும் இல்லை. அவர்கள் maintain பண்ணுவதும் இல்லை. ஆகவே, கிராமப்புற சாலைத் திட்டத்திற்கு, maintenance–க்குத் தனியாகப் பணம் கொடுத்துவிடுங்கள். அவர்களே அவற்றை maintain பண்ண வேண்டும். அவர்கள் அவற்றை maintain பண்ணி, தொய்வில்லாது சாலைப் பணி செய்தால் சாலைகள் அடிக்கடி பழுது ஏற்படாது. ஆகவே, கிராம அபிவிருத்தி சாலைகள் திட்டத்தின்கீழ்— bell அடிக்கக் கூடாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Bell அடிக்கவே இல்லை, அதற்குள்ளே bell அடிக்கக்கூடாது என்றால் என்ன ஐயா அர்த்தம்? என்ன, அநியாயமாக இருக்கிறது? (சிரிப்பு)

**திரு. து. அமரமூர்த்தி:** எனவே, கிராமப்புற அபிவிருத்திச் சாலைகளை, கிராமப்புற R.R. நிறுவனமே தனியாக maintain பண்ணிக்கொள்ள வேண்டும்.

அடுத்து, எங்களது நீண்டநாள் கோரிக்கை - நீலத்தநல்லூர் பாலம். முத்துவாஞ்சேரியிலிருந்து நீலத்தநல்லூர் வரையுள்ள பாலத்தை உடனே அறிவிக்க வேண்டும்.

அதேபோல, லால்குடியிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்தை இணைக்கிற கொள்ளிடம் ஆற்றுப் பாலத்தை உடனடியாக இந்த அரசு அறிவித்து, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, இப்போது மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வழங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். எங்கள் மாவட்டம் ரொம்பவும் பின்தங்கிய மாவட்டம். புதிதாகப் பிறந்திருக்கின்ற மாவட்டம். ஆகவே, எங்களது மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றை அரியலூரில் உடனடியாகத் துவங்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரம்பலூர்–மானாமதுரை சாலையில் அரியலூரில் இரயீல்வே மேம்பாலம் கட்டித்தர வேண்டும். அதேபோல, அம்பலவர்கட்டளை–காமரசவல்லி சாலையிலுள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டித்தர வேண்டும். அதேபோல, ஆதனூர்–மழவராயநல்லூர் மருதையாற்றுப் பாலத்தைக் கட்டித்தர வேண்டும்.

திருச்சி–சிதம்பரம் சாலையிலிருந்து ஏலாகுறிச்சி செல்லும் சாலையில், கல்லக்குடியில் பிரிந்து கருப்பிலாங்கட்டளை செல்லும்

கிராமச் சாலையிலுள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக கட்டித்தர வேண்டும்.

எனது தொகுதியில் அயன் ஆத்தூர் சாலையில் கி.மீ. 3.6–ல் பழுதடைந்துள்ள பாலத்தை நீக்கிவிட்டு அகலமான பாலமாக கட்டித்தர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல, அரியலூர் சுப்பராயபுரம் சாலையில் உள்ள பொய்யூ குறுக்கே வரும் மருதையாற்றுப் பாலத்தை அகலமான பாலமாக கட்டித்தர வேண்டும். இது எங்கள் பகுதியின் நீண்டநாள் கோரிக்கை தஞ்சாவூர் District–ல் அந்தக் குறை இல்லை. அவர்களும் டெல்டா நாங்களும் border டெல்டா மாவட்டம். மின் இணைப்பு வாங்க போனால் தடையில்லாச் சான்று கேட்டு எங்களை உயி எடுக்கிறார்கள், P.W.D.–ல். ஆனால், தஞ்சாவூர் மாவட்டத்தில் அப்படி இல்லை. ஆகவே, போன ஆட்சியிலிருந்து பேசிக்கொண்டே இருக்கிறோம்; கேட்டுக்கொண்டே இருக்கிறோம். டெல்டா என்றால் நாங்கள் இரண்டுபேரும் ஒன்றுதான். வட கரையில் இருப்பவர்களுக்கு ஒன்று. எங்களுக்கு ஒன்று என்று உள்ளது. ஆகவே, அங்கு N.O.C.– தடையில்லாச் சான்று கோருவதை உடனே நீக்க வேண்டும்

*பிற்பகல் 12–45*

அதேபோல, வெள்ளம் வருகிறது; கொள்ளிடத்தில் வெள்ளம் வருகிறது. நடுக்கத்தூர் என்ற கிராமம் உள்ளது. கடந்த வெள்ளத்தின்போது 16 உடைப்புகள் ஏற்பட்டு, அந்த உடைப்புகள் இன்னும் அடைக்கப்படவில்லை; சரி பண்ணவில்லை. இப்போது கொள்ளிடத்தில் தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள். தண்ணீர் போனால், அந்தக் கிராமங்கள் எல்லாம் அழிந்துவிடும். உடனடியாக அந்த உடைப்புகளை அடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் அதேபோல, கடந்தகால வெள்ளத்தில் தஞ்சை மாவட்டத்தின் கரைகளை உயர்த்திவிட்டார்கள். அது பாதுகாப்பாக உள்ளது. வட புறத்தில் உள்ள எங்கள் பகுதியின் கரை மிகவும் weak ஆக இருக்கிறது அந்தக் கரையை உயர்த்துவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதேபோல, அரியலூரில் அரசு சிமெண்ட் நிறுவனத்திற்கு நிலம் கையகப்படுத்துகிறார்கள். அங்கே தனியார் ஆலைகள் நிறைய இருக்கின்றன. தனியார் ஆலைகள் ஒரு ஏக்கர் நிலத்திற்கு 4 இலட்சம் 5 இலட்சம் என்று கொடுக்கிறார்கள். ஆனால், அரசு Cement factory–க்கு வாங்கும் நிலத்திற்கு மட்டும் 20 ஆயிரம், 30 ஆயிரம் என்று



கொடுக்கிறார்கள். எல்லாம் ஏழை விவசாயிகள், 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கிறார்கள். ஏதோ அரிஜன வீட்டுமனைக்கு பட்டா கொடுத்து வாங்கினால் நியாயம். இவர்கள் அதிலிருக்கும் கல்லை வெட்டியெடுத்து மிகப் பெரிய இலாபம் சம்பாதிக்கும் நிறுவனம். நிலத்தை வாங்குவதற்கும் அதே rate கொடுக்கிறார்கள். ஆகவே, தனியார் ஆலை எந்த அளவிற்கு பணம் கொடுக்கிறார்களோ, அதே அளவிற்கு ஒரு ஏக்கருக்கு 4 இலட்சம், 5 இலட்சம் அந்த விவசாயிகளுக்கு நீங்கள் பணம் கொடுக்க வேண்டும்.

அரியலூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்து இரண்டு தாலுகாகளாக ஆக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டம் தியாகதுர்கம், திருவண்ணாமலை சாலையில் கெடிலம் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப் பாலத்தை உடனடியாக மேம்பாலமாகக் கட்டித் தர வேண்டும்.

*1996–2000* வரைக்கும் contractor–க்கு நல்ல rate கொடுத்தார்கள். அப்புறம் வந்த அரசு அதைக் குறைத்துவிட்டது. ஏனென்றால், அவர்கள் மொத்தமாக package–ல் கொடுத்துவிட்டார்கள், பெரிய ஆட்களுக்கு. இப்போது அதே rate தான் கொடுக்கிறார்கள். ஜல்லி விலை இரண்டு மடங்கு ஏறிப்போய்விட்டது. தார் விலை இரண்டு மடங்கு ஏறிப்போய்விட்டது. Labour cost இரண்டு மடங்கு ஏறிப்போய்விட்டது. இன்னும் அந்தப் பழைய rate–தான் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 30, 40 சதவிகிதமாவது அந்த schedule of rate-ஐ உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சாலை கொஞ்சம் தரமாகப் போட முடியும். ஆகவே, அந்த schedule of rate–ஐ 30 சதவிகிதம் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். அரியலூர் மாவட்டம் பிரித்தாகிவிட்டது இல்லையா?

**திரு. து. அமரமூர்த்தி:** முடித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் வெள்ளக்கோயில் தொகுதியை இணைக்கும் இடமான அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டித் தரவேண்டுமாம், விடியல் சேகர் கேட்டிருக்கிறார்கள். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன கேட்டீர்கள்? திரு. அமரமூர்த்தி, என்ன கேட்டீர்கள்?

**திரு. து. அமரமூர்த்தி:** தரைப்பாலம். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் தொகுதியை இணைக்கிற ஊர். அதாவது, ஏலாகுறிச்சி–தூத்தூர் சாலை.

அது வீரமாமுனிவர் தங்கியிருந்த இடம். மிகவும் பிரசித்தி பெற்ற இடம். பெரிய சுற்றுலாத் தலம். அந்த road எல்லாம் இப்போது Other District Road–லேயே இருக்கின்றது. அதையெல்லாம் S.H.R. ஆக ஆக்க வேண்டும். State Highways Road–லே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் J.M. நீதிமன்றத்தில் சுமார் 4,000 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றை விசாரணை செய்ய J.M. நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் (மணியடிக்கப்பெற்றது) சுரங்கத்திற்கு நில ஆர்ஜிதம் தொடர்பான வழக்குகள் சார்பு நீதிமன்றத்தில் சுமார் 5,000 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றை விசாரிக்க அரியலூரில் சிறப்புத் தனி நீதிமன்றம் அமைக்க வேண்டும்.

இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவருக்கும், எங்களது சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, 5 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

*பிற்பகல் 12–50*

* **திரு. வை. காவேரி:** என்னை ஈன்றெடுத்த மாதா சேரங்காயம்மாள் அவர்களையும், பிதா வையாபுரி கவுண்டர் அவர்களையும் வணங்கி, என் கன்னிப் பேச்சைத் துவக்குகின்றேன். சேலம் மாவட்டம், கன்னந்தேரி கிராமம், பொந்தனூர் என்னும் சிறிய கிராமத்திலே பிறந்து, தற்போது வெள்ளையம்பாளையத்தில் வசித்து வருகின்ற என்னை, மகுடஞ்சாவடி ஒன்றிய பெருந்தலைவராக்கி, பின்பு பா.ம.க.வின் மாவட்டச் செயலாளராக்கி, தற்போது எடப்பாடி சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னை இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த, தமிழ்மொழியின் ஆணி வேர், தமிழ் மக்களின் துணை வேர், உயிரிலும் உடலிலும் தமிழைச் சுமக்கும் உத்தமர், தமிழ்குடிதாங்கி, பெண்ணுரிமைக் காவலர், இடஒதுக்கீடு நாயகர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், கோயிலிலும் சிறந்தது கல்விக்கூடம், அது எங்கள் குல மக்களுக்கும் சமமாய் கிடைக்க, கல்விக் கோவில் அமைக்கும் எங்கள் சரஸ்வதி அம்மையார் அவர்களுக்கும், மத்திய அரசில் மானிடர் பிணி தீர்க்கும் மகத்தான மருத்துவத் துறையில் மாணிக்கமாய் மின்னும், மாபெரும் பட்டமாம் அமெரிக்காவில் எல் லூதர் டெர்ரி விருது பெற்று, இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்த்த, மாண்புமிகு



மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், பா.ம.க. என்னும் அரசியல் தேரில் எங்களை அரவணைத்து வழிநடத்திச் செல்லும் எங்கள் தலைவர் ஓய்வறியா உழைப்பாளி, தியாகச் செம்மல் திரு. கோ.க. மணி அவர்களுக்கும், எங்கள் வன்னியர் சங்கத் தலைவர் திருமிகு ஜே. குரு அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அன்று ஓவியத்திற்கோர் ரவிவர்மா, தமிழுக்கோர் அகத்தியன், கற்புக்கோர் கண்ணகி. இன்று பண்புக்கோர் தலைவர், அன்புக்கோர் தலைவர், அரவணைக்க ஓர் தலைவர், அரசியல் சாஸ்திரங்களை அறிந்த முப்பெரும் ஆசான் முத்தமிழறிஞர் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் அன்புத் தவப் புதல்வனாம், தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) பார்த்ததில்லை, பேசக் கேட்டிருக்கிறேன், வீரபாண்டிய கட்டபொம்மன் வீரத்தில் சிறந்தவன், நாட்டின் நலனை உயிர் மூச்சாய் கொண்டவன் என; ஆனால் அவரின் மறு உருவாய் உள்ள மாண்புமிகு அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. காவேரி, ரோடுக்கு வாருங்கள்.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சு. கலைஞர் அவர்களைப் பாராட்டாமல் என் தொகுதிக்குச் சென்றால், அந்தச் சுகத்தையெல்லாம் அனுபவிக்கின்ற மக்கள் என்னை விரட்டிவிடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக முற்போக்குக் கூட்டணியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் அனைவருக்கும், அன்பு, அறிவு, அனுபவம், ஆற்றல், அனைத்தும் அமையப்பெற்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த மாமன்றத்திலே கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கின்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பா.ம.க.வின் மாநில துணைப் பொதுச் செயலாளராக இருந்து வழிநடத்திய ஓமலூர் சட்டப் பேரவை உறுப்பினர் அ. தமிழரசு அவர்களுக்கும், என் வெற்றிக்காக உழைத்த எடப்பாடி தொகுதிக்குட்பட்ட ஜனநாயக முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த

அனைத்து பொறுப்பாளர்களுக்கும், என்னைச் சட்டமன்றத்திற்கு அனுப்ப சபதம் ஏற்று வாக்களித்து என்னை வெற்றியடையச் செய்த எடப்பாடி தொகுதி வாக்காள பெருமக்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் என் கன்னிப் பேச்சை நெடுநேரம் பேச அனுமதிக்க உள்ள மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் ஆராய்வாளரின் தந்தை அரிஸ்டாட்டில் என்றாலும், அரசாட்சியில் அமர்ந்து அரசியலை ஆராய்ந்தவர் என்ற பெருமை முத்தமிழ் அறிஞர் கலைஞரைத்தான் சாரும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு"*

என்ற குறளில், முயற்சி செய்து தேடாமலே தரும் வளத்தையுடைய நாடே சிறந்த நாடு என்று கூறுவர். தேடி முயன்றால் வளம் தரும் நாடு சிறந்த நாடு அல்ல என்ற வள்ளுவன் குறளுக்கேற்ப முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழை மக்கள் கேட்காமலே இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச கலர் தொலைக்காட்சிப் பெட்டி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம், விவசாயக் கூட்டுறவு கடன் சுமார் 7,000 கோடி தள்ளுபடி ஆகியவற்றைக் கொடுத்து தமிழகத்தை சிறந்த நாடு என்பதையும் தன்னை சிறந்த ஆட்சியாளர் என்பதையும் நிரூபித்துள்ளார் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு வெளியிட்டுள்ள 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஒரு தங்கச் சுரங்கம். இது தேவாமிர்தம் போன்றது. இதைப்பற்றிக் குறை கூறுபவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கின்றேன். மஞ்சள் காமாலைப் பிடித்தவனுக்கு எதைப் பார்த்தாலும் மஞ்சளாகத்தான் தெரியுமாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல் குறை சொல்பவர்களிடத்தில் ஏதோ குறையிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்பற்றி கவலையில்லை.

தமிழகத்தில் சத்துணவு அமைப்பாளர்கள் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு, காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். கல்வித் தகுதி உள்ள சத்துணவுப் பணியாளர்களை ஆசிரியர் பயிற்சி அளித்து



அப்பள்ளியிலேயே ஆசிரியர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும். சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு பால் வழங்க வேண்டும். இதனால், விவசாயப் பெருமக்களுடைய பொருளாதார வளர்ச்சியில் ஏற்றம் ஏற்படும். மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும். மின்சார வாரியத்தில் ஒப்பந்தப் பணியாளர்களாக பணியாற்றும் பல ஆயிரக்கணக்கான ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12–55*

போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வட்டியில்லாக் கடனில் வீடுகட்டிக் கொடுக்க வேண்டும். தீயணைப்புத் துறை ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் குறைவாக உள்ளது அதை காவல் துறைக்கு இணையாக வழங்கவேண்டுகிறேன்.

கிராம உதவியாளர்களாக உள்ள கல்வித் தகுதியுள்ளவர்களை பயிற்சி கொடுத்து கிராம நிர்வாக அலுவலராக நியமிக்க வேண்டும்.

வேளாண்மைத் துறையில் இயங்கிவரும் ஆராய்ச்சிப் பிரிவினைத் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைத்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும்.

ஒரு மாநிலத்தில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு உள்கட்டமைப்புகள் தேவைப்படுகிறது. அதில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. தொழில், எரிசக்தி மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளினுடைய அதிவேகமான வளர்ச்சிக்கும், சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஏழையெளிய ஊரக மக்களினுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் சாலை இணைப்பு மிக முக்கியமானது. தமிழகத்தைப் பொறுத்தவரை மொத்தம் 1,78,193 கிலோ மீட்டர் நீளம் சாலை உள்ளது. இதில் நெடுஞ்சாலைக்குச் சம்பந்தப்பட்டது 61,420 கிலோ மீட்டர் ஆகும். பெரிய பாலங்கள் 1,207, சிறிய பாலங்கள் 7,658, தாம்போகிகள் 99,423. ஆக, இத்தனை பணிகளையும் செவ்வனே செய்ய நமது தமிழக முதல்வர் அவர்கள் 801 கோடியே 37 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது மிக பெருமைக்குரிய விஷயமாகும்.

தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிடவும், மைய அரசு ஒதுக்கும் நிதியினை முறையாகச் செயல்படுத்தவும்,

இவற்றைக் கண்காணிக்கவும் மாநில நெடுஞ்சாலை ஆணையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுகிறேன்.

கிராமப்புற அனைத்துச் சாலைகளையும் நெடுஞ்சாலையுடன் இணைக்க வேண்டுகிறேன். சாலைகளில் குறுக்கிடும் நீர்வழிகளைக் கண்டறிந்து பாலம் கட்ட வேண்டுகிறேன். சுனாமி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெடுஞ்சாலைகளை விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அடிக்கடி நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைக் கண்காணித்து, விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடிய விரைவில் சிகிச்சையளிக்க நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன். பேருந்து வழித்தடங்கள் மிகவும் மோசமாக உள்ளதைக் கண்டறிந்து சீரமைக்க வேண்டுகிறேன். நெடுஞ்சாலைத் துறையில் அனைத்து நிலையிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுகிறேன். சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் ஆலோசகர் வழங்கிய பரிந்துரைகளை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

துறைமுகங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்தி, தொழிற்சாலைகளைப் பெருக்கி, மாநிலத்தில் பொருளாதாரத் துறை வளர்ச்சியடைய வேண்டுகிறேன். பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை விரிவுபடுத்தி, தமிழ்நாடு மின் வாரியத்திற்குத் தடையில்லாமல் நிலக்கரிக் கிடைக்க வேண்டுகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் 500 கிலோ மீட்டருக்குமேல் சாலையைப் பராமரிக்க வேண்டிய நெடுஞ்சாலை உட்கோட்டப் பணிகளை மேற்பார்வையிடும் உதவிக் கோட்டப் பொறியாளருக்கு ஈப்பு வசதி செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

சேலம் மாவட்டத்தில் கிராமச் சாலைகள் சீரமைக்காமல் உள்ளதைக் கண்டறிந்து நபார்டு வங்கி உதவியுடன் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

காலியாக உள்ள சாலை ஆய்வாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். 1972 ஆம் ஆண்டு சாலை ஆய்வாளர்கள் தேர்வு செய்து, பின்பு அவர்களில் 1976 ஆம் ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்ட 48 பேர்களுக்கு, ஆய்வாளர்கள் பணி



மேற்கொள்ளும்போது முன்னுரிமை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

உதவிப் பொறியாளர்கள் தலைமையிடத்திலேயே தங்கக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரசுச் சாலைகள் போக்குவரத்துத் துறையில் ஒரு வழிப் பாதையாக உள்ளதை அகலப்படுத்தி, மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அரசு, மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதன்மூலம் அதனுடைய தரம் உயர்த்தப்படும். அரசு, சாலைப் பணிகளை குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைப்பதால் அரசு நிதி இழப்பு ஏற்படுவதுடன், வேலைவாய்ப்பு கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, நெடுஞ்சாலைத் துறை அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் அவர்களே, 1996–2001 ஆம் ஆண்டு தாங்கள் 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை நியமித்தீர்கள். அதனால், சாலைப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திருமணம் செய்து, பல பெண்களுக்கு பூவும், பொட்டும் கொடுத்தார்கள். ஆனால், அதற்குப் பின்பு வந்த ஆட்சியாளர்கள் சாலைப் பணியாளர்களை பணி நீக்கம் செய்து, அவர்களில் 85 பேர்களுடைய மனைவிமார்களினுடைய பொட்டை அழித்து, பூவை எடுத்து, அப்பெண்களை புலம்பவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தாங்கள் மீண்டும் அந்தக் குடும்பங்களைக் கண்டறிந்து, அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுடைய கல்விக்குத் தகுந்தவாறு ஏதாவது ஒரு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி தொகுதியின்கீழ் உள்ள கோரிக்கைகளை (மணியடிக்கப்பெற்றது) இந்த மாமன்றத்தில் வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. காவேரி, முடித்து விடுங்கள். (குறுக்கீடு) எடப்பாடி, சங்ககிரி இதுபற்றிப் பேசுங்கள்.

**திரு. வை. காவேரி:** எனது தொகுதியில் வேளாண்மை, ஜவுளி உற்பத்தி, கயிறு திரித்தல் ஆகியவை பிரதானத் தொழில்களாகும். மேலும், விவசாயம் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் பெருமளவு வாழ்கின்றார்கள். எடப்பாடித் தொகுதியில் ஜவுளிப் பூங்கா ஒன்றும்,

சர்க்கரை ஆலை ஒன்றும் ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு மிக அதிகமான, தரமான பருத்திகள் விற்பனைக்கு வருகின்றன. இங்கு அரசு பஞ்சாலை மற்றும் நூற்பாலை ஒன்றைத் தொடங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

எடப்பாடி தொகுதியின் மேற்கு எல்லை ஓரமாக சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் காவிரி ஆறு ஓடுகிறது. ஆனால், காவிரி நீர்ப்பாசன பகுதி மிகக் குறைவாக உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து பல முறை உபரி நீர் யாருக்கும் பயன்படாமல் கடலில் கலக்கும் சம்பவம் நடந்துள்ளது. அந்த உபரி நீரை எடப்பாடி தொகுதிக்கும், சங்ககிரி தொகுதியினுடைய கிழக்கு பகுதிக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதிக்கும், பாசனத்திற்கும் பயன்படும் வகையில் பூலாம்பட்டிக்கு வடக்கே கால்வாய் ஒன்று வெட்டி, அதை எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம் வழியாகச் சென்று மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள பொன்னியாற்றில் இணைக்க வேண்டும். அப்படி இணைத்தால் அதேநீர் திருமணிமுத்தாறில் கலக்கும். அதேநேரத்தில் அப்பகுதியில் உள்ள ஏரிகளையும், குளங்களையும் அந்த உபரி நீரைக்கொண்டு நிரப்பி நிலத்தடி நீரைப் பெருக்கிக் கொள்ளலாம். அப்படிச் செய்வதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை நீர்ப்பாசன நிலங்களாக மாற்றுவதுடன் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நான்கு கோரிக்கைகள்தான் உள்ளன.

எடப்பாடி நகரத்தில் உள்ள சரபங்கா நதியை தூர்வார வேண்டுகிறேன். பூலாம்பட்டி மற்றும் சித்தர் கோவில் ஆகிய இரண்டு ஊர்களையும் சுற்றுலாத் தலமாக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி தொகுதியில் பெண்கள் கலைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாயும், அப்படி முடியவில்லையென்றால் எடப்பாடிக்கும், சங்ககிரி தொகுதிக்கும் இரண்டிற்கும் சேர்த்து, ஒரு பெண்கள் கலைக் கல்லூரி நிறுவிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது) எனது தொகுதியில் வெள்ளையம்பாளையம், வேம்பநேரி, திருமாலூர், மாணிக்கப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள கயிறு திரிக்கும் ஆயிரக்கணக்கான



தொழிலாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள பனையேறும் தொழிலாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டுகிறேன். எனது தொகுதியிலிருந்து பல ஆயிரக்கணக்கானோர் கரும்பு ஆலைகளுக்கு கரும்பு வெட்டச் செல்லுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு தொகுப்பு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி நகரத்தில் பாதாளச் சாக்கடை கட்டிக்கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி நகரத்தினுடைய வடக்கு ஓரமாக பட்டச் சாலை ஒன்று அமைத்து அதனை கல்வடங்கம் சாலையில் இணைக்க வேண்டுமாயும், எடப்பாடி நகரத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டுமாயும், கொங்கணாபுரம் மற்றும் எடப்பாடியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டுமாயும், எனது தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள விசைத்தறி தொழிலாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமாயும், எடப்பாடியில் நீதிமன்றமும், கருவூலமும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமாயும், காக்காப்பாளையம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் ஒன்று கட்டிக்கொடுக்க வேண்டுமாயும், கொங்கணாபுரத்தில் காவல் நிலையம் தொடங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. காவேரி, உரையை முடித்துக்கொள்ளுங்கள். நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள். நன்றி சொல்லி பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. காவேரி:** நன்றி சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். நன்றி. தொகுதியைப் பற்றிப் பேசவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. காவேரி:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். எடப்பாடியில் உள்ள பயணியர் விடுதிக்கு புதிய கட்டடம், அ. புதூரில் ஆரம்ப சுகாதார நிலையம், வைகுந்தத்தில் விபத்து சிகிச்சை மையம், எடப்பாடி நகரத்தில் உள்ள மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும், எடப்பாடி நகரத்தில் கவுண்டம்பட்டிக்கும் வெல்லாண்டிவலசுக்கும் இடையே பாலம், தாதாபுரத்திற்கும், வேம்பநேரிக்கும் இடையே

ஒரு பாலம், தாதாபுரத்திற்கும், தாதாபுரம் காட்டுவளவுக்கும் இடையே ஒரு பாலம், காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலமும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. காவேரி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். *(குறுக்கீடு)* நேரடியாக அமைச்சரை பதில் சொல்லக் கூப்பிடப்போகிறேன். *(குறுக்கீடு)* திரு. காவேரி, பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். *(குறுக்கீடு)* நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள். இன்னும் சட்டமுன்வடிவு எல்லாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**திரு. வை. காவேரி:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். கொங்கணாபுரத்திலிருந்து சங்ககிரி செல்லும் வழியில் ஒரு பாலமும், வெள்ளக்கல்பட்டி செல்லும் சாலை, கூடலூர் கிழக்குப்பாளையம் சாலை, ஆனைப்பள்ளம்–நங்கவல்லி வரை உள்ள சாலை, கல்லூர்–காட்டுவளவுச் சாலை, மதுரைக் காளியம்மன் சாலை, கருங்கல்–காட்டுவளவுச் சாலைகளை எல்லாம் பராமரிப்பு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையினுடைய காலநேரத்தைக் கருதி மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் பதிலுரை வழங்குவார். *(குறுக்கீடு)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியிலிருந்து ஓர் உறுப்பினர் பேச வாய்ப்புக் கேட்டிருந்தோம். 5 நிமிடங்கள் அவர் பேசுவதற்கு வாய்ப்பு தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, காலநேரத்தைக் கருதித்தான் இது; இது consensus; எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவு. (குறுக்கீடு) இல்லை, வாய்ப்புக் கொடுக்கக் கூடாது என்பது நோக்கமல்ல.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எந்த மானியமாக இருந்தாலும் அந்த மானியத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டதற்குப் பின்னர், பேச விரும்புவோருடைய பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர், குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், பேரவைத் தலைவர் விவாதத்திலே கலந்துகொள்பவர்களுடைய பேச்சுகளையெல்லாம் நிறுத்திவிட்டு, அமைச்சரைப் பதில் சொல்ல



அழைக்க முடியும். அந்த உரிமையின்படி பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அமைச்சரை அழைத்திருக்கிறார், நேரத்தைக் கருதி.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. *(குறுக்கீடு)* அமைச்சரைப் பேசக் கூப்பிட்டாகிவிட்டது. அமைச்சர், பேசுங்கள்.

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த மண்ணில், சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கழகத்தில் கழக இளைஞர் அணியினுடைய மாவட்ட துணை அமைப்பாளராக, ஈரோடு தெற்கு மாவட்டக் மாவட்ட அமைப்பாளராக, கழக இளைஞர் அணியினுடைய கழகத்தினுடைய செயலாளராக, கழக இளைஞர் அணியினுடைய துணைச் செயலாளராகப் பொறுப்பு அறிவித்து, இந்த இயக்கத்திற்காகப் பாடுபடுவதற்காக மட்டுமல்ல, வெள்ளக்கோவில் தொகுதி மக்களுக்கும் மூன்று முறை நீ உழைக்க வேண்டுமென்று சொல்லி உத்தரவிட்டது மட்டுமல்லாமல், இந்த நாட்டு மக்களுக்கும் நீ உழைக்க வேண்டுமென்று சொல்லி, இந்த அமைச்சர் பொறுப்பையும் தந்து, இன்றைக்கு இந்த நாட்டு மக்களுக்காகப் பணியாற்ற வாய்ப்பு தந்திருக்கின்ற ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவர், அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற உன்னதத் தலைவர், இந்த நாட்டு மக்களுடைய அன்பைப் பெற்று ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தேர்தல் நேரத்திலே சொன்ன வாக்குறுதிகளை நூறே நாட்களில், ஏறத்தாழ 90 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி, இன்றைக்கு மாற்றாரும் போற்றும் அரசாக, மக்கள் அரசாக இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பானாலும் சரி, கட்சிப் பொறுப்பானாலும் சரி, தோளோடு தோள் நின்று பணியாற்றும் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், எழுச்சி நடை சிங்கம்தான், ஏறு நடை தங்கம்தான், இனி பொழிந்திட்ட உமிழ்தான் குள்ள நரிக் கூட்டத்தார் எனக் கொடி தூக்கி, இடியொலிக்கும் கொள்கை மறவர் கூட்டமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சோப இலட்சம் தொண்டர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், எங்களின் வழிகாட்டியாய், கழகத்தின் இளைஞர் அணி துணைச் செயலாளராக, கழகத்தின் மாண்புமிகு இளைஞர் அணி துணைச் செயலாளராக, இன்றைக்கு உள்ளாட்சித் துறை துணைப் பொதுச் செயலாளராக, இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி செய்து

கொண்டிருக்கிற என் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், இந்த நிர்வாகத்தைச் சிறப்புற நடத்திட எங்களுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் எல்லாம் ஆலோசனை தந்து கொண்டிருக்கிற மாண்புமிகு மின் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், தேர்தல் வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுடைய நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியையும், அதேநேரத்திலே, என்னை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கும் இந்த நேரத்தில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, மானியக் கோரிக்கைக்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எனக்கு முன்னால் இங்கே விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த நெடுஞ்சாலைத் துறையினுடைய முன்னேற்றத்திற்காகவும் ஆக்கபூர்வமான பணிகளுக்காகவும் அரிய கருத்துகளை எல்லாம் இங்கே வழங்கியிருக்கின்றார்கள். அதையெல்லாம் நிச்சயமாக கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய பொது கருத்துகளையும், அவரவர் தொகுதிக்கேற்ப வழங்கியிருக்கிற கோரிக்கைகளையும், நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றித் தருவோம் என்பதையும். இந்த நேரத்திலே நான் இங்கே உறுதிபடச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சாலைக் கட்டமைப்பு வ்சதிதான் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது என்பதை இங்கே பேசிய அனைவரும் குறிப்பிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். அதைப்போல ஒரு நாட்டினுடைய, மாநிலத்தினுடைய சாலைக் கட்டமைப்பு என்பதை வைத்தே அந்த நாட்டினுடைய வளர்ச்சியைக் கணக்கிட முடியும் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு இன்றைக்கு சாலைக் கட்டமைப்பு வசதி ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக உதவி வருகிறது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை. அதேநேரத்தில், போக்குவரத்து வசதியைப் பொறுத்த அளவில் சாலை, வான் வழி, இருப்புப் பாதை, அதேபோல நீர் வழி போன்று வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், ஒரு சாதாரணமானவனும், சாமானியனும் இன்றைக்குப் பயன்படுத்தக்கூடிய வசதி சாலை வசதி என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை. அதேநேரத்தில் இன்றைக்கு நம் மாநிலத்திலுள்ள சாலையினுடைய



நீளம் 1,78,193 கிலோ மீட்டர். அதிலே நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற சாலையினுடைய நீளம் 61,420 கிலோ மீட்டர். இதிலே N.H. என்கிற தேசிய நெடுஞ்சாலை 4,254 கிலோ மீட்டர். S.H. என்கிற மாநில நெடுஞ்சாலை 6,849 கிலோ மீட்டர். அதேபோல, M.D.R., எனப்படுகிற மாவட்ட முக்கியச் சாலையினுடைய நீளம் 7,569 கிலோ மீட்டர். அதேபோல O.D.R., என்கின்ற சாலையினுடைய நீளம் 42,748 கிலோ மீட்டராகும். இவையெல்லாம் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, பெரிய பாலங்களாக ஏறத்தாழ 1,207 பாலங்களும், அதேபோல சிறிய பாலங்களாக சுமார் 7,658–க்கு மேற்பட்டும், 99,423–க்கு மேற்பட்ட தாம்போகிகளைக் கொண்டும் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை அவற்றையெல்லாம் பராமரித்து வருகின்றது.

அதேபோ்ல, இந்தத் துறையோடு இணைக்கப்பட்டிருக்கிற கடல்சார் வாரியம் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஆட்சி நடைபெற்றபோது—1997 ஆம் ஆண்டு— துறைமுகங்கள் துறையாக இருந்தது, கடல்சார் வாரியமாக மாற்றப்பட்டது. இதில் சுமார் 15 துறைமுகங்கள் இன்றைக்கு செயல்பாட்டில் உள்ளன. அதிலே ஏழு துறைமுகங்கள் நம்முடைய கடல்சார் வாரியத்தின்மூலம் நேரடிக் கட்டுப்பாட்டிலே இயங்கி வருகின்றன. அவை கடலூர், நாகப்பட்டினம், இராமேசுவரம், வாலிநோக்கம், பாம்பன், கன்னியாகுமரி, குளச்சல் போன்ற ஏழு துறைமுகங்களாகும். தனியார் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஓய் 03 எண்ணெய் வளப்பகுதி, அதேபோல மணப்பாடு, புன்னயக்காயல், திருக்கடையூர் மற்றும் கூடங்குளம் போன்ற எட்டு துறைமுகங்களும் இன்றைக்குத் தனியார் நிர்வாகத்தின்மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றினுடைய ஏற்றுமதி, இறக்குமதி சிமெண்ட், தேங்காய் பிண்ணாக்கு, அதேபோல இன்றைக்கு கச்சா எண்ணெய் போன்ற பொருட்களும், பொது பொருட்களும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

அதேபோல, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், மூன்று சொந்தக் கப்பல்களும், அதேபோல ஐந்து தனியார் கப்பல்களும் சேர்த்து இன்றைக்கு 8 கப்பல்கள் பிற மாநிலங்களிலிருந்து நிலக்கரி எடுத்து வந்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக இன்றைக்கு அந்த நிலக்கரி வழங்கும் பணியைச் செவ்வனே செய்து வருகிறது. சிறப்போடு இன்றைக்கு அந்த அமைப்பு நடைபெற்றுவருகின்றது.

பிற்பகல் 1–10

அதேபோல, இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். திட்டப் பணிகளுக்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே, 2,446 கோடி ரூபாய் இன்றைக்குத் திட்டச் செலவிற்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். அதேபோல பராமரிப்புச் செலவிற்காக, முன்பு குறிப்பிட்டதைப்போலவே, 801 கோடி ரூபாய்க்குமேல் இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கின்றார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர்கூட சொன்னார்கள், 'இதையெல்லாம் எப்படி செலவு செய்து, பன்னிரண்டாவது நிதிக் கமிஷனுடைய நிதியைப் பெற இருக்கிறீர்கள்' என்று கேட்டார். நிச்சயம் இது தகுந்த காலத்தில், உரிய காலத்திலே, முறையாகச் செய்து, அரசு பெறவேண்டிய நிதியை நிச்சயம் பெறும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நடப்பு ஆண்டு பகுதி–II திட்டப் பணிகள். கடந்த 2005–2006 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தில் பாலப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. நடப்பு ஆண்டிற்கு பகுதி–II திட்டத்தில் ரூ. 20 கோடி மதிப்பில், 118 கிலோ மீட்டர் நீளச் சாலை மேம்படுத்தப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. மேலும், ரூ.8 கோடி மதிப்பில் பழைய பாலங்களைச் சீரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**மேற்கொள்ளப்பட இருக்கின்ற பாலப் பணிகள் விவரம்:** கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள, மாநில நெடுஞ்சாலையிலுள்ள அமராவதி ஆற்றின் குறுக்கே சின்னதாராபுரம் பகுதியிலே ஒரு பாலமும், அரவக்குறிச்சி தடா கோவில் அருகே ஒரு பாலமும், ஆக இரண்டு புதிய பாலங்களும் ரூ. 415 இலட்சம் மதிப்பில் கட்டப்பட உள்ளன.

அதேபோல, திருச்சி மாவட்டம் லால்குடி மற்றும் மருங்காபுரி தொகுதிகளிலுள்ள மாவட்ட இதர சாலைகள் ரூ.95 இலட்சம் மதிப்பில் இரண்டு புதிய பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

ஈரோடு மாவட்டம், மயில்ரங்கம் சலையில் ரூ.300 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய பாலம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. மூன்று பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுகின்ற பணியில்



திருவள்ளூர், காட்டுமன்னார்கோவில் மற்றும் திருவையாறு ஆகிய மூன்று தொகுதிகளில் மூன்று பழுதடைந்த பாலங்கள் ரூ. 80 இலட்சம் செலவில் திரும்பக் கட்டப்பட உள்ளன.

**மாநில நெடுஞ்சாலையின் பராமரிப்பு:**– வேலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 15.40 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகள், சுமார் ரூ.500 இலட்சம் மதிப்பிலே மேம்பாடு செய்யப்பட உள்ளன. அதேபோல விழுப்புரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, உதகை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 82.51 கிலோ மீட்டர் நீள மாவட்ட முக்கிய சாலைகள் ரூபாய் 1,005 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்யப்பட உள்ளன.

கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 20 கி.மீ. நீள இதர மாவட்டச் சாலைகள் ரூ. 545 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்யப்படவுள்ளன.

நபார்டு நிதியுதவி திட்டத்தில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் நடப்பு ஆண்டில் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 1,242 கிலோமீட்டர் நீள சாலைப் பணிகளும், 17 பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக ரூ. 110 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தில், கடந்த ஆண்டு ரூ. 50 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதை இரண்டு மடங்காக உயர்த்தி இன்றைக்கு இந்த ஆண்டு ரூ. 102.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் நலத் திட்டம்:** ஆதிதிராவிடர் நலத் துணை திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர் பெரும்பான்மையாக, அதாவது மொத்த மக்கள் தொகையில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் வசிக்கும் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 125 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகளும், 8 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்காக நடப்பு ஆண்டில், அரசு ரூ. 27 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**கரும்புச் சாலை அபிவிருத்திப் பணிகள்:** கரும்புச் சாலை திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட 1,746 கிலோமீட்டர் சாலையில், பழுது ஏற்படும் பகுதிகளைப் பராமரிப்பதற்கு ரூ. 13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

**ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலை மேம்பாட்டுத் திட்டம்:** அரசின் நேரடி நிதியுதவியைப் பயன்படுத்தி, நடப்பு ஆண்டில் 971 கிலோ மீட்டர் நீள, பேருந்துகள் செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ரூ. 45 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**தருமபுரி மாவட்டத்தில் நபார்டு வங்கியின் சிறப்புத் திட்டம்:** தருமபுரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக, நபார்டு வங்கி நிதியுதவியுடன் சிறப்புத் திட்டமாக ரூ. 14 கோடி மதிப்பில் 101 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகளும், ஏ.பள்ளிப்பட்டு அருகிலே வறட்டாற்றின் குறுக்கே ஒரு பாலமும், சின்னப்பள்ளி அருகே நாகவதி ஆற்றின் குறுக்கே ஒரு பாலமும் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ. 14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நபார்டு நிதியுதவியுடன் சாலை மற்றும் பாலம் கட்டும் திட்டம்:** நபார்டு வங்கி நிதியுதவியுடன் காவிரிப் பாசனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 18 பாலப் பணிகளும், கரும்புச் சாலைகளில் 5 பாலங்களும் மற்றும் சுமார் 128 கிலோ மீட்டர் நீளத்திற்கு கரும்புச் சாலைகளை மேம்படுத்த 35 பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக நடப்பாண்டில் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில், காவிரிப் பாசனப் பகுதிகளில் 9 பாலப் பணிகளும், கரும்புச் சாலைகளில் 3 பாலப் பணிகளும் மற்றும் அனைத்துச் சாலைப் பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

பிற்பகல் 1-15

**உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்:** உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மொத்தம் 727 கி.மீ. சாலைகளை மேம்படுத்தும் பணிகள் 4 தொகுப்புகளிலும் 2000 கி.மீ. நீளச் சாலைகளில் சிறப்புப் பராமரிப்புப் பணிகளும், துறையைப் பலப்படுத்துதல் தொடர்பான பணிகளும் மொத்தம் ரூ. 2160 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் உலக வங்கிக் கடன் ரூ. 1670 கோடியாகும். தமிழ்நாடு அரசு பங்கு ரூ. 490 கோடியாகும்.

2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம், 2008-ல் நிறைவுபெற உள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபோது சாலை மேம்பாட்டுப் பணிகளில் பெரும் சுணக்கம் காணப்பட்டது. தற்போது இப்பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின்கீழ் ஆரணி,



திருக்கோவிலூர், விருத்தாசலம், அரியலூர், போரூர், திருவண்ணாமலை, திருத்துறைப்பூண்டி மற்றும் சிதம்பரம், சீர்காழி, நாகப்பட்டினம், முத்துப்பேட்டை ஆகிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும்.

**மதுரை ஆரச்சாலைத் திட்டப் பகுதி-I:** மதுரை மாநகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளை இணைப்பதற்கு ஆரச்சாலைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதல் பகுதியின்கீழ் எடுக்கப்பட்ட எல்லீஸ் நகர் இரயில்வே மேம்பாலப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரிவுபடுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (CMDP):** சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் (CMDP) கீழ், 2003 ஆம் ஆண்டு முதல் 184 பணிகள், ரூ.602.67 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்டன. இவற்றில் இதுவரை 49 பணிகள் மட்டும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளுக்குத் தேவையான ரூ.200 கோடி நிதி நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-3:** உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNUDP)-3 ஆம் பகுதியின்கீழ் 20 சாலைப் பணிகளும், 149 கி.மீ. நீளத்திற்கு, ரூ.330 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிக்கு தனியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நிலம் எடுக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றதும் சாலை மற்றும் பாலப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**HUDCO நிதியுதவியுடன் பாலம் கட்டும் திட்டம்:** HUDCO நிதியுதவியின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பாலங்களில், 17 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 13 பாலப் பணிகளும் நடப்பாண்டில் முடிக்கப்படும். எஞ்சிய பணிகளைத் துரிதப்படுத்தி வரும் ஆண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சென்னை உள்வட்டச் சாலை:** சென்னை உள்வட்டச் சாலையின் தெற்குப் பகுதியில் நில எடுப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன. இச்சாலைப் பணிகளை விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக நடப்பாண்டில் 17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. அதேபோல, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்மூலமும், பல்வேறு பணிகள் இன்றைக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே, பள்ளிக்கரணையில் பல்லாவரம்–துரைப்பாக்கம் சாலையில் மறைமலையடிகள் பாலம்–இரும்புலியூர் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலை மேம்பாலம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும், வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம், போரூர் சந்திப்பு, கிண்டி Halda சந்திப்பு, மூலக்கடை சந்திப்பு, வடபழனி சந்திப்பு, திருமங்கலம் சந்திப்பு ஆகிய இடங்களிலும் சாலை மேம்பாலம் கட்டப்படும். அதே நேரத்தில், அடையாறு திரு.வி.க. பாலத்தை அகலப்படுத்துதல், அதேபோல, எண்ணூர் கடல் முகத்துவாரத்தில் புதிய பாலம் கட்டுதல் மற்றும் முகப்பேர் அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இதற்காக நடப்பாண்டில், இந்தத் திட்டத்திற்கு ரூ.51.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதை ஆய்வு செய்கின்ற பணிக்காக இந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3:** தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3 ஆம் தொகுப்பின்கீழ், 9 இரயில்வே மேம்பாலங்களும், 3 சுரங்க நடைபாதைகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இந்த ஆய்வுகளின்பேரில், கட்டுமான வரைபடங்கள் மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள், தனியார் ஆலோசனை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிந்தபின்பு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய அறிவிப்புகளுக்கு வரவிருக்கின்றேன்.

**1. தொகுப்பு முறை ஒப்பந்தம் ஒழிப்பு:** 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை நடந்த ஆட்சியின்போது, நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சாலை மற்றும் சிறுபாலப் பணிகள் அனைத்தும் உட்கோட்ட அளவில், ஒரு தொகுப்பாகச் சேர்த்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒரே ஒப்பந்ததாரரிடம் பணிகள் ஒப்பளிக்கப்பட்டன. இதனால், தொகுப்பிலுள்ள பல பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. ஒரு பணியை முடித்தபின்தான், அடுத்த பணியைத் தொடங்குவது என்ற நிலை ஏற்பட்டதால், பொது மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள். மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். கடந்த அரசு எடுத்த முடிவினை மாற்றி, தொகுப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதை இரத்துச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இனி, நெடுஞ்சாலைத்



துறையின் பல்வேறு சாலை மற்றும் பாலப் பணிகள் தனித்தனிப் பணிகளாக, ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்தப்படும். இதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அரசு ஆணை இன்று வெளியிடப்பட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

**2. காலிப் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக:** நெடுஞ்சாலைத் துறையில் ஆணிவேராக திகழும் அடிப்படைப் பதவிகள் நீண்ட நாட்களாக காலியாகவே உள்ளன. அதுபற்றி முந்தைய அரசு கவலைப்படவோ, கவனத்தில்கொள்ளவோ இல்லை. ஆனால், தாயினும் சாலப் பரிந்தூட்டும் தயாள குணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர், இதனைக் கருத்தில்கொண்டு, காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

(அ) அதன்படி, இறந்த சாலைப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் செய்யவும், மேலும் அவர்களின் குடும்பங்களுக்குப் பணிக்கொடை, குடும்ப நல நிதி மற்றும் குடும்ப ஓய்வூதியம் போன்ற பலன்களை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணை இன்று வெளியிடப்படும்.

(ஆ) நெடுஞ்சாலைத் துறையில் தினக்கூலி அடிப்படையில் சாலைப் பணியாளர்களாகவும், இதரப் பணியாளர்களாகவும் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருபவர்கள், தங்களுக்கு நிரந்தரப் பணி வேண்டுமெனக் கோரிக்கை வைத்துள்ளார்கள். அது குறித்து இவ்வரசு கனிவுடன் பரிசீலித்து வருகிறது.

(இ) தற்போது காலியாக உள்ள சாலை ஆய்வாளர் பணியிடங்களை, தேவையின் அடிப்படையில் விரைந்து நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) உதவிப் பொறியாளர் பணியிடங்களைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 215 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றையும், அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதவிர, காலியாகவுள்ள 55 இளநிலைப் பொறியாளர்களின் பணியிடங்களும் பதவி உயர்வின்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. திட்டப் பணிகளுக்காக நிலம் கையகப்படுத்துதல்:** கடந்த காலங்களில் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலை மற்றும் பாலப் பணிகளில் நிலம் கையகப்படுத்தப்படுவதற்கு முன்பே பணிகள் எடுக்கப்பட்டதால், பெரும்பாலான பணிகளை முடிக்க முடியாமல் போனதால், பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளானதுடன், அரசுக்கும் கூடுதல் நிதிச்செலவு ஏற்படவும் காரணமாகிவிட்டது. இந்த அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி, தற்போது நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, அதன் பின்னர் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. இதன்மூலம் பணிகளைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. மாநிலச் சாலைகளை அகலப்படுத்துதல்:** அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் (S.H.) இருவழித் தடங்களாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி அகலப்படுத்தும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். இதில் நடப்பாண்டில் இருவழித் தடங்களாக மாற்றப்படவுள்ள முக்கியச் சாலைகள் பின்வருமாறு:-

விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை-சாயல்குடி சாலையில் 32 கிலோ மீட்டர் நீளத்திற்கும், வேலூர் மாவட்டத்தில் திருவலம்-காட்பாடி-வெங்கடகிரிகோட்டா சாலையில் 14 கிலோ மீட்டர் நீளத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கல்லணை-காவேரிப்பட்டினம் சாலையில் 12 கிலோ மீட்டர் நீளத்திற்கும், கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி-தாராபுரம் சாலையில் 19 கிலோ மீட்டர் நீளத்திற்கும், திண்டுக்கல் மாவட்டத்தில் மேட்டூர்-பழங்காநூத்து-ஒட்டன்சத்திரம்-தாராபுரம்-காங்கேயம்- ஈரோடு சாலையில் 4 கிலோ மீட்டர் நீளத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம்-நயினார்கோயில்-அண்டக்குடி-இளையான்குடி-சிவகங்கை-மேலூர் சாலையில் 17 கிலோ மீட்டர் நீளத்திற்கும், அருப்புக்கோட்டை-திருச்சுழி-சாயல்குடி-கடுகுசந்தை-மணியூர்-வாலிநோக்கம் சாலையில் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர்-பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம்-தென்காசி-குற்றாலம்-செங்கோட்டை சாலையில் 9 கிலோ மீட்டர் நீளத்திற்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் பாளையங்கோட்டை-குறுக்குச்சாலை-குளத்தூர்-விளாத்திகுளம்-நாகலாபுரம்-பந்தல்குடி-அருப்புக்கோட்டை சாலையில் 16 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மற்றும் நாகர்கோயில் மாவட்டத்தில் பாலமூர் சாலையில் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



**5. சாலை வகைப்பாட்டை மாற்றியமைத்தல்** (Reclassification):
டுஞ்சாலைகளில் பெருகிவரும் போக்குவரத்தைக் கணக்கில்
ாண்டு, இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர்
லவர் கலைஞர் அரசு அறிவித்ததை நிறைவேற்றும் வகையில், அரசு
லைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆணை
ங்கப்பட்டுள்ளது. மாவட்ட இதரச் சாலைகள் (O.D.R.) 761 கிலோ
டர் நீளமும், மாவட்ட முக்கியச் சாலைகள் (M.D.R.) 1,902 கிலோ
டர் நீளமும் சேர்த்து, ஆக மொத்தம் 2,663 கிலோ
டர் நீளத்தினை, மாநில நெடுஞ்சாலையாக (S.H.)
கைப்படுத்தப்பட்டுள்ளன. 3,812 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட
ரச் சாலைகள், (O.D.R.) மாவட்ட முக்கியச் சாலைகளாக (M.D.R.)
கைப்படுத்தி, அரசாணை வெளியிட்டுள்ளது. இச்சாலைகளை
கலப்படுத்தவும், வலுப்படுத்தவும், படிப்படியாக எதிர்காலத்தில்
வடிக்கை மேற்கொள்ளப்படும்.

**6. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்:** (P.M.G.S.Y.) பிரதம மந்திரி
ாமச் சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த கிராமச்
லைகள் இணைப்புத் திட்டத்தினை முந்தைய அரசு ஊரக வளர்ச்சித்
றையிடமிருந்து மாற்றி நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கியது. அதன்படி,
த்திட்டத்தின் 4 ஆம் கட்டத்தில், 819 கிலோ மீட்டர் நீள சாலைப்
ணிகளை ரூ.117 கோடி மதிப்பில் நெடுஞ்சாலைத் துறை
ற்கொண்டுள்ளது. ஆனால், இத்திட்டத்தின்கீழ், 5 ஆம்
டத்திலிருந்து (Phase-V) மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை மீண்டும்
ரக வளர்ச்சித் துறையே தொடர்ந்து செயல்படுத்தும்வகையில்,
ண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், 17-8-2006 அன்று
தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. பாரத் நிர்மாண் திட்டம்:** 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று
ந்திய அரசால் அறிவிக்கப்பட்ட பாரத் நிர்மாண் திட்டம், ஒரு
லிமையான கிராமப்புற இந்தியாவை உருவாக்குவதற்கான
டமாகும். இத்திட்டத்தில், கிராமச் சாலைகளை மேம்படுத்துவது
ர்ளிட்ட பல்வேறு வகையான பணிகள், 2005-2006 முதல் 2008-2009
டிய நான்கு ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட இருக்கின்றன.
க்கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ், இந்தியா முழுவதும் மொத்தம் 1
லட்சத்து 94 ஆயிரத்து, 130 கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகளை
ம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில், 11 ஆயிரத்து
கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகளை இரண்டு கட்டங்களாகச்
சய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**8. நபார்டு நிதி உதவித் திட்டம்-புதிய பணிகள்:** நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ், ரூ.1 கோடி மதிப்பிற்கு மேலுள்ள கீழ்காணும் 22 பெரிய பாலங்களும், அதேபோல அறிவிப்பின் இணைப்பில்* குறிப்பிட்டுள்ளபடி, ரூ.1 கோடி மதிப்பிற்கும் குறைந்த 250 பாலங்களும் மற்றும் 1,376 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை ரூ.251 கோடி மதிப்பில் மேற்கொள்ள இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். பாலங்கள் பின்வருமாறு:

பிற்பகல் 1-25

கன்னியாகுமரி மாவட்டம், ஆண்டித்தொப்பில், ரூ.110 இலட்சம் மதிப்பில் ஒரு பாலமும், திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவியில் ரூ.750 இலட்சம் மதிப்பிலும், மற்றும் மானூரில் ரூ.147 இலட்சம் மதிப்பில் ஆக இரண்டு பாலங்களும், தூத்துக்குடி மாவட்டம், உச்சாபுரத்தில் ரூ.330 இலட்சம் மதிப்பிலும், திருவைகுண்டத்தில் ரூ.818 இலட்சம் மதிப்பில் மற்றும் திருத்தங்கலில் ரூ.190 இலட்சம் மதிப்பில் ஆக மூன்று பாலங்களும், விருதுநகர் மாவட்டம், சோழபுரத்தில் ரூ.112 இலட்சம் மதிப்பிலும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், தூவாறில் ரூ.115 இலட்சம் மதிப்பில் தலா ஒரு பாலமும், நாகப்பட்டினம் மாவட்டம், பனங்குடியில் ரூ.100 இலட்சம் மதிப்பிலும் மற்றும் ஆண்டார்காட்டில் ரூ.120 இலட்சம் மதிப்பிலும் ஆக இரண்டு பாலங்களும், திருவாரூர் மாவட்டம், காசாங்குளத்தில் ரூ.180 இலட்சம் மதிப்பிலும் மற்றும் திருச்சி மாவட்டம், கண்ணனூரில் ரூ.115 இலட்சம் மதிப்பிலும் தலா ஒரு பாலமும், ஈரோடு மாவட்டம், நத்தக்கடையூரில் ரூ.150 இலட்சம் மதிப்பிலும் மற்றும் இக்கரை தத்தப்பள்ளியில் ரூ.240 இலட்சம் மதிப்பிலும் ஆக இரண்டு பாலங்களும், நீலகிரி மாவட்டம், மசினகுடியில் ரூ.100 இலட்சம் மதிப்பில் ஒரு பாலமும், விழுப்புரம் மாவட்டம், எஸ். வள்ளிபாளையத்தில் ரூ.125 இலட்சம் மதிப்பிலும், சங்கராபுரம், தேவபாண்டலத்தில் ரூ.115 இலட்சம் மதிப்பிலும், மூரார்பாளையத்தில் ரூ.105 இலட்சம் மதிப்பிலும் மற்றும் மாமண்டூரில் ரூ.105 இலட்சம் மதிப்பிலும் ஆக நான்கு பாலங்களும், கடலூர் மாவட்டம், வடகுத்துவில் ரூ.110 இலட்சம் மதிப்பில் ஒரு பாலமும், திருவள்ளூர் மாவட்டம், கேசி. கண்டிகை வீரகநல்லூரில் ரூ.158 இலட்சம் மதிப்பிலும், டிவி. புரம் முத்துராஜா கண்டிகையில் ரூ.120 இலட்சம் மதிப்பிலும், ஆக இரண்டு பாலங்கள்.

மேலும், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிற்கு மேலுள்ள பின்வரும் 28 பெரிய பாலங்களையும் அறிவிப்பின் பின்னிணைப்பில் ** குறிப்பிட்டுள்ளபடி,

* 493 முதல் 512 ஆம் வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

** 513 முதல் 524 ஆம் வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ரூ.1 கோடி மதிப்பிற்குக் குறைந்த 109 பாலங்களைக் கட்டுவதற்கும் 1,041 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்ய இந்த அரசால் பரிந்துரை செய்யப்பட்ட கருத்துரு, ரூ.297 கோடிக்கு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. அவ்வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்படும். பாலங்கள் பின்வருமாறு:

திருவண்ணாமலை மாவட்டம், கொளமங்களத்தில் ரூ.275 இலட்சம் மதிப்பிலும், காழியூரில் ரூ.540 இலட்சம் மதிப்பிலும், அத்திமலைப்பட்டில் ரூ.250 இலட்சம் மதிப்பிலும், காமக்கூரில் ரூ.275 இலட்சம் மதிப்பிலும் ஆக நான்கு பாலங்களும், விழுப்புரம் மாவட்டம், சேஷசனூரில் ரூ.150 இலட்சம் மதிப்பிலும், கொங்கம்பட்டில் ரூ.200 இலட்சம் மதிப்பிலும் மற்றும் கொண்டசமுத்திரத்தில் ரூ.250 இலட்சம் மதிப்பிலும் ஆக மூன்று பாலங்களும், கடலூர் மாவட்டம, விசூரில் ரூ.120 இலட்சம் மதிப்பிலும் மற்றும் குறிஞ்சிப்பாடியில் ரூ.126 இலட்சம் மதிப்பிலும், பெரம்பலூர் மாவட்டம், வி. களத்தூரில் ரூ.235 இலட்சம் மதிப்பிலும், கூத்தூரில் ரூ.100 இலட்சம் மதிப்பிலும், கூடலூரில் ரூ.165 இலட்சம் மதிப்பிலும் ஆக மூன்று பாலங்களும், அரியலூர் மாவட்டம், பொய்யூரில் ரூ.240 இலட்சம் மதிப்பில் ஒரு பாலமும், திருச்சி மாவட்டம், கூத்தூர் மற்றும் கிள்ளிக்கூட்டில் ரூ.400 இலட்சம் மதிப்பிலும், புதுக்கோட்டை மாவட்டம், வேப்பம்பட்டில் ரூ.100 இலட்சம் மதிப்பிலும் தலா ஒரு பாலமும், கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையில் ரூ.142 இலட்சம் மதிப்பில் ஒரு பாலமும், ஈரோடு மாவட்டம், கரையூரில் ரூ.140 இலட்சம் மதிப்பிலும், அணைப்பாளையத்தில் ரூ.117 இலட்சம் மதிப்பிலும், ஆக இரண்டு பாலங்களும், திண்டுக்கல் மாவட்டம், கண்ணாபட்டியில் ரூ.300 இலட்சம் மதிப்பிலும் மற்றும் சிவகங்கை மாவட்டம் சருகுனியில் ரூ.100 இலட்சம் மதிப்பிலும், ஆக இரண்டு பாலங்களும், தூத்துக்குடி மாவட்டம், பிள்ளையார் நத்தத்தில் ரூ.900 இலட்சம் மதிப்பிலும், மற்றும் விருதுநகர் மாவட்டம், மங்களத்தில் ரூ.170 இலட்சம் மதிப்பில் தலா ஒரு பாலமும், சேலம் மாவட்டம், கெங்கவல்லியில் ரூ.140 இலட்சம் மதிப்பிலும், பெத்தநாயக்கன்பாளையத்தில் ரூ.103 இலட்சம் மதிப்பிலும் மற்றும் வாழப்பாடியில் ரூ.101 இலட்சம் மதிப்பிலும் ஆக மூன்று பாலங்களும், நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறில் ரூ.188 இலட்சம் மதிப்பில் ஒரு பாலமும், தருமபுரி மாவட்டம், அத்திமுட்டலூரில் ரூ.200 இலட்சம் மதிப்பிலும், மற்றும் கடலூர் மாவட்டம், முட்டத்தில் ரூ.3,200 இலட்சம் மதிப்பில் தலா ஒரு பாலமும் இதில் அடங்கும்.

மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான், 1972 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறையில் தனித் தலைமைப் பொறியாளரின்கீழ், கிராம சாலைகளுக்கென தனிப் பிரிவு புதிதாக தொடங்கப்பெற்றது. அதன்மூலம் கிராமச் சாலைகளுக்கென புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, கிராமங்களிலுள்ள சாலைகளைத் தார் சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996 முதல் 2001 வரை ஆட்சியிலிருந்தபோது, நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 5,521 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேம்படுத்தப்பட்டன. இச்சாலைகளைப் பராமரிப்பதற்காக இந்த ஆண்டு சிறப்பு நிதியாக அரசு ரூ.200 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தவிர, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளிலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஊரக வளர்ச்சித் துறைக்குத் தனியே ரூ.103 கோடி நிதியையும் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: 9. வைப்பு நிதி பணிகள் (Deposit works).** நாமக்கல் மாவட்டம், சோழசிராமணியையும், ஈரோடு மாவட்டம், பாசூரையும் இணைக்கும்வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே நான்கு மீட்டர் அகலம் கொண்ட தடுப்பு அணையை தமிழ்நாடு மின் வாரியம் கட்டி வருகிறது. இந்தப் பாலத்தை இரு வழிப்பாதையாக மாற்றும்வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி நெடுஞ்சாலைத் துறையானது, மின் வாரியத்திற்கு ரூ. 6 கோடி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**10. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுனாமி நிவாரணப் பணிகள்.** 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு ஏரியின் குறுக்கே ஒரு உயர்மட்ட பாலமும், கடலூர் மாவட்டத்தில் பரவனாறு மற்றும்



பாலாற்றின் குறுக்கே இரண்டு பாலங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொடியபாளையம் அருகில் உப்பனாறு மற்றும் அரிச்சந்திரா ஆற்றின் குறுக்கே இரண்டு பாலங்களும் கட்டுவதற்கு மொத்தம் ரூ.43 கோடி மதிப்பில் அனுமதி வழங்கப்பட்டு, வரைபடங்கள் மற்றும் திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி தனியார் ஆலோசனை நிறுவனங்கள்மூலம் நடைபெற்று வருகிறது. இப்பாலப் பணிகளைத் துவங்கும் முன் இத்திட்டத்தால் இடம் பெயர நேரிடுவோருக்கு மறுவாழ்வுப் பணிகளை முடிக்க வேண்டியுள்ளது. அப்பணிகளை துரிதப்படுத்துவதுடன் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று பாலப் பணிகளை துவங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**11. உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி நிவாரணப் பணிகள்.** உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமியால் சேதடைந்த பாலத்தை திரும்பக் கட்டும் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழமணக்குடி – மேலமணக்குடி கிராமங்களை இணைக்கும் உயர்மட்டப் பாலத்தை ரூ. 9 கோடி மதிப்பீட்டில் திரும்பக் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் ஆலோசனை நிறுவனம்மூலம் ஒப்படைத்து, அவ்வறிக்கை பெற்றபின், பாலப் பணிகளை மேற்கொள்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள்.** 1970 ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவிற்கும் தனியாக தலைமைப் பொறியாளரை நியமித்தப் பெருமையும் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களையே சாரும். தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் படிப்படியாக அதிகரித்து தற்போது, 4,254 கி.மீ. நீளமாக உள்ளது. பெரும்பாலான மாவட்டத் தலைநகரங்களும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைப்பு பெற்றுள்ளன. மேலும், மத்திய அரசு நடப்பாண்டில் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் முதல் மானாமதுரை வரை உள்ள 126 கி.மீ. நீள சாலையை தேசிய நெடுஞ்சாலையாக நிலை உயர்த்தி தேசிய நெடுஞ்சாலை எண் 226 என அறிவித்துள்ளது. இச்சாலை, தஞ்சாவூர், கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, திருமயம், கீழச்சேவல்பட்டி, திருப்பத்தூர், மதகுப்பட்டி, சிவகங்கை ஆகிய பகுதிகளை இணைக்கும்.

மேலும், திருச்சி முதல் சிதம்பரம் வரை உள்ள 144 கி.மீ. நீள சாலையும் (தேசிய நெடுஞ்சாலை எண் 227) தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சாலை, திருச்சி, லால்குடி, கல்லக்குடி, கீழப்பாலூர், உடையார்பாளையம், ஜெயங்கொண்டம், கங்கைகொண்டசோழபுரம், காட்டுமன்னார்கோவில், குமராட்சி மற்றும் சிதம்பரம் ஆகிய பகுதிகளை இணைக்கும். நடப்பு

நிதியாண்டிலிருந்து மைய அரசிடமிருந்து நிதி உதவி பெற்று இவ்விரண்டு சாலைகளையும், தரம் உயர்த்தவும், நன்கு பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலம் முதல் ஆத்தூர் வரையும், நாகப்பட்டினம் முதல் தஞ்சாவூர் வரையும், கோயம்புத்தூர் முதல் உதகமண்டலம் வழியாக கூடலூர் வரையும் உள்ள வழித் தடங்களை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 67–ல் 12 கி.மீ. நீள சாலை, தேசிய நெடுஞ்சாலை பகுதியிலிருந்து விடுபட்டுள்ளது. இதனை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**13. தேசிய நெடுஞ்சாலைகளில் பாலங்கள்.** (அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி சட்டமன்றத் தொகுதியில் (தேசிய நெடுஞ்சாலை எண் 210) திருச்சி – காரைக்குடி – இராமநாதபுரம் சாலையில், கோட்டக்கரை ஆற்றில் 25–11–2005 அன்று ஏற்பட்ட மழை வெள்ளத்தில் பேருந்து அடித்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்த இடத்தில் தரைப்பாலத்திற்கு (Causeway) பதிலாக உயர்மட்ட பாலம் கட்ட முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த இடத்தில் ரூ.10.89 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்ட மைய அரசு அனுமதி அளித்துள்ளது. அதற்கான பணிகள் விரைவில் துவங்கப்படும்.

(ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் ஆலம்பட்டி கிராமம் அருகே, கவுண்டா ஆற்றின் குறுக்கே (தேசிய நெடுஞ்சாலை எண் 208) தென்காசி – திருவில்லிபுத்தூர் – திருமங்கலம் சாலையில் தரைப்பாலத்திற்கு (Causeway) பதிலாக மைய அரசு நிதி உதவியுடன் உயர்மட்டப் பாலம் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தேசிய நெடுஞ்சாலையிலுள்ள 15 வலுவிழந்த பாலங்களை ரூ.12 கோடி மதிப்பில் மைய அரசின் நிதியுதவி பெற்று திரும்பக் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைதவிர, (தேசிய நெடுஞ்சாலை எண் 209) திண்டுக்கல் – பொள்ளாச்சி – கோயம்புத்தூர் – சத்தியமங்கலம் – பெங்களூர் சாலையிலுள்ள ஈச்சனாரியில் இரயில்வே மேம்பாலம் (ROB) அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மத்திய



அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிவுற்றபின், சாத்தியக்கூறுகள் அடிப்படையில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**14. புறவழிச்சாலைகள் அமைத்தல்:** தேசிய நெடுஞ்சாலையில் நெரிசல் மிகுந்த பகுதிகள் மற்றும் நகரங்களில் புறவழிச்சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ) பாண்டிச்சேரி நகருக்குப் புறவழிச்சாலை அமைப்பதற்காக, தமிழ்நாட்டு எல்லைக்குள் உள்ள இரண்டு கி.மீ. நீளச் சாலைப் பகுதியில் விடுபட்ட இணைப்புச் சாலை (Missing link) அமைப்பதற்குத் தேவையான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும், மைய அரசின் நிதியுதவியுடன் புறவழிச்சாலை இணைப்பினை அமைப்பதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மேலும், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியிலும், தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி மற்றும் போடிநாயக்கனூரிலும், விருதுநகர் மாவட்டத்தில் சேத்தூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சொக்கம்பட்டியிலும், கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையிலும், புறவழிச்சாலை அமைக்க நில எடுப்புப் பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதற்கு தேவையான தக்க நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) இதுதவிர, திருச்சி–மதுரை சாலை தேசிய நெடுஞ்சாலை எண் 45–பி மற்றும் பெங்களூர் – சேலம் – மதுரை சாலை (தேசிய நெடுஞ்சாலை எண் 7) ஆகியவற்றை இணைக்க மதுரை அருகே புறவழிச்சாலை அமைப்பதற்கும், திண்டுக்கல் – கோயம்புத்தூர் – பொள்ளாச்சி பெங்களூர் சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 209) அருகே புறவழிச் சாலை அமைப்பதற்கும், சாத்தியக்கூறுகளை ஆராய நடப்பாண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிவுற்றபின் புறவழிச் சாலைகளுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மைய அரசின் நிதியுதவி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 1–35

**15. இரயில்வே மேம்பாலப் பணிகள்:** (குறுக்கீடு) காலத்தின் அருமை கருதி, சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவிப்புகளில் விடுபட்ட பகுதிகளை *** நான் இந்த மாமன்றத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

*** 525–530 ஆம் பக்கங்களில் இணைப்பு–IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே இன்று காலை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒரு சில திட்டங்களை மட்டும் படித்து, என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

தஞ்சாவூர்–பெரம்பலூர் மாவட்டங்களுக்கிடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்தநல்லூர், மதனத்தூர் பகுதிகளை இணைக்கும் வகையில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்காக நில எடுப்புப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்பணி முடிந்தபின் பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, பட்டுக்கோட்டை புறவழிச்சாலை அமைப்பதற்கான நில எடுப்புப் பணிகளுக்கு நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கப்படும்.

நாமக்கல்–கரூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் மோகனூர், வாங்கல் பகுதிகளுக்கு இடையேயும், (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம்–சிவகங்கை மாவட்டங்களை இணைக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) பரமக்குடி வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியினையும் நபார்டு நிதி உதவி பெற்று மேற்கொள்வதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது. ஆய்வு முடிந்தபின் பணிகளைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் முருகன்குடி, கிளிமங்கலம் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது பற்றியும் ஆய்வுகள் மேற்கொண்டு, அதற்குப் பிறகு பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு நகருக்கு அரசு நிதியில் புறவழிச்சாலை அமைக்க இந்த ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஈரோடு சுற்றுச்சாலைத் திட்டம். ஈரோடு மற்றும் பள்ளிப்பாளையம் நகரங்களைக் கடந்து செல்லும் வாகனங்களால் அந்நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சுற்றுச்சாலை அமைக்க வேண்டுமென பொதுமக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர். மேலும், லக்காபுரம் மற்றும் கொக்கரையன்பேட்டையை இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான கோரிக்கையும் நீண்டநாளாக நிலுவையில் உள்ளது. இதனை மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பரிசீலித்து,



முதற்கட்டமாக இதற்கு நில எடுப்புப் பணிக்காக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, இதுபோன்ற பணிகள் விரைவில் இந்த அரசு மூலம் துவங்கப்பட இருக்கின்றன.

நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் ஏறத்தாழ 380 வெட்டுத் தீர்மானங்கள் மாமன்ற உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. அதேநேரத்திலே, இன்றைக்கு விவாதத்திலே கலந்துகொண்ட மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காகவும், மேன்மைக்காகவும் வழங்கியுள்ளார்கள். அதேநேரத்திலே, தொகுதிக்காகவும் பல கோரிக்கைகளைத் தந்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் தொடக்கத்திலிருந்து பல்வேறு மானியக் கோரிக்கைகளின்மீதும், நிதிநிலை அறிக்கையின்மீதும், மேதகு ஆளுநர் உரையின்மீதும் பேசும்போதுகூட மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். துறைக்கு, எழுத்துபூர்வமாகவும் எனக்குக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அவற்றை எல்லாம் பரிசீலித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கும். அதேநேரத்திலே, தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை, வெட்டும் இல்லாமல், தட்டும் இல்லாமல், திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேரன்மகாதேவி தொகுதியிலே 1996–2001 ஆம் ஆண்டுகளிலே நமது கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது இரண்டு பெரிய பாலங்களைத் தந்தார்கள். அதேபோன்று இன்றைக்கும் சேரன்மகாதேவி தொகுதியினுடைய முக்கியப் பகுதியிலே 7.5 கோடி ரூபாயிலே சேரன்மகாதேவி ஆற்றுப் பாலத்தைத் தந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைக்கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

• **திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திலேயிருக்கும் பாசூருக்கும், நாமக்கல் மாவட்டத்தை இணைக்கிற சோழசிராமணிக்கும் இடையே கதவணைமீது உள்ள பாலத்தை 7 மீட்டர் அளவிலே அகலப்படுத்த, 6 கோடி ரூபாய்க்கு அதை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்வதோடு, ஈரோட்டிற்கு புறவழிச்சாலைக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய குருகுலத்திற்குச் செய்த பெருமையாக இதை நினைத்து நாங்கள் வணங்குகிறோம். நன்றியைக் கூறுகிறோம். வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், மானியக் கோரிக்கையிலே பேசுகிறீர்களா? நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார், சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, திரு. செல்வம், சொல்லுங்கள்.

• **திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், கடலூர் மாவட்டத்தில் இரண்டு தனித் தொகுதிகளாக இருக்கின்ற காட்டுமன்னார்குடிக்கும், மங்களூருக்கும் பாலங்கள் அமைக்க அனுமதி அளித்திருக்கிறார். பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நான் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன். (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார். கூப்பிடுகிறேன், உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலமாகப் பல்வேறு முறை கோரிக்கை வைத்தும் கிடைக்காத என்னுடைய தொகுதி வடக்குத்துவில் ரூ.1.10 கோடியிலும், என்னுடைய தொகுதியில் விசூரில் ரூ.1.20 கோடியிலும், பண்ருட்டியில் இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று இந்த ஆண்டுதான் கோரிக்கை வைத்தேன். ஆக, இந்த மூன்று பணிகளையும் இந்த ஆண்டு தொடங்குவதற்கு நிதியும் ஒதுக்கி, அதற்கான பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், தமிழகத்தின் முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய கோரிக்கைகளை குறுகிய நாளிலே கேட்டு,



பல ஆண்டுகாலம் நிறைவேற்றப்படாத என் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்தமைக்காக, என் மாவட்ட மக்களின் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தமிழக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை துறைமுகத்தைப் பொறுத்தவரையில், ஒரு இலட்சத்து 25 ஆயிரம் TEUs அதாவது பெட்டிகள், container பெட்டிகள் ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்றப்பட்ட நிலையில், இப்பொழுது அதனுடைய கொள்ளளவு கிட்டத்தட்ட ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பெட்டிகள், சென்னை துறைமுகத்திலே கையாளப்படுகிறது. எனவே, பெட்டிகள் அதிகமாகக் கையாளும்பொழுது போக்குவரத்திற்கேற்ப அதை விரிவுபடுத்த வேண்டுமென்கின்ற அடிப்படையில் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே 160 கோடி ரூபாய்க்கு எண்ணூர் Zero Gate–லிருந்து எண்ணூர் Express Road உருவாக்கப்பட்டது. அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எனவே, இராயபுரம் தொகுதியிலுள்ள containers அந்த வழியாக வருகின்ற காரணத்தினால், அதிகமாக குழந்தைகள், மாணவர்கள், பொதுமக்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையில், அந்தப் பணிகள் அன்றைக்கு விரைவாக நடைபெற்று வந்தன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வது, அந்தப் பணியையும், பொது மக்கள் நலன் கருதி, குறிப்பாக, பள்ளி செல்கின்ற மாணவ, மாணவியர்கள் பயன் கருதி, உடனடியாக, துரிதமாக, வேகமாக விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, இந்த அமைச்சருக்கு அறிவுரையாக வழங்கி, container services–ஐயே, எண்ணூருக்கு அந்தப் பக்கம் கொண்டுபோவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 21- நெடுஞ்சாலைகள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21- நெடுஞ்சாலைகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம. சுப்புராம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. ராஜசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. சுப்ரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.



**திருமதி எஸ். தேன்மொழி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. குமரகுரு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. *1,138,02,09,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. *2,445,52,63,000/–* ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2006), திருவாளர்கள் நா. இராமகிருஷ்ணன், சி. சண்முகவேலு மற்றும் பி.கே. சேகர்பாபு ஆகியோரில் ஒருவர்,*

*"14–7–2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது"*

*என்னும் தீர்மானத்தை முன்மொழிவார். திரு. பி.கே. சேகர்பாபு.*

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "14–7–2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதை யாராவது வழிமொழிகிறார்களா?*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் கொடுத்த தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 12–8–2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் நா. இராமகிருஷ்ணன், சி. சண்முகவேலு, பி.கே. சேகர்பாபு ஆகியோரின் தீர்மானங்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இத்தீர்மானங்களின்மீது பேச விரும்புவோர் மிகச் சுருக்கமாகப் பேச வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவசர திருத்தச் சட்டத்தில் ஐந்து பகுதிகளைக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். முதலாவதாக வருகின்ற பகுதி, அறங்காவலர் நியமனமானது கடந்த ஆட்சிக் காலத்தில் மூன்று ஆண்டுகளாக இருந்ததை ஓராண்டாகக் குறைத்திருப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள்.

*பிற்பகல் 1–45*

கடந்த *1* ஆம் தேதியன்று, இதே சட்டமன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, மேயர் பதவி என்பது ஓராண்டு காலம் இருந்தது, அந்த ஓராண்டு காலம் என்பது, *6* மாத காலம் வாழ்த்து சொல்வதற்கும், *6* மாத காலம் பிரிவு உபச்சாரத்திற்குமே சரியாகப் போய் விடுகிறது என்கிறபடியால், அதை *5* ஆண்டு காலமாக்கி, நிர்வாகத்திலே தீட்டப்படுகின்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தோம் என்று கூறினார். அப்படியென்றால், மேயர் பதவிக்கு இருக்கின்ற சட்டத் திருத்தம் இந்த அறங்காவலர் குழுக்களுக்கு, அறங்காவலர் குழுவினராக நியமிக்கப்படுகின்றவர்களுக்கு ஏன் பொருந்தக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

மேலும், இந்த அவசரச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதன் நோக்கம் என்னவாக இருக்கும் என்று என்னைப் போன்றவர்கள் கருதுகிறோம் என்றால்—இந்தக் கோயில்களுக்கு அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் முழுவதுமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. உதாரணத்திற்கு திருச்செந்தூர் கோயிலை எடுத்துக்கொண்டால், சிவந்தி ஆதித்தன் அவர்களை நியமித்திருக்கின்றார்கள். புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயிலை எடுத்துக்கொண்டால் அபிராமி ராமநாதனை நியமித்திருக்கின்றார்கள். மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலை எடுத்துக்கொண்டால், அப்போலோ ஹாஸ்பிட்டல் விஜயபாஸ்கர் ரெட்டியை நியமித்திருக்கின்றார்கள். இதுபோன்ற

தொழில் அதிபர்களையும், ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவர்களையும்தான் கடந்த காலங்களில் கட்சிபேதமின்றி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவேளை அப்படி நியமிக்கப்பட்டவர்களின் பதவிக் காலம், உங்கள் ஆட்சியிலும் தொடர்ந்து வருகின்றது. அவர்கள் செய்கின்ற நல்ல பணிகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சென்றடைந்துவிடுமோ என்ற காரணத்தினால்தான் இந்த அவசர திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, இந்த அவசர திருத்தச் சட்டத்தை எப்போதும்போல், மூன்றாண்டுகாலம் தொடர்ந்து நடைமுறைப்படுத்த நீங்கள் முன் வரவேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாக அவைத் தலைவரிடம் நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே இருக்கின்ற அறங்காவலர் குழுவினரை இனிமேல் அதிகாரிகளே நியமிப்பார்கள், மாவட்ட அளவிலே இருந்த அறங்காவலர் குழுவினை கலைத்துவிட்டு, இனி கோயில்களுக்கு நியமிக்கப்படுகின்ற அறங்காவலர்களை அதிகாரிகளே நியமிப்பார்கள் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். அப்படியென்றால், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு Search Committee-யிடம் கொடுத்திருக்கின்றீர்கள். அவர்கள் பரிந்துரைத்து அனுப்புபவர்களைத்தான் கவர்னர் நியமிக்கின்றார். இதிலே மாவட்ட அறங்காவலர் குழுவிற்கு ஒரு சட்டத்தையும், பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவிக்கு ஒரு சட்டத்தையும் ஏன் முரண்பாடான நோக்கை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதிலே என்னுடைய கருத்து என்னவென்றால், ஒருவேளை ஆட்சியிலே இருப்பவர்கள் முதலமைச்சர் போன்ற பதவிகளை இரத்து செய்துவிட்டு, கவர்னரிடமே ஒட்டுமொத்தமான அதிகாரத்தையும் வழங்குவதுபோல் இருக்கிறது இந்தச் சட்டம் என்று நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மேலும், அறங்காவலர் குழுவிலே ஒரு பெண் உறுப்பினரை நியமிக்க வேண்டுமென்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். இது கடந்த காலத்திலேகூட—இதற்கு மேலும் ஒன்று சொல்ல வேண்டுமென்றால், முதன்முதலில் திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்களாக பெண்களை நியமித்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெண் உறுப்பினரை, கடந்த காலங்களிலேகூட 5 உறுப்பினர்களைக் கொண்ட



கோயில் அறங்காவலர் குழுவிலே ஒரு பெண் உறுப்பினரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமித்திருந்தார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இரண்டு பெண் உறுப்பினர்களை நியமிக்க வேண்டுமென்று ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் உண்மையிலே நாங்களும் பாராட்டி இருப்போம். இது ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலேயே கொண்டு வரப்பட்ட நடைமுறை என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அடுத்து, 70 வயது வரையில் அறங்காவலர் பதவியில் இருக்கலாம் என்று ஒரு வயது நிர்ணயத்தை கடந்த காலங்களிலே வைத்திருந்தார்கள். இப்போது நீங்கள் அந்த வயது வரம்பைத் தளர்த்தி, எப்படி முதலமைச்சராக இருப்பவருக்கு வயது எண்ணிக்கை பார்ப்பதில்லையோ, கவர்னராக இருப்பவருக்கு எப்படி வயது எண்ணிக்கை இல்லையோ, அதேபோல் இதிலும் வயது வரம்பைத் தளர்த்தியிருக்கின்றீர்கள். நான் உங்களுக்கு வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால், இதேபோன்று அரசு அலுவலர்கள் ஓய்வு பெறுகின்ற காலங்களையும், வயது வரம்பைத் தளர்த்த இந்த அரசு முன்வருமா என்பதை நான் உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) இது உங்களுக்குக் கேட்பதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கும், திடகாத்திரமாக இருந்து வேலை செய்கின்றவர்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். (குறுக்கீடுகள்) கத்தக்கூடாது, கத்தக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்திலே உரையை முடித்துவிடுகிறேன். என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறார்கள் என்று தெரியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிப்பதற்கு நீங்கள் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிலைப்பாடும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைப்பாடும், தகுதி வாய்ந்தவர்கள் யாராக இருந்தாலும் திருக்கோயிலில் அர்ச்சகர்களாகப் பணியாற்றலாம் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு தடையாணை இருக்கின்றபோது, இவ்வளவு அவசரமாக இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதினுடைய நோக்கம் என்ன? அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணையில் கூறப்பட்டிருப்பதைப் பற்றி, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் விளக்கமாக தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தப் பேரவை நிராகரிக்க வேண்டுமென்ற என் வேண்டுகோளை வைத்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள். சும்மா உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், மூன்றாண்டு காலமாக இருப்பதை, ஓராண்டுக் காலமாகக் குறைத்துவிட்டீர்களே, அதில் அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்களெல்லாம் இருக்கிறார்கள் என்று அப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நாங்கள் அப்படியெல்லாம் செய்யவில்லை. விஜயபாஸ்கர் ரெட்டியைப் போட்டிருக்கிறோம் என்றெல்லாம் பட்டியல் கொடுத்தார்கள். அது அ.தி.மு.க. காலத்திலே மட்டுமல்ல, தி.மு.க. காலத்திலேயும் விஜயபாஸ்கர் ரெட்டி போன்றவர்களைத்தான், தி.மு.க. அல்லாத மற்றவர்களைத்தான், தி.மு.க. ஆட்சியிலும் அறங்காவலர்களாக நியமித்தோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் தெரிவித்த மற்ற கருத்துகளுக்கு, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான தீய நோக்கத்துடனும் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவில்லை. இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதற்கான நோக்கத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்வார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சேகர்பாபு, நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே? மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுவதற்கான பெயர் பட்டியலைத் தேர்வு செய்வது மாவட்ட அளவிலான ஒரு குழு. ஆனால், அந்த மாவட்டக் குழுக்கள்,



எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டனவோ, அந்த நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றவில்லை. குறிப்பாக, இந்த மாவட்டக் குழுக்களில் முற்றிலும் அரசியல் சார்புள்ளவர்கள்தான் தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்ததால், இவற்றின் செயல்பாடு நிர்வாக ரீதியாக திருப்தியாக இல்லை. பல மாவட்டங்களில் இன்னும் பல திருக்கோயில்களுக்கு அறங்காவலர் பெயர்ப் பட்டியலே பரிந்துரைக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இன்னும் 14,301 திருக்கோயில்களுக்கு அந்த மாவட்டக் குழுவினரால் அறங்காவலர்களை நியமனம் செய்வதற்கான பெயர்ப் பட்டியல் வரவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த மாவட்டக் குழுக்களை கலைப்பது உசிதமானது என்றுதான் அரசு முடிவு செய்து, அதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, வயது முதிர்வு என்பது, ஆன்மீக வளர்ச்சி, கொடைத் தன்மை, சேவை மனப்பான்மை ஆகிய நற்பண்புகளின் வளர்ச்சியைக் காட்டும். இந்தக் காலகட்டத்தில் சராசரி வாழ்நாள் அதிகரித்துள்ள நிலையில், திருக்கோயிலில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட அதிகபட்ச வயது வரம்பு தேவையில்லை என அரசு கருதி, அதற்கேற்ப, இந்த உச்ச வரம்பை சட்டப் பகுதியிலிருந்து நீக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஏற்கெனவே திருக்கோயில்களில் அறங்காவலர்களை நியமிக்கும்போது ஒருவர் பெண்பாலராக இருந்தார் என்று சொல்லியிருக்கிறார். ஒருசில இடங்களில் இருக்கலாம். சில இடங்களில் இல்லாமல் இருக்கலாம். ஆனால், இப்பொழுது இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவருவதன் மூலமாக, இதை இன்றைய காலகட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் போன்று பெண்களுக்கு இடஒதுக்கீடு சட்டபூர்வமாக்கப்பட்ட நிலையிலும், திருக்கோயில்களின் செயல்பாடுகளில் பெண்கள் மிகுந்த அளவில் ஆர்வம் கொண்டுள்ளதாலும், திருக்கோயில் நிருவாகத்தில் பெண்களை சட்டரீதியாக பங்கேற்கச் செய்வதற்கு அரசு முடிவு செய்து, அதற்கேற்ப இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர் திரு. சேகர்பாபு பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். பெண்களுக்கென்று பிரதிநிதித்துவம் இருந்தது என்று குறிப்பிட்டார்.

பிரதிநிதித்துவம் இருந்திருக்கலாம். ஆனால், அதற்கு உண்மையான சட்டவடிவம் இல்லை. இப்பொழுது கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தில்தான், பெண் பிரதிநிதிகள் அதிலே அமர்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 3 முதல் 5 நபர்களை அதிலே நியமிக்கலாம் என்று இருந்தாலும்கூட, மூன்று அறங்காவலர்கள் என்று போட்டாலும்கூட, அதிலே ஒருவர் கண்டிப்பாக பெண்ணாக இருப்பதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது.

பிற்பகல் 1–55

அடுத்தபடியாக, மேலே குறிப்பிட்ட 70 வயதுக்கு மேற்பட்ட ஆன்றோரையும், சான்றோரையும் மற்றும் பெண் பாலரையும் திருக்கோயில் நிர்வாகத்தில் அதிக அளவில் பங்கேற்கச் செய்வது அவசியமாகிறது. முக்கியமான திருக்கோயில்கள் பலவற்றில் ஏற்கெனவே அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், வயது முதிர்ந்த ஆன்றோருக்கும், சான்றோர்களுக்கும் அக்கோயில்களின் நிர்வாகத்தில் பங்கு பெற வாய்ப்பளிக்க வேண்டும் என்றால், அந்தத் திருக்கோயில் அறங்காவலர் குழுக்களின் பதவிக் காலத்தைக் குறைத்து மாற்றியமைத்தால்தான் முடியும். ஆகவே, சட்டத் திருத்தத்தின்மூலம் அறங்காவலர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைத்திட அரசு முடிவு செய்துள்ளது.

அறங்காவலர் குழுக்கள் நியமிக்கப்படாத திருக்கோயில்களில் ஆன்றோரையும், சான்றோரையும் சட்டத் திருத்தத்தின்படி நியமித்து, ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள அறங்காவலர்களின் 3 ஆண்டு பதவிக் காலம் முடியும்வரை நீடிக்க விடக் கூடாதா என்றுகூட இங்கே குறிப்பிட்டார்கள். அதில் எந்த ஒரு நியாயமும் இல்லை. திருக்கோயிலின் வளர்ச்சிக்காக அரசு ஒரு நல்ல முடிவை எடுத்த பிறகு, அதைச் செயல்படுத்துவதை ஆண்டுக் கணக்கில் தள்ளிப்போட முடியாது. இவ்வாறு மூன்று ஆண்டுகள் பதவிக் காலத்தை ஓராண்டாகக் குறைத்ததில் உள்நோக்கம் எதுவும் இல்லை. ஆந்திர மாநிலத்தில்கூட இவ்வாறு அறங்காவலரின் பதவிக் காலம் குறைக்கப்பட்டிருக்கிறது. சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டப் பிரிவு 49 என்பது பட்டியலில் சேராத சிறிய கோயில்களைப் பற்றியதாகும். இந்தச் சட்டத் திருத்தத்திற்கு முன்பு இத்தகையத் திருக்கோயில்களின் அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் பங்கு பெறுவது பற்றித் தெளிவாகக்





குறிப்பிடப்படவில்லை. எனவே, இதனைத் தெளிவுபடுத்தும்வகையிலும், பெண்களுக்கு சட்ட ரீதியான பங்களிப்புத் தரும் வகையிலும், இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மூன்றில் ஒருவர் ஆதிதிராவிடராகவும், மற்றொருவர் பெண்ணாகவும் இருக்க இச்சட்டத் திருத்தம் வழிவகை செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தவகையில் இந்தச் சட்டத் திருத்தம், பெண்கள், கோயில் நிர்வாகத்தில் சட்ட ரீதியாகப் பங்கு பெறுவதை உறுதி செய்கிறது. 70 வயதிற்கு மேற்பட்ட, ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்ட ஆன்றோர்களும், சான்றோர்களும் திருக்கோயில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட வழிவகை செய்கிறது. சிறிய கோயில்களில் 3 அறங்காவலர்கள் மட்டுமே இருந்தாலும்கூட, அவர்களுள் ஒருவர் பெண்ணாகவும், ஒருவர் ஆதிதிராவிடராகவோ, அல்லது பழங்குடியினராகவோ இருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்படுகிறது. சமுதாய முற்போக்குச் சிந்தனையுடன், திருக்கோயில்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட இந்தச் சட்டத் திருத்த முன்வடிவை சட்டமாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "14–7–2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் திரு. பி.கே. சேகர்பாபு முன்மொழிந்த தீர்மானம் இப்பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். தீர்மானம் தோல்வியுற்றது.

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள், 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள், 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 8, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழிவார். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள இந்துத் திருக்கோயில்களில் அனைத்துச் சாதியினரையும், சாதி வேறுபாடின்றி அர்ச்சகராக நியமிக்க வழிகோல வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும்வண்ணம் 2002 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இது தொடர்பாக வழங்கியுள்ள தீர்ப்பையும், அரசு தலைமை வழக்கறிஞரின் கருத்துரையையும் விரிவாகப் பரிசீலனை செய்து, இந்துக்களில் உரிய பயிற்சியும் தகுதிகளும் உள்ள அனைத்து சாதியினரும் தமிழ்நாட்டிலே உள்ள இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று அரசு முடிவு செய்து, 23–5–2006 அன்று அதற்கான ஆணையை வெளியிட்டது.

இந்த அரசாணையை சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக பயிற்சிக்கானப் பாடத் திட்டம், பயிற்சியாளர்களுக்கான அடிப்படைக் கல்வித் தகுதி, வயது, பயிற்சி காலவரையறை, எத்தனை இடங்களில் பயிற்சி நிலையங்களை அமைப்பது போன்ற அம்சங்களின்மீது கொள்கை ரீதியாக முடிவு எடுப்பதற்காக சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி, திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில்



உயர்நிலைக் குழு ஒன்று 10–6–2006 அன்று அமைக்கப்பெற்று. இந்தக் குழு செயல்படத் தொடங்கிய நாளிலேயிருந்து இரண்டு மாத காலத்திற்குள் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–00

23–5–2006 அன்று வெளியிடப்பட்ட அரசாணை 12–6–2006 அன்று தமிழ்நாடு அரசிதழிலும் பிரத்தியேகமாக அறிவிக்கை செய்யப்பட்டது. அனைத்து சாதியினரும் திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக அமர்த்தப்படுவதற்கு வழக்கமோ அல்லது வழக்காறோ, custom or usage இடையூறாக இருந்திடக் கூடாது என்ற கருத்தில், 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 55–வது பிரிவைத் தக்கவாறு திருத்துவது என்று முடிவு செய்யப்பட்டு அவசரச் சட்டம் ஒன்று 16–7–2006 அன்று வெளியிடப்பட்டது.

இந்த அவசரச் சட்டத்தை சட்டமாக்குகின்ற வகையில் 12–8–2006 அன்று சட்டமுன்வடிவு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. சட்டமன்றத்திலுள்ள பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுன்வடிவை ஏற்றுக்கொண்டன.

இதற்கிடையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கு ஏதுவாக அவசரச் சட்டத்தின் ஒரு பிரிவினை மட்டும் எதிர்த்து ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச் சங்கமும், தென்னிந்திய திருக்கோயில் அர்ச்சகர்கள் பரிபாலன சபையும் உயர் நீதிமன்றத்தில் உரிய முறையிலே முறையீடு செய்யாமல், நேரடியாக உச்ச நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடுத்தார்கள். 14–8–2006 அன்று உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசின் அவசரச் சட்டப் பிரிவு 8, அதாவது அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கு வழக்கமோ அல்லது வழக்காறோ இடையூறாக இருக்கக் கூடாது என்ற இந்தப் பிரிவுக்கு மட்டும் இடைக்காலத் தடை விதித்தும், பதில் மனு தாக்கல் செய்வதற்கு ஆறு வார கால அவகாசம் கொடுத்தும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்து சமய திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டபோதும், உச்ச நீதிமன்றம் வரை வழக்குத் தொடுத்து தமிழில் பக்தர்கள் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று விரும்பும்போது மட்டும் தமிழிலே அர்ச்சனை செய்வதற்கான வசதியைச் செய்துத் தரலாம் என்று 1992 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

*1971* ஆம் ஆண்டு தமிழக அரசு இந்து சமய திருக்கோயில்களில் பரம்பரை முறையில் இல்லாமல், தகுதி உள்ளவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க வழிவகை செய்து சட்டம் இயற்றியபோது, அப்போதும் உச்ச நீதிமன்றம் வரை வழக்கு எடுத்துச் செல்லப்பட்டு, உச்ச நீதிமன்றம் தமிழக அரசு சட்டம் செல்லுபடியாகும் என்று *1972*-ல் தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றம் *1972*-ல் அளித்த தீர்ப்பிலும், *2002*-ல் அளித்த தீர்ப்பிலும், மதத்தைப் பற்றி குறிப்பிடுகிறதேயல்லாமல், சாதியைப் பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. மறைந்த எல். இளையபெருமாள் அவர்கள் தலைமையில் மத்திய அரசு நியமித்த தீண்டாமை ஒழிப்பு ஆணையம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராக உரிமை வேண்டுமென்ற பரிந்துரையைச் செய்திருந்தது.

*பிற்பகல் 2–05*

அதைப்போலவே, நீதியரசர் மகராசன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவும், அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஆகம விதிகள் தடை செய்யவில்லை என்றும், உரிய பயிற்சி அளித்து அவர்களை அர்ச்சகராக ஆக்கலாம் என்றும் பரிந்துரைத்து இருந்தது. இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையிலான ஆணையம் ஆய்வு செய்து, அதற்கான திட்டங்களையும், பாடங்களையும் பட்டியலிட்டு, அரசுக்கு அளித்திருந்தது.

அதன் பின்னர், *2002* ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், கேரள மாநிலம் தொடர்பான வழக்கு ஒன்றில், இந்திய உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் துரைசாமி ராஜூ, ராஜேந்திரபாபு ஆகியோர் மிகத் தெளிவான தீர்ப்பு ஒன்றை அளித்துள்ளார்கள். இந்து சமயத்தைச் சார்ந்த எவரும், சாதி வேறுபாடு இல்லாமல், அர்ச்சகர் ஆகலாம் என்ற தீர்ப்பை அவர்கள் வழங்கியுள்ளார்கள். இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் தற்போது நாம் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக நியமனம் செய்ய ஆணை வழங்கி உள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) சாதி முறை என்ற பிறவி இழிவைப் போக்கவும், தீண்டாமையை அடியோடு ஒழிக்கவும், சமூக நீதியை நிலை நாட்டவும், நாம் முயற்சி செய்யும்போதெல்லாம் ஒரு பிரிவினர் முட்டுக்கட்டை போடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். எனினும், நாம் இடையறாது போராடி, அந்த முட்டுக்கட்டைகளை உடைத்தெறிந்து, நமது இலட்சியங்களை நிலைநாட்டி உள்ளோம்.



ஆலயங்களுக்குள் செல்லவே அனுமதி மறுக்கப்பட்ட நிலையும், சிலர் வசிக்கும் தெருவிலே ஆடு மாடுகள் நடமாடலாம். ஆனால், சாதியால் பிரிக்கப்பட்டவர்கள் நடமாடக்கூடாது என்ற நிலையும், தாய்மார்கள் மேலாடை அணியக்கூட கூடாது என்ற நிலையும், ஆடவர்கள் மேல் துண்டு போடக்கூடக் கூடாது, கால்களிலே செருப்பு அணியக்கூடாது, டீக்கடைகளில், அலுவலகங்களில், பள்ளிகளில் தனித் தனி பாத்திரங்கள் என்ற கொடுமைகளிலிருந்து விடுபட்ட தமிழகம், இன்னமும் முழு விடுதலை பெறாத நிலையில் இருப்பதைத்தான் தற்போது உள்ள சூழ்நிலைகள் நமக்கு தெளிவாக்கிக் கொண்டிருக்கின்றன.

'வேத காலத்தில் பிறப்பால் சாதி எதுவும் இல்லையென்றும், ரிக் வேத மக்கள் அனைவரும் ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும், வேத காலத்தில் சமுதாய இடப் பெயர்வு social mobility இருந்தது என்றும், மிகப் பிற்காலத்தில்தான் அவரவர்கள் மேற்கொண்டு வந்த தொழில்கள், இன்றைய அருவருக்கத்தக்க சாதிகளின் வடிவத்தைப் பெற்றன' என்றும், பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் உறுதிபட கூறி இருக்கின்றார். இவ்வாறு வேதங்களே பிறப்பால் சாதி எதுவும் இல்லையென்றும், அனைவரும் சமம் என்றும் உறுதியாகச் சொல்லிவிட்டதற்குப் பிறகும், வேதங்களின் பெயரால், இன்றைய விஞ்ஞான யுகத்திலும்கூட சாதிப் பிரிவினைகள் பேசப்படுவதும், மேல் சாதி, கீழ் சாதி என்று வேறுபடுத்தப்படுவதும், ஒரு ஜாதியினர் செய்யக்கூடிய அர்ச்சகர் பணியை மற்றொரு சாதியினர் செய்யக் கூடாது என்று தடுப்பதும், இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் சட்ட அங்கீகாரம் தேடுவதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்பது நமக்கெல்லாம் மிகுந்த வேதனை தரக்கூடிய செய்தியாகும்.

அனைத்து சாதியினரையும், அர்ச்சகராக நியமனம் செய்வதற்கு ஏதுவாக, இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில் திருத்தம் செய்து, அவசரச் சட்டம் இயற்றியதை எதிர்த்து, இந்திய உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அந்தச் சட்டத் திருத்தத்திற்கு தடையாணை விதித்து, இடைக்காலத் தீர்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது. இடைக்காலத் தீர்ப்பு எனினும், இதனை ஏற்று சட்டத்தின் ஆட்சி தொடர்ந்து மேலோங்கி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ள குறிப்பிட்ட இந்தச் சட்டத் திருத்தத்தை 'நீதிக்குத் தலை வணங்கு' என்ற அடிப்படையில், அதாவது அவசரச் சட்டம் *5/2006*-ல் பிரிவு *8*-ஐ நீக்கி விடுவது என்று அரசே முடிவெடுத்துள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 ஆகஸ்ட் 21

இந்த முடிவினையொட்டி, திருத்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய அரசியல் சாசனம் 25–வது பிரிவில் சமுதாய நலனைக் கருதியும், சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கவும், உரிய சட்டம் கொண்டுவர அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது. குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் உரிய முறையில் நிலைநாட்டப்படவும், அந்த உரிமைகளின் பலன்களை அனைத்து சாதியினரும் அனுபவித்திடவும், தொடர்ந்து நாம் முயற்சிகளை மேற்கொள்வோம். அனைத்து சாதியினரும் எந்தவித வேறுபாடும் இன்றி, இந்து சமய ஆலயங்களில், அர்ச்சகராகப் பணியாற்றுவதற்கு இடர் எதுவும் ஏற்படுமானால், அதைக் களைந்து நமது இலட்சியத்தை நோக்கிய பயணம் தொடர்ந்து நடைபெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

அரசியல் சாசனத்தை நமக்கு வடித்துத் தந்த சிற்பிகளில் தலைமைச் சிற்பியான அண்ணல் டாக்டர் அம்பேத்கர் கண்ட கனவை நனவாக்கிட, ஒல்லும் வகையெல்லாம் நாம் தொடர்ந்து உழைத்திடுவோம். அனைத்து இந்தியாவையும் கவர்ந்த, கழகத் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டுள்ள உறுதிமொழிகளில் பெரும்பாலானவற்றினை உரிய காலத்தில் நிறைவேற்றி வரும் இந்த அரசு, இந்து சாதியினர் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றி இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர்களாகப் பணியாற்ற வேண்டுமென்ற நமது நீண்டநாள் கனவு நிறைவேறுவதை எண்ணியும், தந்தை பெரியார் நடத்திய சமுதாயப் புரட்சியில் ஓர் அத்தியாயம் இது என்றாலும், இன்னும் பல படிக்கட்டுகளைக் கடந்திட இது பயன்படட்டும் என்ற நம்பிக்கையோடு நடைபோடுவோம் என்று கூறி, இதை அனைவரும் ஏகமனதாக ஆதரித்து, ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## பிரிவு 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 8. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, Clause 8 shall be omitted."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.



2006 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 8, சட்டமுன்வடிவின் பகுதியிலிருந்து நீக்கப்பெற வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவுகள் 9, 10, 11 மற்றும் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவுகள் 9, 10, 11 மற்றும் 12, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, Clauses 9, 10, 11 and 12 shall be re-numbered as 8, 9, 10 and 11 respectively."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 8 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2006) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-8-2006) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், மற்றும் ஏனைய தாள்கள்

72. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

73. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை பற்றிய நிதிநிலைச் செயலாக்கச் சாதனைகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

74. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 25 வரை)

– – –

2006 ஆகஸ்ட் 21]

## இணைப்பு I

*(323 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### முன்னுரை

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளிலும் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில், எரிசக்தி, சாலைப் போக்குவரத்து முதலிய முக்கிய துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும். மாநிலத்தின் தற்போதைய சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்குமான அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்து இவ்வரசு சாலை மேம்பாட்டு திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள சுமார் 1,78,193 கி.மீ. நீள சாலைகளில், 61,420 கி.மீ. நீள அரசு சாலைகள் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்றன. இதன் விவரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) தேசிய நெடுஞ்சாலைகள் | - | 4,254 கி.மீ. |
| (2) மாநில நெடுஞ்சாலைகள் | - | 6,849 கி.மீ. |
| (3) மாவட்ட முக்கிய சாலைகள் | - | 7,569 கி.மீ. |
| (4) மாவட்ட இதர சாலைகள் (1,746 கி.மீ. நீள கரும்புச் சாலைகள் உட்பட) | - | 42,748 கி.மீ. |
| **மொத்தம்** | - | **61,420 கி.மீ.** |

[2006 ஆகஸ்ட் 21

மேலும், அரசு சாலைகளிலுள்ள 1,207 பெரிய பாலங்கள், 7,658 சிறிய பாலங்கள் மற்றும் 99,423 தாம்போகிகளும் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 1.1 துறையின் தொலைநோக்குப் பார்வை

இத்துறை. தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வேண்டுமென அரசு உறுதி கொண்டுள்ளது. அதன்படி உகந்த தொழில்நுட்பத்தையும் மற்றும் துறையிலும், துறைக்கு வெளியேயுமுள்ள பல்வேறு வளங்களை செம்மையாகப் பயன்படுத்தி மாநிலத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையிலும் தரமான, பாதுகாப்பான மற்றும் நல்ல தரம் வாய்ந்த சாலைத் தொடரமைப்பினை உருவாக்கி பொதுமக்களுக்கு சிறந்த சேவை செய்வதே இத்தொலைநோக்குப் பார்வையின் முக்கிய கருத்தாகும்.

### 1.2 துறையின் இலக்குகள்

மாநிலத்திலுள்ள சாலைத் தொடரமைப்பினை சிறப்பாக நிர்வகித்து, செம்மையாகப் பராமரித்து தரம் மேம்படுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் நெடுஞ்சாலைத் துறையின் இலக்குகள் பின்வருமாறு:—

- மாநிலத்திலுள்ள சாலைத் தொடரமைப்பினை முறையாகவும், தரமானதாகவும் பராமரித்தல்.
- சாலைப் பயன்பாட்டாளர்களுக்கு பாதுகாப்பான சாலைகளை அமைத்தல்.
- பாதுகாப்பான மற்றும் திறன்பட்ட வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் சாலைத் தொடரமைப்பினை நிர்வகித்தல்.
- அரசின்கீழ் உள்ள சாலைத் தொடரமைப்பினை முறையாக தரம் உயர்த்தி மேம்படுத்துதல்
- தற்போதைய மற்றும் எதிர்கால போக்குவரத்து பெருக்கத்தினை கவனத்தில் கொண்டு சாலைகளில் வாகனம் செல்லும் திறனை அதிகப்படுத்தல்.
- கிராமப் பகுதிகளில், குறிப்பாக பேருந்து வழித்தடங்களில் இணைப்புச் சாலை வசதிகளை ஏற்படுத்துதல்.
- சாலைப் பயன்பாட்டாளர்களின் இனிய பயணத்திற்கு சாலையோரங்களில் தேவையான வசதிகளை உருவாக்குதல்.



2006 ஆகஸ்ட் 21]

- சாலை ஓரங்களில் மரங்களை நட்டும், பசுமைப் பகுதிகளை உருவாக்கியும் சுற்றுச்சூழலை மேம்படுத்தல்.

### 1.3 துறையின் முக்கிய நடவடிக்கைகள்

தமிழ்நாட்டிலுள்ள சாலைத் தொடரமைப்புகளை மேம்படுத்த எடுக்கப்படவிருக்கும் முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:—

- மாநிலத்திலுள்ள நெடுஞ்சாலைத் துறையின் சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பினை மேம்படுத்தி அதன்மூலம் ஓடுதளத்தை சீராக வைப்பதுடன் பாலங்களில் பழுது ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கினால் போக்குவரத்து தடைபடுவதைக் குறைப்பதற்கு, சாலைத் தொடரமைப்பிலுள்ள வடிகால்களை மேம்படுத்துதல்.
- மாநிலத்திலுள்ள சாலைத் தொடரமைப்புகளில் பாதுகாப்பினை மேம்படுத்தும் வகையில் குறிப்பாக, விபத்துப் பகுதிகளை சீரமைத்தல்/சீர்படுத்துதல்.
- மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகள் உள்ளிட்ட இத்துறையின் அனைத்துச் சாலைகளையும் தரம் உயர்த்துதல்.
- நகர்ப்புறங்களில் பெருகிவரும் போக்குவரத்திற்கு ஏற்ப சாலைகளை மேம்படுத்துவது, குறிப்பாக மேம்பாலங்களை அமைத்தல்.
- சாலை ஆக்கிரமிப்புகள், பெரும் கனரக வாகனங்களால் சாலை சேதப்படுதல், பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் வகையில் சாலையில் வாகனங்களை நிறுத்துதல் ஆகியவற்றைத் தவிர்த்து சாலைத் தொடரமைப்பினை நன்கு பாதுகாத்தல்.
- கிராமங்களில் பேருந்து தடச் சாலைகளை ஏற்படுத்துதல் மற்றும் தேவைக்கேற்ப கிராமச் சாலைகளை தரம் உயர்த்துதல்.

### 1.4 சாலை மேம்பாட்டுப் பணிகளின் சிறப்புக் கூறுகள்

தமிழ்நாட்டிலுள்ள சாலைத் தொடரமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும். சாலைப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதில் தற்போது தேக்கம் இருப்பினும், அதனை நீக்கி முக்கிய சாலைகளை இந்திய தேசிய சாலை அமைப்பின் (Indian Road Congress) தரத்திற்கொப்ப ஒருவழித் தடங்களை இருவழித் தடங்களாக தரம்

உயர்த்துவதும் மற்றும் எதிர்காலங்களில் பெருகி வரும் போக்குவரத்துக்கு ஏற்ப நகர்ப்புறச் சாலைகளை மேம்படுத்துவதும் மற்றும் கிராமப் பகுதிகளில் இணைப்புச் சாலைகளை சீரமைத்து, ஊரகச் சாலை தொடரமைப்பில் மேம்பாடு செய்யவும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

சாலைத் தொடரமைப்பு பாதுகாப்பானதாக அமைய குறிப்பிடத்தக்க அளவில் அவற்றை மேம்பாடு செய்யவேண்டும். தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் அதிக அளவில் ஏற்படுகின்றன. ஐந்து ஆண்டுகளுக்குள் குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாட்டில் சாலை விபத்துகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சாலை ஆக்கிரமிப்பு, வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து நிர்வகிப்பதில் அதிக கவனம் செலுத்தி போக்குவரவு மேம்படுத்தப்படும். சாலைகளில் ஏற்படும் சில பாதிப்புகளைத் தவிர்த்திட, சுமை ஏற்றும் கனரக வாகனங்களை முறைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கனரக வாகனங்கள், பேருந்துகள், மிதிவண்டி ஓட்டுநர்கள் மற்றும் பாதசாரிகள் ஆகியோருக்கு நல்ல சாலை வசதிகள் ஏற்படுத்தப்படும். சாலையோர காலியிடங்கள் மற்றும் வடிகால்கள் ஆகியவற்றில் மேம்பாடு செய்யப்படும்.

## 2. மாநிலத்திலுள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் பற்றிய விவரம்:

நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் பல்வகைப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரங்கள் பின்வருமாறு:

### 2.1 தேசிய நெடுஞ்சாலைகள்

மாநிலத் தலைநகரங்கள், பெரும் துறைமுகங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கும் வண்ணம் நாட்டின் குறுக்கு நெடுக்காக தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 4,254 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் 2,993 கி.மீ. நீள சாலைகள், அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கென இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் (NHAI) ஒப்படைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில், மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினைக்



கொண்டு மேம்பாடு, பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகள், இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆணையம் மேற்கொள்ளும் மேம்பாட்டுப் பணிகளுக்குத் தேவையான நிலஎடுப்பு, குடிநீர்க் குழாய்களை மாற்றுதல் போன்ற உதவிகளையும் தமிழக அரசு செய்து தருகிறது. புதிய திட்டங்களுக்கு மைய அரசின் ஒப்புதல் பெற அனைத்து முயற்சிகளையும் மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால், ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் தற்காலிகமாக பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்து அவ்வாணையத்துடன் கலந்துபேசி விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும். புதிதாக 270 கி.மீ. மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி மைய அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2.2 மாநில நெடுஞ்சாலைகள்

மாவட்டத் தலைமையிடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலத்திலுள்ள முக்கிய நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய சாலைகள் மாநிலங்களிலுள்ள நெடுஞ்சாலைகள் ஆகும். மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 6,849 கிலோ மீட்டர் ஆகும். இதில் 279 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும், 4,005 கி.மீ. சாலைகள் இருவழித்தட சாலைகளாகவும், 1,180 கி.மீ. இடைவழித்தட சாலைகளாகவும், 1,385 கி.மீ. சாலைகள் ஒருவழித் தட சாலைகளாகவும் உள்ளன.

### 2.3 மாவட்ட முக்கிய சாலைகள்

மாவட்டத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை இணைக்கும் வகையிலும் இந்த மையங்களை முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் வகையிலும் மாவட்ட முக்கிய சாலைகள் உள்ளன. மாவட்ட முக்கிய சாலைகளின் மொத்த நீளம் 7,569 கி.மீ. ஆகும். இதில், 125 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும், 2,088 கி.மீ. இருவழித்தட சாலைகளாகவும், 1,324 கி.மீ. இடைவழித்தட சாலைகளாகவும் மற்றும் 4,032 கி.மீ. ஒருவழித்தட சாலைகளாகவும் உள்ளன.

### 2.4 மாவட்ட இதர சாலைகள்

கிராமப்புற உற்பத்தி மையங்கள், விற்பனை மையங்கள் ஆகியவற்றை வட்டத் தலைமையிடங்கள், வட்டார வளர்ச்சித் தலைமையிடங்கள்

மற்றும் அருகில் உள்ள பிரதான சாலைகளுடன் இணைக்கும் வகையில் மாவட்ட இதர சாலைகள் அமைந்துள்ளன. தற்போதுள்ள மொத்தம் 42,748 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளில் சீரமைக்கப்பட்டு மாவட்ட இதர சாலைகளாக வகைப்படுத்தப்பட்ட 1,746 கி.மீ. நீள கரும்புச் சாலைகளும் அடங்கும். இதில் 56 கி.மீ. பல வழித்தடச் சாலைகளாகவும், 900 கி.மீ. இரு வழித்தடச் சாலைகளாகவும் 1,422 கி.மீ. இடைவழித்தடச் சாலைகளாகவும், 40,370 கி.மீ. ஒரு வழித்தடச் சாலைகளாகவும் உள்ளன.

## 2.5 சாலைகளை மேல்நிலைப்படுத்துதல்

நெடுஞ்சாலைகளில் பெருகிவரும் போக்குவரத்தைக் கருத்தில்கொண்டு, சாலைகள் தரம் உயர்த்தப்படும் என்று இவ்வரசு அறிவித்தது. இந்த அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில், 1,902 கி.மீ. மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் 761 கி.மீ. மாவட்ட இதர சாலைகளை மாநிலச் சாலைகளாகவும் மற்றும் 3,812 கி.மீ. மாவட்ட இதர சாலைகளை மாவட்ட முக்கிய சாலைகளாகவும் மேல்நிலைப்படுத்தி அரசு 4-8-2006 அன்று ஆணையிட்டுள்ளது. இவற்றை படிப்படியாக அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.6 பாலங்கள் கட்டுதல்

சாலைகளில் குறுக்கிடும் நீர் வழிகள் மற்றும் இருப்புப் பாதை வழிகளைக் கடப்பதற்காக, பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் ஆகியவற்றை கட்டும் பணியையும் நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்கிறது.

அரசு சாலைகளில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் (Train Vehicle Unit) கொண்ட இருப்புப் பாதையினை கடக்கும் வழிகளுக்கு பதிலாக, இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னுரிமை அடிப்படையில், இரயில்வே பணிகள் திட்டத்தில் இப்பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படுகிறது. அணுகு சாலைகள் உட்பட இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவினை மாநில அரசும், மைய அரசின் இரயில்வே அமைச்சகமும் பகிர்ந்துகொள்கின்றன. 29 சாலை மேம்பாலம் மற்றும் சாலை கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.





## சாலைப் பராமரிப்பு

மாநிலத்திலுள்ள சாலைத் தொடரமைப்பின் பராமரிப்பில் ருமளவு தேக்க நிலை உள்ளது. இத்தேக்க நிலையை மாற்றி சாலைப் ாமரிப்புப் பணிகளை அதிக அளவில் மேற்கொள்ள அரசு வடிக்கை எடுத்துள்ளது. மாநிலத்திலுள்ள சாலைகளின் பராமரிப்புப் ணிக்கென ரூ.2,000 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 06-2007 ஆம் ஆண்டில் சாலை மற்றும் பிற பராமரிப்புப் ணிகளுக்கென மொத்தம் ரூ.801.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3 சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகள்

சாலைகளில் பாதுகாப்பான போக்குவரத்திற்கு விபத்துப் குதிகளைக் கண்டறிவது மிகவும் அவசியமாகும். இதற்கென ஆய்வு மற்கொள்ளப்பட்டதில் மாநிலத்தின் சாலைத் தொடரமைப்பிலுள்ள டுமோசமான 300 விபத்துப் பகுதிகளில் முக்கியமான 50 பகுதிகளை மம்படுத்த 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.15.00 கோடி ஒதுக்கீடு சய்யப்பட்டுள்ளது.

## .9 ஊரகச் சாலைகள்

கிராமங்களுடன் இணைப்புகளை அதிகரிக்கும் வகையில் மம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். மைய அரசின் நிதி உதவி பறும் பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டத்தின்கீழ் (4ஆம் கட்டம்) ிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதியினை ஏற்படுத்த ரு.117.00 கோடி மதிப்பீட்டில் 820 கி.மீ. ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் 2006-2007 ஆம் ஆண்டில் லகிரி மாவட்டம் தவிர்த்த பிற மாவட்டங்கள் அனைத்திலும் றைவேற்றப்படும். தற்போதுள்ள பிற திட்டங்களின்கீழ், 24 பாலப் பணிகள் உள்ளிட்ட 2,880 கி.மீ. ஊரகச் சாலைகளை ரூ.363 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல், மற்றும் வலுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.10 துறை சீரமைப்பு நடவடிக்கைகள்

நெடுஞ்சாலைத் துறையினை சீரமைத்து அதன் செயல்திறனையும் பயன்பாட்டினையும் மேம்படுத்துவது முக்கிய நோக்கமாகும்.

- மாநிலம் முழுவதிலுமுள்ள சாலைத் தொடரமைப்பினை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் தீட்டி வருங்கால

நிதித்தேவைக்கு நீண்டகால சாலை மேம்பாட்டு நிதியினை உருவாக்குதல். பொது மற்றும் தனியார் பங்கீடு போன்றவற்றின்மூலம் கூடுதல் நிதிபெற வழிவகை செய்தல்.

- பணத்திற்கேற்ப பலன் (Value for money) என்ற அடிப்படையில் பணிகளை முறையாக நிறைவேற்றுவதை உறுதி செய்தல்.
- சாலைகளில் தரக் கட்டுப்பாட்டினை மேம்படுத்துதல்.
- நெடுஞ்சாலைத் துறையிலுள்ள பொறியாளர்களுக்கு சாலை நிர்வாகம் மற்றும் பொறியியல் பயிற்சி அளித்து அவர்களை சிறந்த பொறியாளர்களாக உருவாக்குதல்.
- சிறந்த பண முதலீட்டாளர்கள் மற்றும் பயனுள்ள சாலைத் தொடர்பினை உருவாக்குதல்.

## 3. சாலை மற்றும் பாலம் மேம்பாட்டுத் திட்ட விவரங்கள்

### 3.1 மாநில அரசின் திட்டங்கள்

#### 3.1.1 ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

(i) மாநில நெடுஞ்சாலைகள்

இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு மொத்தம் 1,420 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும் ஒரு பாலப் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், 2005–2006 ஆம் ஆண்டில் 455.53 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளும் ஒரு பாலப் பணியும் மொத்தம் ரூ.238.28 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடப்பு ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

மாநில நெடுஞ்சாலைகள், சாலை இணைப்பில் முக்கியமானவைகளாக இருந்தாலும் சில பகுதிகள் இன்னமும் ஒருவழித்தட மற்றும் இடைவழித்தடச் சாலைகளாக உள்ளன. இவை அனைத்தையும் படிப்படியாக இருவழித்தடச் சாலைகளாக அகலப்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. இதன்பேரில், இவ்வாண்டு சுமார் 680 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். நடப்பு நிதியாண்டில் இப்பணிகளுக்கு ரூ.275 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(ii) மாவட்ட முக்கிய சாலைகள்

இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 1,676 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், ரூ.222.77 கோடி மதிப்பில் 520.82 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பு ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

சாலைகளின் முக்கியத்துவம் மற்றும் போக்குவரத்து அளவின் அடிப்படையில் அனைத்து ஒருவழித் தடங்களையும் படிப்படியாக இருவழி அல்லது இடைவழித் தடங்களாக்க நடவடிக்கை எடுக்கப்படும். நடப்பு ஆண்டில் சுமார் 722 கி.மீ. நீள சாலைகள் மேம்படுத்தப்படும். இவ்வாண்டு ரூ.265 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) மாவட்ட இதர சாலைகள்

இத்திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு மாவட்ட இதர சாலைகளில் 3,597 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 86 பாலங்கள் மற்றும் தாம்போகிகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ.268.81 கோடி மதிப்பில் 2,260 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 30 பாலங்கள் மற்றும் தாம்போகிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பு ஆண்டில் செய்து முடிக்கப்படும். 2006–2007 ஆம் ஆண்டில் சுமார் 1,667 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும்.

இப்பணிகளுக்காக இவ்வாண்டு ரூ.201.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### 3.1.2 சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (CMDP)

இத்திட்டத்தின்கீழ், 2003 முதல் 2006 ஆம் ஆண்டு வரை சென்னை மாநகரின் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்த ரூ.602.67 கோடி மதிப்பில் 184 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், ரூ.20.40 கோடி மதிப்பிலான 49 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இவற்றைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.5.50 கோடி மதிப்பில் 13.50 கி.மீ. நீள 5 சாலைப் பணிகளும் ரூ.25.19 கோடி மதிப்பில்

பாலங்கள் கட்டுதல், நடைபாதை அமைத்தல், சாலை சந்திப்புகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற பலவகைப்பட்ட கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, இத்திட்டத்தின்கீழ், 6 அடுக்குப் பாலங்கள், ஒரு மேம்பாலம், 4 ஆற்றுப் பாலப் பணிகள் ரூ.219 கோடி மதிப்பில் திட்டங்கள் அலகின் (Project Wing) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்காக 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.51.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.1.3 பகுதி–2 திட்டம்**

2005–2006 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் 52 பாலப் பணிகள் ரூ.30 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்டன. இவற்றில் 16 பாலப் பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் நடப்பு நிதியாண்டில் செய்து முடிக்கப்படும்.

2006–2007 ஆம் ஆண்டு ரூ.30.10 கோடி மதிப்பில் சாலைப் பணிகள், பாலப் பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3.1.4 மாநில அரசின் சிறப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள்**

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இருந்த மண் மற்றும் கப்பிச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி மதிப்பில் சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில், நடப்பு ஆண்டில் ரூ.45 கோடி மதிப்பிலான 971 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் அனைத்தும் 2006–2007 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இப்பணிகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.1.5 சென்னை மாநகர உள்வட்டச் சாலை**

சென்னை மாநகருக்கான உள்வட்டச் சாலையின் வட பகுதி கி.மீ. 5/0 முதல் 9/4 வரை முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. உள்வட்டச் சாலையின் தெற்குப் பகுதியில் நிலுவையிலுள்ள 5 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.33.25 கோடி மதிப்பில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.





**3.1.6 மதுரை ஆரச் சாலைகள் (2 ஆம் கட்டம்)**

ஹட்கோ நிதியுதவியுடன், மதுரை மாநகர் செல்லும் ஆரச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.112 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட 121.80 கி.மீ. நீள 12 சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்ட பாலப் பணியும் செய்து முடிக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக இத்திட்டத்தின்கீழ், 14 சாலைப் பணிகளுக்கு ரூ.70.60 கோடி மதிப்பில் நடப்பு ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளுக்காக இவ்வாண்டு ரூ.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.1.7 இயற்கைப் பேரிடர் நிவாரணப் பணிகள்**

**(அ) சுனாமி நிவாரணப் பணிகள்**

சுனாமி நிவாரணப் பணிகள் திட்டத்தின்கீழ் 448.51 கி.மீ. நீள சாலைப் பணிகளையும் ஒரு பாலப் பணியினையும் ரூ.64.15 கோடி மதிப்பில் மாநில அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இவற்றில், ரூ.29.55 கோடி மதிப்பிலான பணிகள் 2005–2006இல் முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் 2006–2007 ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

**(ஆ) வெள்ள நிவாரணப் பணிகள்**

மாநிலத்தில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ.350 கோடி மதிப்பீட்டில் தற்காலிக சாலை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 2005–2006–ல் அரசு அனுமதி அளித்தது. இதில், ரூ.211.55 கோடி மதிப்பிலான சீரமைப்புப் பணிகள் 2005–2006–ல் செய்து முடிக்கப்பட்டன. மீதமுள்ள சீரமைப்புப் பணிகள் விரைவில் முடிவடையும்.

**3.1.8 சாலைப் பராமரிப்புப் பணிகள்**

பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் தவிர மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் முதலிய அரசு சாலைகளில் பராமரிப்புப் பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.455.90 கோடி மதிப்பிலான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பு நிதியாண்டில், அரசு சாலைகளில்

[2006 ஆகஸ்ட் 21

பராமரிப்புப் பணிகளுக்கென ரூ.49.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யபபட்டுள்ளது.

நபார்டு வங்கியின் கடனுதவியுடன் 1996 முதல் 2001 வரை, இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்பாடு செய்யப்பட்ட 5,521 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள், இதர மாவட்டச் சாலைகளாக படிப்படியாக நிலை உயர்த்தப்படும். இச்சாலைகளில், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலை பராமரிப்புப் பணிகளுக்கென ரூ.103.60 கோடி ஆக மொத்தம் அனைத்து சாலைகள் மற்றும் பிற பராமரிப்புப் பணிகளுக்கென ரூ.801.37 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.2 மைய அரசு உதவித் திட்டங்கள்

#### 3.2.1 தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம்

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களான தங்க நாற்கர திட்டம், வடக்கு – தெற்குப் பகுதி இணைப்புத் திட்டம், துறைமுக இணைப்புத் திட்டம், இதர திட்டங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் – பகுதி III–ன்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழி/ஆறுவழிப் பாதைகளாக மாற்றும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் விவரம் பின்வருமாறு:–

**(i) தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–1 தங்க நாற்கர திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், தேசிய நெடுஞ்சாலை எண்: 4, 5, 7 மற்றும் 46–ல் மொத்தம் 341 கி.மீ. நீள சாலைகள் ரூ.1,159.67 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிப் பாதையாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதில், 285 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிவடைந்துள்ளன. தே.நெ.4–ல் காஞ்சிபுரம்–பூந்தமல்லி பகுதியில் 56 கி.மீ. நீள சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(ii) தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–2 வடக்கு தெற்குப் பகுதி இணைப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் தே.நெ. 7 மற்றும் 47 (சேலம்–கொச்சின் பகுதி)–ல் மொத்தம் 756.20 கி.மீ. நீள சாலைகள் ரூ.3,654.74 கோடி மதிப்பீட்டில்



2006 ஆகஸ்ட் 21]

நான்கு வழிப் பாதையாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 34.40 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. 640 கி.மீ. சாலையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள சாலைப் பணிகளுக்கு ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(iii) துறைமுக இணைப்புத் திட்டம் (தே.நெ. 7 ஏ)**

இத்திட்டத்தின்கீழ் தே.நெ. 7ஏ (பாளையங்கோட்டை–தூத்துக்குடி சாலை)–ல், 47 கி.மீ. நீள சாலைப் பகுதி ரூ.137.79 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிப் பாதையாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலைப் பணிகள் மார்ச் 2007–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(iv) இதர திட்டங்கள்**

தேசிய நெடுஞ்சாலை 45–ல் தாம்பரம்–திண்டிவனம் பகுதியில் 93 கி.மீ. சாலை நான்கு வழிப்பாதையாக 2004–2005–ல் அகலப்படுத்தப்பட்டன. திண்டிவனம்–திருச்சி சாலைப் பகுதியை நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தும் பணிகள் ரூ.1,260 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேலும் தே.நெ.45–பி–ல் திருச்சி–மதுரை பகுதியில் 124.70 கி.மீ. நீள சாலையை நான்கு வழிப் பாதையாக மாற்றும் பணிகள் ரூ.419.96 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

**(v) தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–3**

இத்திட்டத்தின்கீழ் 1,495 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் அமைத்தல், நிர்வகித்தல், ஒப்படைத்தல் (BOT) எனும் முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

**அ) பணிகள் ஒப்படைக்கப்பட்டவை:–**

1) தே. நெ. 45–B:– மதுரை – அருப்புக்கோட்டை – தூத்துக்குடி – 144 கி.மீ.

2) தே. நெ. 67:– தஞ்சாவூர் – திருச்சி – 55 கி.மீ

**ஆ) மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளவை:–**

1) தே. நெ. 45:– திண்டுக்கல் – திருச்சி – 80 கி.மீ.

[2006 ஆகஸ்ட் 21

2) தே. நெ. 67:– திருச்சி – கரூர் – 81 கி.மீ.

3) தே. நெ. 68:– சேலம் – சின்னசேலம் – 87 கி.மீ.

4) தே. நெ. 68:– சின்னசேலம் – உளுந்தூர்பேட்டை – 47 கி.மீ.

5) தே. நெ. 66:– தமிழ்நாடு/பாண்டிச்சேரி எல்லை – திண்டிவனம் – 36 கி.மீ

இ) விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளவை: –

1) தே. நெ. 45 விரிவு:– திண்டுக்கல் – பெரியகுளம் – தேனி – 73 கி.மீ.

2) தே. நெ. 220:– தேனி – குமுளி – 57 கி.மீ.

3) தே. நெ. 49:– மதுரை – இராமேஸ்வரம் – தனுஷ்கோடி – 186 கி.மீ.

4) தே. நெ. 67:– நாகப்பட்டினம் – தஞ்சாவூர் – 80 கி.மீ.

5) தே. நெ. 67 விரிவு:– கோயம்புத்தூர் – மேட்டுப்பாளையம் — 45 கி.மீ.

6) தே. நெ. 66:– கிருஷ்ணகிரி – திருவண்ணாமலை – திண்டிவனம் – 170 கி.மீ.

7) தே. நெ. 47:– கேரளா/தமிழ்நாடு எல்லை – கன்னியாகுமரி – 56 கி.மீ.

8) தே.நெ. 205:– தமிழ்நாடு/ஆந்திரா எல்லை – திருத்தணி – சென்னை – 94 கி.மீ.

9) தே. நெ. 210:– திருச்சி – காரைக்குடி – 103 கி.மீ.

10) தே. நெ. 210:– காரைக்குடி – இராமநாதபுரம் – 101 கி.மீ.

### 3.2.2 சென்னை புறவழிச்சாலை (Chennai Bye-pass)

சென்னை புறவழிச்சாலை கட்டுமானப் பணியின் முதற்கட்டமாக கடந்த 2002 ஆம் ஆண்டில் தாம்பரம் முதல் மதுரவாயல் வரை 19 கி.மீ. நீளத்தில் இருவழித் தடச் சாலை அமைக்கப்பட்டது. தற்போது, இரண்டாம் கட்டமாக இச்சாலையை நான்கு வழித் தடச் சாலையாக அகலப்படுத்தவும், சேவைச் சாலைகள் அமைக்கவும், மதுரவாயல் (தே.நெ.4) முதல் புழல் (தே.நெ.5) வரை 13 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கவும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ரூ.480 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2006 ஆகஸ்ட் 21]

### 3.2.3 அடுக்குப் பாலம் மற்றும் மேம்பாலம் அமைத்தல்

கத்திப்பாரா சந்திப்பு, கோயம்பேடு சந்திப்பு, பாடி சந்திப்பு மற்றும் சென்னை விமான நிலைய முகப்புப் பகுதி ஆகிய நான்கு இடங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் அடுக்குப் பாலம் மற்றும் மேம்பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டுள்ளது. கோயம்பேடு முதல் மதுரவாயல் வரையிலான 4 கி.மீ. நீள சாலைப் பகுதியினை நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அகலப்படுத்தி, சாலையின் இருபுறமும் சேவை சாலைகளை அமைக்கும் பணியினையும் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இப்பணிகளுக்கான திட்ட மதிப்பு ரூ.196 கோடியாகும்.

### 3.2.4 பிற தேசிய நெடுஞ்சாலைகள்–திட்டம் மற்றும் பராமரிப்புப் பணிகள்

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4,254 கி.மீ. ஆகும். இதில் 1,248 கி.மீ. நீள சாலைகள், மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினைப் பயன்படுத்தி மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.73.73 கோடி மதிப்பில் 31 பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் நடப்பு நிதியாண்டில் பல்வேறு பணிகளுக்காக மைய அரசு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1. திட்டப் பணிகள் — ரூ.87.69 கோடி
2. சிறப்பு மற்றும் சாதாரண பழுதுபார்ப்புப் பணிகள் — ரூ.18.93 கோடி
3. சுனாமி மற்றும் வெள்ள நிவாரணப் பணிகள் — ரூ.10.03 கோடி

### 3.2.5 புதிய தேசிய நெடுஞ்சாலைகள் அறிவிப்பு

தமிழகத்திலுள்ள கீழ்க்கண்ட மாநில நெடுஞ்சாலைகள் 2006–2007–ல் தேசிய நெடுஞ்சாலைகளாக மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தே. நெ.. 226–126 கி.மீ. | தஞ்சாவூரில் துவங்கி கந்தர்வகோட்டை–புதுக்கோட்டை–திருமயம்–கீழ்சேவல்பட்டி–திருப்பத்தூர்–மதகுப்பட்டி–சிவகங்கை ஆகிய ஊர்களின் வழியாக மானாமதுரை சென்றடையும் சாலை. |
| தே. நெ. 227–144 கி.மீ. | திருச்சிராப்பள்ளியில் துவங்கி லால்குடி–கள்ளக்குடி–கீழப்பாலூர்–உடையார்பாளையம்–ஜெயங்கொண்டம்–கங்கைகொண்டசோழபுரம்–காட்டுமன்னார்கோயில்–குமராட்சி ஆகிய ஊர்களின் வழியாக சிதம்பரம் சென்றடையும் சாலை. |

### 3.2.6 மத்திய சாலை நிதித் திட்டம் (CRF)

2000 ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சிறப்பு தீர்வை விதிப்பதன்மூலம் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி மத்திய சாலை நிதியினை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்நிதியிலிருந்து 2001 முதல் 2005 வரை ரூ.448.31 கோடி மதிப்பிலான 552 பணிகளுக்கு மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது. இதில் 536 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மேலும், ரூ.36.36 கோடி மதிப்பில் 19 புதிய பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளன. மேலும், ரூ.141 கோடி மதிப்பில் இவ்வாண்டு புதிய பணிகளுக்கு ஒப்புதல் கோரி மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்படவிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.125 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.7 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் (PMGSY)

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் (பகுதி–4) அனுமதிக்கப்பட்ட பணிகளில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களிலுள்ள பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்தது. தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், இத்திட்ட செயலாக்கத்திற்கான தொடர்பு அமைப்பாக செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.117.27 கோடி மதிப்பில் 819.49 கி.மீ. நீளமுள்ள 402 பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேலும், இத்திட்டத்தின்கீழ் பகுதி 5–ன்கீழ் ரூ.174.32 கோடி மதிப்பில் 849.13 கி.மீ. நீள சாலைப் பணிகளுக்கு மைய அரசின் ஒப்புதல்





பெறப்பட்டுள்ளது. இச்சாலைகள் ஊராட்சி அமைப்பின்கீழ் வருவதால் இத்திட்டப் பணிகளை ஊரக வளர்ச்சித் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.2.8 பாரத் நிர்மாண் திட்டம்

2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று மைய அரசால் அறிவிக்கப்பட்ட பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ் ரூ.537 கோடி மதிப்பில் 4,122 கி.மீ. நீள சாலைப் பணிகளை மேற்கொள்வதற்கான பிரேரணை மைய அரசுக்கு அனுப்பப்படவுள்ளது. இப்பணிகளுக்கு விரைவில் ஒப்புதல் பெற்று பணிகளை துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3.2.9 மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.45 இலட்சம் மதிப்பில் 3 சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேற்கூறிய 8 மாவட்டங்களில் பல்வேறு சாலைப் பணிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.102.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.10 ஜவர்ஹர்லால் நேரு தேசிய நகர்ப் பகுதி புனரமைப்புத் திட்டம் (JNNURM)

மைய அரசு அறிவித்துள்ள இப்புதிய திட்டத்தின்கீழ் 10 ஆண்டு காலத்தில் ரூ.10,786.60 கோடி மதிப்பில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில், மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள், ஆரச்சாலைகள், இணைப்புச் சாலைகள், சுரங்க நடைபாதைகள், சாலை சந்திப்புகளின் மேம்பாடு, பேருந்து நிறுத்தம் போன்ற கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதியுதவி கோரி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்மூலம் கருத்துரு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்ததும் படிப்படியாக கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 3.2.11 பொருளாதார மற்றும் மாநிலங்களுக்கிடையிலான முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை மேம்படுத்தும் திட்டம்

பொருளாதார மற்றும் பிற மாநிலங்களுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மைய அரசின்

நிதியுதவியுடன் வேலூர் நகரில் பாலாற்றின் குறுக்கே கி.மீ. 0/0-1/4-ல் (பாலப் பகுதி சங்.440 முதல் சங்.1095 வரை) பழுதடைந்த பழைய வளைவு பாலத்திற்குப் பதிலாக ரூ.16.94 கோடி செலவில் புதிய பாலம் கட்டும் பணிக்கு மைய அரசு கொள்கை அளவில் அனுமதி அளித்துள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு தயாரித்து ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதன்மீது ஒப்புதல் கிடைத்த பின் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், நடப்பு ஆண்டில் ரூ.42.80 கோடி மதிப்பில் புதிய பணிகளுக்கும் ஒப்புதல் கோரப்படவுள்ளது.

**3.2.12 இரயில்வே பணிகள் திட்டம்**

கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் 47 இரயில்வே பாலப் பணிகளில் 9 பாலப் பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள 38 பாலப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டிற்கான இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ் 29 பாலப் பணிகளை மேற்கொள்வதற்கு இரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகளை நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.81.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.3 நபார்டு நிதி உதவித் திட்டங்கள்**

**3.3.1 சாலை மற்றும் பாலப் பணிகள்**

நபார்டு நிதியுதவியுடன், நடப்பு ஆண்டில் ரூ.120.34 கோடி மதிப்பில் 265 பாலங்களைக் கட்டுதல் மற்றும் 6 சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் விரைவில் துவங்கப்படும். இப்பணிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.3.2 மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்பாடு செய்தல்**

இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 1242.31 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும் 17 பாலப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2006-07ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கு ரூ.110 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**3.3.3 கிராமச் சாலைகள் திட்டம்**

500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் இத்திட்டத்தின்கீழ் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் 1996 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அப்போது முதல் 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ரூ.418.67 கோடி செலவில் 3924 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 46 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1689 கிராமங்கள் சாலை இணைப்புப் பெற்றுள்ளன. தற்போது 142 கி.மீ. நீள சாலைப் பணிகளும் 5 பாலப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், நடப்பாண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.11.36 கோடி மதிப்பில் 80.20 கி.மீ. நீளமுள்ள புதிய சாலைப் பணிகளுக்கும், 2 பாலப் பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2006-2007-ல் இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதுக்கும் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.3.4 ஆதிதிராவிடர் துணைத் திட்டம்-ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி செய்தல்**

இத்திட்டத்தின்கீழ் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதிதிராவிடர்கள் உள்ள குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்யப்படுகிறது. இத்திட்டம் துவங்கப்பட்ட 1996 ஆம் ஆண்டிலிருந்து மார்ச் மாதம் 2006 வரை 1,347 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 25 பாலப் பணிகள் ரூ.139.70 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 621 குக்கிராமங்கள் இணைப்புச் சாலை வசதி பெற்றுள்ளன. 25.35 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும் ஒரு பாலப் பணியும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், நடப்பாண்டில், இத்திட்டத்தின்கீழ் 99 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 7 பாலப் பணிகளை ரூ.20.40 கோடி மதிப்பில் மேற்கொள்ள கருத்துரு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. வங்கியின் ஒப்புதல் கிடைத்ததும் பணிகள் துவங்கப்படும்.

2006-2007-ல் இத்திட்டத்திற்கு ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.5 பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளுக்குமேல் பேருந்துகள் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு இணையாக தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் துவங்கப்பட்ட 1996 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு மார்ச் வரை மொத்தம் 2705 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும் 45 பாலப் பணிகளும் ரூ.241.74 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 29.10 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 3 பாலப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.3.06 கோடி மதிப்பில் 21.60 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளுக்கு நடப்பாண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2006–2007–ல் இத்திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதுக்கும் ரூ.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.6 பேருந்து செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு செய்தல்

நடப்பு ஆண்டில் புதிய திட்டமாக நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் பேருந்து செல்லும் 1242.64 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்யவும் 6 பாலங்கள் கட்டவும் ரூ.116.67 கோடி மதிப்பிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கு ரூ.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.7 காவிரி பாசனப் பகுதிகளில் பாலங்கள் கட்டுதல்

நபார்டு வங்கி நிதியுதவியுடன், காவிரி பாசனப் பகுதிகளான, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில், ரூ.33.49 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட 48 பாலப் பணிகளில், 2 பணிகள் கைவிடப்பட்டன. மீதமுள்ள 46 பணிகளில், 28 பாலப் பணிகள் முடிவுற்றன. 18 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இப்பணிகளுக்காக ரூ.7.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.8 கரும்புச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

417 கி.மீ. நீள 139 கரும்புச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்கும் 7 பாலப் பணிகளுக்கும் ரூ.49.74 கோடி மதிப்பில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில், 103 சாலைப் பணிகளும் 2 பாலப் பணிகளும்





)றைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. டப்பு நிதியாண்டில் இப்பணிகளுக்கு ரூ.22.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### .4 ஹட்கோ நிதியுதவித் திட்டங்கள்

### .4.1 பாலங்கள் கட்டுதல்

ஹட்கோ நிதியுதவியுடன், ரூ.60 கோடி மதிப்பில் அனுமதி அளிக்கப்பட்ட 61 பாலங்களில், 2 பாலப் பணிகள் கைவிடப்பட்டன. மீதமுள்ள 59 பணிகளில், 42 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 17 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.10.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.4.2 மதுரை ஆரச் சாலைகள்

ஹட்கோ நிதியுதவியுடன், முதற்கட்டமாக ரூ.112 கோடி மதிப்பில், மதுரை மாநகரை இணைக்கும் ஆரச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்கீழ் 121.80 கி.மீ. நீள 12 சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்ட பாலப் பணியும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. எல்லிஸ் நகர் சாலை மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 9.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5 பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள்

### 3.5.1 உலக வங்கி உதவியுடன் சுனாமி சீரமைப்புப் பணிகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில், சுனாமியால் முற்றிலும் சேதமடைந்த கீழ்மணக்குடி – மேல்மணக்குடி கிராமங்களை இணைக்கும் பாலத்தினை ரூ.9 கோடி செலவில் திரும்பக் கட்டும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதன் பின்னர் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 3.5.2 ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சுனாமி தாக்கிய கடலோர மாவட்டங்களாகிய திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினத்தில் 5 பெரிய பாலப்

பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் ரூ.42.70 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஆலோசனை நிறுவனங்களிடம் (Consultants) ஒப்படைக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. 2006–07 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.5.3 தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்–3 (TNUDP-3)

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் – 3–ன்கீழ் சென்னைப் பெருநகர் பகுதிகளில் 9 சாலை மேம்பாலங்கள், கீழ்பாலங்கள் மற்றும் 3 சுரங்க நடைபாதைகள் கட்டும் பணிகள் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்திற்கும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கு உலக வங்கியின் ஒப்புதல் பெற்றதும் பணிகள் துவங்கப்படும்.

### 3.5.4 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.2,160 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இதில், உலக வங்கியின் கடன் ரூ.1,670 கோடி; தமிழக அரசின் பங்கு ரூ.490 கோடியாகும். இத்திட்டம், 2003–2004 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன.

1. 742 கி.மீ. சாலைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
2. 2000 கி.மீ. மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மற்றும் சாலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.
3. துறையை பலப்படுத்துதல் மற்றும் செயலாக்கத் திட்டம்.

### 3.5.5 சாலை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்

742 கி.மீ. நீள சாலைகள் உலகத் தரத்திற்கு ஒப்ப மேம்படுத்தப்பட உள்ளன. சாலைகளின் மொத்த நீளமும் 5 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு அதில் 4 தொகுப்புகள் பன்னாட்டு அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று, ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தொகுப்புகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 5–வது தொகுப்பில்



டங்கியுள்ள பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் ணி நடைபெற்று வருகிறது. திட்ட அறிக்கை கிடைத்ததும் பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளப்படும்.

தொகுப்புகளில் அடங்கியுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:–

(1) தொகுப்பு எண் 1– ஆற்காடு முதல் திருவாரூர் வரை மற்றும் 9 புறவழிச் சாலைகள் (ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருக்கோயிலூர், விருத்தாச்சலம், அரியலூர், திருவாரூர், சிதம்பரம் மற்றும் சீர்காழி) மற்றும் போளூர், செங்கம், ஜெயங்கொண்டம், அரியலூர் சாலை பகுதிகள் – 393 கி.மீ. – மதிப்பீடு ரூ.611.70 கோடி.

(2) தொகுப்பு எண் 2 – நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரை மற்றும் 3 புறவழிச் சாலைகள் (முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம்) – 116.60 கி.மீ. – மதிப்பீடு ரூ.198.77 கோடி.

(3) தொகுப்பு எண் 3 – கட்டுமாவடி முதல் இராமநாதபுரம் வரை – 99.80 கி.மீ. – மதிப்பீடு ரூ.143.40 கோடி.

(4) தொகுப்பு எண் 4 – இராமநாதபுரம் முதல் தூத்துக்குடி வரை – 117.90 கி.மீ. – மதிப்பீடு ரூ.119 கோடி

(5) தொகுப்பு எண் 5 – கும்பகோணம் புறவழிச் சாலைத் தொடர்ச்சி மற்றும் இராமநாதபுரம் புறவழிச் சாலை ஆகிய இரு பணிகளுக்கும் 15 கிலோ மீட்டருக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஒப்பந்த ஆலோசகர் மூலம் நடைபெற்று வருகிறது – மதிப்பீடு ரூ.51.45 கோடி.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட க்களுக்கு மறு குடியேற்றம் மற்றும் மறு வாழ்விற்கான டவடிக்கைகளை அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் துணையுடன் உலக வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயலாக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் செயலாக்கத் திட்டம் போன்றவையும் மேற்கொள்ளப்படுகிறது. நில உரிமையாளரிடம் பேச்சு வார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. பெரும்பாலான நில உரிமையாளர்கள் தாங்களாகவே முன்வந்து நிலங்களை ஒப்படைக்கிறார்கள். மற்ற இனங்களில் நெடுஞ்சாலைத் துறை நில எடுப்பு சட்டத்தின்படி நிலம் கையகப்படுத்தப்படுகிறது.

### 3.5.6 சிறப்புச் சாலை பராமரிப்புப் பணிகள்

சிறப்புப் பராமரிப்புப் பணிகளின்கீழ் 2,000 கி.மீ. சாலைப் பணிகள் நான்கு ஆண்டுகளில் எடுக்கப்படவுள்ளன. முதல் ஆண்டான 2004–05–ல், மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் 634 கி.மீ. நீளத்திற்கு பாராமரிப்புப் பணிகள் ரூ.242.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பணிகள் 15 சிறு தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இரண்டாவது ஆண்டு பராமரிப்புப் பணிகளாக 2005–06–ல் மொத்தம் 274 கி.மீ. நீள சாலைப் பணிகள் 11 தொகுப்புகளில் ரூ.109.47 கோடி செலவில் அனுமதிக்கப்பட்டன. அவை விரைவில் துவங்கப்படவுள்ளன. மூன்றாம் ஆண்டு, 2006–07 பராமரிப்புப் பணிகளுக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. பட்டியல் தயாரானதும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் துவங்கப்படும்.

## 4 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

### 4.1 வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு

4.1.1. வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகானது, நெடுஞ்சாலைத் துறையில் உள்ள வெவ்வேறு அலகின் வாயிலாக நிறைவேற்றப்படும் பாலப் பணிகளுக்கான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணியை மேற்கொள்கிறது.

ஆய்வுப் பிரிவு, பால வேலைகளுக்குத் தேவைப்படும் கள விவரங்களை சேகரித்து, மதிப்பீடு தயாரிக்கும் பொருட்டு வடிவமைப்புப் பிரிவுக்கு அனுப்பும் பணியினை மேற்கொள்கிறது. கள விவரங்களின் அடிப்படையில் வடிவமைப்புப் பிரிவு மேற்கொள்ளும் பணிகள் பின்வருமாறு:

(அ) வெவ்வேறு திட்டங்களின்கீழ் நிறைவேற்றப்படும் பால வேலைகளுக்கான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்.

(ஆ) பாலப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளோடு பெறப்படும் உத்தேச மாற்று வடிவமைப்பினை ஆய்வு செய்து கருத்துரை வழங்குதல்.

(இ) பாலப் பணிகளுக்கான ஒப்பந்தம் ஏற்கப்பட்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்படும் விரிவான மாற்று வடிவமைப்பினை ஆய்ந்து ஒப்புதல் வழங்குதல்.





(ஈ) பாலப் பணிகள் நடைபெறும்போது மண்ணின் தன்மை மாறுபட்டால், பொருத்தமான கடைக்கால் அமைப்பு முதலானவற்றை வடிவமைத்துக் கொடுத்தல்.

(உ) மிகப் பெரிய கனரக வாகனங்கள் சாலையில் செல்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து தக்க பரிந்துரை செய்தல்.

(ஊ) பிற துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் நிறைவேற்றப்படும் பால வேலைகளுக்கான வடிவமைப்பினை ஆய்ந்து ஒப்புதல் வழங்குதல்.

(எ) அரசிடமிருந்து பெறப்படும் குறிப்பிட்ட பணிகளின் வடிவமைப்பு மற்றும் ஆய்வுப் பணிகள் தொடர்பான கருத்துரை வழங்குதல்.

இவ்வலகில் தற்போது பாலப் பணிகளுக்கான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் கணினிமூலம் மேம்பட்ட மென்பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2005–06 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பாலப் பணிகளுக்கான மதிப்பீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | திட்டம்/வடிவமைப்பு | மதிப்பீடுகள்/ வடிவமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நபார்டு, ஹட்கோ, பகுதி–2 திட்டம் | 20 |
| 2. | இரயில்வே மேம்பாலங்களுக்கான மதிப்பீடுகள் மற்றும் மாற்று வடிவமைப்புகள் | 14 |
| 3. | ஆற்றுப் பாலங்கள் – மறு மதிப்பீடுகள் | 17 |
| | மொத்தம் | 51 |

இவ்வாறு, 2005–2006 ஆம் ஆண்டில் சுமார் ரூ.246 கோடி மதிப்புள்ள பாலப் பணிகளுக்கு மதிப்பீடுகள்/வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் அடங்கியுள்ள 34 பாலப் பணிகளில் 6 மேம்பாலப் பணிகள் முடிவடைந்துள்ளன. 13 ஆற்றுப் பாலப் பணிகள் மற்றும் 7 மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 21

2006–07 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவிருக்கும் பாலப் பணிகளுக்கான மதிப்பீடுகள் மற்றும் மாற்று வடிவமைப்புகள் பின்வருமாறு:

| வ. எண் | திட்டம்/வடிவமைப்பு | மதிப்பீடுகள்/ வடிவமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நபார்டு, மத்திய சாலை நிதி | 28 |
| 2. | சென்னை மாநகர வளர்ச்சி குழுமம் | 3 |
| 3. | மைய அரசு நிதி | 2 |
| 4. | இரயில்வே மேம்பாலங்களுக்கான மதிப்பீடுகள், மாற்று வடிவமைப்புகள் மற்றும் எதிர்கால இரயில்வே திட்டப் பணிகள் | 37 |
| 5. | பிற துறைகளுக்கான மதிப்பீடுகள் | 3 |
| | மொத்தம் | 73 |

இவ்வாறு, 2006–07 ஆம் ஆண்டில் வெவ்வேறு திட்டங்களின்கீழ் சுமார் ரூ.376 கோடி மதிப்பிலான 73 பாலப் பணிகளுக்கு ஆய்வு, வடிவமைப்பு/மதிப்பீடு தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.1.2 தொழில்நுட்பப் பயிற்சி

முந்தைய ஆண்டுகள் போலவே 2005-06 ஆம் ஆண்டிலும் இவ்வலகைச் சார்ந்த சில பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவுத்திறனை மேம்படுத்தும்பொருட்டு புதுதில்லியில் உள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் நொய்டாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலைப் பொறியாளர் பயிற்சி நிலையத்தில் நெடுஞ்சாலைப் பொறியியலில் பயிற்சி அளிக்கப்பட்டது. 2006-07ஆம் ஆண்டிலும், இவ்வலகின் பொறியாளர்களுக்கு தேவைக்கேற்ப இத்தகைய பயிற்சி அளிக்கப்படும்.

## 4.2 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

### 4.2.1 ஆராய்ச்சி நடவடிக்கைகள்

சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957 ஆம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைத் துறைக்குத் தேவையான பல தொழில்நுட்பச் சேவைகளை செய்து வருகிறது. பின்வரும் நான்கு



2006 ஆகஸ்ட் 21]

பிரிவுகளில் ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் வண்ணம் ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன.

(அ) மண் மற்றும் அடித்தளப் பொறியியல்

(ஆ) கற்கலவை மற்றும் கட்டுமானம்

(இ) நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்

(ஈ) போக்குவரத்து மற்றும் போக்குவரவு

2005–06 ஆம் ஆண்டில், பின்வரும் இரண்டு ஆராய்ச்சிப் பணிகளை பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது.

1. சாலை கட்டுமானப் பணிகளுக்கு அனல் மின்சார சாம்பல் கழிவு மற்றும் தாமிர தொழிற்சாலைக் கழிவு ஆகியவற்றை பயன்படுத்துதல்.
2. அடித்தளப் பணிகளுக்கு கல் குவாரி தூள் மற்றும் செயற்கை நார் பயன்படுத்துதல், தாமிர தொழிற்சாலைக் கழிவை நிலக்கீல் பணிகளுக்கு பயன்படுத்துதல்.

சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றி முறையாகப் பயன்படுத்திக்கொள்ள இத்தகைய ஆராய்ச்சிகள் உதவியாக இருக்கும். இவ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது நடைபெற்று வருகின்றன. ஆராய்ச்சி முடிவுகள் இந்த ஆண்டின் இறுதியில் தெரியவரும்.

நெடுஞ்சாலைத் துறையில் செயல்படுத்தப்படும் பணிகளிலிருந்து மாதிரிகள் (Samples) சேகரிக்கப்பட்டு, பின்வரும் சோதனைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

**சாலைப் பணிகள்:–**

1. கலிபோர்னியா தாங்கு திறன் விகிதம் (CBR) சோதனை மூலம் மண்ணின் உறுதிப்பாட்டை கண்டறிதல்.
2. மண் துகள்களின் கன வகைகள் மற்றும் மண்ணின் வரையறையைக் (Atterberg limit) கண்டறிதல்.
3. உயர்த்தப்பட்ட மண் கரையில் மண்ணின் நிலையான ஊடுருவும் சோதனை செய்தல்.

[2006 ஆகஸ்ட் 21

4. பகுதி அடர்த்தி மற்றும் முழு அடர்த்தி நிலக்கீல் காங்கிரீட்டின் கலவை விகிதம் பற்றிய குறிப்பு தருதல்.

5. நிலக்கீல் காங்கிரீட்டின் கலவை விகிதம் பற்றிய குறிப்பு தருதல்.

6. நிலக்கீலின் ஊடுருவும் சோதனை, இளகும் தன்மை, மீளும் இழுவைத் தன்மை ஆகிய சோதனைகள் மேற்கொள்ளுதல்.

7. சாலையின் மேடுபள்ளம் அறியும் பம்ப் இண்டகிரேடர் சோதனை செய்தல்.

8. போக்குவரத்து அளவு கணக்கெடுப்பு மற்றும் வண்டியின் அச்சு எடை கணக்கெடுப்பு ஆகியனமூலம் சாலை தளத்தின் கனத்திற்கு அறிவுரை தருதல்.

**பாலப் பணிகள்:–**

1. பாலப் பணிகளுக்குத் தேவையான பல்வேறு கட்டுமானங்களின் காங்கிரீட் கலவை விகிதத்தை தீர்மானித்தல்.

2. சிமெண்ட் சோதனை மற்றும் அவற்றின் ஒத்திசைவு தொடர்பான ஒருங்கிணைந்த சோதனைகள் மேற்கொள்ளுதல்.

3. காங்கிரீட் பகுதிகளில் சேதப்படுத்தாமல் அவற்றின் தரத்தை ஆய்வு செய்தல்.

4. **தூண்களின் தாங்குதிறனை சோதித்தல்.**

*2005–06* ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாலை மற்றும் பாலப் பணி சோதனைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:–

| | |
|---|---|
| **சாலைப் பணிகள்** | *3,227* |
| பாலப் பணிகள் | *233* |
| **மொத்தம்** | ***3,460*** |

இந்தச் சோதனைகள் அடிப்படையில் காணப்பட்ட குறைபாடுகளைக் களைய தக்க அறிவுரை வழங்கப்பட்டது.

*2006–07* ஆம் ஆண்டில் சுமார் *5,000* சோதனைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 21]

### 4.2.2 தரக் கட்டுப்பாட்டு செயல்பாட்டுத் திட்டம்

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ஆண்டுதோறும் பெருமளவு நிதி சாலை மற்றும் பாலப் பணிகளுக்காக செலவிடப்பட்டு வருகிறது. இப்பணிகளின் தரத்தினை உறுதி செய்யவும், பராமரிக்கவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல ஆய்வுகளை மேற்கொள்கிறது. இதன்மூலம் சாலை மற்றும் பாலங்களின் பயன்பாட்டுத் தன்மையை உறுதிப்படுத்தவும், நீட்டிக்கவும் உதவி வருகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் *13* உட்கோட்டங்கள் மற்றும் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மண்டல ஆய்வகங்கள்மூலம் தமிழகமெங்கும் சாலை மற்றும் பாலப் பணிகளில் தரக் கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தர நிர்ணய ஆய்வுகள் அவ்வப்பொழுது பரவலாக மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் தரமான வேலைகள் நடைபெறுவதை உறுதி செய்ய முடிகிறது. நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளும் சாலை மற்றும் பாலப் பணிகள் தரமானவையாக இருப்பதை உறுதிப்படுத்த இத்தகைய தர நிர்ணய செயல் திட்டம் உதவுகிறது.

### 4.2.3 தகவல் தொகுப்பு வங்கி

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில்நுட்ப விவரங்களையும் புள்ளி விவரங்களையும் உடனடியாக அறிந்துகொள்ள, தகவல் தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை நிறைவேற்றத் தேவையான அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இதில் *614* பெரிய பாலங்கள், *3,408* சிறு பாலங்கள், மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் *6,900* இடங்களில் *1,999* மற்றும் *2002* ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்களைப் பெற்று கணினியில் பதிவு செய்து சேமிக்கப்பட்டுள்ளன. பாலங்களுக்கு தனிக் குறியீடு (Unique) எண்ணிட்டு சீரிய முறையில் பராமரிக்க சிறப்பான செயல்திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. *2005* ஆம் ஆண்டு போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்கள் நிரந்தர கோட்டங்களிலிருந்து பெற்று கணினியில் சேமிக்கப்பட்டு வருகிறது.

### 4.2.4 பயிற்சித் திட்டம்

பொறியாளர்களின் தொழில்நுட்ப அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் நுட்பமான செயல்முறைகளை எடுத்துக் கூறுவதற்கு பயிற்சி

[2006 ஆகஸ்ட் 21

இன்றியமையாததாக அமைகிறது. சாலை மற்றும் பாலங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் நவீன தொழில்நுட்பங்களை அறிய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

தற்போது, துறையில் உள்ள அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மண், நிலக்கீல், கற்கலவை; போக்குவரத்து மற்றும் கணினி ஆகியவற்றில் ஒவ்வொரு மாதமும் 5 நாட்களுக்கு தரக் கட்டுப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறை திட்டமாகும். ஜனவரி 2005 முதல் இதுவரை நெடுஞ்சாலைத் துறையின் 184 பொறியாளர்களுக்கு தரக் கட்டுப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உதவிக் கோட்டப் பொறியாளர்கள் | 36 |
| உதவிப் பொறியாளர்கள் | 81 |
| இளநிலைப் பொறியாளர்கள் | 67 |
| **மொத்தம்** | **184** |

மேலும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு புதுதில்லியில் உள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையம் (CRRI), மற்றும் நொய்டாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலைப் பொறியாளர் பயிற்சி நிலையம் (NITHE) ஆகிய நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2003–2006 ஆண்டுகளில், 17 பொறியாளர்கள் மேற்காணும் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டிலும் இத்தகைய பயிற்சி அளிக்கப்படும்.

### 4.2.5 2006–07 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

சாலை மற்றும் பாலப் பணிகள் தொடர்பான அனைத்து பரிசோதனைகளையும் மேற்கொள்ளும் வசதி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளது. துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்து பெரிய பணிகளுக்கும் தேவைப்படும் தார் மற்றும் காங்கிரீட் கலவைகள் இவ்வாராய்ச்சி நிலையத்தால் நிர்ணயம் செய்யப்படுகிறது. பரிசோதனை மற்றும் தர நிர்ணயத்திற்குத் தேவையான மேம்பட்ட கருவிகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன. இதனை மேலும் மேம்படுத்தும் வகையில் 2006–07 ஆம் ஆண்டிற்கான பகுதி 2



2006 ஆகஸ்ட் 21]

திட்டத்தின்கீழ் ரூ.18.20 இலட்சம் மதிப்பில் அதிநவீன கருவிகளை வாங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தவிர, பின்வரும் ஆராய்ச்சிகளை 2006–07–ல் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1. நிலக்கீல் குளிர்கலவையை பயன்படுத்தி சாலைக் குழிகளை நிரப்பி அதன் தன்மையை ஆராய்ச்சி செய்தல்.
2. பருவ கால மாறுபாட்டிற்கேற்ப, சாதாரண நிலக்கீல் மற்றும் இரப்பர் சேர்த்து மேம்படுத்தப்பட்ட நிலக்கீலை உபயோகப்படுத்தி போடப்படும் சாலைத் தளத்தின் தன்மையை ஆய்வு செய்தல்.
3. கிழக்குக் கடற்கரை சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை–45 (கி.மீ. 0/0–56/0)களில் விபத்துகளை தவிர்க்கும்பொருட்டு தக்க ஆய்வு செய்தல்.

இவ்வாராய்ச்சிப் பணிகளுக்காக 2006–07 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. சிறப்புத் திட்டங்கள்

### 5.1 தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை (IT Expressway)

சென்னை அடையாறிலுள்ள மத்திய கைலாசிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலையிலுள்ள சிறுசேரி வரை 20.10 கி.மீ. நீள சாலையையும் 2 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரை சாலை இணைப்புச் சாலையையும் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் அரசு மற்றும் தனியார் பங்கேற்பின்கீழ் இயங்கும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இயங்குகிறது. இச்சாலை சர்வதேச தரத்தில் ஆறுவழித் தடங்களுடன் வேகம் குறைந்த வாகனங்களும் செல்லத்தக்க பாதைகளுடனும் இரண்டு சேவைப் பாதைகளைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இடவசதிக்கு ஏற்றவாறு சாலையின் மத்தியப் பகுதி அழகுபடுத்தப்படும். மேலும், நெடுஞ்சாலை ரோந்து, 24 மணிநேர அவசர மருத்துவ சிகிச்சை, உதவி மையங்கள், வாகன இழுவை அமைப்பு ஆகிய வசதிகள்

இச்சாலையில் ஏற்படுத்தப்படவுள்ளன. நிழல் தரும் மரங்களையும் நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்சாலையின் இருபுறமும் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு நல்ல இணைப்பை ஏற்படுத்துவதுடன் தொழில்துறை வளர்ச்சிக்கு குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் உதவிகரமாக இருக்கும்.

இச்சாலைப் பணிகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஆதாரங்களை, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் திரட்டிக் கொள்ளவும், பணி நிறைவடைந்தவுடன் குறிப்பிட்ட கால அளவுக்கு சுங்கம் வசூலித்துக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்த முதற்கட்டமாக ரூ.43 கோடியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றை துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 5.2 எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் (Ennore–Manali Road Improvement Project)

சென்னை – எண்ணூர் துறைமுக இணைப்புத் திட்டம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் வ்ணிக ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த "சென்னை – எண்ணூர் துறைமுக சாலை நிறுவனம்" என்ற பெயரில் புதிய நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. உள்வட்டச் சாலையின் வடக்குப் பகுதி, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைச் சாலை மற்றும் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை ஆகியவற்றை மாநில அரசு இத்திட்டத்திற்காக ஒப்படைத்துள்ளது. இதன்மூலம் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.30 கோடியாக இருக்கும்.

இத்திட்டத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படும்:–

1. எண்ணூர் விரைவுச் சாலையில் கடல் அரிப்பு தடுப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.
2. தற்போதுள்ள எண்ணூர் விரைவுச் சாலையினை இருபுறமும் சேவை சாலைகளுடன் 6.80 கி.மீ. நீளத்திற்கு 4 வழித்தடச் சாலையாக அகலப்படுத்துதல்.



3. திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையை மேம்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல்.
4. மணலி எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை மற்றும் உள்வட்டச் சாலையினை வலுப்படுத்துதல்.

கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதர பணிகள் ஆரம்ப நிலையில் உள்ளன.

## 6. துறையை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்

### 6.1 துறையை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறையினை மேம்படுத்த பன்னாட்டு ஆலோசகர்களின் (International Consultants) பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. அவற்றை செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

- நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாக சீரமைப்பு மற்றும் தலைமையக கூட்டாண்மை அலுவலகம் உருவாக்குதல்.
- திட்டமிடும் அலகு உருவாக்குதல், நெடுஞ்சாலைத் துறைக்கான நீண்டகால சாலைத் திட்டம் தயாரித்தல் மற்றும் சாலைப் பாதுகாப்பு திட்டம் உருவாக்குதல்.
- நீண்டகால சாலை மேம்பாட்டு நிதி ஏற்படுத்துதல்.
- நிலம் கையகப்படுத்தும் பிரிவினை ஏற்படுத்துதல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை நிலங்களைப் பாதுகாத்தல்.

### 6.2 சாலைப் பாதுகாப்புக் கொள்கை

சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஆலோசகர்களின் பரிந்துரைகளை செயல்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. சாலை விபத்துகளை குறைப்பதற்குத் தேவையான சாலை பாதுகாப்பு திட்டங்கள் குறிப்பாக பாதசாரிகள், மிதிவண்டியினர் மற்றும் பேருந்துகள் வசதியாக செல்வது உட்பட அனைத்து அம்சங்களுக்கும் தொழில்நுட்ப ரீதியாக தீர்வுகள் காணப்படும். மேலும், இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- விபத்துகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் சேகரித்தல், ஆராய்தல் பணிகளை மேம்படுத்துதல் மற்றும் புள்ளி விவரங்களை சாலை சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் பகிர்ந்துகொள்ளுதல்.
- சாலை பாதுகாப்பு ஆய்வுகள், அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களை கண்டறிதல் மற்றும் அதனை மேம்படுத்த புதிய திட்டங்கள், வடிவமைப்பு மற்றும் கட்டுமானத் தொழில்நுட்பங்களை செயல்படுத்துதல்.
- போக்குவரத்துப் பொறியியல் பிரிவை வலுப்படுத்தி தேவையான தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் நவீன தொழில்நுட்பக் கருவிகள் வழங்குதல்.
- சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வேகத் தடைகளால் ஏற்படும் விபத்தினை தவிர்க்க சில மாறுதல்களுடன் கூடிய புதிய மற்றும் ஒரே மாதிரியான வேகத் தடைகளை தேவைப்படும் இடங்களில் அமைத்து பராமரித்தல்; எதிர்வரும் காலங்களில் துறையின் முன்அனுமதியின்றி சாலைகளில் வேகத் தடை அமைப்போர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்தல்.
- சாலைப் பாதுகாப்பு தொடர்பாக மாநிலம் முழுவதும் சுமார் 300 சாலை விபத்து இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 50 இடங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு சுமார் ரூ.37.89 கோடி செலவில் தொழில்நுட்பத் தீர்வுகளுடன் விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் சாலை சந்திப்பு மேம்பாடு, சாலை நேர்ப்பாடு மாற்றுதல் முதலியன அடங்கும்.

### 6.3 தகவல் தொழில்நுட்ப மேம்பாடு, கொள்முதல் மற்றும் செயலாக்கம்

துறையை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து அலகுகளுக்கும் தேவைப்படும் கணினி மற்றும் மென்பொருட்களை கொள்முதல் செய்து வலுவான தகவல் தொழில்நுட்ப அமைப்பை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது. மேலும், புவியியல் தகவல் முறையில் (GIS) சாலைகளைப் பற்றிய புள்ளிவிவரங்கள் கணினிமூலம் அறிய வகை செய்யப்படும்.



### 6.4 சாலை மேலாண்மைத் திட்டம் (Road Management System)

மாநிலத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் அடங்கிய முக்கிய சாலைக் கட்டமைப்பிற்கான, சாலை மேலாண்மைத் திட்டம் (RMS) உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உதவியினை அளிக்க ஆலோசகர்கள் (Consultant) நியமிக்கப்பட்டுள்ளனர். பாலங்கள், சாலைகள், போக்குவரத்து செறிவு பற்றிய விரிவான புள்ளிவிவரங்கள் மற்றும் போக்குவரத்து விளக்க விவரப் பட்டியல் முதலியன சேகரிக்கப்பட்டு, துறைப் பணிகளை தேர்வு செய்யவும், எதிர்கால திட்டங்களை வகுக்கவும் பயன்படுத்தப்படும்.

### 6.5 சாலை பயன்படுத்துவோர் கருத்தாய்வு

சாலை மற்றும் பாலங்களின் நிலை பற்றி சாலை பயன்படுத்துவோர் கருத்துகள் தொடர்பாக மாநிலம் முழுவதும் கருத்தாய்வு நடத்தப்பட்டது. இக்கருத்தாய்வின்மூலம் தெரிய வந்துள்ள விவரங்கள், எதிர்கால சாலைத் திட்டங்களை வகுக்கும்போது கருத்தில் கொள்ளப்படும்.

## 7. தமிழ்நாடு சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்புத் திட்டங்களை சிறந்த முறையில் உருவாக்கி செயல்படுத்தவும் திட்டங்களுக்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களைத் திரட்டவும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை நிர்வகிக்கவும் தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பினை அரசு 14–12–2004 அன்று உருவாக்கியது. இக்கழகம் கம்பெனிகள் சட்டம் 1956–ன்படி பொதுத் துறை நிறுவனமாக ரூ.5 கோடியினை மூலதனமாகக் கொண்டு 4–3–2005 அன்று பதிவு செய்யப்பட்டது. பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் (PMGSY), பாரத் நிர்மாண் மற்றும் இதர ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்களை நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக செயல்படுத்த இக்கழகம் ஒருங்கிணைப்பு அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பாரத் நிர்மாண் திட்டம் ஒரு வலிமையான கிராமப்புற இந்தியாவை உருவாக்குவதற்கான திட்டமாகும். இத்திட்டத்தில் 6 வகையான பிரிவுகளில் கிராமப்புற மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது; இதில் கிராமப்புறங்களில் இணைப்புச்

[2006 ஆகஸ்ட் 21

சாலைகளை ஏற்படுத்துவதும், மேம்படுத்துவதும் முக்கியமான அம்சமாகும்.

கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் 2005–2006 முதல் 2008–2009 முடிய 4 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் மொத்தம் 1,94,130 கி.மீ கிராமச் சாலைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் 11,115 கி.மீ. சாலைகளை மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது தற்சமயம் 2 கட்டங்களாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 4,122 கி.மீ. சாலைகளை மேம்படுத்த பிரேரணை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. 2 ஆம் கட்டமாக மீதமுள்ள 6,993 கி.மீ. சாலைகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தச் சாலை மேம்பாட்டுப் பணிகளை மூன்றாண்டுகளுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியில் சுமார் 1,000 கிலோ மீட்டர் நீள கடற்கரை உள்ளது. இக்கடற்கரைப் பகுதியில் மைய அரசின் கட்டுப்பாட்டில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், மாநில அரசின்கீழ் 15 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டிலிருந்த துறைமுகத் துறையானது, தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/1996) இன்படி 18–3–1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியமாக மாற்றப்பட்டது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாரியத்தின் தலைவராக நெடுஞ்சாலை மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் அவர்கள் தற்போது செயல்பட்டு வருகிறார்.

### 8.1. தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்கள்

**அ) வாரியத்தால் நிர்வகிக்கப்படுபவை**

1. கடலூர்
2. நாகப்பட்டினம்
3. பாம்பன்



2006 ஆகஸ்ட் 21]

4. இராமேசுவரம்
5. வாலிநோக்கம்
6. கன்னியாகுமரி
7. குளச்சல்

**ஆ) தனியார் முதலீட்டின் மூலம் நிர்வகிக்கப்படுபவை**

1. காட்டுப்பள்ளி
2. எண்ணூர் சிறுதுறைமுகம்
3. திருச்சோபுரம்
4. பி ஓய் 03 எண்ணெய் வளப்பகுதி
5. திருக்கடையூர்
6. புன்னக்காயல்
7. மணப்பாடு
8. கூடங்குளம்

வாரியத்தால் நிர்வகிக்கப்படும் 7 துறைமுகங்களில், நாகப்பட்டினம் துறைமுகத்தில் சிமெண்ட், சமையல் எண்ணெய் மற்றும் தேங்காய் பிண்ணாக்கு ஆகியவற்றின் ஏற்றுமதி / இறக்குமதிக்கான கப்பல்கள் வருகை தருகின்றன. கடலூர், குளச்சல், இராமேசுவரம் மற்றும் வாலிநோக்கம் ஆகிய துறைமுகங்களில் செயல்பாடு ஏதுமில்லை. பாம்பன் கால்வாய் வழியாக சிறு கலன்கள் செல்வதற்கு வழிகாட்டும் பணி மட்டும் மேற்கொள்ளப்படுகிறது. கன்னியாகுமரி துறைமுகம் சுற்றுலாப் பயணிகளின் படகுப் போக்குவரத்திற்காக பயன்படுகிறது.

தனியாரால் இயக்கப்படும் துறைமுகங்கள் தொழில் முனைவோரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளன. இத்துறைமுகங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய அனைத்தும் தொடர்புள்ள அந்நிறுவனத்தின் பொறுப்பாகும். தனியாரால் இயக்கப்படும் துறைமுகங்களில் எண்ணூர் சிறு துறைமுகம் (திருவள்ளூர்), பி ஓய் 03 எண்ணெய் வளப்பகுதி (கடலூர்), திருக்கடையூர் (நாகப்பட்டினம்) மற்றும் கூடங்குளம் (திருநெல்வேலி) ஆகிய நான்கும் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள காட்டுப்பள்ளி (திருவள்ளூர்), புன்னக்காயல் (தூத்துக்குடி), மணப்பாடு (தூத்துக்குடி) மற்றும் திருச்சோபுரம் (கடலூர்) ஆகிய நான்கும் இதுவரை செயல்படத் துவங்கவில்லை.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறு துறைமுகங்களும் கப்பல் நிறுத்தும் தள வசதி இல்லாதவை. எனவே, கப்பல்கள் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்படுகின்றன. நங்கூரமிட்டு கடலில் நிறுத்தப்படும் கப்பல்களிலிருந்து கரைக்கும், கரையிலிருந்து கப்பல்களுக்கும் சரக்குகள் சிறு படகுகள் / மிதவைகள்மூலமாக இறக்கி ஏற்றப்படுகின்றன. எண்ணூர் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்களில் கப்பலிலிருந்து திரவ அமோனியா மற்றும் நாப்தா நேரடியாக கடலுக்கடியில் புதைக்கப்பட்டுள்ள குழாய்களின்மூலமாக கரையிலுள்ள சேமிப்பு கலத்திற்கு அனுப்பப்படுகிறது.

**8.2 சிறு துறைமுகங்களில் பின்வரும் சரக்குகள் கையாளப்படுகின்றன:**

ஏற்றுமதி:

கச்சா எண்ணெய், சிமெண்ட், பொது சரக்குகள்.

இறக்குமதி:

சமையல் எண்ணெய், திரவ அமோனியா, நாப்தா, கச்சா எண்ணெய், இயந்திரப் பொருட்கள், தேங்காய் பிண்ணாக்கு, பொது சரக்குகள்.

**8.3 சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான கொள்கை**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிற்சாலைகள் மிக முக்கியமானதென தமிழ்நாடு கடல்சார் வாரியம் உணர்ந்துள்ளது. ஆகவே, துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் தனிப்பட்ட உபயோகத்திற்கென துறைமுகங்கள் / தோணித் துறைகள் / நங்கூர மிதவைகள் ஆகியவற்றை கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (BOOT) முறையில் தனியார் பங்கேற்பின்மூலமாக அமைப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் தொழிற்சாலைகளுக்கும் துறைமுகங்களுக்குமான நெருங்கிய தொடர்பினை உணர்ந்து தனியார் துறைமுகங்கள், தோணித் துறை, நங்கூர மிதவைகள் ஆகியவற்றை துறைமுகம் சார்ந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் அனல்மின் நிலையங்களுக்காக அமைக்க ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்காக சிறு துறைமுக கொள்கையினை தமிழ்நாடு அரசு வகுத்து செயல்படுத்தி வருகிறது.





**8.4. துறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :**

- நிலக்கரி, நாப்தா, எண்ணெய், இயற்கை வாயு ஆகியவற்றை துறைமுகம் சார்ந்த அனல்மின் நிலையங்கள் தமது தனி உபயோகத்திற்காக இறக்குமதி செய்வதற்கான வசதிகளை அளித்தல்.
- ஏற்றுமதி சார்ந்த தொழில்களையும் துறைமுகம் சார்ந்த தொழில்களையும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- நெடுஞ்சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகளின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் கிழக்குக் கடலோரப் பகுதியில் போக்குவரத்து வசதிகளை உருவாக்குதல்.
- சுற்றுலா, உல்லாசப் படகு மற்றும் கரையோர வாணிபம் ஆகியவற்றை ஊக்குவித்தல்.
- கப்பல் பழுதுபார்த்தல், கப்பல் உடைத்தல் மற்றும் மிதவை கலன்கள் கட்டுவதற்கான வசதிகளை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் வசதி செய்தல்.

**மேற்கண்ட அம்சங்களை நிறைவேற்ற ஏதுவாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன :**

- சிறு துறைமுகங்களை மேம்படுத்திட பொது மற்றும் தனியார் பங்கேற்பினை அனுமதித்தல்.
- துறைமுகங்கள், தோணித் துறைகளை கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல் குறித்து வெளிப்படையான (Transparent) வழிமுறைகள் வகுக்கப்பட்டு தனியார் பங்கேற்பின்மூலம் ஒவ்வொரு கருத்துருவும் அதன் தகுதியின் அடிப்படையில் பரிசிலிக்கப்படும்.
- உலக அளவிலான அறிவிப்புகள், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதின்மூலம் வெளிப்படையான தன்மை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.
- இத்திட்டங்கள், கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் செயல்படுத்தப்படும்.
- மேற்கூறிய திட்டங்கள் முதலில் 30 ஆண்டுகளுக்கும் பின்னர் 50 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்.

- கையாளப்படும் சரக்குகளுக்கு நியாயமான கட்டணத் தொகையினை இவ்வாரியம் வசூலிக்கும்.

துறைமுகங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இடையே உள்ள நல்லுறவினை மேலும் மேம்படுத்துவதும் மற்றும் துமைமுகத்தின் மேம்பாட்டினை தொழில் வளர்ச்சியுடன் இணைந்து செயல்படுத்துவதும் இவ்வாரியத்தின் நோக்கம் ஆகும். தனியார் பங்கேற்கும் வகையில் அதிக அளவிலான தனிப்பட்ட துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதே இவ்வாரியத்தின் குறிக்கோளாகும்.

## 8.5 மேம்பாட்டுப் பணிகள்

***வாரியத்தால் நிர்வகிக்கப்படும் துறைமுகங்கள்***

### 8.5.1. நாகப்பட்டினம் துறைமுகம்

நாகப்பட்டினம் துறைமுகத்தில் தனியார் நிறுவனத்தால் சமையல் எண்ணெய் கையாள்வதற்கான சேமிப்புக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. எண்ணெய் கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன; இத்துறைமுகத்திலிருந்து சிமெண்ட்டும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேங்காய் பிண்ணாக்கும் தற்போது இறக்குமதி செய்யப்படுகிறது. திருவாளர்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தினர் பனங்குடியில் அமைந்துள்ள தங்களது கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக ஆண்டொன்றுக்கு சுமார் 4.00 இலட்சம் மெட்ரிக் டன்கள் கச்சா எண்ணெயை கையாள தோணித்துறையை நிறுவியுள்ளனர். இதன்மூலம் தொடர்ந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகின்றனர்.

இத்துறைமுகத்தின் கட்டமைப்புகளான பாதுகாப்புச் சுவர், நீர்த் தடுப்பி, சரக்குமேடை போன்றவையும் சுனாமியால் பெருமளவு சேதமடைந்தன. ஆசிய வளர்ச்சி வங்கி, சேதமுற்ற கட்டமைப்புகளை புனரமைப்பதற்காக ரூ.43.52 கோடி நிதி உதவி அனுமதித்துள்ளது. மேலும், வடக்கு மற்றும் தெற்குப்புற பாதுகாப்புச் சுற்றுச் சுவரினை சீரமைப்பதற்காக ரூ.2.40 கோடியினை அசைடு (ASIDE) திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இந்நிதி உதவியுடன் இப்பணிகள் முடிவடைந்தவுடன் கடுவையாற்றின் ஆழம் சுமார் 4.00 மீட்டர் அளவிற்கு அதிகரிக்கும். இதன்மூலம் 500 மெட்ரிக் டன் அளவுள்ள கலன்கள் நேரடியாக இத்துறைமுகத்திற்கு வரமுடியும். சிமெண்ட், கிளிஞ்சல்கள், சர்க்கரை, சமையல் எண்ணெய், உப்பு மற்றும் பொது



சரக்குகள் ஆகியவற்றை இத்துறைமுகத்தில் கையாள இயலும். மைய அரசின் உதவியுடன் இத்துறைமுகத்தை மேலும் மேம்படுத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 8.5.2 கடலூர் துறைமுகம்

கடலூர் துறைமுகத்தினை பொது மற்றும் தனியார் பங்கேற்பின் மூலம் மேம்படுத்துவது பற்றி அரசு தற்போது பரிசீலித்து வருகிறது. இதற்காக, திருவாளர்கள், யூடிஐ வங்கி மற்றும் ரைட்ஸ் லிமிடெட் குழுமத்தை தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்கென இவ்வாரியம் நியமனம் செய்துள்ளது. இத்தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் நிறுவனம், ஆரம்பகட்ட தெரிவு அறிக்கை, வரைவு ஒப்பந்தப்புள்ளி ஆவணம், வரைவு சலுகை ஒப்பந்தம் மற்றும் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஆகியவற்றை தயாரித்து அளித்துள்ளது. பொது மற்றும் தனியார் பங்கேற்பின்மூலம் கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கவுள்ளது.

சுனாமியின்போது துறைமுக கட்டமைப்புகளான சரக்கு கொட்டகைகள், நீர்த்தடுப்பி ஆகியவை கடுமையாக சேதமடைந்தன. ஆசிய வளர்ச்சி வங்கியானது இக்கட்டமைப்புகளை புனரமைப்பதற்காக ரூ.14.41 கோடி நிதி உதவி அனுமதித்துள்ளது. இப்பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளன. இவை முடிவடைந்தபின் கடலூர் துறைமுகத்தின் ஆழம் 4.00 மீட்டர் அளவுக்கு அதிகரிக்கும். இதனால், 500 மெட்ரிக் டன்கள் எடையுள்ள கலன்களை இத்துறைமுகத்தில் இயக்கிட வசதி ஏற்படும். நிலக்கரி, பெட்ரோலியப் பொருட்கள், இரசாயன பொருட்கள், சர்க்கரைப் பாகு ஆகியவற்றையும் இத்துறைமுகத்தில் கையாள இயலும்.

### 8.5.3 குளச்சல் துறைமுகம்

குளச்சல் துறைமுகம் கரையிலிருந்து 1 கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே 15 மீட்டருக்கும் அதிகமான ஆழத்துடன், சர்வதேச கப்பல் வழித்தடத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது. மேற்கண்ட சிறப்புத் தன்மைகளின் அடிப்படையில், திருவாளர்கள் ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "போர்ட்ஸ் விஷன் 2020" அறிக்கையின்படி, சரக்குப் பெட்டகங்களை கையாளுவதற்கு குளச்சல் துறைமுகம் தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 1998 ஆம் ஆண்டில் குளச்சல்

துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு ஆலோசகர் மூலம் விரிவான சாத்தியக்கூறு அறிக்கையினை தயாரித்தது. இந்த அறிக்கை 2000 ஆம் ஆண்டில் மலேசிய அரசின் கட்டுமானத் தொழில் மேம்பாட்டு வாரியத்தினால் பசுமைவளத் துறைமுகமாக மேம்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டது. இத்துறைமுகத்தினை மேம்படுத்த ஆர்வம் காட்டிய மலேசிய அரசு பின்னர் அதற்குரிய நிதி ஆதாரத்தினை திரட்ட இயலாததால் இத்திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை. எனினும், இத்திட்டத்தின் சிறப்புத் தன்மை மற்றும் வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு குளச்சல் துறைமுகத்தை பெட்டகங்களை கையாளும் துறைமுகமாக மேம்படுத்துவதின் அவசியத்தை மைய அரசிடம் வலியுறுத்தி வருகிறது. மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் மைய அரசின் உதவியைக் கோரியுள்ளது.

### 8.6 தனியார் முதலீட்டின்மூலம் செயல்படும் துறைமுகங்கள்

#### 8.6.1 திருச்சோபுரம் துறைமுகம்

திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தாரால் நிறுவப்பட உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக திருச்சோபுரம் சிறுதுறைமுகமாக அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகம் சுங்கத் துறைமுகமாகவும் மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இங்கு கடல்சார் கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கான சுற்றுச்சூழல் தடையின்மை சான்றிதழ் மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது. தனியார் முதலீட்டின் மூலம் இத்துறைமுகத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

#### 8.6.2 மணப்பாடு துறைமுகம்

திருவாளர்கள் இந்தியன் பவர் பிராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தார் வேம்பாரில் நிறுவ இருக்கும் 2,000 மெகாவாட் இயற்கை வாயு மூலமான மின் உற்பத்தி திட்டத்திற்கு, ஆண்டொன்றுக்கு தேவைப்படும் 2.5 மில்லியன் டன்கள் திரவ இயற்கை வாயுவை திருவாளர்கள் இந்தியன் கேஸ் லிமிடெட் நிறுவனம் மூலமாக கையாளுவதற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு, சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை துரிதமாக செயல்படுத்துவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.



### 8.7 சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் இராமேசுவரத்தினைக் கடக்கும் பாக்ஜலசந்தியையும் மன்னார் வளைகுடாவையும் கப்பல் செல்லும் வகையில் இணைக்கப்படவுள்ள கால்வாய் திட்டமாகும். இந்தியாவின் கிழக்கு கடற்கரையினையும் மேற்கு கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் தூரத்தினைக் (Nautical Miles) குறைக்கும் வகையில் இத்திட்டம் அமையும். மேலும், இதனால் 36 மணி நேர கப்பல் பயண நேரமும் குறையும். இந்நோக்கத்திற்காக மைய அரசு சேதுசமுத்திரக் கழகத்தினை 6-12-2004 அன்று நிறுவியுள்ளது. இக்கால்வாயைத் தோண்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதற்குத் தேவையான உதவிகளை மாநில அரசு செய்து வருகிறது.

## 9. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல்மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் மொத்த நிலக்கரியை ஏற்றி வருவதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 11-4-1974 அன்று கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி நிறுவப்பட்டது.

### 9.1 நிலக்கரி ஏற்றும் மற்றும் இறக்கும் துறைமுகங்கள்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை சொந்த கப்பல்கள் மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள்மூலமாக ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு கொண்டு வந்து இறக்கப்படுகிறது.

### 9.2 சொந்த கப்பல்கள் மற்றும் வாடகைக் கப்பல்கள்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், குறைந்த ஆழத்தில் செல்லத்தக்கதாக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட எம்.வி. தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ் பெரியார் மற்றும் எம்.வி. தமிழ் காமராஜ் ஆகிய மூன்று சொந்தக் கப்பல்களை இயக்கி வருகிறது. இதன்மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு நிலக்கரி கொண்டுவரும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர, தேவைக்கேற்ப இந்திய கப்பல் நிறுவனங்களிடமிருந்து ஐந்து கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி வருகிறது. தற்சமயம் இந்நிறுவனம், ஒரு தானியங்கி அதிநவீன கப்பல், கிரேன் இல்லாத ஒரு பெரிய கப்பல் மற்றும் கிரேனுடன் கூடிய மூன்று

[2006 ஆகஸ்ட் 21

பெரிய வகைக் கப்பல்கள் ஆகியவற்றை நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி உள்ளது.

### 9.3. நிலக்கரி கையாளுதல் மற்றும் மொத்த வருவாய்

இக்கழகமானது, 2005–2006–ல் 132.68 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக எடுத்து வந்துள்ளது. 2006–2007–ல் மின் வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலக்கரி அளவின்படி 130.55 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்துவர திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 2006–2007–ல் ஒதுக்கப்பட்டுள்ள நிலக்கரியின் அளவு குறைந்ததால், சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு இலக்கு குறைவாக உள்ளது.

இக்கழகம், கடந்த ஐந்து வருடங்களில் கையாண்ட நிலக்கரியின் அளவு, ஈட்டிய மொத்த வருவாய் மற்றும் இலாப/நட்ட விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | எடுத்துவரப்பட்ட நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன் இலட்சத்தில்) | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்) | நிகர இலாபம் / இழப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2001–2002 | 146.21 | 340.30 | (–) 1.93 |
| 2002–2003 | 146.12 | 304.74 | (–) 14.66 |
| 2003–2004 | 142.11 | 391.99 | (+) 8.57 |
| 2004–2005 | 141.40 | 453.39 | (–) 1.28 |
| 2005–2006 | 132.68 | 473.72 | (+) 1.29 |

### 9.4. தூத்துக்குடி மற்றும் எண்ணூர் துறைமுகப் பணிகள்

தூத்துக்குடி துறைமுகத்தில், 1983 ஆம் ஆண்டிலிருந்து நிலக்கரி இறக்கப்பட்டு வருகிறது. இத்துறைமுகத்தில் இரண்டு கப்பல் நிற்கும் தளங்கள் தமிழ்நாடு மின்வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தளங்களில் அமைக்கப்பட்டுள்ள கன்வேயர் பெல்ட் மூலமாக கிரேனுடன் கூடிய கப்பல்களிலிருந்து நிலக்கரி இறக்கப்பட்டு நேரடியாக தூத்துக்குடி அனல் மின்நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

எண்ணூர் துறைமுகத்தில் 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் கப்பல்கள் மூலம் சரக்குகள் இறக்கப்பட்டு வருகிறது. பாரதீப் – எண்ணூர் பாதையில் கப்பல்களின் இயக்கச் செலவுகளை குறைக்கும்பொருட்டு அதிநவீன



2006 ஆகஸ்ட் 21]

கிரேனுடன் கூடிய தானியங்கி கப்பல் மற்றும் கிரேன் இல்லாத கப்பல்களில் தானியங்கி இயந்திரம்மூலம் பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரி ஏற்றப்பட்டு எண்ணூர் துறைமுகத்தில் மிக விரைவாக கன்வேயர் பெல்ட்மூலம் சிறப்பான முறையில் இறக்கப்படுகிறது.

### 9.5. பணியாளர் நலன்

1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)–ன்படி பணியாளர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட சம்பளம் 1–4–2002–லிருந்து முன்தேதியிட்டு வழங்குவதற்கான அரசு ஆணை 17–7–2006 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

### 9.6. கன்னியாகுமரி படகுத் துறை

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி ஏற்பட்ட சுனாமி பேரலையினால் படகுத்துறை சேதமடைந்ததோடு கழகத்திற்குச் சொந்தமான மூன்று படகுகளில், இரண்டு படகுகள் மிகவும் சேதமடைந்தன. எம்.எல். விவேகானந்தா என்ற மூன்றாவது படகு சுனாமி அலையால் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போய்விட்டது. எம்.எல். பாகீரதி மற்றும் எம்.எல். தாமிரபரணி ஆகிய இரண்டு படகுகள் பழுதுபார்க்கப்பட்டு 2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 5 ஆம் தேதியிலிருந்து மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்ட எம்.எல். தாமிரபரணி மற்றும் எம்.எல். பாகீரதி ஆகிய இரண்டு படகுகளுக்குப் பதிலாக, மைய அரசின் சுற்றுலாத் துறையிடமிருந்து நிதியுதவி பெற்று இரண்டு புதிய படகுகள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 9.7. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் 16–9–1998 அன்று தூத்துக்குடியில் துவக்கப்பட்டது. இப்பயிற்சி நிறுவனத்தில் ஆரம்ப காலத்தில் மாலுமி பயிற்சி மற்றும் கடல்சார் இயந்திரவியல் சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தன. தற்பொழுது, கடல்சார் இயந்திரவியல் பயிற்சிக்குப் பதிலாக, பொதுமுறை மாலுமி


[2006 ஆகஸ்ட் 21

பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுவரை 14 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 510 பேர் மாலுமிப் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி நிறுவனத்தால், மாலுமிகளின் சிறப்புப் பயிற்சி உரிமம் பதிவு செய்தல் மற்றும் கப்பல் வேலைகளின் கண்காணிப்பு (STCW 95) தேவைக்கேற்ப, "தன்னிலை பாதுகாப்பு உக்தி", "கடலில் முதலுதவி செய்தல்", "தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு", "எண்ணெய் கப்பல் பாதுகாப்பு" மற்றும் "அடிப்படை தீயணைப்பு" ஆகிய ஐந்து பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 21]


## ஆண்டு திட்ட ஒதுக்கீடு 2006 - 07



(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| ■ | தலைமைப் பொறியாளர் (பொது) | ரூ. 1289.43 |
| □ | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் | ரூ. 555.64 |
| ■ | தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) | ரூ. 363.00 |
| □ | தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) | ரூ. 228.95 |
| □ | தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) | ரூ. 87.69 |

## சாலைகளின் நீளம்




| | | |
|---|---|---|
| □ | தேசிய நெடுஞ்சாலைகள் | 4254 கி.மீ |
| ■ | மாநில நெடுஞ்சாலைகள் | 6849 கி.மீ |
| ■ | முக்கிய மாவட்ட சாலைகள் | 7569 கி.மீ |
| ■ | இதர மாவட்ட சாலைகள் | 41002 கி.மீ |
| ■ | கரும்பு அபிவிருத்தி திட்ட சாலைகள் | 1746 கி.மீ |

# இணைப்பு II

## அறிவிப்புகள் 2006–2007 இணைப்பு

*(408 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### நபார்டு வங்கியால் ஒப்புதல் வழங்கப்பட்ட ரூ. 100 இலட்சத்திற்கும் உள்பட்ட மதிப்பீட்டில் உள்ள பாலப் பணிகளின் விவரம்

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | சதராஸ்–செங்கல்பட்டு–காஞ்சிபுரம்–அரக்கோணம்–திருத்தணி சாலையில் கி.மீ. 0/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 70.00 |
| 2 | காஞ்சிபுரம் | புக்கத்துறை–உத்திரமேரூர் சாலையில் கி.மீ. 6/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 3 | காஞ்சிபுரம் | புக்கத்துறை–உத்திரமேரூர் சாலையில் கி.மீ. 0/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 95.00 |
| 4 | காஞ்சிபுரம் | சிங்கபெருமாள் கோயில்–ஸ்ரீபெரும்புதூர்–திருவள்ளூர்–ரெட்ஹில்ஸ் சாலையில் கி.மீ. 23/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 5 | தூத்துக்குடி | ஆழ்வார்திருநகரி–நாசரேத்–சாத்தான்குளம்–இட்டாமொழி–வள்ளியூர் சாலையில் கி.மீ. 14/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 6 | கோயம்புத்தூர் | உடுமலைப்பேட்டை– குமரலிங்கம் சாலையில் கி.மீ. 14/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்–சிறுவாணி சாலையில் கி.மீ. 15/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 8 | கோயம்புத்தூர் | அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ. 15/4–6–ல் சிறு பாலம் கட்டுதல் | 30.00 |
| 9 | கோயம்புத்தூர் | திருப்பூர்–சோமனூர் சாலையில் கி.மீ. 4/0–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 10 | கோயம்புத்தூர் | திருப்பூர்–சோமனூர் சாலையில் கி.மீ. 4/0–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 70.00 |
| 11 | கோயம்புத்தூர் | சேலம்–கொச்சின் சாலையில் கி.மீ. 152/0–ல் குறுகிய பாலத்தை அகலப்படுத்துதல் | 30.00 |

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 12 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்–சிறுவாணி சாலையில் கி.மீ. 15/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 13 | கோயம்புத்தூர் | சேலம்–கொச்சின் சாலையில் கி.மீ. 153/2–ல் குறுகிய பாலத்தை திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 14 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்–சிறுவாணி சாலையில் கி.மீ. 15/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 15 | கோயம்புத்தூர் | உடுமலைப்பேட்டை–சின்னார் சாலையில் கி.மீ. 15/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 16 | கோயம்புத்தூர் | அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ. 98/4–ல் சிறு பாலம் கட்டுதல் | 15.00 |
| 17 | கோயம்புத்தூர் | காரமடை–திருமுகை சாலையில் கி.மீ. 7/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 45.00 |
| 18 | கோயம்புத்தூர் | அவிநாசி–மேட்டுப்பாளையம் சாலையில் கி.மீ. 34/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 19 | கோயம்புத்தூர் | அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ. 25/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 20 | கோயம்புத்தூர் | ஸ்டேன்மோர்–சிறுகுண்டா சாலையில் 3/2 முதல் ஐயர்வாடி இணைப்புச் சாலையில் கி.மீ. 3/6–ல் குறுகிய பாலத்தை அகலப்படுத்திக் கட்டுதல் | 17.00 |
| 21 | கோயம்புத்தூர் | கேஸ்டில் கிராப்ட் சாலை முதல் ஐயர்வாடி–சிறுகுண்டா சாலையில் கி.மீ. 0/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 22 | கோயம்புத்தூர் | உடுமலைப்பேட்டை–பல்லடம் சாலையில் கி.மீ. 7/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 23 | கோயம்புத்தூர் | அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ. 65/6–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 24 | கோயம்புத்தூர் | சூளூர் இரயில்வே இணைப்புச் சாலையில் கி.மீ. 1/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 25 | கோயம்புத்தூர் | சூளூர் சேலக்கரச்சல் சாலையில் கி.மீ. 5/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 85.00 |



| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 26 | கோயம்புத்தூர் | அம்பரபாளையம்–சேத்துமடை சாலையில் கி.மீ. 14/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 46.00 |
| 27 | திண்டுக்கல் | மேட்டூர்–பழங்காநூத்து–ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–காங்கேயம்–ஈரோடு சாலையில் கி.மீ. 12/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 28 | திண்டுக்கல் | மேட்டூர்–பழங்காநூத்து–ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–காங்கேயம்–ஈரோடு சாலையில் கி.மீ. 13/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 29 | திண்டுக்கல் | பழைய தே.நெ. சாலையில் கி.மீ. 407/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 30 | திண்டுக்கல் | திண்டுக்கல்–நத்தம்–சிங்கம்புணரி–திருப்பத்தூர்–காரைக்குடி சாலையில் கி.மீ. 8/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 31 | திண்டுக்கல் | மதுரை–நத்தம் சாலையில் கி.மீ. 24/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 32 | திண்டுக்கல் | மேட்டூர்–பழங்காநூத்து–ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–காங்கேயம்–ஈரோடு சாலையில் கி.மீ. 22/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 33 | திண்டுக்கல் | திண்டுக்கல்–குஜிலியம்பாளையம்–கரூர் சாலையில் கி.மீ. 36/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 34 | விருதுநகர் | கிருஷ்ணன்கோயில்–கொம்மப்பட்டி சாலையில் கி.மீ. 4/10–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 35 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர்–சிவகாசி–விருதுநகர்–அருப்புக்கோட்டை–திருச்சுழி–நரிக்குடி–பார்த்திபனூர் சாலையில் கி.மீ. 33/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 36 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர்–சிவகாசி–விருதுநகர்–அருப்புக்கோட்டை–திருச்சுழி–நரிக்குடி–பார்த்திபனூர் சாலையில் கி.மீ. 24/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 37 | கன்னியாகுமரி | பாலமூர் சாலையில் கி.மீ. 4/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 38 | கன்னியாகுமரி | பெருஞ்சிலம்பு சாலையில் கி.மீ. 0/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 39 | கன்னியாகுமரி | பத்மநாபபுரம்–மேக்காமண்டபம் சாலையில் கி.மீ. 1/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 40 | கன்னியாகுமரி | ஆரல்வாய்மொழி–நெடுமாங்காடு சாலையில் கி.மீ. 4/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 41 | மதுரை | ஆண்டிப்பட்டி–வளையப்பட்டி சாலையில் கி.மீ. 17/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 42 | மதுரை | அட்டப்பட்டி–பூதமங்கலம் சாலையில் கி.மீ. 0/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 43 | மதுரை | அட்டப்பட்டி–பூதமங்கலம் சாலையில் கி.மீ. 1/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 44 | மதுரை | நீரத்தம் கிராமச் சாலையில் கி.மீ. 0/4–ல் உயர்மட்ட பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 45 | மதுரை | மேலூர்–பூவந்தி சாலை கி.மீ. 8/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 46 | மதுரை | தனிச்சியம்–அலங்காநல்லூர் சாலையில் கி.மீ. 9/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 47 | மதுரை | கருந்தலக்குடி–கம்பூர் சாலையில் கி.மீ. 4/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 48 | மதுரை | இலட்சுமிபுரம்–கிடாரிப்பட்டி சாலையில் கி.மீ. 1/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 49 | மதுரை | காடுபட்டி சாலையில் கி.மீ. 3/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 22.00 |
| 50 | மதுரை | மேலூர்–செக்கிப்பட்டி சாலையில் கி.மீ. 4/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 9.50 |
| 51 | மதுரை | கல்லுப்பட்டி–விருதுநகர் சாலையில் கி.மீ. 6/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 52 | மதுரை | கீழப்பட்டி–வத்ராபூர் சாலையில் கி.மீ. 0/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.50 |
| 53 | மதுரை | கல்லுப்பட்டி–விருதுநகர் சாலையில் கி.மீ. 6/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 54 | மதுரை | கல்லுப்பட்டி–விருதுநகர் சாலையில் கி.மீ. 0/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 55 | மதுரை | மேலூர்–பூவந்தி சாலையில் கி.மீ. 6/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |



| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 56 | மதுரை | வத்தலகுண்டு–பேரையூர் சாலையில் கி.மீ. 26/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 57 | மதுரை | இலட்சுமிபுரம்–கிடாரிப்பட்டி சாலையில் கி.மீ. 0/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 58 | நாகப்பட்டினம் | வைத்தீஸ்வரன் கோயில்–திருப்பனந்தாள் சாலையில் கி.மீ. 16/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 59 | நாகப்பட்டினம் | மயிலாடுதுறை–பட்டவத்தி சாலையில் கி.மீ. 5/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 60 | நாகப்பட்டினம் | குத்தாலம்–கோமல் சாலையில் கி.மீ. 4/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 |
| 61 | நீலகிரி | கோத்தகிரி–மேட்டுப்பாளையம்–சத்தியமங்கலம்–கோபி–ஈரோடு சாலையில் கி.மீ. 26/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 62 | நீலகிரி | கோத்தகிரி–மேட்டுப்பாளையம்–சத்தியமங்கலம்–கோபி–ஈரோடு சாலையில் கி.மீ. 26/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 63 | நீலகிரி | கள்ளிக்கோட்டை–வயதிரி–கூடலூர் சாலையில் கி.மீ. 128/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 95.00 |
| 64 | நீலகிரி | கோத்தகிரி–மேட்டுப்பாளையம்–சத்தியமங்கலம்–கோபி–ஈரோடு சாலையில் கி.மீ. 28/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 65 | சிவகங்கை | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலையில் கி.மீ. 166/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 66 | சிவகங்கை | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலையில் கி.மீ. 188/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 67 | சிவகங்கை | மதுரை–தொண்டி சாலையில் கி.மீ. 39/6–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 68 | சிவகங்கை | மதுரை–தொண்டி சாலையில் கி.மீ. 57/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 69 | சிவகங்கை | மணகிரி—கள்ளல்—மதகுபட்டி சாலையில் கி.மீ. 13/6—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 70 | சிவகங்கை | இராமநாதபுரம்—நயினார்கோயில்—அண்டக்குடி—இளையான்குடி—சிவகங்கை—மேலூர் சாலையில் கி.மீ. 65/2—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 71 | சிவகங்கை | சறுகுனி—தேவகோட்டை சாலையில் கி.மீ. 13/8—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 72 | சிவகங்கை | கோவிலூர்—குன்னக்குடி சாலையில் கி.மீ. 1/6—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 73 | சிவகங்கை | இராமநாதபுரம்—நயினார்கோயில்—அண்டக்குடி—இளையான்குடி—சிவகங்கை—மேலூர் சாலையில் கி.மீ. 38/8—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 74 | சிவகங்கை | குன்னக்குடி—கானாடுகாத்தான் சாலையில் கி.மீ. 16/6—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 75 | சிவகங்கை | குன்னக்குடி—கானாடுகாத்தான் சாலையில் கி.மீ. 15/2—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 76 | சிவகங்கை | தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை—அறந்தாங்கி—காரைக்குடி—கல்லல்—காளையார்கோவில்—மறவமங்கலம்—இளையான்குடி—பரமக்குடி—முதுகுளத்தூர்—சாயல்குடி சாலையில் கி.மீ. 130/10—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 45.00 |
| 77 | சிவகங்கை | தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை—அறந்தாங்கி—காரைக்குடி—கல்லல்—காளையார்கோவில்—மறவமங்கலம்—இளையான்குடி—பரமக்குடி—முதுகுளத்தூர்—சாயல்குடி சாலையில் கி.மீ. 130/4—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 78 | சிவகங்கை | மதுரை—தொண்டி சாலையில் கி.மீ. 8/10—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 79 | ஈரோடு | மேட்டூர்—பழங்காநூத்து—ஒட்டன்சத்திரம்—தாராபுரம்—காங்கேயம்—ஈரோடு சாலையில் கி.மீ. 84/8, 86/10, 85/6, 86/6, 87/2, 87/10, 88/2—ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 33.00 |
| 80 | ஈரோடு | ஊஞ்சலூர் (சுளு) முதல் ஈரோடு—காங்கேயம் செல்லும் சாலையில் கி.மீ. 0/4—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |



2006 ஆகஸ்ட் 21]

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 81 | ஈரோடு | சென்னிமலை—அரச்சலூர்—கொடுமுடி சாலையில் கி.மீ. 11/8—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 82 | ஈரோடு | ஊஞ்சலூர் (சுளு) முதல் ஈரோடு—காங்கேயம் செல்லும் சாலையில் கி.மீ. 4/10—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 16.50 |
| 83 | ஈரோடு | தாராபுரம்—மதுக்கம்பாளையம் சாலையில் கி.மீ. 2/5—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 84 | ஈரோடு | இராட்டை சுற்றி பாளையம்—அஞ்சுசராம் பாளையம் சாலையில் கி.மீ. 3/4—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 85 | ஈரோடு | தொப்பூர்—மேட்டூர்—பவானி—ஈரோடு சாலையில் கி.மீ. 83/8—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 86 | ஈரோடு | தொப்பூர்—மேட்டூர்—பவானி—ஈரோடு சாலையில் கி.மீ. 60/6—ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 87 | திருமயம் | தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை—அறந்தாங்கி—காரைக்குடி—கல்லல்—காளையார்கோயில்—மறவமங்கலம்—இளையான்குடி—பரமக்குடி—முதுகுளத்தூர்—சாயல்குடி சாலை கி.மீ. 105/8—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 30.00 |
| 88 | குளத்தூர்/ புதுக்கோட்டை | முசிறி—குளித்தலை—புதுக்கோட்டை—ஆலங்குடி—பேராவூரணி—சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ. 86/6—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 15.00 |
| 89 | திருமயம்/ புதுக்கோட்டை | அரிமளம்—திருமயம் சாலை கி.மீ. 15/10—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 30.00 |
| 90 | புதுக்கோட்டை/ புதுக்கோட்டை | திருச்சி—புதுக்கோட்டை—அறந்தாங்கி—மீமிசல் சாலை கி.மீ. 52/8—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 15.00 |
| 91 | குளத்தூர்/ புதுக்கோட்டை | முசிறி—குளித்தலை—புதுக்கோட்டை—ஆலங்குடி—பேராவூரணி—சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ. 59/8—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 50.00 |
| 92 | ஆலங்குடி/ புதுக்கோட்டை | தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை—அறந்தாங்கி—காரைக்குடி—கல்லல்—காளையார்கோயில்—மறவமங்கலம்—இளையான்குடி—பரமக்குடி—முதுகுளத்தூர்—சாயல்குடி சாலை கி.மீ. 71/4—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 45.00 |
| 93 | குளத்தூர்/ புதுக்கோட்டை | முசிறி—குளித்தலை—புதுக்கோட்டை—ஆலங்குடி—பேராவூரணி—சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ. 48/2—ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 50.00 |

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 94 | புதுக்கோட்டை | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலை கி.மீ. 100/8–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 30.00 |
| 95 | புதுக்கோட்டை | அறந்தாங்கி–கம்மங்காடு சாலை கி.மீ. 4/8–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 95.00 |
| 96 | புதுக்கோட்டை | மேற்பனைக்காடு–கீரமங்கலம் சாலை கி.மீ. 2/8–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 25.00 |
| 97 | புதுக்கோட்டை | முசிறி–குளித்தலை–புதுக்கோட்டை–ஆலங்குடி–பேராவூரணி–சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ. 87/8–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 28.00 |
| 98 | இராமநாதபுரம் | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலை கி.மீ. 206/2–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 12.00 |
| 99 | இராமநாதபுரம் | இராமநாதபுரம்–எமனேஸ்வரம்–நயினார்கோயில் சாலை கி.மீ. 34/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 100 | இராமநாதபுரம் | மதுரை–தொண்டி சாலையில் கி.மீ. 88/10–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 31.00 |
| 101 | இராமநாதபுரம் | மதுரை–தொண்டி சாலையில் கி.மீ. 88/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 102 | இராமநாதபுரம் | மதுரை–தொண்டி சாலையில் கி.மீ. 85/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 103 | இராமநாதபுரம் | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலை கி.மீ. 225/4–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 15.00 |
| 104 | இராமநாதபுரம் | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலை கி.மீ. 221/8–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 10.00 |



| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 105 | இராமநாதபுரம் | தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை–அறந்தாங்கி–காரைக்குடி–கல்லல்–காளையார்கோயில்–மறவமங்கலம்–இளையான்குடி–பரமக்குடி–முதுகுளத்தூர்–சாயல்குடி சாலை கி.மீ. 214/10–ல் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் பணி | 30.00 |
| 106 | இராமநாதபுரம் | தேவிப்பட்டினம்–நயினார்கோயில் (வழி) பொட்டகாவயல் சாலையில் கி.மீ. 19/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 107 | சேலம் | முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலையில் கி.மீ. 80/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 108 | சேலம் | சூரமங்கலம்–தாரமங்கலம் சாலையில் கி.மீ. 20/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 109 | சேலம் | வாழப்பாடி–திம்மநாயக்கன்பட்டி சாலையில் கி.மீ. 0/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 110 | சேலம் | தொப்பூர்–மேட்டூர்–பவானி–ஈரோடு சாலையில் கி.மீ. 44/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் மற்றும் அணுகு சாலை அமைத்தல் | 15.00 |
| 111 | சேலம் | சேலம்–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலையில் கி.மீ. 0/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 112 | சேலம் | சேலம்–உளுந்தூர்பேட்டை சாலையில் கி.மீ. 51/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 113 | சேலம் | முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலையில் கி.மீ. 86/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 70.00 |
| 114 | கடலூர் | கடலூர்–கீரபாளையம்–சேத்தியாதோப்பு சாலையில் கி.மீ. 11/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 64.00 |
| 115 | கடலூர் | விருத்தாச்சலம்–பரங்கிப்பேட்டை(Portnovo) சாலையில் கி.மீ. 26/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 116 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | சங்கரன்கோவில் அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோயில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 33/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 22.00 |
| 117 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | குறுக்கல்பட்டி அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 37/8–ல் சிறு பாலம் [illegible] | 20.00 |



227428

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 118 | வாசுதேவநல்லூர்/ திருநெல்வேலி | முரம்பு அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 11/4-ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 119 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | சங்கரன்கோவில் அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 32/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 120 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | குவளைக்கன்னி அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி கி.மீ. 25/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 121 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | குறுக்கல்பட்டி அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்- திருநெல்வேலி சாலையில் கி.மீ. 39/6-ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 9.00 |
| 122 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | குறுக்கல்பட்டி அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 38/6–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 123 | அம்பாசமுத்திரம்/ திருநெல்வேலி | கீழமாதாபுரம் அருகே ஓடையின் குறுக்கே திருச்செந்தூர்–பாளையங்கோட்டை–அம்பாசமுத்திரம்–தென்காசி–குற்றாலம்–செங்கோட்டை சாலையில் கி.மீ. 110/10–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 124 | சங்கரன்கோவில்/ திருநெல்வேலி | மேலநீலிதநல்லூர் அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 40/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 125 | திருநெல்வேலி/ திருநெல்வேலி | திருத்து அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாளையங்கோட்டை–திருத்து சாலையில் கி.மீ.10/4–ல் சிறு பாலம் கட்டுதல் | 35.00 |
| 126 | தென்காசி/ திருநெல்வேலி | காசி மேஜர்புரம் அருகே சிற்றாற்றின் குறுக்கே திருச்செந்தூர்–பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம்-தென்காசி–குற்றாலம்–செங்கோட்டை சாலையில் கி.மீ. 130/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 80.00 |
| 127 | கடையநல்லூர்/ திருநெல்வேலி | அச்சன்புதூர் மற்றும் எலத்தூர் அருகே ஹனுமான் நதியின் குறுக்கே செங்கோட்டை–சாம்பவர் வடகரை சாலையிலிருந்து அச்சன்புதூர் செல்லும் சாலையில் கி.மீ. 6/0–ல் பிரிந்து செல்லும் சாலையில் கி.மீ. 2/10–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 |



2006 ஆகஸ்ட் 21]

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 128 | திருநெல்வேலி/ திருநெல்வேலி | திருநெல்வேலிக்கு அருகே தாமிரபரணி சானலில் இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 85/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 129 | ஆலங்குளம்/ திருநெல்வேலி | மானூர் அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 68/10–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 130 | திருநெல்வேலி/ திருநெல்வேலி | ராமையன்பட்டி அருகே ஓடையின் குறுக்கே இராஜபாளையம்–சங்கரன்கோவில்–திருநெல்வேலி சாலையில் கி.மீ. 81/10–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 131 | திருநெல்வேலி / திருநெல்வேலி | சேந்தமங்கலம் அருகே தாமிரபரணி சானலின் குறுக்கே உடையார்பட்டி–சீவலப்பேரி சாலையில் கி.மீ. 2/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 |
| 132 | திருவண்ணாமலை | ஆற்காடு–திண்டிவனம் சாலையில் கி.மீ. 61/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 36.00 |
| 133 | திருவண்ணாமலை | காஞ்சிபுரம்–வந்தவாசி சாலையில் கி.மீ. 32/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 134 | திருவண்ணாமலை | திருவத்திபுரம்–ஆரணி சாலையில் கி.மீ. 14/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 80.00 |
| 135 | திருவண்ணாமலை | காஞ்சிபுரம்–வந்தவாசி சாலையில் கி.மீ. 39/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 26.00 |
| 136 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை–தானிப்பாடி சாலையில் கி.மீ. 26/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 85.00 |
| 137 | திருவண்ணாமலை | ஆற்காடு–திண்டிவனம் சாலையில் கி.மீ. 44/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 56.00 |
| 138 | பட்டுக்கோட்டை/ தஞ்சாவூர் | வேப்பன்காடு அருகே பொதுப் பணித் துறை வாய்க்கால் குறுக்கே கரம்பயம்–வேப்பன்காடு சாலையில் கி.மீ. 3/10–ல் ஆர்.சி.சி. ஸ்லாப் கல்வர்ட் திரும்பக் கட்டுதல் | 23.50 |
| 139 | தஞ்சாவூர்/ தஞ்சாவூர் | சித்தர்காடு அருகே வடவாற்றின் குறுக்கே மாரியம்மன்கோவில்–சங்கான்திடல் சாலை (வழி) கடகடப்பை–சித்தர்காடு–காடுகாவல் கி.மீ. 1/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 58.00 |

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 140 | திருவிடை–மருதூர்/ தஞ்சாவூர் | காமாட்சிபுரம் அருகே ஓடையின் குறுக்கே பந்தநல்லூர் –வேட்டமங்கலம் சாலையில் கி.மீ. 1/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 |
| 141 | பேராவூரணி/ தஞ்சாவூர் | உப்புவிடுதி அருகே புதுப்பட்டினம் வாய்க்கால் குறுக்கே சூரியநாராயணபுரம் சாலையில் கி.மீ. 1/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 24.00 |
| 142 | பட்டுக்கோட்டை/ தஞ்சாவூர் | அத்திவெட்டி அருகே பொதுப் பணித் துறை வாய்க்கால் குறுக்கே வாடியக்காடு–கல்யாணஓடை சாலையில் கி.மீ. 3/10–ல் ஆர்.சி.சி. ஸ்லாப் கல்வர்ட் திரும்பக் கட்டுதல் | 6.50 |
| 143 | பட்டுக்கோட்டை/ தஞ்சாவூர் | புதுக்கோட்டை உளூர் அருகே பொதுப் பணித் துறை வாய்க்கால் குறுக்கே அணைக்காடு–புதுக்கோட்டை உளூர் சாலையில் கி.மீ. 6/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 23.00 |
| 144 | திருவிடை மருதூர்/ தஞ்சாவூர் | ஆண்டலாம்பேட்டை அருகே பொதுப் பணித் துறை வாய்க்கால் குறுக்கே திருவிடைமருதூர்–தண்டான்தோட்டம் சாலையில் கி.மீ. 1/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 145 | பட்டுக்கோட்டை/ தஞ்சாவூர் | மூத்தாகுறிச்சி அருகே பாட்டுவோனாச்சி ஆற்றின் குறுக்கே கும்பகோணம்–மன்னார்குடி –அதிராம்பட்டினம் சாலையில் கி.மீ. 60/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 90.00 |
| 146 | வலங்கைமான்/ தஞ்சாவூர் | புலவர்நத்தம் அருகே வடவாற்றின் குறுக்கே புலவர்நத்தம் சாலையில் கி.மீ. 1/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 60.00 |
| 147 | வலங்கைமான்/ தஞ்சாவூர் | அருந்தவபுரம் அருகே மீன்வாய்க்கால் குறுக்கே அம்மாபேட்டை–வடுவூர் சாலையில் கி.மீ. 1/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 52.00 |
| 148 | ஒரத்தநாடு/ தஞ்சாவூர் | பொன்னாப்பூர் அருகே பொதுப் பணித் துறை வாய்க்கால் குறுக்கே பொன்னாப்பூர் மேற்கு ஹரிஜன் காலனி சாலையில் கி.மீ. 0/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 19.50 |
| 149 | லால்குடி/ திருச்சிராப்பள்ளி | திருச்சி–சிதம்பரம் சாலை கி.மீ. 32/6–8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 90.00 |
| 150 | உப்பிலியாபுரம்/ திருச்சிராப்பள்ளி | முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலை கி.மீ. 46/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 20.00 |



| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 151 | குளித்தலை/ திருச்சிராப்பள்ளி | முசிறி–குளித்தலை–புதுக்கோட்டை–ஆலங்குடி–பேராவூரணி–சேதுபாவாசத்திரம் கி.மீ.36/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 60.00 |
| 152 | குளித்தலை/ திருச்சிராப்பள்ளி | முசிறி–குளித்தலை–புதுக்கோட்டை–ஆலங்குடி–பேராவூரணி–சேதுபாவாசத்திரம் கி.மீ. 34/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 27.00 |
| 153 | மருங்காபுரி/ திருச்சிராப்பள்ளி | வையம்பட்டி–மைலம்பட்டி (வழி) பாலவிடுதி சாலை கி.மீ. 4/2, 4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாவட்ட முக்கிய சாலை) | 63.00 |
| 154 | லால்குடி/ திருச்சிராப்பள்ளி | திருச்சி–சிதம்பரம் சாலை கி.மீ. 36/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 60.00 |
| 155 | மருங்காபுரி/ திருச்சிராப்பள்ளி | தே.நெ. 45–B முதல் இக்கரைகோசிக்குறிச்சி சாலை கி.மீ. 6/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாவட்ட இதர சாலை) | 40.00 |
| 156 | தொட்டியம்/ திருச்சிராப்பள்ளி | திருச்சி–நாமக்கல் சாலை கி.மீ. 43/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 15.00 |
| 157 | தொட்டியம்/ திருச்சிராப்பள்ளி | திருச்சி–நாமக்கல் சாலை கி.மீ. 43/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 15.00 |
| 158 | தொட்டியம்/ திருச்சிராப்பள்ளி | திருச்சி–நாமக்கல் சாலை கி.மீ. 44/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மாநில சாலை) | 15.00 |
| 159 | வேலூர் | சதராஸ்–செங்கல்பட்டு–காஞ்சிபுரம்–அரக்கோணம்–திருத்தணி சாலையில் கி.மீ. 88/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 23.00 |
| 160 | வேலூர் | வாலாஜா–சோளிங்கர்–அரக்கோணம் சாலையில் கி.மீ. 12/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 161 | வேலூர் | வாலாஜா–சோளிங்கர்–அரக்கோணம் சாலையில் கி.மீ. 4/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 162 | வேலூர் | கே.வி. கோட்டா சாலையில் கி.மீ. 66/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 80.00 |
| 163 | வேலூர் | சதராஸ்–செங்கல்பட்டு–காஞ்சிபுரம்–அரக்கோணம்–திருத்தணி சாலையில் கி.மீ. 89/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 164 | வேலூர் | வாலாஜா-வாலாஜா ஆர்.எஸ். சாலையில் கி.மீ. 3/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 165 | வேலூர் | திருப்பத்தூர்-சிங்காரப்பேட்டை சாலையில் கி.மீ. 3/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 166 | வேலூர் | திருவலம் கிளை சாலையில் கி.மீ. 2/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 167 | வேலூர் | வாலாஜா-வாலாஜா ஆர்.எஸ். சாலையில் கி.மீ. 3/10 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 168 | வேலூர் | இராணிப்பேட்டை-சோளிங்கர் சாலையில் கி.மீ. 7/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 169 | வேலூர் | இராணிப்பேட்டை-சோளிங்கர் சாலையில் கி.மீ. 6/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 170 | விழுப்புரம் | விளம்பார்-புக்கிரவாரி சாலையில் கி.மீ. 1/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 48.00 |
| 171 | விழுப்புரம் | கடலூர்-பள்ளிநேலியனூர் சாலையில் கி.மீ. 19/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 90.00 |
| 172 | விழுப்புரம் | விழுப்புரம்-திருவண்ணாமலை சாலையில் கி.மீ. 53/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 95.00 |
| 173 | விழுப்புரம் | ஆற்காடு-விழுப்புரம் சாலையில் கி.மீ. 73/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 174 | பெரம்பலூர் | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 22/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 32.00 |
| 175 | பெரம்பலூர் | ஜெயங்கொண்டம்-மதனத்தூர் சாலையில் கி.மீ. 9/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 176 | பெரம்பலூர் | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 25/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 22.00 |
| 177 | பெரம்பலூர் | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 24/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 27.00 |
| 178 | பெரம்பலூர் | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 20/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 179 | பெரம்பலூர் | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் கி.மீ. 18/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 22.00 |





| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 180 | பெரம்பலூர் | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 8/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 181 | பெரம்பலூர் | கள்ளத்தூர்-பாப்பாக்குடி சாலையில் கி.மீ. 2/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 182 | பெரம்பலூர் | துறையூர்-பெரம்பலூர் சாலையில் கி.மீ. 121/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 54.00 |
| 183 | பெரம்பலூர் | ஜெயங்கொண்டம்-மதனத்தூர் சாலையில் கி.மீ. 16/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 184 | பெரம்பலூர் | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 13/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 185 | பெரம்பலூர் | மாத்தூர்-திட்டக்குடி சாலையில் கி.மீ. 23/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 186 | பெரம்பலூர் | மாத்தூர்-திட்டக்குடி சாலையில் கி.மீ. 17/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 22.00 |
| 187 | பெரம்பலூர் | கிருஷ்ணாபுரம்-பூலம்பாடி-கள்ளப்பட்டி சாலையில் கி.மீ. 5/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 188 | பெரம்பலூர் | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 13/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 40.00 |
| 189 | பெரம்பலூர் | காரைக்குறிச்சி-அருள்மொழி-ஸ்ரீபுரன்தான் சாலையில் கி.மீ. 3/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 190 | பெரம்பலூர் | ஜெயங்கொண்டம்-மதனத்தூர் சாலையில் கி.மீ. 17/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 191 | பெரம்பலூர் | ஆதியூர் சாலையில் கி.மீ. 0/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 192 | பெரம்பலூர் | ஜெயங்கொண்டம்-மதனத்தூர் சாலையில் கி.மீ. 17/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 193 | பெரம்பலூர் | ஆர்.வீ.கே. சாலை முதல் திருவளந்துறை சாலையில் கி.மீ. 2/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 194 | பெரம்பலூர் | விளமுத்தூர் சாலையில் கி.மீ. 2/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 195 | பெரம்பலூர் | செந்துறை-நக்கம்பாடி-கடூர் சாலையில் கி.மீ. 9/6-8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 196 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 12/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 24.80 |
| 197 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 22/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 63.00 |
| 198 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 13/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 26.50 |
| 199 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 16/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 23.00 |
| 200 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 13/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 201 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 6/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 202 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 6/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 203 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 5/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 24.00 |
| 204 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 12/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 23.00 |
| 205 | கரூர் | முசிறி-குளித்தலை-புதுக்கோட்டை-ஆலங்குடி-பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 21/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 28.50 |
| 206 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 2/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 207 | தேனி | பாளையம்-சுருளிப்பட்டி சாலையில் கி.மீ. 18/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 208 | தேனி | வைகை அணை-வருஷநாடு சாலையில் கி.மீ. 18/8, 10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 60.00 |
| 209 | தேனி | பாளையம்-சுருளிப்பட்டி சாலையில் கி.மீ. 18/2-ல் பாலம் கட்டுதல் | 10.00 |
| 210 | தேனி | பாளையம்-சுருளிப்பட்டி சாலையில் கி.மீ. 8/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 211 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 8/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 212 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 27/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 14.00 |
| 213 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் சி.மீ. 9/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 214 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 10/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 215 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 10/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 216 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 11/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 15.00 |
| 217 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 19/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 12.00 |
| 218 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 19/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 219 | தேனி | பாளையம்-தேவாரம்-போடி சாலையில் கி.மீ. 24/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 220 | தேனி | பாளையம்-சுருளிப்பட்டி சாலையில் கி.மீ. 13/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 221 | தேனி | கடுவிளார்பட்டி-சீலயம்பட்டி (வழி) எம். அழகாபுரி சாலையில் கி.மீ. 13/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 222 | தேனி | பாளையம்-சுருளிப்பட்டி சாலையில் கி.மீ. 9/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 223 | நாமக்கல் | மோகனூர்-நாமக்கல்-சேந்தமங்கலம்-இராசிபுரம் சாலையில் கி.மீ. 33/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 224 | திருவள்ளூர் | பல்லாவரம்- துரைப்பாக்கம் சாலையில் கி.மீ. 8/2-ல் பாலம் கட்டுதல் | 88.00 |
| 225 | திருவள்ளூர் | பல்லாவரம் துரைப்பாக்கம் சாலையில் கி.மீ. 7/4-ல் பாலம் கட்டுதல் | 88.00 |
| 226 | திருவள்ளூர் | சித்தூர்-திருத்தணி சாலையில் கி.மீ. 33/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 27.00 |
| 227 | திருவள்ளூர் | பல்லாவரம்-துரைப்பாக்கம் சாலையில் கி.மீ. 7/8-ல் பாலம் கட்டுதல் | 88.00 |
| 228 | திருத்துறைப்பூண்டி/ திருவாரூர் | தஞ்சாவூர் மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் கோடியக்கரை சாலையில் கி.மீ. 59/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 65.00 |
| 229 | மன்னார்குடி/ திருவாரூர் | தஞ்சாவூர் மன்னார்குடி திருத்துறைப்பூண்டி வேதாரண்யம்-கோடியக்கரை சாலையில் கி.மீ. 39/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 45.00 |
| 230 | வலங்கைமான்/ திருவாரூர் | கும்பகோணம்-மன்னார்குடி -அதிராம்பட்டினம் சாலையில் கி.மீ. 12/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 231 | நன்னிலம்/ திருவாரூர் | மயிலாடுதுறை திருத்துறைப்பூண்டி சாலையில் கி.மீ. 18/323-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 232 | திருத்துறைப்பூண்டி/ திருவாரூர் | மன்னார்குடி-முத்துப்பேட்டை சாலையில் கி.மீ. 32/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 233 | திருத்துறைப்பூண்டி/ திருவாரூர் | விளக்குடி-மணலி சாலையில் கி.மீ. 7/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 75.00 |
| 234 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி-இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 0/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 |
| 235 | கிருஷ்ணகிரி | ஒகேனக்கல்-பென்னாகரம்-தருமபுரி-திருப்பத்தூர் சாலையில் கி.மீ. 75/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| 236 | கிருஷ்ணகிரி | ஒகேனக்கல்-பென்னாகரம்-தருமபுரி-திருப்பத்தூர் சாலையில் கி.மீ. 53/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 35.00 |
| 237 | கிருஷ்ணகிரி | ஒகேனக்கல்-பென்னாகரம்-தருமபுரி-திருப்பத்தூர் சாலையில் கி.மீ. 63/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 75.00 |
| 238 | கிருஷ்ணகிரி | குந்தப்பள்ளி-வேப்பனப்பள்ளி சாலையில் கி.மீ. 10/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 25.00 |



2006 ஆகஸ்ட் 21]

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 239 | கிருஷ்ணகிரி | பைணப்பள்ளி சாலையில் கி.மீ. 1/4-ல் குழாய் தாம்போகி திரும்பக் கட்டுதல் | 25.00 |
| 240 | கிருஷ்ணகிரி | ஒசூர்-தளி சாலையில் கி.மீ. 25/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 45.00 |
| 241 | கிருஷ்ணகிரி | சூலகிரி-பேரிகை சாலையில் கி.மீ. 11/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 30.00 |
| 242 | கிருஷ்ணகிரி | பென்னாகரம்-பெரும்பாளை சாலையில் கி.மீ. 19/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 20.00 |
| | | மொத்தம் | 7,363.80 |
| குறிப்பு | | (1) மொத்தம் பட்டியலிடப்பட்ட மொத்தப் பணிகள் | 265 |
| | | (2) ரூபாய் 1 கோடிக்கு மேல் மதிப்புள்ள காரணத்தினால் நீக்கப்பட்ட பணிகள் | |
| | | (3) இதர திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதால் கைவிடப்பட்ட பணி | 23 |
| | | மொத்தம் | 242 |
| | | பட்டியலில் எஞ்சியுள்ள பணிகள் | |
| நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் | | | |
| 1 | மதுரை | அணைக்கரைப்பட்டி முனீஸ்வரன் கோயில் சாலையில் கி.மீ. 0/2-0/4 மற்றும் 0/8-ல் சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் கி.மீ. 0/0-1/0-ல் சாலை மேம்பாடு செய்தல் | 55.00 |
| 2 | தஞ்சாவூர் | கருப்ப முதலியார் கோட்டை சிக்கப்பட்டு சாலையில் கி.மீ. 1/2-ல் பால்வாரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 40.00 |
| 3 | திருவாரூர் | அன்னதானபுரம்-உக்கடை சாலையில் கி.மீ. 0/8 ல் பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ. 0/0-1/6-ல் சாலை மேம்பாடு செய்தல் | 93.00 |
| 4 | வேலூர் | பின்னாதுரா-சின்னபுதூர் சாலையில் கி.மீ. 0/4 ல் பாலம் கட்டுதல் | 24.00 |
| 5 | தேனி | சேவல்பட்டி தப்புகுண்டு சாலையில் கி.மீ. 0/8-ல் பாலம் கட்டுதல் | 27.55 |

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் (1) | மாவட்டம் (2) | பாலத்தின் பெயர் (3) | ரூபாய் இலட்சத்தில் (4) |
|---|---|---|---|
| 6 | தேனி | அழகாபுரி அணையிலிருந்து கிருஷ்ணாமாயக்கம் தோப்பு கி.மீ. 7/4 ல் இணையும் சாலை கி.மீ. 0/0 -1/0 ஐ மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ. 0/8-ல் பாலம் கட்டுதல் | 30.00 |
| 7 | தருமபுரி | அதிகாரப்பட்டி–செங்காட்டுப்புதூர் சாலையில் கி.மீ. 0/8- ல் பாலம் கட்டுதல் | 60.00 |
| 8 | தருமபுரி | எரப்பட்டி–அரஹாசனஹள்ளி சாலையில் கி.மீ. 1/6–ல் மூழ்குபாலம் திரும்பக் கட்டுதல் | 60.00 |
| | | மொத்தம் | 389.55 |



2006 ஆகஸ்ட் 21]

# இணைப்பு III

## அறிவிப்புகள் 2006-07-இணைப்பு

*(408 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ள ரூ.100 இலட்சத்திற்கும் உள்பட்ட மதிப்பீட்டில் உள்ள பாலப் பணிகளின் விவரம் (மொத்தத் திட்டம் ரூ.80.00 கோடி)

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| | | | | வேலூர் (நெ) கோட்டம் | |
| 1. | தண்டராம்பட்டு/ வேலூர் | பொய்கை நல்லூர் | மக்ளின் கால்வாய் | அரக்கோணம்–ஒச்சேரி சாலையில் கி.மீ. 24/10–ல் பிரிந்து எம்.சி.பி.சாலை (வழி) பொய்கைநல்லூர் கி.மீ. 87/8–ஐ இணைக்கும் சாலையில் கி.மீ. 3/2–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.மு.சா) | 80.00 |
| | | | | திருவண்ணாமலை (நெ) கோட்டம் | |
| 2. | கலசப்பாக்கம்/ திருவண்ணா மலை | நார்த்தாம் பூண்டி | உபரி நீர் ஓடை | அகரம்சிம்மந்தி–காஞ்சி சாலையில் கி.மீ. 2/6–ல் பாலம் திரும்ப கட்டுதல் (மா.இ.சா.) | 38.00 |
| 3. | ஆரணி/ திருவண்ணா மலை | பாலந் தாங்கல் | சீஷமங்கலம் | ஆரணி–வந்தவாசி சாலையில் கி.மீ. 5/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா.) | 53.00 |
| 4 | செய்யாறு/ திருவண்ணா மலை | அரசாணிப் பாளையம் | மழைநீர் ஓடை | அரசாணிப்பாளையம் வழியாக வயலத்தூர்–ஏலச்சேரி சாலையில் கி.மீ. 1/2–ல் புதிய பாலம் | 60.00 |
| | | | | கள்ளகுறிச்சி (நெ) கோட்டம் | |
| 5. | சின்னசேலம்/ விழுப்புரம் | பொற்பாத குறிச்சி | ஓடை | பொற்பாத குறிச்சி சாலையில் கி.மீ. 1/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (ம.இ.சா) | 27.00 |
| 6. | சின்னசேலம்/ விழுப்புரம் | பேத்தா–சமுத் திரம் தோட்டபாடி | ஓடை | சின்னசேலம்–கூகையூர் சாலையில் கி.மீ. 3/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (ம.இ.சா) | 30.00 |

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| | | | | கடலூர் (நெ) கோட்டம் | |
| 7. | காட்டுமன்னார் கோயில்/ கடலூர் | | | திருச்சி சிதம்பரம் சாலையில் கி.மீ. 104/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 59.00 |
| 8. | காட்டுமன்னார் கோயில்/ கடலூர் | | | திருச்சி சிதம்பரம் சாலையில் கி.மீ. 105/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 50.00 |
| 9. | பண்ருட்டி/ கடலூர் | பண்ருட்டி டவுன் தட்டான் சாவடி | காட்டாறு | கடலூர் சித்தூர் சாலையில் கி.மீ. 26/10 ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.சா) | 34.00 |
| 10. | பண்ருட்டி/ கடலூர் | பண்ருட்டி டவுன் தட்டான் சாவடி | காட்டாறு | கடலூர் சித்தூர் சாலையில் கி.மீ. 27/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.சா) | 25.00 |
| 11. | சிதம்பரம்/ கடலூர் | சாக்கன்குடி | புதங்குடி கால்வாய் | சாக்கன்குடி கீழ்நத்தம் சாலையில் கி.மீ. 0/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 20.00 |
| 12. | கடலூர்/ கடலூர் | நல்லாத்தூர் தவழுகுப்பம் | மலட்டாறு | நல்லாத்தூர் சாலையில் கி.மீ. 1/10 ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா.) | 70.00 |
| 13. | கடலூர்/ கடலூர் | வண்டிப் பாளையம் | பெரிய வாய்கால் | ஜெயில் ஹில் வெள்ளக்கரை-குமளங்குளம் சாலையில் கி.மீ. 1/2 ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 15.00 |
| 14. | காட்டுமன்னார் கோயில்/ கடலூர் | ஸ்ரீமுஷ்ணம் | பெளந்துறை வாய்கால் | ஸ்ரீமுஷ்ணம் ஆண்டிமடம் சாலையில் கி.மீ. 0/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 31.00 |
| 15. | சிதம்பரம்/ கடலூர் | நந்திமங்கலம் கோப்பாடி கீழக்கரை அத்திப்பட்டு | ஒடை | குமராட்சி வல்லம்படுகை சாலையில் கி.மீ. 5/4 ல் புதிய பாலம் கட்டுதல் | 30.00 |
| | | | | அரியலூர் (நெ) கோட்டம் | |
| 16. | ஆண்டிமடம்/ பெரம்பலூர் | துங்காபுரம் | காட்டாறு | துங்காபுரம்-குளுமூர் சாலையில் கி.மீ. 1/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 30.00 |



| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 17. | ஆண்டிமடம்/ பெரம்பலூர் | கூவாகம் | காட்டாறு | வாரியன்காவல்-மாத்தூர் சாலையில் கி.மீ. 3/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 25.00 |
| 18. | ஆண்டிமடம்/ பெரம்பலூர் | துளார் | காட்டாறு | வாரியன்காவல்-மாத்தூர் சாலையில் கி.மீ. 10/10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 22.00 |
| 19. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | வெண்பாவூர் | காட்டாறு | கிருஷ்ணபுரம்-வெண்பாவூர் சாலையில் கி.மீ.4/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 15.00 |
| 20. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | வடக்கு மாதேவி | காட்டாறு | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 0/6-லிருந்து வடக்குமாதேவி சாலையில் கி.மீ. 5/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 40.00 |
| 21. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | கோனேரிப் பாளையம் | கோனேரி ஆறு | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் 0/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 43.00 |
| 22. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | மலையாளப் பட்டி | கல்லாறு | அரும்பாவூர்-ஏ.மேட்டூர் சாலையில் கி.மீ. 10/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 90.00 |
| 23. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | சோமண்டா புதூர் | ஒடை | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 4/10 மற்றும் கி.மீ. 5/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (2 பாலங்கள்) (மா.மு.சா) | 35.00 |
| 24. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | எசனை | காட்டாறு | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 6/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 27.00 |
| 25. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | எசனை | காட்டாறு | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 8/4-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 30.00 |
| 26. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | அம்மா பாளையம் | காட்டாறு | துறையூர்-பெரம்பலூர் சாலையில் கி.மீ. 102/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 9.00 |
| 27. | பெரம்பலூர்/ பெரம்பலூர் | வெங்கனூர் | காட்டாறு | பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில் கி.மீ. 23/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 15.00 |

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 28. | வரகூர்/ பெரம்பலூர் | அய்யனாபுரம் | ஓடை | அய்யனாபுரம் சாலையில் கி.மீ. 1/6-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 30.00 |
| 29. | வரகூர்/ பெரம்பலூர் | கொளக்கா நத்தம் | பில்வாடியன் ஓடை | கொளக்காநத்தம்-கருடமங்கலம் சாலையில் கி.மீ. 0/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 40.00 |
| [illegible] | ஜெயம்கொண்டம்/ பெரம்பலூர் | | சுதமல்லி ஓடை | டி.பழூர்-விளாங்குடி சாலையில் கி.மீ. 11/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 30.00 |
| [illegible] | ஜெயம்கொண்டம்/ பெரம்பலூர் | சிந்தாமணி | ஓடை | ஜெயங்கொண்டம்-மதனத்தூர் சாலையில் கி.மீ.12/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 26.00 |
| 32. | ஜெயம்கொண்டம்/ பெரம்பலூர் | கூவாகம் | காட்டாறு | உடையார்பாளையம்-சிலல்-கீழ் அணைகட்டு சாலையில் கி.மீ. 3/10-ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 12.00 |
| 33. | ஜெயம்கொண்டம்/ பெரம்பலூர் | வானதி ராயன்பட்டி | ஓடை | உடையார்பாளையம்-சிலல்-கீழ் அணைக்கட்டு சாலையில் கி.மீ. 7/4-ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 10.50 |
| 34. | ஜெயம்கொண்டம்/ பெரம்பலூர் | வானதி ராயன்பட்டி | ஓடை | உடையார்பாளையம்-சிலல்-கீழ் அணைக்கட்டு சாலையில் கி.மீ. 7/8-ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 10.50 |
| 35. | ஜெயம்கொண்டம்/ பெரம்பலூர் | கோடாலி கருப்பூர் | பொன்னாறு | அணைக்குடம்-சோழமாதேவி-கோடாலி கருப்பூர் சாலை கி.மீ. 4/6-ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 11.00 |
| [illegible] | ஆண்டிமடம்/ பெரம்பலூர் | வாலரக் குறிச்சி | காட்டாறு | இரும்புலிகுறிச்சி- பாளையக் குடி-மணகேதி சாலையில் கி.மீ. 6/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 21.00 |
| [illegible] | வரகூர்/ பெரம்பலூர் | வாலரக் குறிச்சி | காட்டாறு | ஆலத்தூர் கரை- கொளக்கா நத்தம் சாலையில் கி.மீ. 19/4-ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 25.00 |
| [illegible] | வரகூர்/ பெரம்பலூர் | வயலப்பாடி | ஓடை | வயலப்பாடி-வீரமாநல்லூர் சாலையில் கி.மீ. 1/2-ல் புதிய பாலம் [illegible] | [illegible] |



2006 ஆகஸ்ட் 21]

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 39. | ஆண்டிமடம்/ பெரம்பலூர் | நக்கம்பாடி | கருப்பனாறு ஓடை | செந்துறை- நக்கம்பாடி-கடூர் சாலையில் கி.மீ. 1/6-ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 40.00 |
| 40 | பெரம்பலூர்/ பெரம்பலூர் | பாலையூர் | ஓடை | பாலையூர்-அனுக்கூர்-வல்லி கொண்டாபுரம் சாலையில் கி.மீ. 0/4-ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 40.0 |
| | | | | திருச்சி (நெ) கோட்டம் | |
| 41. | தொட்டியம் / திருச்சி | அஞ்சியம் | ஓடை | பார்ச்ச பெருமாள்பட்டி- மறுபட்டி சாலையில் கி.மீ. 7/6-ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 24.0 |
| 42. | தொட்டியம் / திருச்சி | அனைக் கால்பட்டி | கரைபொட் டனாறு | தொட்டியம்-காட்டுப்புத்தூர் சாலையில் கி.மீ. 11/8-ல் புதிய பாலம் கட்டுதல் (மா.மு.சா) | 87.0 |
| | | | | தஞ்சாவூர் (நெ) கோட்டம் | |
| 43. | திருவிடை மருதூர்/ தஞ்சாவூர் | ஆரலூர் | பழவாறு | காத்ரமங்களம்-பந்தநல்லூர் சாலையில் கி.மீ. 3/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 86.00 |
| 44 | பேராவூரணி/ தஞ்சாவூர் | நெடுவாசல் | சி.எம்.பி வாய்க்கால் | நெடுவாசல் சாலையில் கி.மீ. 1/8-10-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 36.00 |
| 45. | திருவையாறு/ தஞ்சாவூர் | வரகூர் | கொனக்கடுங் கனாறு | செந்தாளை-வரகூர்- களுமங்கலம் சாலையில் கி.மீ. 1/2-ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 30.0 |
| 46. | தஞ்சாவூர் | அலிசாகுடி | அலிசாகுடி வாய்க்கால் | நடுகாவேரி-குளிமாத்தூர்-அலிகுடி- அள்ளூர் சாலையில் கி.மீ. 6/9-ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 18.00 |
| 47. | தஞ்சாவூர் | ராராமுத் திரைக் கோட்டை | நெய்வாசல் தென்பாதி வாய்க்கால் | நாகப்பட்டினம்- கூடலூர்- மைசூர் சாலையில் கி.மீ. 75/4-லிருந்து ராரமுத்திரைக்கோட்டை சாலையில் கி.மீ. 1/6-ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 15.00 |

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| | | | | புதுக்கோட்டை (நெ) கோட்டம் | |
| 48. | புதுக்கோட்டை/ புதுக்கோட்டை | நம்பூரன்பட்டி | காட்டாறு | மாத்தங்காள்–நடுப்பட்டி சாலையில் கி.மீ. 4/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 87.00 |
| 49. | திருமயம்/ புதுக்கோட்டை | சொக்க நாதன்பட்டி | வாரியாறு | முசிறி–குளித்தலை– புதுக்கோட்டை– பேராவூரணி-சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 83/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா..இ.சா) | 23.00 |
| | | | | நாகப்பட்டினம் (நெ) கோட்டம் | |
| 50. | வேதாரண்யம்/ நாகப்பட்டினம் | மணக்குடி | பழவளாறு | ஆலங்குடி–தலைஞாயிறு– தலந்திருவாசல் சாலையில் கி.மீ. 29/4–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 55.00 |
| | | | | சேலம் (நெ) கோட்டம் | |
| 51. | பனமரத்துப் பட்டி/சேலம் | வாழப்பாடி புதுப்பாளையம், பொன்னரங்கம்பட்டி, சிங்கிபுரம் | ஓடை | புதுப்பாளையம்–பொன்னாரம்பட்டி சாலையில் கி.மீ. 5/4–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 65.00 |
| 52. | அரவக்குறிச்சி/ கரூர் | அரவக் குறிச்சி, புங்கம்பாடி | நங்காஞ்சியாறு | அரவக்குறிச்சி அருகே நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே அரவக்குறிச்சி–பூங்கப்பாடி சாலையில் கி.மீ. 0/2–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 90.00 |
| | | | | கோயம்புத்தூர் (நெ) கோட்டம் | |
| 53. | திருப்பூர்/ கோயம்புத்தூர் | மங்களம் | வண்ணதாங் கரை ஓடை | மங்களம்–அவிநாசி சாலையில் கி.மீ. 0/10–ல் உயர்மட்ட பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 55.00 |
| 54. | பல்லடம்/ கோயம்புத்தூர் | கிட்டாம் பாளையம் | வண்ண தாங்கரை ஓடை | கம்மனநாயக்கன் பாளையம்– அன்னூர் சாலையில் கி.மீ. 28/4–ல் புதியப் பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 55.00 |
| 55. | சிங்காநல்லூர்/ கோயம்புத்தூர் | காளப்பட்டி | காட்டாறு | சிட்ரா–குரும்பாளையம் சாலையில் கி.மீ. 3/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 35.00 |



2006 ஆகஸ்ட் 21]

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| | | | | ஈரோடு (நெ) கோட்டம் | |
| 56. | ஈரோடு/ஈரோடு | மரப்பாலம் | பெரும்பள்ளம் ஓடை | நேதாஜி சாலையில் கி.மீ. 0/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 60.00 |
| 57. | மொடக்குறிச்சி/ ஈரோடு | வடக்குதளவு மலை (அரச்சலூர்) | கீழ்பவானி கால்வாய் | மேட்டூர்–பழங்காநூத்து– ஒட்டன் சத்திரம்–தாராபுரம்– காங்கேயம் –ஈரோடு சாலையில் கி.மீ. 137/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.சா) | 40.00 |
| 58. | ஈரோடு/ஈரோடு | செங்கோடம் பாளையம் | பெரும் பள்ளம் ஓடை | ஈரோடு–பெருந்துறை– காங்கேயம் சாலையில் கி.மீ. 5/8–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.சா) | 75.00 |
| 59. | கோபி/கோபி | கெட்டி செய்யூர் | ஓடை | கோபி–ஊத்துக்குளி– காங்கேயம் சாலையில் கி.மீ.. 14/2–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.சா) | 30.00 |
| | | | | மதுரை (நெ) கோட்டம் | |
| 60. | மேலூர்/மதுரை | மலம்பட்டி | மணிமுத்தாறு | மேலூர்–திருப்பத்தூர் சாலையில் கி.மீ. 42/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 73.00 |
| 61. | சமயநல்லூர்/ மதுரை | சமயநல்லூர் | வைகையாறு | தோண்டநேரி கிராம சாலையில் கி.மீ. 0/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 26.00 |
| 62. | சமயநல்லூர்/ மதுரை | சின்ன மாங்குளூர் | பொதுப் பணித் துறை வாய்க் கால் | இலட்சுமிபுரம்– கிடாரிப்பட்டி சாலையில் கி.மீ. 1/2 பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ..சா) | 17.00 |
| | | | | திண்டுக்கல் (நெ) கோட்டம் | |
| 63. | ஒட்டன்சத்திரம்/ திண்டுக்கல் | பொருளூர் | நல்லத்தங் காள் ஓடை | தாழையூத்து–கள்ளிமந்தயம் சாலையில் கி.மீ. 28/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 75.00 |
| 64. | ஒட்டன்சத்திரம்/ திண்டுக்கல் | அப்பியான் பட்டி | ஓடை | வேலம்பட்டி–கூத்தம்பூண்டி சாலையில் கி.மீ.12/6–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 30.00 |
| 65. | ஒட்டன்சத்திரம்/ திண்டுக்கல் | மூலனூர் | ஓடை | வெரியாப்பூர்–மார்க்கம்பட்டி சாலையில் கி.மீ. 8/2–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 15.00 |

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத் தில் |
|---|---|---|---|---|---|
| 66. | நத்தம்/ திண்டுக்கல் | சடையம் பட்டி | ஓடை | வடமதுரை– வேலாயுதம் பாளையம் செங்குறிச்சி சாலையில் கி.மீ. 9/2–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 20.00 |
| 67. | பெரியகுளம்/ திண்டுக்கல் | கிளாவரை | காட்டாறு | கோசன் கிளாவரை சாலையில் கி.மீ. 9/6–ல் புதியப் பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 50.00 |
| 68. | பழனி/ திண்டுக்கல் | பொடுவார் பட்டி | ஓடை | மஞ்சநாயக்கன்பட்டி– கள்ளிமந்தயம் சாலையில் கி.மீ. 5/6–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 25.00 |
| 69. | ஒட்டன்சத்திரம்/ திண்டுக்கல் | அரசு பிள்ளை பட்டி | ஓடை | உப்பிலியாப்பட்டி– 19 புதூர் சாலையில் கி.மீ. 0/8–ல் புதிய பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 50.00 |
| 70. | ஒட்டன்சத்திரம்/ திண்டுக்கல் | சாமியார் புதூர், சின்னக்கருக் காட்டுப்பட்டி, பெரிய கருக்காட்டுப் பட்டி | ஓடை | கோயம்புத்தூர்– திண்டுக்கல் சாலை மற்றும் உப்பிலியாப்பட்டி– பெரியகோட்டை சாலையை இணைக்கும் கி.மீ. 0/4–ல் புதியப் பாலம் கட்டுதல் (மா.இ.சா) | 50.00 |
| | | | | தேனி (நெ) கோட்டம் | |
| 71. | போடி/தேனி | டி.மேட்டுப் பட்டி | ஓடை | பாளையம்– தேவாரம்போடி சாலையில் கி.மீ. 10/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 15.00 |
| 72. | போடி/தேனி | பி.தருமத் துபட்டி | ஓடை | பாளையம்–தேவாரம் போடி சாலையில் கி.மீ. 28/4–ல் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 15.00 |
| 73. | போடி/தேனி | அரண் மனை புதூர் | ஓடை | தேனி–வெங்கடாசலபுரம் சாலையில் கி.மீ. 1/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 12.00 |
| | தேனி/தேனி | எஸ்.தருமத் துபட்டி | ஓடை | சங்கராபுரம்– சின்னமனூர் சாலையில் கி.மீ. 1/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 10.00 |



| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபா.. இலட்ச.. தில் |
|---|---|---|---|---|---|
| 75. | போடி/தேனி | டி.சிந்தள சேரி | ஓடை | சங்கராபுரம்–சின்னமனூர் சாலையில் கி.மீ. 2/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 10.00 |
| 76. | போடி/தேனி | மார்க்கேயன் கோட்டை | ஓடை | சங்கராபுரம்– சின்னமனூர் சாலையில் கி.மீ. 9/6–(I)–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 10.00 |
| 77. | போடி/தேனி | மார்க்கேயன் கோட்டை | ஓடை | சங்கராபுரம்– சின்னமனூர் சாலையில் கி.மீ. 9/6–(II)–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 10.00 |
| 78. | தேனி/தேனி | மல்லிங்கா புரம் | ஓடை | வீரபாண்டி–நாகலாபுரம் சாலையில் கி.மீ. 10/2–ல் சிறு பாலம் திரும்ப கட்டுதல் (மா.மு.சா) | 15.00 |
| 79. | போடி/தேனி | மேல்சொக்க நாதபுரம் | ஓடை | திருமணபுரம்–மீனாட்சிபுரம் சாலையில் கி.மீ. 1/2–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 10.00 |
| 80. | போடி/தேனி | மேல்சொக்க நாதபுரம் | ஓடை | மேல்சொக்கநாதபுரம் சாலையில் கி.மீ. 0/8–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 10.00 |
| 81 | போடி/தேனி | தேம்புசேரி | ஓடை | மீனாட்சிபுரம் விலக்கு– தேம்பு சேரி சாலையில் கி.மீ. 7/4–ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல் (மா.மு.சா) | 15.00 |
| | | | | இராமநாதபுரம் (நெ) கோட்டம் | |
| 82. | இராமநாதபுரம் | S.P.பட்டினம் | S.P.பட்டினம் ஏரிக்கரை | திருவாடானை–S.P.பட்டினம் சாலையில் கி.மீ. 23/10–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 10.00 |
| 83. | இராமநாதபுரம் | மேல மங்கலம் | உப்பாறு –நாட்டார் வாய்க்கால் | நயினார் கோவில்–மேலமங்கலம் சாலையில் கி.மீ.3/6–ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 22.00 |
| | | | | விருதுநகர் (நெ) கோட்டம் | |
| 84. | விருதுநகர்/ விருதுநகர் | கல்லுப்பட்டி | ஓடை | கல்லுப்பட்டி சாலையிலிருந்து மேலமடை–பழவநத்தம் சாலையில் கி.மீ. 2/2–ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 62.00 |

[2006 ஆகஸ்ட் 21

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத் தில் |
|---|---|---|---|---|---|
| 85. | விருதுநகர்/ விருதுநகர் | விருதுநகர் | ஓடை | விருதுநகர்–புல்லாலக்கோட்டை சாலையில் கி.மீ. 0/2–ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா.) | 28.00 |
| 86. | விருதுநகர்/ விருதுநகர் | மத்திய சேனை | ஓடை | மத்திய சேனை–வேலூர் சாலையில் கி.மீ 0/6–ல் சிறிய பாலம் திரும்பக் கட்டுதல் (மா.இ.சா) | 20.00 |
| | | | | **மொத்தம்** | **2815.00** |
| | | | | **நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு** | |
| 1. | திருவள்ளூர்/ பள்ளிப்பட்டு | | | பாலபுரம்–ஆதிதிராவிடர் காலனி சாலையில் பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ. 0/0–0/7 வரை சாலை மேம்பாடு செய்தல் | 43.50 |
| 2. | திருவண்ணா மலை/போளூர் | | | குப்பம்–கொல்லைமேடு முதல் இரும்புலி செல்லும் சாலை கி.மீ 2/2–4/0–ல் விடுபட்ட சாலைப் பகுதி மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ. 3/10–ல் பாலம் கட்டுதல் | 40.00 |
| 3. | சேலம்/பனமரத் துப்பட்டி | | | திருமணிமுத்தாற்றின் குறுக்கே நெய்க்காரப்பட்டி சாலையில் கி.மீ. 0/2–ல் பாலம் கட்டுதல் | 80.00 |
| 4. | சேலம்/ எடப்பாடி | | | தாத்தாபுரம்–வேம்பனேரி சாலை கி.மீ. 0/4–ல் சரபாங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 70.00 |
| 5. | புதுக்கோட்டை/ குளத்தூர் | | | மாநில சாலை 71 கி.மீ. 56/8–லிருந்து தென்னம்பாடி செல்லும் சாலை கி.மீ. 0/0–3/8–ஐ மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ. 3/6–ல் பாலம் கட்டுதல் | 90.00 |
| 6. | தஞ்சாவூர்/ திருவிடைமருதூர் | | | மணிக்குடி–திருலோகி சாலையில் கி.மீ. 2/2–ல் இராமர் ஓடையின் குறுக்கே பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ. 3/0–5/0 வரை சாலை மேம்பாடு செய்தல் | 99.50 |



2006 ஆகஸ்ட் 21]

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத் தில் |
|---|---|---|---|---|---|
| 7. | திருவாரூர்/ வலங்கைமான் | | | அனியாமங்களம் நல்லாம்பூர் சாலையில் பொய்கையாற்றின் குறுக்கே கி.மீ. 0/2–ல் பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ. 0/0–1/0–ல் சாலை மேம்பாடு செய்தல் | 70.00 |
| 8. | திருவாரூர்/ திருவாரூர் | | | தியானபுரம்–பெருங்குடி சாலை வலவாய்க்கால் குறுக்கே கி.மீ. 1/6–ல் பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ. 1/4–3/0 வரை சாலை மேம்பாடு செய்தல் | 75.00 |
| 9. | திண்டுக்கல்/ நத்தம் | | | களத்துப்பட்டி கருத்தநாயக்கன் பட்டி சாலையில் கி.மீ. 0/2 ல் பாலம் கட்டுதல் மற்றும் கி.மீ. 0/0–1/0 வரை சாலை மேம்பாடு செய்தல் | 42.00 |
| 10. | திண்டுக்கல்/ நத்தம் | | | செந்துறை கருத்தநாயக்கன்பட்டி சாலையில் கி.மீ. 2/2 ல் பாலம் கட்டுதல் | 45.00 |
| 11. | திண்டுக்கல்/ பெரியகுளம் | | | பள்ளங்கி–கோம்பைக்காடு சாலையில் கி.மீ. 8/4–ல் பாலம் கட்டுதல் | 70.00 |
| 12. | தேனி/ ஆண்டிப்பட்டி | | | இராஜப்பன்கோட்டை–தாத்தனூர் சாலையில் கி.மீ. 0/4 மற்றும் 0/10–ல் பாலங்கள் கட்டுதல் | 50.00 |
| 13. | தேனி/ ஆண்டிப்பட்டி | | | பேரத்துக்காரன்பட்டி– ரோசனாப் பட்டி சாலையிலிருந்து கல்லுப் பட்டியில் செல்லும் சாலையில் கி.மீ. 0/10–ல் பாலம் கட்டுதல் | 60.00 |
| 14. | தேனி/ போடி | | | நாகலாபுரம்–இராசிங்கபுரம் சாலையில் கி.மீ. 0/10 மற்றும் 2/8–ல் பாலங்கள் கட்டுதல் | 47.00 |
| 15 | தேனி/ பெரியகுளம் | | | பங்களாப்பட்டி சாலையில் கி.மீ. 0/4–ல் பாலம் கட்டுதல் | 75.00 |
| 16. | தேனி/ பெரியகுளம் | | | மேல்மங்கலம்–அழகர்நாயக்கன் பட்டி சாலையில் கி.மீ. 0/10–ல் பாலம் கட்டுதல் | 90.00 |
| 17. | திருநெல்வேலி/ தென்காசி | | | மேலகரண்டை–கீழகரண்டை சாலையில் கி.மீ. 1/10–ல் பாலம் கட்டுதல் | 85.00 |

| வ. எண் | தொகுதி/ மாவட்டம் | அருகில் உள்ள கிராமம் | ஆற்றின் பெயர் | வேலையின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 18. | திருநெல்வேலி/ திருநெல்வேலி | | | மாடத்தூர்-களத்திகுளம் சாலையில் கி.மீ. 1/10-ல் பாலம் கட்டுதல் | 30.00 |
| 19 | திருநெல்வேலி/ திருநெல்வேலி | | | நடுக்கல்லூர்-கோடகநல்லூர் சாலையில் கி.மீ. 0/4-ல் பாலம் கட்டுதல் | 40.00 |
| 20. | திருநெல்வேலி/ வாசுதேவநல்லூர் | | | நெல்கட்டும் சேவல்-கூடலூர் சாலையில் கி.மீ. 3/2-ல் பாலம் கட்டுதல் பன்னிபொத்தை-பெருஞ்சிலம்பு | 43.50 |
| 21. | கன்னியாகுமரி/ பத்மநாபபுரம் | | | பன்னிமொந்தை-பெருஞ்சிலம்பு சாலையில் சடையாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 60.00 |
| | | | | மொத்தம் | 1305.50 |
| | | திட்டங்கள் அலகு | | | |
| 1. | குடியாத்தம்/ வேலூர் | | பாலாறு | மாதனூர் உள்ளி சாலையில் கி.மீ. 1/2-ல் உள்ள தாம்போகியை பழுதுபார்த்தல் | 90.00 |
| 2. | சேந்தமங்கலம்/ நாமக்கல் | | | முத்துகாபட்டி-கொல்லிமலை அடிவாரம் சாலையில் கி.மீ. 1/4-ல் உயர்மட்ட பாலம் கட்டுதல் | 92.00 |
| | | | | மொத்தம் | 182.00 |
| | | | | ஆக மொத்தம் | 4302.50 |



## இணைப்பு IV

*(413 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## அறிவிப்புகள்-2006-07—தொடர்ச்சி

### 15. இரயில்வே மேம்பாலப் பணிகள்

நடப்பாண்டில் 12 மாவட்டங்களில் ரூ.395 கோடி மதிப்பில் 22 புதிய இரயில்வே மேம்பாலங்களும், ஒரு புதிய கீழ்பாலமும் சேர்ந்த மொத்தம் 23 பணிகளை இரயில்வே துறையின் பங்களிப்புடன் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதில், காஞ்சிபுரம் மாவட்டம், ஊரப்பாக்கம் மற்றும் செங்கல்பட்டிலும், திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் மற்றும் அன்னனூரிலும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்திலும், கடலூர் மாவட்டம், பச்சாங்குப்பம், விருத்தாச்சலம் மற்றும் பன்ருட்டியிலும், வேலூர் மாவட்டம் வாலாஜா அருகில் மருதாலம் மற்றும் நாட்ராம்பள்ளியிலும், தருமபுரி மாவட்டம், மொரப்பூர் அருகில் சிந்தாலப்பாடியிலும், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் அருகிலும், திருச்சி மாவட்டம், திருச்சி குட்ஸ் ஷெட் சாலையிலும், கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர், கோமங்கலம், சிங்காநல்லூர், உடுமலைப்பேட்டை, இருகூர் மற்றும் சோமனூர் ஆகிய இடங்களிலும், மதுரை மாவட்டம் பழங்காநத்தம் அருகிலும், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி இரயில்வே நிலையம் அருகிலும், கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் ஒன்றுமாக மொத்தம் 22 பாலங்களும், திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் சுரங்கப் பாலம் ஒன்றுமாக மொத்தம் 23 பாலப்பணிகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

### 16. மதுரை ஆரச் சாலைகள்-கட்டம் 2

மதுரை மாநகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளை நகருடன் இணைப்பதற்காக ஆரச் சாலைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பகுதி 2-ன் (Phase-II) கீழ் 123 கி.மீ. நீளமுள்ள 14 சாலைப் பணிகள் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன்மூலம் திண்டுக்கல்-மதுரை சாலையிலிருந்து (தேசிய நெடுஞ்சாலை எண் 7) அலங்காநல்லூர் வழியாக (தேசிய நெடுஞ்சாலை எண் 45) மேலூர் நகரை நேரடியாக சென்றடையும் வசதி உருவாகும். இதனால் பயண நேரமும், தூரமும் குறையும். மேலும், மேலூரிலிருந்து திருமங்கலம் வரை பூவந்தி,

திருபுவனம் வழியாகச் செல்லும் சாலைகளையும் மேம்படுத்திச் சுற்று வட்டச் சாலையாக மாற்றவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 17. திருப்பூர் சுற்றுச் சாலைத் திட்டம்

திருப்பூர் நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில், திருப்பூர் நகரை ஒட்டி சுற்றுச் சாலை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனடிப்படையில் 19 நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளையும் 14 ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் இணைத்து 45 கி.மீ. நீள சாலைப் பணிகளையும், 5 புதிய பாலங்கள் கட்டும் பணிகளையும், மொத்தம் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது.

## 18. கோயம்புத்தூர் சுற்றுச் சாலைத் திட்டம்

தென் இந்தியாவின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படும் கோவை மாநகரில் பெருகி வரும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட தொழில் வளர்ச்சி, மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அதிகரித்ததன் காரணமாக கோவை மாநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது. இப்போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சுமார் 45 கி.மீ. நீள சுற்றுச் சாலையினை சுமார் ரூ.21 கோடி மதிப்பில் தனியார் பங்களிப்பின்மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 19. திருவாரூர் புறவழிச் சாலை

திருவாரூர் நகரம், மாவட்ட தலைநகரமானதையடுத்து போக்குவரத்து மிகவும் அதிகரித்துள்ளது. நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய இடங்களுக்கு போக்குவரத்து எளிதாக செல்லும் வகையில் உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திருவாரூர் நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு அதன் அடிப்படையில் உலக வங்கியின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

## 20. தரக்கட்டுப்பாடு அமல் (Implementation of Quality Control)

நெடுஞ்சாலைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் சாலை பராமரிப்பு பணிகளிலும், மேம்பாட்டு பணிகளிலும் தரக்கட்டுப்பாடு முறைகளை முழுமையாகச் செயல்படுத்துவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அதன் அடிப்படையில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்மூலம்



தரக்கட்டுப்பாடு ஆய்வுகளைப் பரவலாகவும், செம்மையாகவும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மண்டல அளவில் உள்ள ஆய்வுக் கூடங்களை மேம்படுத்தி பணிகள் பற்றிய சோதனைகளை மேற்கொண்டு தரம் உறுதிசெய்யப்படும்.

## 21. சாலை விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை

சாலை விபத்துகளின்போது உயிரிழப்பு செய்தியைக் கேள்விப்படும் பொழுதெல்லாம் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் வருந்துவதை அறிந்தோம். அதன் அடிப்படையில் விபத்து அதிகம் நடைபெறும் இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களை மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வேகத் தடையே சில நேரங்களில் விபத்துக்கு காரணமாகிவிடுகிறது. அதை அறிந்து மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான வேகத் தடைகளை அமைக்கவும், துறையின் அனுமதியில்லாமல் வேகத் தடை அமைப்பவர்கள்மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் விபத்து நேரக்கூடிய பகுதிகள் என கண்டறியப்பட்ட சுமார் 300 இடங்களில் முதற்கட்டமாக 50 இடங்களில் ரூ.38 கோடி மதிப்பில் விபத்துத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் கிழக்குக் கடற்கரைச் சாலையிலும், தேசிய நெடுஞ்சாலை 45-லும் விபத்துகளை தடுப்பதற்காக தக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த ஆய்வின் முடிவில் பரிந்துரைகளைப் பெற்று விபத்துத் தடுப்புக்கான பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 22. மலைப் பகுதியில் சாலை அமைப்பதில் உள்ள இடர்பாடுகள்

உதகை, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் சாலை அமைப்பதில் பல இடர்பாடுகளை சந்திக்க வேண்டியுள்ளது. அதனால் சாலை தரம் அற்றவையாக ஆகிவிடுகிறது. இந்த இடங்களில் தார் கலவை மையங்களை தனியார் அமைப்புகள் அமைக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற இயலாத காரணத்தால் துறையின் சார்பாகவே இக்கலவை மையங்களை அமைத்து ஒப்பந்ததாரர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒப்படைக்க மத்திய

[2006 ஆகஸ்ட் 21

அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைத்ததும் தார்கலவை மையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 23. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய ஆய்வுகள்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்மூலம் பின்வரும் ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(அ) தட்பவெட்ப நிலைக்கேற்ப நிலக்கீல் கலவையை குளிர்கலவையாகப் பயன்படுத்தி சாலையில் குழிகளை நிரப்பி அதன் தன்மையை ஆராய்ச்சி செய்தல்

(ஆ) சாதாரண நிலக்கீல் மற்றும் இரப்பர் சேர்த்து மேம்படுத்தப்பட்ட நிலக்கீலை பயன்படுத்தி நாளாவட்டத்தில் சாலைத் தளத்தின் தன்மைகளைக் கண்டறிதல்.

## 24. தமிழ்நாடு கடல் சார் வாரியம்

### (அ) நாகப்பட்டினம் மற்றும் கடலூர் துறைமுகங்கள் மேம்பாடு :

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் துறைமுகங்களில் சுனாமியால் சேதமடைந்த பாதுகாப்புச் சுவர், நீர்த்தடுப்பி, சரக்கு மேடை போன்ற துறைமுகத்தின் கட்டுமானங்களை "ஆசிய வளர்ச்சி வங்கி" மற்றும் "அசைடு" திட்டங்களின்மூலம் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டினத்தில் ரூ.46 கோடியிலும், கடலூரில் ரூ.14 கோடியிலும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் நாகப்பட்டினம் துறைமுகத்தினை மேலும் விரிவுபடுத்துவதற்கான அவசியத்தினைக் கண்டறிந்து, இதற்கான சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு சேதுசமுத்திரக் கால்வாய் கழகத்தின் உதவி கோரப்பட்டுள்ளது, அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதன் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், தமிழ்நாட்டின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளுக்கு சரியான துறைமுக இணைப்பு வசதி இல்லாததால் அதனை ஈடு செய்யும் வகையில் கடலூர் துறைமுகத்தையும் மேம்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தின் மேம்பாட்டினை பொது மற்றும் தனியார் பங்கேற்பின் (Public Private Partnership) மூலம் மேற்கொள்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.



2006 ஆகஸ்ட் 21]

### (ஆ) சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம்:

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டமானது இராமேசுவரத்தினைக் கடக்கும் பாக்நீர்நிலையையும் மற்றும் மன்னார் வளைகுடாவையும் கப்பல செல்லும் வகையில் மேம்படுத்தும் திட்டமாகும். இந்தியாவின் கிழக்குக் கடற்கரையினையும், மேற்கு கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல்(Nautical mile) தூரம் குறையும் . இதனால் 36 மணி நேர கப்பல் பயண நேரமும் மிச்சமாகும். பல ஆண்டுகளாகவே இத்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்தபோதிலும், இதனை நிறைவேற்றுவதில் பல்வேறு தடங்கல்களும் இடையூறுகளும் ஏற்பட்டன. மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் அனைத்துத் தடைகளையும் கடந்து மைய அரசு இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக சேதுசமுத்திரக் கால்வாய் கழகத்தினை 06-12-2004 அன்று நிறுவியது. அதனைத் தொடர்ந்து 02-07-2005 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது கால்வாய்த் தோண்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு முழுமுதற் காரணமாகத் திகழ்பவர் நமது மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான பல்வேறு உதவிகளையும் மாநில அரசு செய்து வருகிறது.

### (இ) குளச்சல் துறைமுகம்:

குளச்சல் துறைமுகம் சர்வதேச கப்பல் வழித்தடத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதாலும், அதிக ஆழத்துடன் இருப்பதாலும் சரக்குப் பெட்டகங்களை கையாளுவதற்குத் தகுதியுள்ள துறைமுகமாக மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு 1998 ஆம் ஆண்டில் ஆலோசகர்மூலம் விரிவான சாத்தியக்கூறு பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2000-ஆம் ஆண்டில் மலேசிய அரசின் கட்டுமான தொழில் மேம்பாட்டு வாரியம் இதனை பசுமை வளத்துறைமுகமாக மேம்படுத்தும் வகையில் இவ்வறிக்கையினைத் தயாரித்தது. இத்துறைமுகத்தினை மேம்படுத்திட ஆர்வம் காட்டிய மலேசிய அரசு பின்னர் அதற்குரிய நிதி ஆதாரத்தினை திரட்ட இயலாததால் இத்திட்டத்தினைச் செயல்படுத்த இயலவில்லை. ஆனால், தற்சமயம் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பதவியேற்றவுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது தில்லியில் சந்தித்த போது குளச்சல்

துறைமுகத்தை சர்வதேச பெட்டகங்களைக் கையாளும் துறைமுகமாக மேம்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் குளச்சல் துறைமுக மேம்பாட்டிற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்க மைய அரசு உதவி செய்ய முன்வந்துள்ளது. அதன்பேரில் அறிக்கை தயாரிக்கப்பட்ட பின் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஈ) இராமேசுவரம் துறைமுகம்:

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் நிறைவடையும்போது அப்பகுதியில் கப்பல் போக்குவரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி இராமேசுவரத்தில் மீன்பிடித் துறைமுகம், சரக்குகள் கையாளும் வசதி மற்றும் சேதுசமுத்திரக் கால்வாயில் வரும் கப்பல்களுக்கான பழுதுபார்க்கும் வசதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த துறைமுகமாக இராமேசுவரம் துறைமுகத்தினை மேம்படுத்துவதற்கு தக்க ஆலோசனை தர மைய அரசு முன்வந்துள்ளது. இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை சேதுசமுத்திரக் கழகத்தின்மூலம் தயாரிக்கப்பட உள்ளது. இவ்வறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

227428
சென்னை-600 008